# அல்ஹஸனாத்

الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية

மலர்: 26 இதழ்: 4 ஏப்ரல் 2000



photography Aqil Ahamad

20/- இஸ்லாமிய இலட்சியக் குரல் ALHASANATH ISLAMIC MONTHLY

Registered at Tertiary and Vocational Education Commission
Affiliated with University of Management & Technology - Pakistan
Accredited by Council for Information Technology (CINTEC)

## கம்பியூட்டர் டிப்ளோமா பயிற்சி நெறி

காலம : 30 நாட்கள்
கட்டணம : 6500/=

- Introduction to Information Technology
- Operating System (Win98)
- Microsoft Word 97
- Microsoft Excel 97
- Microsoft PowerPoint 97
- Microsoft Access 97
- Introduction to Visual Basic
- Hardware Fundamentals and Internet & E-mail
- English for Information Technology

**Islamic Institute of Information Technology**
**Madampe - 61230**
**Tel : 032 - 47561 Fax : 032 - 47134 E-mail : islah@slt.lk**

## ஹெயர் போமியுலா சப்லிமன்ட் கப்சூல்

**HAIR FORMULA SUPPLEMENT CAPSULES**

கேச வளர்ச்சிக்கு அவசியமான விட்டமின்களுக்கும், தாதுப் பொருட்களும் அடங்கியது.

இரத்த ஓட்டத்தினை விரைவுபடுத்தி மயிர்க்கலன் களுக்கும் சருமத்துக்கும் வலுவை ஊட்டும்.

தலைமயிர் உதிர்வதைத் தடுத்து, இளநரையிலிருந்து பாதுகாக்கும்.

தலைமயிர் மென்மையாவதிலிருந்தும், வழுக்கை விழுவதிலிருந்தும் காக்கும்.

முகப்பரு உருவாவதைக் கட்டுப்படுத்தி, சருமத்திற்கு ஆரோக்கியத்தையும், பளபளப்பையும் தரும்.

ஆகாரத்துடன் நாளொன்றுக்கு ஒரு வில்லை வீதம் குறைந்தது ஒரு மாதத்திற்கு பாவிப்பதன் மூலம் சிறந்த பயனைப் பெறலாம்

விலை ரூபா 21.00 மட்டுமே

## பொடி டோன்

## BODY TONE

**புரதச்சத்துகள் அடங்கிய போஷாக்கு வில்லை**

**உறுதிக்கு உத்தரவாதம்!**
**பக்கவிளைவுகள் அற்றது!!**

ஆரோக்கிய வாழ்விற்கு புரதச்சத்துக்கள் அடங்கிய வில்லை. மேலதிக சக்தியையும் திடகாத்திரத்தையும், ஆற்றலையும் தரவல்லது.
விளையாட்டு வீரர்களுக்கும், நோயிலிருந்து நிவாரணம் பெற்றுக் கொண்டிருப்பவர்களுக்கும் உழைப்பாளர்களுக்கும் ஏற்றது.

இலங்கையில் இறக்குமதியாளர்களும் ஏக விநியோகஸ்தர்களும்

**K. S. P. Enterprises & Pharmacy (Pvt.) Ltd.**
L/4, FIRST FLOOR, CENTRAL BUS STAND BUILDING, COLOMBO 11. TP : 449766

بسم الله الرحمن الرحيم

அருளாளன் அன்புடையோன்
அல்லாஹ் அவன் பெயரால்

"(நபியே! நீர்) கூறும் : உங்களுடைய தந்தைகளும், உங்களுடைய மக்களும், உங்களுடைய சகோதரர்களும், உங்களுடைய துணைவர்களும், உங்களுடைய குடும்பமும், நீங்கள் சம்பாதித்து வைத்திருக்கும் பொருள்களும், நஷ்டமாகி விடுமோ என நீங்கள் பயந்து செய்து வரும் வர்த்தகமும், உங்களுக்கு விருப்பமுள்ள வீடுகளும் அல்லாஹ்வையும், அவனது தூதரையும் விடவும், அவனுடைய பாதையில் யுத்தம் புரிவதை விடவும் உங்களுக்கு மிக்க விருப்பமானவைகளாயிருந்தால் அல்லாஹ்வுடைய கட்டளை வரும் வரை எதிர்பார்த்திருங்கள். பாவிகளை அல்லாஹ் நேர்வழியிற் செலுத்துவதில்லை."
(அல்குர்ஆன்)

# அல்ஹஸனாத்


மலர் 26 இதழ் 04 ஏப்ரல் 2000

ISSN : 1391 - 460 X



**வெளியீடு:**

**இலங்கை ஜமாஅதே இஸ்லாமி**

**Sri Lanka Jama]ath -e- Islami**
**77, Dematagoda Road,**
**Colombo 00900**
**Sri Lanka**

**Phone : 687091**
**Fax : 686030**


**விலை விபரம்**

**உள்நாடு**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | : | ரூபா 20.00 |
| வருட சந்தா | : | ரூபா 250.00 |

**வெளிநாடு**

வருட சந்தா

| | |
|---|---|
| இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர், மலேஷியா | : 500.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் | : 550.00 |
| ஏனைய நாடுகள் | : 650.00 |


## உள்ளே உள்ளவை


முத்தகீன்கள் யார்? அல்குர்ஆன் விளக்கம் 03
அறிவை மறைக்கலாமா? அல்ஹதீஸ் விளக்கம் 05
இஸ்லாமிய அறிவும், அது வேண்டும் பண்புகளும் 07
பெருகிவரும் பாலியல் வல்லுறவுகள் 09
இஸ்லாமியப் புத்தாண்டு புகட்டும் படிப்பினைகள் 11
பயனுள்ளவற்றையே கேளுங்கள் 13
உலக நோக்கில் இஸ்லாமிய இயக்கங்கள் 17
வியாபார அமைப்புக்கள் - இஸ்லாம் (A/L) 19
சிறுவர் பகுதி 30
நான் எவ்வாறு முஸ்லிமானேன் ? 33
நட்சத்திரம் மறையும் இடம் - விஞ்ஞானம் 35
மிலேனியத்தின் மறுமுகம் 37
ஜம்இய்யா பக்கம் 40
க.்பாவைக் கண்டு பரவசமடைந்தார் 43
வாசகர் முறையீடு 47
உலகச் செய்திகள் 50


### அந்நிஸா


கண்ணீரும் புன்சிரிப்பும் 21
மு.்மினான ஒரு மனைவியின் இலட்சணங்கள் 23
கவிதா பவனம் 26
அல்ஹஸனாத் : ஆரோக்கிய சந்திப்பு 28


**அல்ஹஸனாத் வாசகர்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!**



# புத்தாண்டுக்கு ஒரு தலைப்பு

நாம் இஸ்லாமிய ஆண்டு 1421ல் பிரவேசிக்கிறோம். பிரதி வருடமும் சூரிய ஆண்டு, ஜனவரி முதலாம் நாளோடு துவங்குகின்ற வேளை, ஓர் புதிய ஆண்டு பிறப்பதாக ஏற்படுகின்ற உணர்வு ஹிஜ்ரி ஆண்டு துவங்கும் போது முஸ்லிம்கள் மத்தியில் ஏற்படுவதில்லை. இஸ்லாமிய வரலாறு தொடர்பான அறிவும், பிரக்ஞையும், முஸ்லிம்களிடையே வெகுவாகக் குறைந்திருப்பது இதற்கான காரணங்களுள் ஒன்றாகும்.

தனது வரலாற்றை அறியாத ஒரு சமூகம் தனது தனித் தன்மையையும், தனது பாரம்பரியங்களையும் இழந்துவிடும் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

முஸ்லிம்களிடையே இன்று பல்வேறு தினங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அதோடு மட்டுமின்றி முக்கியத்துவம் பெறும் தினங்கள் அதிகரித்தும் செல்கின்றன. அதேவேளை துரதிஷ்டமாக அதி முக்கியத்தும் வாய்ந்த தினமும் அதனோடு தொடர்பான வரலாறும் அவர்களது உணர்வு, சிந்தனை என்பவற்றிலிருந்து முற்றாக மறைந்து சென்றிருப்பதும் வேதனை தருவதாக அமைந்துவிட்டது.

இந்த உண்மையை உணர்ந்து கொள்வதற்காக நபித் தோழர்களை ஒரு கணம் நோக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. உமர் (ரழி) அவர்களின் காலத்தில் முஸ்லிம் உலகத்தின் பாவனைக்காக ஒரு கலண்டர் முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்ற தேவை உணரப்பட்டபோது, அன்னார் பல்வேறு நபித் தோழர்களிடம் இதுகுறித்து ஆலோசனை நடத்தினார்கள். ஆலோசனையின் முடிவு என்னவாகியது?

நபி (ஸல்) அவர்கள் பிறந்த தினம், மிஃராஜ் தினம், பத்ரில் முதன் முதலாக எதிரிகள் தோற்கடிக்கப்பட்ட தினம், மக்கா வெற்றி கொள்ளப்பட்ட தினம், போன்ற பல்வேறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தினங்கள் அனைத்தையும் ஒருபுறம் வைத்து விட்டு மக்காவிலிருந்து மதீனாவுக்கு அண்ணலார் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்ற தினத்தை அதாவது, பிறந்த மண்ணின் மைந்தர்களால் மாநபி துரத்தப்பட்ட தினத்தை ஏன் அந்த நபித் தோழர்கள் தெரிவுசெய்ய வேண்டும்?.

இந்தக் கேள்விக்கு பின்வரும் மூன்று பதில்களை முன் வைக்கலாம்:

(1) நபித்தோழர்கள் அறியாமையால் செயற்பட்டார்கள்.

(2) ஏனைய தினங்களின் முக்கியத்துவத்தை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

(3) ஏனைய தினங்கள் அனைத்தையும் விட ஹிஜ்ரத் ஒரு முக்கியத்தும் வாய்ந்த நிகழ்வு என்பதை நபித்தோழர்கள் அறிந்து வைத்திருந்தார்கள்.

முஸ்லிம்களாகிய நாம், நிச்சயம் முதலிரு விடயங்களையும் நிராகரித்து விடுவோம். மூன்றாவது விடையில் தான் உண்மை பொதிந்துள்ளது என்பதை ஏற்றுக் கொள்வோம். அந்த உண்மை யாது?

சுருங்கச் சொன்னால்... இஸ்லாம் இந்த மண்ணுலகில் விளைந்து, வளர்ந்து, வியாபித்து உலகெல்லாம் தனது ஒளியைப் பரப்பி, மனித சமூகத்தை இருளிலிருந்து மீட்டெடுத்து அநீதிகளையும், அடிமைத்தனங்களை யும் உலகிலிருந்து அகற்றுவதற்கு வித்திட்ட தினமே ஹிஜ்ரத்தாகும்.

ஹிஜ்ரத் இல்லாது போயிருந்தால் இஸ்லாம் ஏட்டிலும், நாவிலும் தவழு கின்ற ஒரு தத்துவமாக மட்டும் வாழ்ந் திருக்கும்; மனித சமூகத்தை முழுமை யாக வழிநடத்துகின்ற ஒரு வாழ்க்கை முறையாக அது வளர்ந்திருக்கவே முடியாது.

இந்த உண்மையை உணர்ந்து செயற்பட்டால் முஸ்லிம்களின் வானில் மீண்டும் அந்த "இஸ்லாம்" எனும் விடிவெள்ளி உதயமாகும்; உணராது போனால்... இருண்ட வானில், திக்குத் தெரியாமலும், கரைசேர முடியாமலும் தவிக்கின்ற பறவைகளாக பலநூறு இன்னல்களையும் இழப்புக்களையும் நாளாந்தம் சுமந்து வாழும் வாழ்க் கைக்கு முஸ்லிம்கள் தம்மைத் தயார் படுத்திக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

வழியில்லை என்பதால் இதனை விதி என்று கூறி விதியையும் கொச்சைப் படுத்த இவர்கள் தவறமாட்டார்கள். அந்தத் தவறும் நடந்து கொண்டு தானிருக்கிறது. அது ஈமானையும் பாதிப்படையச் செய்கிறது. முஸ்லிம் களை அல்லாஹ்தான் காப்பாற்ற வேண்டும். அவர்கள் எப்போது இஸ்லாத்தின் போதனைகளையும் அதன் வரலாற்று உண்மைகளையும் உணர்ந்து செயற்பட போகிறார்கள்...?

# 'முத்தகீ'ன்கள் யார்?

அஷ்ஷெய்க்
M.C.M. இர்பான் நளீமி
காத்தான்குடி

**"அலிப்;லாம்;மீம். இது (அல்லாஹ்வின்) வேத நூலாகும். இதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. பயபக்தி (தக்வா) உடையவர்களுக்கு (இது) நேர்வழி காட்டும். அவர்கள் மறைவானவற்றை விசுவாசங் கொள்வார்கள். தொழுகையையும் நிறை வேற்றுவார்கள். நாம் அவர்களுக்கு வழங்கியவற் றிலிருந்து செலவும் செய்வார்கள். (நபியே!) மேலும் அவர்கள் உமக்கு அருளப்பட்டவற்றையும் விசுவாசம் கொள்வார்கள். அத்துடன் மறுமையையும் உறுதியாக நம்புவார்கள். இவர்கள்தான் தங்கள் இறைவனின் நேரான வழியில் இருக்கிறார்கள் இவர்கள்தான் உண்மையில் வெற்றியாளர்கள்"**

**(ஸூறா அல்பகரா 01-05)**

இவை ஸூரதுல் பகராவின் முதல் ஐந்து வசனங்களாகும். 'முத்தகீன்கள் எனப்படுகின்ற அல்லாஹ்வைப் பயந்து வாழும் பக்தியாளர்களுக்கு இந்த வேதமாகிய அல்குர்ஆன் நிச்சயமாக நேர்வழிகாட்டக் கூடியதாகும்; அதேநேரம் இந்தக் குர்ஆன் சந்தேகமில்லாமல் அல்லாஹ்விடமிருந்துதான் வந்துள்ளது; அதுமட்டுமன்றி, இந்த வேதநூலில் சந்தேகத்துக்கிடமான எந்த ஒன்றும் இல்லை என்ற கருத்துக்களை இரண்டாவது வசனம் தருகின்றது.

அடுத்து இந்த வேதத்திலிருந்து ஒருவன் நல்வழி எனும் 'ஹிதாயத்' தைப் பெற வேண்டுமாயின் ஐந்து ஷர்த்துக் களைப் பெற்றிருக்க வேண்டும் என மூன்றாம், நான்காம் வசனங்கள் நிபந்தனை விதிக்கின்றன.

அல்குர்ஆன் குறிப்பிடும் முதன்மை யான நிபந்தனை அவன் மறைவான விடயங்களை ஈமான் கொள்ள வேண்டும் என்பதாகும். மறைவான விடயங்கள் என்பதன் பொருள் ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்டவையும், மனித ஆராய்ச்சிக்கு உட்படாதவையுமாகும். இதில் அல்லாஹ் பற்றிய நம்பிக்கை, அவனது தன்மைகள், பண்புகள், மலக்குகள் பற்றிய நம்பிக்கை, 'வஹீ' எனப்படும் வேதவெளிப்பாடு, சுவர்க்கம்-நரகம் பற்றிய நம்பிக்கை போன்றன அடங்கும்.

இந்த மறைவான விடயங்களில் அல்லாஹ்வை ஈமான் கொள்வது என்பது முதன்மையானதாகவும், இன்றியமையாத தாகவும் உள்ளது. ஏனென்றால், கடவுள் இல்லையெனக் கூறுபவனை நாஸ்திகன் என்று இவ்வுலகம் இனங்காட்டும். இறைவன் எங்கும் நிறைந்தவன் என்றோ, அவனுக்கு சில உருவங்களைக் கற்பனை செய்து, அவற்றை சிலையாக வடித்து வழிபட வேண்டும் என்று நம்புவதோ இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றிவிடும் செயற்பாடுகளாகும்.

**"அர்ரஹ்மான் (அல்லாஹ் பேரண் டத்தின்) ஆட்சிபீடத்தில் (அர்ஷ்) அமர்ந்துள்ளான்." (தாஹா :05)**

என்ற வசனம் அல்லாஹ் எங்கும் நிறைந்துள்ளான் என்ற அத்வைத நம்பிக்கையை தகர்த்தெறிந்து விடுகிறது.

**"அவனுக்கு நிகராக யாரும் இல்லை"**

என்று ஸூரதுல் இஹ்லாஸின் இறுதி வசனம் கூறுவதனால் அவனை அவனாகத் தான் நினைக்க வேண்டுமேயன்றி, நாமாகக் கற்பனை செய்து அவனுக்கு எதனையும் நிகராக்கி ஷிர்க் வைத்துவிடக் கூடாது.

அல்லாஹ்வுக்கேயுரிய தனியான பண்புகள் காணப்படுகின்றன. இப்பண்பு களை அல்லாஹ் அல்லாத வேறு எவருக் கும், எக்காரணத்தைக் கொண்டும் கொடுக்க முடியாது. மீறிக் கொடுத்தால் அது ஷிர்க் என்றாகிவிடும். இணைவைத் தல் (ஷிர்க்) என்பது மிகப் பெரும் கொடிய செயலாகும். ஏனைய குற்றங்கள் மன்னிக் கப்பட்டாலும் இக்குற்றத்தை அல்லாஹ் மன்னிக்கவே மாட்டான்.

**"மேலும் நீங்கள் அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனோடு எதனையும் இணையாக்காதீர்கள்." (அந்நிஸா : 36)**

**"நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்கவே மாட்டான். இதைத் தவிர அனைத்துப் பாவங்களையும் தான் விரும்பியவர்க ளுக்கு மன்னித்து விடுகிறான். யார் அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறார் களோ, அவர்கள் நிச்சயமாக பெரும் பாவத்தையே கற்பனை செய்கிறார்கள்." (அந்நிஸா :48)**

இந்த வகையில் அல்லாஹ்வை ஈமான் கொள்வதென்பது அல்லாஹ்வுக்கே உரிய பண்புகள் அவனுக்கு மட்டுமே உரியன என்றும், வேறு எவருக்குமே இல்லையென்றும் நம்பியாக வேண்டும். ஷிர்கின் சாயல்கூட படாதவாறு ஈமான் கொள்ள வேண்டும். அப்போதுதான் ஈமானின் முதன்மையான பகுதி முழுமை பெறும்.

மறைவானவற்றை ஈமான் கொள்வ தில் இரண்டாவதாக அமைவது மலக்குகள் பற்றிய நம்பிக்கையாகும். மலக்குகளை ஈமான் கொள்ள வேண்டும் என்பதை பின்வரும் அல்குர்ஆன் வசனம் சுட்டிக் காட்டுகிறது,

**"இறைதூதர் தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப் பெற்றதை விசுவாசிக்கி றார். (அவ்வாறே) மு..மின்களும் (விசுவாசிக்கின்றனர். இவர்கள்) யாவரும் அல்லாஹ்வையும் அவனது மலக்குகளையும், அவனது வேதங்களையும், அவனது தூதர்களை யும் விசுவாசிக்கின்றனர்." (அல்பகரா : 285)**

மலக்குகளை விசுவாசிக்காதவர் வழி கேடராவர். மலக்குகளை நம்பாதவர் களுக்கு அல்லாஹ் பகைவனாவான்.

**"யார் அல்லாஹ்வையும், அவனது மலக்குகளையும், அவனது வேதங்க ளையும், அவனது தூதர்களையும், மறுமை நாளையும் நிராகரிக்கின்றாரோ அவர் வழிகேட்டில் உழன்று வெகுதூரம் சென்று விட்டார்." (அன்னிஸா : 136)**

**"யார் அல்லாஹ்வுக்கும் அவனது மலக்குகளுக்கும், அவனது தூதர்களுக்கும், ஜிப்ரீலுக்கும், மீக்காயீலுக்கும் பகைவனாக இருக்கிறானோ, நிச்சயமாக அத்தகைய நிராகரிப்பாளர்களுக்கு அல்லாஹ்வும் பகைவனாகவே இருக்கின்றான்" (அல்பகரா :98)**

மனித ஜின் வர்க்கத்தினரைப் போன்று மலக்குகளும் அல்லாஹ்வின் படைப்பினம் மட்டுமன்றி, அவனது அடியார்களுமாவர். எனவே அவர்களை அல்லாஹ்வுடன் உறவு கற்பித்து அழைக்க முடியாது; கூடாது. அல்லாஹ் உறவுகளை விட்டும் தூய்மையானவன். அவன் யாரையும் பெறவுமில்லை; எவராலும் பெறப்படவுமில்லை. இக் கருத்தையே ஸுரதுல் இஹ்லாஸ் தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

மலக்குகளை எண்ணிக்கையில் குறிப்பிட்டு வரையறுத்துவிட முடியாது. எண்ணிலடங்கா மலக்குகள் உள்ளனர் என்பதை அல்குர்ஆன் வசனங்கள் மூலம் விளங்க முடிகின்றது.

**"உங்கள் இரட்சகன் மூவாயிரம் மலக்குகளை இறக்கி உங்களுக்கு உதவி செய்தது போதாதா? என்று நீர் மு:மின்களை வினவினீர்"**

**(ஆலுஇம்ரான் :124)**

**"ஆம்! நீங்கள் நிலைகுலையாமலிருந்து, அல்லாஹ்வுக்கு அஞ்சிப் பணியாற்றினால், எந்தக் கணத்தில் பகைவர்கள் உங்கள்மீது படையெடுத்து வருகிறார்களோ, அந்தக் கணத்தில் உங்கள் இறைவன் (மூவாயிரம் என்ன) போர் அடையாளமுள்ள ஐயாயிரம் மலக்குகளின் மூலம் உங்களுக்கு உதவிசெய்வான்." (ஆலுஇம்ரான் :125)**

மலக்குகள் எக்கணத்திலும் அல்லாஹ்வுக்கு மாறு செய்யவே மாட்டார்கள். இதுவே, அவர்களது தலையாய பண்பாகும். இக்கருத்தை பின்வரும் அல்குர்ஆன் வசனம் சுட்டிக் காட்டுகிறது:

**"அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஒருபோதும் மாறுசெய்வதில்லை. அவர்களுக்கு எந்தக் கட்டளை இடப்பட்டாலும் அதனை அவர்கள் நிறைவேற்றுகிறார்கள்" (அத்தஹ்ரீம்:06)**

அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்தவர்களாகவும், வஹியை கொண்டு வந்தவர்களாகவும், அர்ஷை சுமப்பவர்களாகவும், நரகத்தின் காவலர்களாகவும், உயிரைக் கைப்பற்றுபவர்களாகவும் என இன்னோரன்ன பணிகளை நிறைவேற்றுபவர்களாக மலக்குகள் இருக்கின்றனர் என்பதை அல்குர்ஆனின் வசனங்களின் நிழலில் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

மறைவான விடயங்களை ஈமான் கொள்வதில் அடுத்து அமைவது நபிமார்கள் பற்றிய நம்பிக்கையாகும்.

**"எனவே அல்லாஹ்வையும் அவனது தூதர்களையும் ஈமான் கொள்ளுங்கள். நீங்கள் நம்பிக்கை கொண்டு பயபக்தியுடன் நடந்து கொள்வீர்களாயின் உங்களுக்கு மகத்தான கூலி உண்டு"**

**(ஆலுஇம்ரான் :179)**

இதே கருத்திலமைந்த இன்னும் பல வசனங்கள் நபிமார்களை ஈமான் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றன.

நபிமார்களை நம்பமறுப்பவன் முஸ்லிமாக இருக்க முடியாது. எனவே, சிலரை நம்பி சிலரை நம்பாமல் இருப்பதும் தவறு. அது குப்ருக்கு இட்டுச் செல்லும்.

நபி (ஸல்) அவர்களுக்கு முன் பல நபிமார்கள் அல்லாஹ்வால் அனுப்பப்பட்டுள்ளார்கள் என்று நம்பவேண்டுமே தவிர, அவர்களையும் பின்பற்ற வேண்டும் என்று தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. ஏனென்றால் நபி (ஸல்) அவர்கள்தான் இறுதித் தூதராக உள்ளார்கள். நாம் அவர்களது உம்மத் ஆவோம். அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள குர்ஆன்தான் இறுதி வேதமாகும். எனவே, நபி (ஸல்) அவர்களையே நேர்வழிகாட்டியாகக் கொண்டு பின்பற்றுவது எமது கடமையாகும்.

மறைவானவற்றை ஈமான் கொள்வதில் இறுதியானதாக அமைவது சுவர்க்கம் - நரகம் பற்றிய நம்பிக்கையாகும். மறுமை பற்றிய நம்பிக்கையில் இவையிரண்டும் முக்கியம் பெறுகின்றன. இவற்றையும் ஈமான் கொள்வது முஸ்லிம்களின் கடமையாகும். நிராகரித்தால் குப்ர் ஏற்படும். சுவர்க்கமும், நரகமும் அல்லாஹ்வின் சிருஷ்டிப் பொருட்களில் உள்ளவையாகும். வெகுமதிக்கும் தண்டனைக்குமாக இவை தயாராக்கப்பட்டுள்ளன.

சுவர்க்கத்தை அடைவதென்பது சாதாரணமானதொரு விடயமல்ல. இன்பம் நிறைந்த, அல்லாஹ்வின் அன்பும், கருணையும் கிட்டுகின்ற உயர்ந்த சுவர்க்கத்தை அடைய வேண்டும் என்பதே ஒரு முஸ்லிமின் இலட்சியமாகும். எனவே, அதற்காக அவன் பல தியாகங்கள் செய்தாக வேண்டும். அதில் நுழைவதற்குத் தகுதியான செயல்களைப் புரிய வேண்டும்.

அல்லாஹ்வால் படைக்கப்பட்ட மனிதன் இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்க்கை முறைக்கு சில வரையறை செய்யப்பட்டிருக்கிறான். அல்லாஹ்வால் வகுத்துத் தரப்பட்ட வரம்புக்குள் வாழ்பவன் இறைவனின் தீர்ப்பு நாளான மறுமையில் அவனது அன்புக்கும், ஆதரவுக்கும் உரியவனாகின்றான். மாறாக, இந்த வரம்பை மீறி, தான்தோன்றித்தனமாக வாழ்பவன் நிச்சயமாக அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகிவிடுகின்றான். இத்தகைய மனிதன் மறுமையில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டு குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்படுவான். இத்தகையவர்கள் நரகம் எனும் கொடிய நெருப்பில் வேதனை செய்யப்படுவர் என அல்குர்ஆனும், அல்ஹதீஸும் அறிவிக்கின்றன.

நரகத்தின் தண்டனையை அஞ்சி, அதிலிருந்து தவிர்ந்து கொள்ள வழிகாண வேண்டும். இது ஒவ்வொரு முஸ்லிமின் மீதுமுள்ள கடமையாகும். அல்லாஹ்வின் கட்டளைகளை அணுவணுவாகப் பின்பற்றி வாழ்ந்தாலே நரக விடுதலை கிடைக்கும்.

அடுத்து அல்குர்ஆனிலிருந்து ஹிதாயத் பெறுவதற்கு அல்குர்ஆன் கூறும் இரண்டாவது நிபந்தனைதான் தொழுகையை நிலைநிறுத்துவதாகும். ஒரு மனிதன் ஈமான் கொண்டதுமே செயல்ரீதியாக அல்லாஹ்வுக்குக் கட்டுப்படத் தயாராகி விடுவதுதான் குர்ஆனிலிருந்து பயன்பெறுவதற்கு இன்றியமையாத தேவையாகும். தொழுகை என்பது செயல்ரீதியாகக் கட்டுப்படுவதற்கு முதன்மையான கட்டாயக் கடமையாகும்.அதுதான் ஒரு தனிமனிதனின் ஈமானின் தூய்மைக்கும் உண்மைக்கும் ஆக்கபூர்வமான நிரந்தரமான ஆதாரமாகும்.

எனவேதான் இவ்வசனத்தில் அல்குர்ஆன் மறைவானவற்றை ஈமான் கொள்வதற்கு அடுத்ததாக 'தொழுகையை நிறைவேற்றுவார்கள்' என்று குறிப்பிடுகிறது. தொழுகையை நிறைவேற்றும் மனிதன் அல்லாஹ்வை தனது எஜமானன் எனவும், தான் அவனது அடிமை எனவும் ஏற்றுக் கொண்டு அவன் முன் சிரம்பணிகிறான். இறைவன் காட்டும் நேர்வழியை, வழங்கும் அறிவுரைகளைச் செவியேற்றிட ஆவல் கொள்கின்றான். இவ்வாறு படிப்படியாக வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்ற முன்வரும் இலக்கை நோக்கி முன்னேறி வருகின்றான்.

**"தொழுகை தீனின் தூணாகும். யார் அதை நிலைநாட்டுகின்றாரோ அவர் தீனை நிலை நாட்டியவராவார். அதை விட்டுவிட்டவர் தீனை தகர்த்துவிட்டவராவார்." (அஹ்மத்)**

இந்த ஹதீஸ் அல்லாஹ் வழங்கிய தீன் மனித வாழ்வில் நிலைநாட்டப்பட வேண்டுமானால் அதற்குத் தொழுகை எனும் தூண் நிலைநாட்டப்படுவது அவசியம் என்பதை உணர்த்தி நிற்கின்றது. ⇨46

# அறிவை மறைக்கலாமா?

ஹதீஸ் விளக்கம்

அஷ்ஷெய்க் H.M. மின்ஹாஜ் இஸ்லாஹி

**அனஸ் இப்னு மாலிக் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

**ஒரு வாகனத்தின் மீது முஆத் (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னே அமர்ந்திருக்கும் நிலையில் நபி (ஸல்) அவர்கள், 'முஆதே!' என்று அழைத்தார்கள். 'இதோ பிரசன்னமாகிவிட்டடேன். உங்கள் உத்தரவிற்காகக் காத்திருக்கிறேன் அல்லாஹ்வின் தூதரே! தங்கள் உத்தரவிற்குப் பணிவதை பெரும் பேறாகவும் கருதுகிறேன் அல்லாஹ்வின் தூதரே!' என்று முஆத் (ரழி) அவர்கள் பதிலளித்தார்கள். 'முஆதே!' என்று மீண்டும் நபி (ஸல்) அவர்கள் அழைத்தார்கள். 'இதோ பிரசன்னமாகி விட்டேன்! உங்கள் உத்தரவிற்காகக் காத்திருக்கிறேன்!' என மீண்டும் முஆத் (ரழி) அவர்கள் பதிலளித்தார்கள். இவ்வாறு மூன்று முறை கூறப்பட்டது. 'தனது உள்ளத்தால் உண்மையான எண்ணத்துடன், வணங்கி வழிபடுவதற்குரிய (இறைவன் ) இலாஹ் அல்லாஹ்வத் தவிர வேறு யாருமில்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்றும் உறுதியாக சாட்சி கூறுகின்றவருக்கு அல்லாஹ் நரகத்தை ஹராமாக்கி அவரை நரகம் செல்ல விடமாட்டான்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். 'அல்லாஹ்வின் தூதரே! இந்தச் செய்தியை மக்களுக்கு அறிவித்து விடலாமா? அவர்கள் மகிழ்ந்து போவார்களே!' என்று முஆத் (ரழி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, அவ்வாறு நீர் அறிவிக்கும்போது (இது மட்டும் போதுமே என்று) அவர்கள் (நற்செயல் புரியாது) அசட்டையாக இருந்து விடுவார்கள்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். கல்வியை மறுத்த குற்றத்திலிருந்து தப்புவதற்காக தமது மரணத் தறுவாயில்தான் இந்த ஹதீஸை முஆத் (ரழி) அவர்கள் அறிவித்தார்கள். (புகாரி)**

இந்த ஹதீஸ் வேறு பல கிரந்தங்களிலும் சில வார்த்தை வித்தியாசங்களுடன் பதிவாகியுள்ளது. ஸஹீஹுல் புகாரியில் 'கல்வி' என்ற பிரதான தலைப்பில், 'ஒரு சாரார் (ஒன்றை முழுமையாகப்) புரிந்து கொள்ள மாட்டார்கள் என்ற அதிருப்தியில் புரிந்து கொள்ளோதரை விடுத்து, புரிந்து கொள்ளும் ஒரு சாராருக்குத் தனிப்பட்ட முறையில் கற்றுக் கொடுத்தல்" என்ற உப தலைப்பின் கீழ் இரண்டாவது ஹதீஸாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

நாம் விளக்கத்துக்கு எடுத்துக் கொண்ட ஹதீஸ் பல்வேறு விளக்கங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

ஏகத்துவக் கொள்கையின் அடிப்படைக் கருத்துக்களை நபி (ஸல்) அவர்கள் இதில் தெளிவுபடுத்தியுள்ளார்கள்,

இறைவிசுவாசக் கோட்பாடு உள்ளிட்ட இஸ்லாத்தின் வணக்க வழிபாடுகள், பண்பாடுகள், சமூக பரஸ்பரத் தொடர்புகள், இஸ்லாத்தின் கிளை அம்சங்கள் அனைத்தும் அறிவுபூர்வமான அணுகுமுறைகள் மூலமாக மக்களுக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். என அண்ணலார் அறிவுத்துகிறார்கள்,

இஸ்லாமிய அழைப்புப் பணியின் போது நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்கு விதிகளை நபிகளார் வலியுறுத்திக் கூறுகிறார்கள்,

இவ்வொழுங்கு விதிகள் அழைப்பாளர்களினால் கடைப்பிடிக்கப்படாதபோது அழைப்புக்குட்படுத்தப்படுவோர் இறைநெறி விடயதில் அலட்சிய மனப்பான்மையுடன் நடந்து கொள்வர் என்ற எச்சரிக்கையும் விடுக்கப்படுகின்றது.

இஸ்லாத்தை அதன் தூய வடிவில் கூட்டல் குறைத்தல் இன்றி முழுமையாக நபி (ஸல்) அவர்கள் மக்களுக்கு முன் வைத்தார்கள். மனித உள்ளங்களில் முழுமையாக இடம்பிடித்த இஸ்லாம் மதீனா என்னும் நிலத்தில் அங்கசம்பூரணப்படுத்தப்பட்டது. இருபத்து மூன்று வருட காலத்தில் அண்ணலாரின் அழகிய முன்மாதிரியும், அவர்களது அழகிய, அறிவுபூர்வமான அணுகுமுறைகளும் இஸ்லாம் பரிபூரணமடைய துணைநின்றன. நபியவர்கள் தனது பணியை ஒளிவுமறைவின்றி மேற்கொண்டார்கள். சத்தியத்தை தெளிவாக எடுத்துரைத்தார்கள். அதற்கான கட்டளையை அல்லாஹ் பிறப்பித்தான்.

**"ஆகவே உமக்கு ஏவப்பட்டதை (த் தயக்கமின்றி அவர்களுக்கு எடுத்துரைத்து விட்டு, இணைவைத்து வணங்கும் இவர்களை நீர் புறக்கணித்து விடும்." (ஸூரதுல் ஹிஜ்ர் :94)**

**"நேர்வழியையும் தெளிவான அத்தாட்சகளையும் நாம் அருளி, அவற்றை மனிதர்களுக்காக வேதத்தில் தெளிவுபடுத்தி (க் கூறி) ய பின்னும், எவர்கள் (அவற்றை) மறைக்கின்றார்களோ அவர்களை நிச்சயமாக அல்லாஹ்வும் சபிக்கின்றான். (மற்றும்) சபிப்போரும் அவர்களைச் சபிக்கின்றனர்." (ஸூரதுல் பகரா :159)**

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

**"அறிவு பற்றி ஒரு மனிதரிடம் வினவப்பட்டு அவர் அதனை மறைத்தால், மறுமை நாளில் அவருக்கு நெருப்பினால் கடிவாளமிடப்படும்." (அபூதாவூத், திர்மிதி)**

மேலே குறிப்பிட்ட அல்குர்ஆன் வசனங்களும், ஹதீஸும் அறிவை மறைத்தல் பெரும்பாவம் என்றும், இறைசாபத்தையும், மறுமைநாளில் கடுமையான தண்டனையையும் பெற்றுத்தரும் என்றும் எச்சரிக்கின்றன. எந்த அல்குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்கள் இவ்வெச்சரிக்கையை விடுத்தனவோ அவை மார்க்கப் போதனைகளையும் சத்தியக் கருத்துக்களையும் மக்கள் முன் சமர்ப்பிக்கின்ற அழகிய அணுகுமுறைகளையும், முன்மாதிரிகளையும் கூறாமலில்லை.

**"(நபியே!) நீர் (மனிதர்களை) நளினமாகவும், அழகான நல்லுபதேசத்தைக் கொண்டுமே உம் இறைவனின் பால் அழைப்பீராக! அன்றி அவர்களுடன் (தர்க்கிக்க நேரிட்டால்) நீர் (கண்ணியமாக) அழகான முறையில் தர்க்கிப்பீராக! (ஸூரதுந் நஹ்ல்: 125)**

நாம் விளக்க முனைந்துள்ள ஹதீஸும் இவ்வழகிய வழிமுறை குறித்துப் பேசுகின்றது. அண்ணலார் (ஸல்) அவர்கள் 'தவ்ஹீத்" எனும் ஏகத்துவக் கொள்கை சார்பு கருத்துக்களை ஒரு கட்டத்தில் பொதுவாகப் பிரச்சாரம் செய்ய வேண்டாமென்று முஆத் (ரழி) அவர்களுக்கு கட்டளை பிறப்பிக்கிறார்கள். ஒரு சத்தியக் கருத்து தெளிவாக, பட்டவர்த்தனமாக எடுத்துரைக்கப்படுவது கட்டாயக் கடமையாக அமைவதைப் போன்று, அது மக்களால் உள்வாங்கப்படுவதும், சிந்தனைச் சிக்கலின்றி கருத்து மயக்கமின்றி சீரணிக்கப்படுவதும், அதனால் மனிதர்கள் நேர்வழி பெற்று தமது வாழ்வை சத்திய மார்க்கத்தின் அடிப்படையில் அமைத்துக் கொள்கின்ற

வகையில் பிரச்சாரம் அமையப் பெறுவதும் முக்கியமானதாகும். எனவேதான் நபி (ஸல்) அவர்கள் அந்த ஏகத்துவக் கருத்தை தற்காலிகமாக மறைக்கச் சொன்னார்கள். இது அறிவை வேண்டுமென்றே மறைத்தல் என்ற பகுதியில் உள்ளடங்க மாட்டாது.

நபி (ஸல்) அவர்கள் உலகில் தோற்றம் பெற்ற மிகச்சிறந்த சீர்திருத்தவாதி. மக்களின் அறிவுத்தரம், அவர்களது மனோநிலை, அவர்கள் வாழும் கால சூழல், அவர்கள் ஏலவே பாரம்பரியமாகப் பெற்றுவந்த பழக்கவழக்கங்கள், மரபுகள் என்வற்றைக் கருத்திற் கொண்டு சில கருத்துக்களை சிலருக்குச் சொல்வார்கள்; சிலருக்கு மறைத்து விடுவார்கள். எந்தளவு சொல்ல வேண்டும், எச்சந்தர்ப்பத்தில் சொல்ல வேண்டும், யாருக்குச் சொல்ல வேண்டும்; யாருக்குச் சொல்லக் கூடாது போன்ற அனைத்து விடயங்களையும் வஹியின் நிழலில் அவர்கள் விளங்கி வைத்திருந்தார்கள். எனவேதான் முஆத் (ரழி) அவர்களுக்கு தற்காலிகமாக இந்தத் தடையுத்தரவை இட்டிருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள், தமது பிரச்சாரம் சரியாக மக்களால் உள்வாங்கிக் கொள்ளப்படாத போது அவர்கள் ஏகத்துவக் கொள்கையை தவறாக விளங்கி அசட்டையாக இருந்து விடலாம் என்ற அச்சம் காரணமாகவே முஆத் (ரழி) அவர்களுக்கு இத்தடை உத்தரவை பிறப்பித்தார்கள். முஆத் (ரழி) அவர்கள் அறிவிக்கும் இன்னுமொரு ஹதீஸ் இவ்வாறு கூறுகிறது:

**“நான் ஒரு கழுதையில் நபி (ஸல்) அவர்களின் பின்னால் அமர்ந்திருந்தேன். அப்போது நபியவர்கள், ‘முஆதே! அடியார்கள் அல்லாஹ்வுக்கு ஆற்றிட வேண்டிய உரிமை என்ன? அல்லாஹ் அடியார்களுக்கு ஆற்ற வேண்டிய உரிமை என்ன?’ என்று கேட்டார்கள். ‘அல்லாஹ்வும் அவனது தூதருமே மிகவும் அறிந்தவர்கள்’ என்று நான் பதிலளித்தேன். ‘அடியார்கள் அல்லாஹ்வை வணங்கி வழிபட்டு, அவனுக்கு யாதொன்றையும் இணைவைக்காமல் இருப்பதுதான் அவர்கள் அல்லாஹ்வுக்கு ஆற்றவேண்டிய உரிமை. அல்லாஹ்வுக்கு யாதொன்றையும் இணைவக்காமல் வாழுவோரை வேதனை செய்யாமல் இருப்பதே அல்லாஹ் அடியார்களுக்கு ஆற்ற வேண்டிய உரிமை.’ என்று நபியவர்கள் கூறினார்கள். ‘இதனை நான் மக்களுக்கு வாழ்த்துச் செய்தியாக கூறலாமா?’ என்று கேட்டேன். அதற்கு நபியவர்கள், ‘இதனை வாழ்த்துச் செய்தியாகக் கூறிவிடாதீர். ஏனென்றால் மனிதர்கள் (நற்செயல் செய்யாது) அசட்டையாக இருந்து விடுவார்கள். என்று கட்டளையிட்டார்கள்.” (புகாரி, முஸ்லிம்)**

இந்த ஹதீஸினை ‘கிதாபுத் தவ்ஹீத்’ என்ற நூலின் ஆரம்பத்தில் விளக்க முயன்ற இமாம் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் (ரழி) அவர்கள் இந்த ஹதீஸ் இருபத்து நான்கு விளக்கங்களை உட்பொதிந்திருப்பதாக கூறுகிறார்கள். அவற்றுள் பதினாறாவது அம்சமாக, **‘ஒரு நலனைக் கருத்திற் கொண்டு அறிவை மறைப்பது ஆகுமானதாகும்’** என்ற முடிவை முன்வைக்கிறார்கள்.

இங்கு இபாதத் அதற்கு நேர்எதிரான ஷிர்க் பற்றிய கருத்துக்களை மக்களுக்கு கூறவேண்டாம் என்று நபிகளார் கட்டளை பிறப்பிக்கின்றார்கள் இவையனைத்தும் தற்காலிகமான தடை உத்தரவுகளே; நிரந்தரமானதல்ல. இவை நிரந்தரமானதல்ல என்பதை நாம் விளக்குவதற்கு எடுத்துக் கொண்ட ஹதீஸின் இறுதிப்பகுதியாகிய கல்வியை மறைத்த குற்றத்திலிருந்து தப்புவதற்கு முஆத் (ரழி) அவர்கள் ஹதீஸை அறிவித்தார்கள் என்பது விளங்குகின்றது.

சத்திய மார்க்கத்தை பறைசாற்றுவது கடமையாக இருப்பதைப்போல, சில வேளைகளில் அறிவை மறைப்பதும் கடமையாக மாறிவிடுகிறது. மறைக்கப்பட்ட குறித்த அறிவு அடுத்தடுத்த கட்டங்களில் தெளிவாக எடுத்துரைக்கப்படுவது வாஜிபாக மாறிவிடுகிறது அநேகமான சந்தர்ப்பங்களில் மனிதர்களுக்குப் பயந்து அல்லது சுயகௌரவம், சமூக அந்தஸ்த்து முதலானவற்றுக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்று அஞ்சி அறிவை மறைப்பது ஹராமாகும். அவ்வாறே மனிதர்களது தரம் அறியாது அவர்களது மனோநிலையை சரிவர விளங்கிக் கொள்ளாது, அவர்கள் வாழுகின்ற கால, சூழல் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளாது, அவர்கள் பக்குவ நிலைக்கு வருவதற்கு முன்னரே முதிர்ச்சி மிகு ஆழமான கருத்துக்களை அவர்களுக்கு எடுத்துரைத்து ஒரு பித்னாவுக்கும், ஒற்றுமையின்மைக்கும் வழிகோலுவதும் ஹராமாகும். அலி (ரழி) அவர்கள் கூறினார்கள்:

**“மனிதர்கள் விளங்கிக் கொள்கின்ற விடயங்களை அவர்களுடன் பேசுங்கள். (அவர்கள் விளங்காதவைகளைப் பேசி) அல்லாஹ்வும் அவனது தூதரும் பொய்ப்படுத்தப்படுவதை நீங்கள் விரும்புகிறீர்களா?”** (புகாரி)

‘இக்கூற்றிலிருந்து, பல கருத்துகளுக்கு இடம்பாடான, கருத்து மயக்கமுள்ள விடயங்கள் பொதுமக்கள் முன்னிலையில் உரைக்கப்படலாகாது என்பதற்கான ஆதாரம் பெறப்படுகின்றது’ என்று இப்னு ஹஜர் அல்அஸ்கலானி (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்:

“நீ ஒரு சமூகத்தாரின் சிந்தனைக்கு எட்டாத விடயம் ஒன்றை பேசினால் அவர்களில் சிலரினால் குழப்பம் (பித்னா) உண்டாகும்” (முஸ்லிம்)

இஸ்லாம் பரிபூரணப்படுத்தப்பட்ட பின்னர் சத்தியத்தை ஒளிவுமறைவு இன்றி, கூட்டல் குறைத்தல் இன்றி அப்படியே எடுத்துரைத்துவிடுவது கட்டாயக் கடமையென்றும் அவ்வாறு நாம் எடுத்தரைக்காது சிறிது சிறிதாக, கட்டம் கட்டமாக, படிமுறை ரீதியாக தெளிவாக சிலவற்றை கூறியும், கூறாமலும் பிரச்சாரம் செய்கின்ற நிலையில் நாம் மரணித்துவிட்டால் அறிவை மறைத்த குற்றம் எம்மைச் சார்ந்துவிடும் என்றும், எனவே, மனிதர்களது நிலைமைகளை கருத்திற் கொள்ளாது சத்தியத்தை தெளிவாக எடுத்துரைத்துவிட வேண்டுமென்றும் முன்வைக்கப்படுகின்ற சிந்தனை இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். இஸ்லாம் சமபூரணப்படுத்தப்பட்டு விட்டது. இது முழுமையான ஒரு வாழ்க்கைத் திட்டம்; அதில் கூட்டல் குறைத்தல் செய்து அதற்கு மேலதிக சேவை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அந்த அதிகாரம் யாருக்கும் கொடுக்கப்படவுமில்லை. இதில் இருவேறு கருத்துக்கள் நிலவ முடியாது. ஆனால் மனித சிந்தனைகளில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை. மனிதனது விளங்கும் ஆற்றலில் உள்ள தரவித்தியாசம் அன்று உள்ளதுபோல் இன்றும் அவ்வாறே இருக்கிறது. தொடர்ந்தும் அவ்வாறே இருக்கப் போகிறது. இதில் எவ்வித மாற்றமும் ஏற்படப் போவதில்லை. இது இறைவன் மனிதனை சிருஷ்டித்த போது அமைத்துவிட்ட இயற்கையான வழியாகும். இதனை கருத்திக்கொண்டே ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் இஸ்லாம் அந்நியமாக அநாதரவாக நோக்கப்பட்ட காலப்பிரிவிலும், அந்நிலை அகன்று இஸ்லாம் செல்வாக்குடன் நிகழ்ந்த காலப்பிரிவிலும் மனித சிந்தனையிலும், விளங்கும் ஆற்றலிலும் தரவித்தியாசங்களை அனுசரித்து தமது கருத்துக்களை சிலபோது சிலருக்கு தெளிவாக கூறினார்கள்; சிலருக்குச் சொல்லாமல் தற்காலிகமாக மறைத்தார்கள். இதனை நபிகளாரின் ஸீராவிலும், அவர்களிடம் பல்வேறு சந்தர்ப்பங்களில் தொடுக்கப்பட்ட பல்வேறு வினாக்களுக்கு அவர்கள் கொடுத்த பலவிதமான விடைகளிலிருந்தும் நாம் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

இன்று இஸ்லாம் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலும் கூட இரண்டாவது முறையாக அநாதரவாக நோக்கப்படுகின்ற நிலை இன்னும் நீங்கிச் செல்லவில்லை. மேலும் பிரச்சாரத்துக்குட்படுவோரது சிந்தனையிலும், விளங்கும் ஆற்றலிலும் உள்ள

(49ம் பக்கம் பார்க்க)

மறைந்த பேரறிஞர் அபுல்ஹஸன் அலி ஹுஸைன் அந்நத்வி (ரஹ்) அவர்களின் நினைவாக 12.03.2000 அன்று அகுறணை ஜும்ஆ மஸ்ஜிதில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் ஜமாஅத்தின் அமீர் அவர்கள் நிகழ்த்திய உரையின் தொகுப்பே இதுவாகும். இந்நிகழ்ச்சியை அகுரணை ஜம்இய்யத்துல் உலமா சபையினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# இஸ்லாமிய அறிவும் அது வேண்டும் பண்புகளும்

**உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்**

கடந்த நூற்றாண்டின் மிகப் பெரிய அறிஞர்களுள் ஒருவரான மௌலானா அபுல்ஹஸன் அலி ஹுஸைன் நத்வி (ரஹ்) அவர்களுடைய மறைவு எங்களை யெல்லாம் துயரத்தில் ஆழ்த்தியிருக்கிறது. அந்த அறிஞர் எங்களை விட்டுப் பிரிந்து விட்டார் என்பதோடு அவரை நாங்கள் மறந்துவிட முடியாது. அத்தகைய அறிஞர்கள் முஸ்லிம் உம்மத்திலிருந்து பிரிந்து செல்வது ஒரு பெரிய இழப்பாக இருக்கிறது. அந்த அறிஞர் பரம்பரைகள் நினைவூட்டப்பட வேண்டும். அந்தப் பாதை யில் எங்களது சமூகம் ஆர்வம் காட்டப்பட வேண்டும். அத்தகைய அறிஞர்களின் பணிகளை நாங்கள் நினைவுபடுத்திப் பார்ப்பதன் மூலம் இனி வரக்கூடிய காலங் களிலும் அவ்வாறான ஒரு அறிவுப் பணியை மேற்கொள்கின்ற ஒரு நல்ல எதிர்காலம் உருவாக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்ற இவ்வேளையில் இஸ்லாமிய அறிவுப் பணி சம்பந்தமாக அல்குர்ஆன், அல்ஹதீஸிலிருந்து பொறுக்கிய சில கருத்துக்களை உங்கள் முன் வைக்கலாம் எனக் கருதுகிறேன்.

இஸ்லாம் அறிவுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது என்பது பற்றி அதிகம் பேசவேண்டிய தில்லை. அது நபிமார்கள் இந்த உலகத் திலே விட்டுச் சென்ற சொத்து. அது நபிமார் களுடைய சொத்து என்பது எங்களுக்கு ஒரு வரப்பிசாதமாகும். அந்த சொத்தைப் பாதுகாப்பதுதான் நபிமார்கள் இந்த உலகத்தில் செய்த பணியை பாதுகாப் பதற்கு அடையாள மாகும். றஸூல் (ஸல்) அவர்கள் ஒரு ஹதீ ஸின் இறுதிப் பகுதி யிலே சொன்னார்கள்:

**"நிச்சயமாக அறிஞர்கள் நபி மார்களின் வாரிசுகளாவார்கள். நபிமார்கள் இந்த உலகத்தில் தீனாரை யும் திர்ஹத்தையும் சொத்துக்களாக விட்டுச் செல்லவில்லை இல்மைத்தான் விட்டுச் சென்றார்கள். அதனை எடுத் துக் கொண்டவர்கள் இந்த உலகத்தில் மிகப் பெரும் பாக்கியத்தைப் பெற்றுக் கொண்டார்கள்." (அபூதாவூத், திர்மிதி)**

உலகம் ஒரு பாக்கியத்தைப் பெற்றுக் கொள்கிறது என்றால் அது அல்லாஹ் வுடைய வஹி மூலம் கிடைக்கின்ற அந்த இல்முதான். அந்த இல்மை அல்லாஹ் இந்த உலகத்தில் யாருக்குக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கின்ற போது அதற்கென்றே சில மனிதர்களை அவன் தெரிவு செய்கிறான். அல்லாஹ்வின் அந்த அருளுக்கு அவன் பொருத்தமானவர்களை தெரிவுசெய்து அந்த இல்மை (வஹியின் வழிகாட்டலை) அவன் கொடுத்தான். அதனைப் பெற்றுக் கொண்ட பரம்பரை உலகத்தில் முடிவுற்ற போது அதன் வாரிசு களாக இந்த உம்மத்தில் உலமாக்களை ஆக்கிவைத்தான். றஸூல் (ஸல்) அவர்க ளுடைய ஒரு ஹதீஸை நோக்குவோம்:

**"அல்லாஹ் ஒரு மனிதனுக்கு நன்மையை நாடினால் அவனுக்கு தீனில் விளக்கத்தைக் கொடுக்கிறான்." (புகாரி, முஸ்லிம்)**

அந்த வகையில் அல்லாஹ் இந்த தீனுடைய விளக்கத்தைக் கொடுக்கின்ற மனிதன் அவனுடைய விருப்பத்துக்குரிய மனிதன்; அவனால் தெரிவுசெய்யப்படுகின்ற ஒரு மனிதன் என்பது இங்கு மறைமுகமாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. அது இந்த இல்முக்கு இஸ்லாம் கொடுத்திருக்கின்ற முக்கியத்துவத்தை வலியுறுத்தும் ஒரு அம்சமாகும். இந்த அறிவுப் பொக்கிஷம் உலகத்திலிருந்து இரண்டு நிலமைகளில் விடைபெற்றுப் போய்விடுகிறது.

1. அல்லாஹ் இஸ்லாமிய அறிஞர்களை தன்வசம் எடுத்துக் கொள்கின்ற போது. றசூல் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

**"அல்லாஹ் அறிவை மனிதர்களிட மிருந்து பறித்தெடுத்துக் கொள்வ தில்லை. உலமாக்களை அவன் தன் வசப்படுத்திக் கொள்வதன் மூலமும் அவர்களுடைய ஆன்மாக்களைக் கைப்பற்றுவதன் மூலம்தான் அல்லாஹ் அறிவை இந்த சமூகத்திலிருந்து எடுத்து விடுகிறான்." (புகாரி, முஸ்லிம்)**

அல்லாஹ் அவ்வாறு இஸ்லாமிய அறிஞர்களை தன்வசப்படுத்திக் கொள் கின்றபோது அவர்களுடைய இந்த உல கத்தில் ஆலிம்கள் இல்லாமல் போய் விடுவார்கள். பிறகு மனிதர்கள் அறியாமை மிக்கவர்களை தங்களுக்கு தலைவர்களாக ஆக்கிக் கொள்வார்கள். அவர்களிடம் தங்களது பிரச்சினைகளையெல்லாம் மக்கள் முன்வைப்பார்கள்; அவர்கள் எந்த அறிவுமில்லாமல் அந்தப் பிரச்சினை களுக்கு தீர்வைச் சொல்வார்கள். அதன் மூலம் அவர்களும் வழிகெட்டு மற்ற மனி தர்களையும் வழிதவறச் செய்து விடுவார் கள். இது இந்த சமுதாயத்தில் ஏற்படு கின்ற ஓர் ஆபத்து. அல்லாஹ்வுடைய தீனைக் கற்றவர்கள் இந்த உலகத்திலி ருந்து விடைபெறுகின்ற போது இந்த உம்மத்துக்கு ஏற்படுகின்ற ஒரு ஆபத்தை றஸூல் (ஸல்) அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

இன்னுமொரு கோணத்தில் அறிவுக்கு ஓர் ஆபத்து ஏற்படுகிறது. அதை வைத் துத்தான் எனது உரையை நான் அமைத் துக் கொள்ள விரும்புகிறேன். அது எது வெனில், உலமாக்கள் வபாத்தாகின்ற போது எவ்வாறு இந்த ஆபத்து ஏற்படுகி றதோ அதுபோல இஸ்லாமிய அறிவின் நோக்கம் இழக்கப்படுகின்ற போதும் இந்த ஆபத்து சமூகத்துக்கு ஏற்படுகிறது. அந்த வகையிலேதான் இஸ்லாமிய அறிவுப்பணி எத்தகைய தன்மைகளைக் கொண்டதாக இருக்க வேண் டும் என்பதை நாங்கள் விளங்க வேண்டிய அவ சியம் இருக்கி றது. இந்த கண் ணோட்டத்திலே றஸூல் (ஸல்) அவர்களுடைய ஒரு ஹதீஸைப் பார்க்கலாம்:

**"அல்லாஹ்வுடைய திருப்பொருத்தத் திற்காக கற்க வேண்டிய அறிவை ஒரு மனிதன் இந்த உலகத்தின் ஒரு இலா பத்தைப் பெற்றுக் கொள்வதற்காக கற்றுக் கொள்கின்றான் என்றால் அவன் மறுமை நாளில் சுவனத்தின் வாசத்தைக் கூட நுகரமாட்டான்" (அபூதாவூத்)**

இந்த ஹதீஸ் எங்களுக்கு உணர்த்து கின்ற ஒரு உண்மை என்னவெனில், அறி வுக்கு ஒரு நோக்கம் இருக்கிறது. அந்த நோக்கம் நிறைவேற்றப்படாத அறிவு இந்த உலகத்தில் இருந்தால் அது இருக்கின்ற மனிதனுக்கும் ஆபத்து; சமூகத்துக்கும் ஆபத்து. அதனால்தான் றஸூல் (ஸல்) அவர்கள் பின்வருமாறு பிரார்த்தனை செய்தார்கள்.

**"இறைவா பயன்தராத அறிவிலிருந்து என்னைப் பாதுகாத்து விடு"**

அறிவின் நோக்கத்தை அல்குர்ஆனுடைய பார்வையிலும் சுன்னாவுடைய பார்வையிலும் பின்வருமாறு வகுத்துக் கொள்ள முடியும். அல்லாஹ் அல்குர்ஆனிலே இவ்வாறு சொல்கிறான்:

**“அல்லாஹ்வுடைய அடியார்களில் அல்லாஹ்வை அஞ்சக்கூடியவர்கள் அறிஞர்கள்தான்.” (35:28)**

இந்தக் கருத்து எங்களுக்கு ஒரு உண்மையைத் தெளிவுபடுத்துகிறது. அறிவோடு ஈமான் இரண்டறக் கலக்க வேண்டும் அப்போதுதான் அறிவின் நோக்கம் நிறைவேறும். எங்கே அறிவு ஈமானிலிருந்து வேறுபடுகிறதோ அல்லது தனித்து விடுகிறதோ அப்போது அறிவுக்கு இந்த உலகத்தில் எதனையும் சாதித்து விட முடியாது. இந்தக் கருத்தை அல்லாஹ் அல்குர்ஆனில் பல இடங்களில் தெளிவாக எடுத்துக் கூறுகிறான்.

ரிசாலத் பற்றிய நம்பிக்கை ஈமானில் ஒரு முக்கியமான அம்சமாகும் அது பற்றி அல்லாஹ் அல்குர்ஆனிலே குறிப்பி டும் போது,

**“அறிவு கொடுக்கப்பட்டவர்கள், அவர்கள் தங்களுடைய றப்பிடமிருந்து தங்களுக்கு அருளப்பட்டது சத்தியம் என்பதை உணர்வார்கள்”**

அதாவது அந்த அறிவு ரிசாலத் பற்றிய (அல்லாஹ்வுடைய தூது) நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அந்த நம்பிக்கை யாருக்கு வரும் என்று தெரியுமா? அறிவு கொடுக்கப்பட்டவர்களுக்கு அந்த நம்பிக்கை வரும் என்று அல்குர்ஆன் சொல்கிறது.

இந்த உலகத்தில் எந்த வழிகாட்டலைப் பின்பற்றுவது என்று மனித சமுதாயம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. எங்களிடத்தில் ஒரு அழகான வழிகாட்டல் இருக்கிறது. ஆனால் எங்களுக்கு அதன் மீது நம்பிக்கை இல்லாமல் போய் விட்டது. அதே வழிகாட்டலைத்தான் நாம் படிக்கிறோம் என்றால், அந்த அறிவு எதற்குப் பயன்படும்?

இஸ்லாமிய அறிவு என்பது ஈமானை இணைத்துக் கொண்ட அறிவாகும். ஈமான் இல்லாத போது அந்த அறிவு பயனற்றதாகப் போய்விடுகிறது. மூஸா (அலை) அவர்களின் சமூகத்திலே ஒரு பெரும் பணக்காரன் இருந்தான். அவனுடைய சொத்துக்களின் (கஜானாக்களின்) திறவு கோல்களை எத்தனையோ ஒட்டகங்கள் சுமந்து கொண்டு செல்லும். அந்தப் பணக்காரனை அந்த சமூகம் ஆச்சரியமாகப் பார்த்தது. அவன்தான் காரூன் பிறகு அவனது செல்வத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்ட அந்த சமூகத்தவர்களுக்கு சிலர் உபதேசித்தார்கள். அவர்களை அல்லாஹ் அல்குர்ஆனிலே இவ்வாறு கூறுகிறான்.

**“அறிவு கொடுக்கப்பட்டவர்கள் சொன்னார்கள்: உங்களுக்கு என்ன கேடுவந்து விட்டது? அந்தக் காரூனைப் பார்த்து நீங்கள் இவ்வாறு ஆச்சரியப்படுகிறீர்களே! ஈமான் கொண்டு ஸாலிஹான அமல்கள் செய்த மனிதர்களுக்கு மறுமையில் இருக்கின்ற கூலிதான் மிக ஏற்றமானது. பொறுமைசாலிகளைத் தவிர அந்தப் பெரும் பாக்கியத்தை யாரும் பெற்றுக் கொள்ள முடியாது. இது உங்களுக்கு விளங்க வில்லையா? என்று அந்த அறிவு கொடுக்கப்பட்ட மனிதர்கள் உங்களுக்கு உபதேசித்ததை நீங்கள் விளங்கவில்லையா”**

என்று அல்குர்ஆன் சொல்கிறது.

அறிவு கொடுக்கப்பட்டவர்களிடத்தில் அந்த மறுமையின் நம்பிக்கை இருந்ததாக அல்குர்ஆன் கூறுகிறது. அறிவு கொடுக்கப்பட்டவர்களிடத்தில் ரிசாலத் பற்றிய நம்பிக்கை இருக்கும் என்று அல்குர்ஆன் சொல்கிறது. இந்த நம்பிக்கைகள் இல்லாத அறிவு பயன்தராத அறிவாகும். அறிவின் நோக்கத்தை அந்த அறிவு இழந்து விடுகிறது. எனவேதான் ஈமான் சாராத அறிவு பயனற்றது என்கிறோம். அறிவுப் பணி என்பது அறிவைக் கொடுப்பவர்களாலும், அறிவை பெற்றுக் கொள்பவர்களாலும் நிகழ்கிறது. அது எத்தனையோ வழிகளில் இடம்பெறுகிறது. அறிவைக் கொடுப்பவர்களும் ஒரு வகையில் அந்தப் பணிகளில் ஈடுபட்டிருக்கின்றனர்; அறிவைப் பெறுக் கொள்பவர்களும் அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர். ஒரு குத்பாவை ஓதுகின்றவரும் அதனைக் கேட்டுக் கொண்டிருப்பவரும் இந்தப் பணியில் அங்கம் வகிக்கின்றனர். இரண்டு சாராரும் சிந்திக்க வேண்டிய ஒரு விடயம்தான் இந்த அறிவுப் பணி எத்தகைய தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என்பது. கொடுப்பவரும், வாங்குபவரும், இந்த அறிவை அறிவாக மட்டும் நோக்காமல் இதன் மூலம் எந்த நோக்கத்தை அடைய வேண்டும் என்பதனை விளங்கிக் கொள்ள வேண்டும். அது ஈமானுக்கு வழிகாட்ட வேண்டும்.

அது போல இந்த அறிவு மற்றொரு விஷேட நோக்கத்தை நிறைவேற்றும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என்பதனை அல்லாஹ் தஆலா இவ்வாறு கூறுகின்றான்.

**“குர்ஆனை நாங்கள் சிறிது சிறிதாக இறக்கினோம். நீங்கள் அதனை மனிதர்களுக்கு படிப்படியாக ஓதிக் காட்ட வேண்டும்; இவ்வாறு நாம் அதனை இறக்கினோம்.”**

பின்னர் அல்லாஹ் கூறுகிறான்:

**“நீங்கள் இந்தக் குர்ஆனை ஈமான் கொள்ளுங்கள்; அல்லது ஈமான் கொள்ளாமல் இருங்கள். அது பற்றி அல்லாஹ்விற்கு எத்தகைய நஷ்டமும் ஏற்படப் போவதில்லை.”**

இது தவிர இன்னொரு கூட்டத்தினரைப் பற்றியும் அல்லாஹ் குறிப்பிடுகிறான். அவர்களுக்கு இந்தக் குர்ஆன் ஓதிக்காட்டப்படுகின்ற போது அவர்கள் ஸுஜூதில் விழுந்து விடுகிறார்கள். ஆம்! அவர்கள் யார் என்று அல்குர்ஆன் சொல்கிறது.

**“அவர்கள் சிரம்பணிந்து விழுகின்ற போது அவர்கள் அழுவார்கள் மேலும் அவர்களது உள்ளச்சம் அதிகரிக்கும்”**

அறிவு கொடுக்கப்பட்டவர்கள் அந்த அறிவின் விளைவாக அல்லாஹ்த் தஆலாவை வணங்கி வழிபடுபவர்களாக இருப்பார்கள். அது இந்த அறிவு கொடுக்கப்பட்டதன் விளைவாக ஏற்படுகின்ற மற்றுமொரு நிலை. அறிவின் நோக்கம் மனிதனை அல்லாஹுத் தஆலாவோடு நெருக்கமான தொடர்பு கொண்ட மனிதனாக மாற்றும். ஆம்! இந்த அறிவு அல்லாஹ்வுடனான நெருக்கத்தையும், அச்சத்தையும் அவனில் வணங்கி வழிபடுகின்ற தன்மையை ஏற்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். ஒரு மனிதனுடைய அறிவு அவனிடத்தில் இந்த விளைவை ஏற்படுத்த வில்லை என்றால் -அது கொடுக்கப்படும் போதும், அதனைப் பெற்றுக் கொள்கின்ற போதும்- அது பயனற்ற அறிவாகும்.

அல்லாஹுத் தஆலாவுடைய தீனைப் படிப்பதற்கு அல்லது விளங்குவதற்கு சில வேளை எங்களிடத்தில் ஒரு முக்கியத்துவம் இருப்பது அல்லது வளர்ந்து வருவது கண்கூடாகத் தெரிகிறது. ஆனால் அல்லாஹ்வின் தீனைக் கற்றுக் கொண்டவர்கள் அல்லாஹுத் தஆலாவை வணங்கி வழிபடுகின்ற அந்த உள்ளச்சம் இருக்கின்றதா? என்று பார்த்தால், சிலவேளை தொழுகையில் கூட ஆர்வம் குறைந்த நிலையை அவர்களிடத்தில் காணமுடிகின்றமை வேதனையானதாகும். அது ஒரு இரண்டாம் பட்ச அம்சமாக, அதனை விட வேறு விடயங்களுக்கு அதிக முக்கியத்துவத்தைக் கொடுப்பது ஆச்சரியமாக உள்ளது. இது அறிவின் விளைவா? பயனுள்ள அறிவு இத்தகைய நிலையை ஒருபோதும் மனிதனிடத்தில் ஏற்படுத்தாது. எனவே அறிவின் மூலம் இந்தப் பண்பு தோற்றுவிக்கப்பட வேண்டும். இந்தத் தன்மையிலிருந்து அறிவு தனித்து விட்டால் அது பயனற்ற அறிவாகிவிடும். அப்போது அந்த அறிவுப்பணி எந்த விதமான நல்ல விளைவுகளையும் இவ்வுலகத்தில் ஏற்படுத்த மாட்டாது. இது நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சமாகும்.

(44ம் பக்கம் பார்க்க)

**பெருகிவரும் பாலியல் வன்முறைகள்:**

# பார்வையைத் தாழ்த்தி அவளையும் கட்டுப்படுத்துங்கள்

**ஆஸிம் அலவி**

அவள் சுமார் பதின்மூன்று வயது மதிக்கத்தக்க சிறுமி. ஆனால் பாலியல் வல்லுறவிற்குட்பட்டு ஒரு காடையனின் குழந்தையைத் தனது வயிற்றில் சுமக்க முடியாச் சுமையாக சுமந்து கொண்டிருக்கிறாள். அடுத்தவள் பதினொரு வயதிலேயே தந்தையைத் தெரியாத ஒரு குழந்தைக்குத் தாயாகி விட்டாள். மூன்றாமவளோ ஒருபடி மேலே இருக்கிறாள். பதின்மூன்று வயதையுடைய அவள் தனது தாயின் காதலனினால் வல்லுறவிற்குட்பட்டதன் மூலம் பெற்ற குழந்தையை பராமரித்துக் கொண்டிருக்கிறாள். இச்சம்பவம் காலி மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளது.

தெற்காசியாவிலே இலங்கை ஒழுக்கத்துறையில் படுமோசமான வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. நாட்டில் நடக்கும் பாலியல் வன்முறைச் சம்பவங்களை எடுத்துக் கொண்டால், 1987ல் 47 சம்பவங்கள் பொலிசுக்கு புகார் செய்யப்பட்டுள்ளன. ஆனால் 1997ல் அவை உயர்ந்து 900 சம்பவங்கள் புகார் செய்யப்பட்டுள்ளன. 2000வது ஆண்டு ஜனவரி 1 முதல் மார்ச் 1ம் திகதி வரை நடைபெற்ற கொடூரமான பாலியல் வன்முறைச் சம்பவங்களில், 19 வயது மதிக்கத்தக்க தனிமையாக இருந்த ஒரு யுவதியை ஒரு புகையிரத நிலைய துணைத் தலைமை அதிகாரி பலவந்தமாக வல்லுறவிற்குட்படுத்திய சம்பவம், கல்கிசைப் பகுதி உல்லாச ஹோட்டலில் பணிபுரிந்து விட்டு கடலோரமாக வீடு சென்று கொண்டிருந்த இரு பெண் ஊழியர்கள் பலவந்தமாக ஒரு காடையர் குழுவால் வல்லுறவிற்குட்படுத்தப்பட்ட சம்பவம், முச்சக்கர வண்டியில் தனியாக வீடு திரும்பிக் கொண்டிருந்த ஒரு யுவதியை கடுவலைப் பகுதியில் ஒரு சோதனைச் சாவடியில் நிறுத்தி அங்கிருந்த பொலிஸ் அதிகாரியின் துணையுடன் வல்லுறவிற்குட்படுத்திய சம்பவம், 21 வயதுடைய ஒரு யுவதியை கிரீன்பாத் பகுதியில் கடத்திச் சென்று வல்லுறவிற்குட்படுத்திய சம்பவம், களுத்துறையில் ஒரு வீட்டினுள் இரு காடையர் பலவந்தமாகப் புகுந்து அங்கிருந்த 19 வயது யுவதியைக் வல்லுறவிற்குட்படுத்திய சம்பவம் ஆகியனவும், மாளிகாவத்தைப் பகுதியில் தற்காலிகமாக தங்கி நிற்கும் இளம் சோடிகளின் அறைக்குள் புகுந்து யுவதிகளை வல்லுறவிற்குட்படுத்தும் ஒரு கும்பலின் சேஷ்டைகள் போன்றன குறிப்பிடத்தக்கவை.

நாடு முன்னெப்பொழுதும் இல்லாதவாறு மிகப்பயங்கரமான இருளை நோக்கிச் சென்று கொண்டிக்கிறது. ஓரளவேனும் ஒழுக்க உணர்வும், தன்மானமும் உள்ளவர்களுக்கு தமது இளம் பெண்களைக் காப்பாற்றுவதென்பது வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பது போன்ற வேதனையாக மாறிவிட்டது.

குழுக்குழுவாகச் சென்று பிச்சை எடுப்பது, கொள்ளையடிப்பது போன்று குழுவாகச் சென்று பாலியல் வன்முறைகளில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்துவிட்டன. 1998ன் நடுப்பகுதியில் மாத்திரம் 24 குழுரீதியான பாலியல் வன்முறைகள் குறித்து (GANG RAPES ) புகார் செய்யப்பட்டுள்ளன. அநேகமான சம்பவங்களில் பெண்கள் மிகக் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுமுள்ளனர். இந்தக் காமவெறி கர்ப்பிணித் தாய்மாரையும் விட்டுவைக்கவில்லை. அண்மையில் ஒரு பாடசாலை மாணவனும் அவனது நண்பர்களும் ஒரு கர்ப்பிணித் தாயை வல்லுறவுக்கு உள்ளாக்கியுள்ளனர். இத்தகைய கொடுமைகளுக்கு ஆளான அபலைப் பெண்களில் பலர் அவமானம் தாங்க முடியாத நிலையில் தம்மைத்தாமே மாய்த்துக் கொண்டுமுள்ளனர்.

இந்தக் கொடூரத்திலிருந்து மீட்சி பெறுவதற்கான வழிதான் என்ன? இவ்வன்முறையை இல்லாதொழிக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன? பெண்கள் எதிர்நோக்கியுள்ள இவ்வபாயகரமான பிரச்சினைனக்கு தீர்வுதான் என்ன? இந்நாட்டில் மரியாதையுடனும் நாணமுடனும் வாழ விரும்பும் பெண்களையாவது காப்பாற்ற வேண்டுமல்லவா?

அதற்குமுன் இவ்வன்முறை உணர்வுகளைத் தூண்டும் காரணிகளைக் கண்டறிய வேண்டும். பொலிஸ் குற்றத்தடுப்பு பெண்கள் நலன்காப்புப் பிரிவின் கூற்றுப்படி, போதைவஸ்த்துப் பாவனை, ஆபாசப் படங்களும், கதைகளும், மதுப் பாவனை ஆகியனவே பிரதான காரணிகள் என குறிப்பிடப்படுகிறது. ஆனால், பெண்கள் நலன்காப்புப் பிரிவு, பெண் பொலிஸ் அதிகாரிகளின் கையில் இருப்பதனால் அவர்களின் கருத்து இவ்விதம் ஒருபக்கப் பார்வையாகவே அமைந்துள்ளது. இது உண்மையின் மறுபகுதியை மறைக்கவே வழிகோலுகிறது. ஆனால் நடைமுறையில் காணும் ஆபாசக் காட்சிகளைப் பற்றி இந்தப் பெண் அதிகாரிகள் என்ன கூறப் போகிறார்கள்?

பெண்களின் கவர்ச்சிகரமான ஆடை அலங்காரங்களும், அமைப்புக்களும் இவ்வன்முறையைத் தூண்டுவதாக உள்ளது என வேறு ஆய்வுகள் கூறுகின்றன. மார்பை தள்ளிக் கொண்டும், சிகையை மாதிரிக்கு மாதிரி அலங்கரித்துக் கொண்டும், அடிவயிறும், தொப்புளும் வெளித் தெரியுமளவு மேற்சட்டை அணிந்து கொண்டும், தொடையை இறுக்கி வெளிக்காட்டும் கீழாடைகளை அணிந்து கொண்டும் ஆண்களின் உணர்ச்சியைத் தூண்டும் வண்ணம் நடைபயிலும் பெண்களைப் பற்றி இவர்கள் கூறுவதற்கு ஒன்றுமில்லை போலும்! ஏனென்றால் அது அவர்களது 'பெண்ணுரிமை' ஆயிற்றே!

நாட்டில் நடந்து கொண்டிருக்கும் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் குறித்து சில பெண்ணுரிமைவாதிகள் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் விநோதமாக உள்ளன. 'அடுத்தவனின் காம உணர்வைத் தூண்டும் விதத்தில் நடந்து கொள்ளும் பெண்ணையும், பல ஆண்களுடன் உறவு வைத்துக் கொள்ள விரும்பும் பெண்களையும் ஒழுக்கங் கெட்டவர்கள் என நோக்கும் மனோநிலை மாற வேண்டும்;

இப்படியான ஒரு நடத்தை மாற்றம் ஏற்பட்டால் பாலியல் வன்முறைகளைத் தடுக்க முடியும் என்பது இவர்களின் குருட்டுத்தனமான வாதம்.

நாட்டில் தொலைக்காட்சி சேவைகள் பல்கிப் பெருகிவிட்டன. மொத்தமாக பத்துச் செனல்கள் இருந்து கொண்டு மக்களுக்குப் பலதரப்பட்ட நிகழ்ச்சிகளை எவ்விதத் தங்குதடையுமின்றி தாராளமாக வழங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் பல நல்ல ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகள் இருப்பது போன்று வக்கிர உணர்வுகளை வளர்க்கும் நிகழ்சிகளும் ஏராளமாகக் காட்டப்படுகின்றன. 'நாகரிகம்' என்ற பெயரில் மேலைநாடுகளில் உள்ள அனைத்துக் கழிவுக் குப்பைகளும் இங்கே கொட்டப்படுகின்றன. திருமணம் முடித்தவள் மாற்றானுடன் கள்ள உறவு வைத்துக் கொள்ளல், காதலர்களின் களியாட்டங்கள், அரைகுறை ஆடைகளுடன் காட்சிதரும் பெண்கள், கொலை, மற்றும் கொலைச் சதித்திட்டங்கள் ஆகியன தொலைக்காட்சியின் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன. 'கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்' என விளம்பரப்படுத்துவதன் மூலம் வயதுக்கு வராதோரையும் தூண்டியிழுக்கும் தந்திரத்தை தயாரிப்பாளர்கள் கையாள்கின்றனர். தொலைக்காட்சியிலும், பத்திரிகையிலும் நல்ல விடயங்களைக் கண்டுகளிக்க எண்ணும் மனிதர்களுக்கு மரியாதை கிடையாது. ஏனெனில் கீழத்தரமான விளம்பரங்கள் அவர்களை வெட்கமடையச் செய்கின்றன.

இத்தகைய இழிவான நிகழ்ச்சிகளை தயாரிப்பதில் தொலைக்காட்சி, பத்திரிகைகளோடு தற்போது, அண்மைக் காலமாக தலைதூக்கியுள்ள FM அலைவரிசைகளின் தொலைபேசி நிகழ்ச்சிகளும் வழிசமைத்துக் கொடுக்கின்றன.

இந்த நாட்டில் குற்றச் செயல்களை தூண்டக் கூடிய அனைத்து வழிவகைகளும் திறந்து கிடக்கும் நிலையிலேயே முஸ்லிம்கள் என்ற வகையில் இப்பிரச்சினைக்குத் தீர்வு சொல்ல நாம் கடமைப்பட்டுள்ளோம்.

அண்மையில் மட்டக்குளிய பகுதியில் இடம்பெற்ற பாலியல் வல்லுறவுக் கொலைச் சந்தேக நபர்களை தூக்கிலிடுமாறு கோரி ஆர்ப்பாட்டம் நடாத்தினர். இதனை அவதானித்த சிலர் இந்நாடு இஸ்லாமியத் தண்டனைகளின் முக்கியத்துவத்தை உணரும் காலம் வந்துவிட்டது என கருத்துத் தெரிவித்தனர். உண்மையில் இலங்கைச் சூழலில் இஸ்லாமிய தண்டனைகளை அமுல்படுத்தினால் கழுத்தை இழப்போர் தொகை வகைதொகையற்றதாகிவிடும். இஸ்லாமிய தண்டனைகள் என்பது, குற்றம் புரிவதற்கான வாயில்களும், வாய்ப்புக்களும் அடைக்கப்பட்டுள்ள இஸ்லாமிய சூழலுக்குரியவையே!

அப்படியானால் இலங்கைச் சூழலில் இப்பிரச்சினைக்கு என்ன பரிகாரம் காணலாம்?
ஆபாசக் காட்சிகளைத் தடைசெய்யுங்கள்; மதுபானச் சாலைகளையும், கஸினோக்களையும் மூடிவிடுங்கள்; பெண்களின் உடை அமைப்பில் ஒழுக்க வரையறைகளை சட்டத்தில் அறிமுகப்படுத்துங்கள் என ஆட்சியாளர்களிடம் கோரலாம். ஆனால் இது சாத்தியமாகும் ஒன்றல்ல. ஏனெனில் இவை அனைத்திலும் அரசுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொடர்புகள் இருக்கின்றன. அல்லது இக்குற்றச் செயல்களில் மக்கள் ஈடுபடுவதன் காரணமாகவும் இவைகளை தாராளமயப்படுத்தி வைத்திருப்பதன் காரணமாகவும் அவர்கள் பதவியில் நீடித்திருப்பதற்கு வழிபிறக்கிறது. குற்றத்தில் ஈடுபடுபவன் குற்றத்திற்கான வாயில்களை தனது கைகளினாலேயே அடைத்துவிட முன்வருவானா? ஒரு மாபெரும் மனமாற்றம் ஏற்படும் வரை இது சாத்தியமாகாது.

மேற்கத்திய சட்டங்களினாலோ அல்லது அவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சட்டங்களாலோ இத்தகைய பிரச்சினைகளுக்கு பரிகாரம் தரமுடியது என்பதை ஆணித்தரமாகக் கூறலாம். ஏனெனில் அவை குற்றத்தின் வெளிப்படையான அடையாளங்களுக்கு மாத்திரமே பரிகாரம் தேட விழைகின்றன. உதாரணமாக எய்ட்ஸ் உயிர்கொல்லி நோயிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கு பாதுகாப்பான பாலுறவைப் போதித்து பிரச்சினை வேறு ரூபத்தில் வளர வழிசெய்கின்றன. அதேபோன்று அவற்றில் பல குளறுபடிகள் காணப்படுவதால் குற்றவாளி தனது வழக்கறிஞரின் துணையுடன் சட்டத்தின் ஓட்டைகளினூடாக தப்பித்துக் கொள்வதற்கு பல வாய்ப்புக்கள் உள்ளன. மேற்கத்தைய சட்டங்கள் தற்போது உலகளாவிய ரீதியில் தோன்றிய சமூகத் தீமைகளுள் ஏதாவது ஒன்றுக்குப் பரிகாரம் கண்டுள்ளதா? என்று கேட்டால் ஒன்றும் இல்லை என்றுதான் கூற வேண்டும். நிவ்யோர்க், லண்டன், பாரிஸ் மற்றும் நகரங்களில் சமூகக் குற்றச் செயல்கள் மலிந்து பெருகிவருவதற்கு அவர்களது கோணலான சட்டங்களே காரணம்.

மேற்கின் கழிவுக் குப்பைகளையெல்லாம் அள்ளித் தலையில் போட்டுக் கொள்ளும் மோகம் இருக்கும் வரை எமது நாட்டில் சமூகப் பிரச்சினைகள் இருந்து கொண்டேயிருக்கும். அவர்களது வாழ்கைமுறையைப் பின்பற்றுவது பெருமைக்குரிய செயல் என்ற மனோநிலை இருக்கும் வரைக்கும் நிலைமை சீரழிந்தே இருக்கும். ஆகையால் எமது சூழலில் பாலியல் குற்றங்களைத் தவிர்ந்து கொள்வதற்கு கீழ்வரும் வழிவகைகளைக் கையாள முயற்சிப்பதன் மூலம் அவற்றை இல்லாதொழிக்கும் முயற்சியில் இறங்க முடியும்:

- ⌘ எமது நாட்டுப்புறக் கலாச்சார பண்பாடுகளுக்கு புத்துயிரூட்டி அவற்றை பின்பற்ற மக்களுக்கு ஆர்வமூட்ட வேண்டும்.
- ⌘ மத நிறுவனங்களும், போதகர்களும் ஒழுக்க விழுமியங்களை கடைப்பிடிப்பதில் மக்களை ஆர்வமூட்டுவதோடு, மேற்கத்தைய பண்பாடுகளில் காணப்படும் சீரழிவுகளையும் அவற்றால் எமக்கேற்படும் பாதிப்புக்களையும் எடுத்துக்கூற வேண்டும்.
- ⌘ பெற்றோர் தமது இளம்பெண்களின் ஒழுக்க விடயத்தில் கூடுதல் கரிசனை எடுக்க வேண்டும். அவர்களது நண்பர்கள், போய்வரும் இடங்கள், அவர்கள் பார்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், அவர்களது பிரயாணங்கள், ஆடை ஒழுங்குகள் அனைத்திலும் கவனம் செலுத்தல் வேண்டும்.
- ⌘ வீட்டில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கடுமையான தணிக்கையை மேற்கொள்ள வேண்டும். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் நிரலை முன்கூட்டியே பத்திரிகையில் பார்த்து அதற்கேற்றவாறு நல்லவற்றை மாத்திரம் பாதர்க்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

(46ம் பக்கம் பார்க்க)

# இஸ்லாமியப் புத்தாண்டு புகட்டும் படிப்பினைகள்

முஹர்ரம் மாதம் தலைப்பிறை பார்ப்பதோடு எமது வாழ்வில் மற்றுமொரு புத்தாண்டு ஆரம்பமாகிறது. ஹிஜ்ரி 1421 பிறந்துள்ள இவ்வேளையில் நாம் கடந்த காலத்தை நினைவுகூர்ந்து எதிர்காலத்தை சரியான முறையில் எதிர்கொள்ள, சில திட்டங்களை வகுத்துச் செயற்பட திடசங்கற்பம் கொள்ள வேண்டியது மிக இன்றியமையாத் தேவையாகும்.

தியாகத்தின் சின்னமாய்த் திகழும் ஹிஜ்ரத்தும், தியாகத்தின் மாதமாய்த் திகழும் முஹர்ரமும் ஒவ்வொரு முஸ்லிமுடைய வாழ்விலும் எதிர்பார்க்கும் அம்சமும் இதுதான் எனலாம்.

காலத்தையும் நேரத்தையும் கணித்து வாழ்க்கை நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்காக மனித இனம் பண்டை காலம் தொட்டே பலவித ஏற்பாடுகளைச் செய்து வந்துள்ளது. இவ்வேற்பாடுகள் நாட்டுக்கு நாடு, இனத்திற்கு இனம் வேறுபட்டவைகளாக அமைந்திருந்தன. ஏதோ ஒரு முக்கிய நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு காலத்தைக் கணித்து வந்தனர். ஆனால், அனைத்து முஸ்லிம்களும் காலத்தைக் கணிக்க ஹிஜ்ரி ஆண்டையே அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

ஹிஜ்ரி ஆண்டின் முதல் மாதமாகக் கொள்ளப்படும் முஹர்ரம் மாதம் தியாகத்தின் மாதமாக அமைய, அதன் இறுதி மாதமாகக் கொள்ளப்படும் துல்ஹஜ் மாதமும், நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாக வாழ்வை நினைவுகூரும் ஒன்றாக அமைந்துள்ளமையும், இம்மாதங்களைத் தன்னகத்தே கொண்டு மிளிரும் ஹிஜ்ரியும் நபி (ஸல்) அவர்களின் தியாகப் பயணத்தை நினைவூட்டுவதாக அமைந்துள்ளமையும் இஸ்லாமியப் புத்தாண்டின் சிறப்புக்கு சான்றாக அமைகின்றன.

நிலநடுக்க ஆண்டு, யானை ஆண்டு போன்ற சில காலக்கணிப்பு முறைகள் அரபுநாட்டில் வழக்கிலிருந்து வந்தன. எடுத்துக் காட்டாக அப்ரஹாவின் படையெடுப்பின் பின் அரபுமக்கள் காலக் கணிப்பை யானை ஆண்டுக்குப் பின் 1ம் வருடம், 2ம் வருடம் எனக் கணித்தனர். முஹம்மத் (ஸல்) அவர்கள் நபியாக அனுப்பப்பட்ட பின்னர் முஸ்லிம்கள் நுபுவ்வத்தை அடிப்படையாகக் கொண்டு நுபுவத்தின் பின் 1ம் வருடம், 2ம் வருடம் என்று கணிக்கத் தொடங்கினர். அது எல்லோராலும் பின்பற்றப்படும் நடைமுறையாக அமையவில்லை. ஏனெனில், முஸ்லிம்களில் சிலர் நுபுவ்வத்தை அடிப்படையாகக் கொண்டு காலத்தைக் கணிக்க, இன்னும் சிலர் மக்கா காலகட்டத்தில் நிகழ்ந்த அபீஸீனியாவிற்கு ஹிஜ்ரத் சென்ற நிகழ்ச்சி, தாயிபுக்கு நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட ஹிஜ்ரத் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வருடத்தைக் கணித்தனர். மதீனாவுக்கான ஹிஜ்ரத் நிகழ்ந்ததன் பின்னர் அதனை அடிப்படையாகக் கொண்டும் காலத்தைக் கணித்தனர். எனவே, இஸ்லாத்தின் ஆரம்பத்தில் அனைத்து முஸ்லிம்களும் பின்பற்றும் வருடத்தின் கணிப்புக்கான ஒரு முறை அமுலில் இருக்கவில்லை எனலாம்.

**A.U.M. சித்தீக், ஓட்டமாவடி**

நபி (ஸல்) அவர்களின் காலத்திலும் தொடர்ந்து வந்த முதலிரு கலீபாக்களின் காலத்திலும் அண்டை நாடுகளில் இஸ்லாம் பரவ ஆரம்பித்த போது அந்நாடுகளில் வாழ்ந்தோர் அப்பிரதேசங்களில் நிலவிய கணிப்பீட்டு முறையையே பின்பற்றத் தொடங்கினர். இதனால் நிருவாக ரீதியில் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலை இஸ்லாமிய அரசுக்கு ஏற்பட்டது. கலீபா உமர் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்தில், ஆண்டு முறை அமைப்பினைப் பற்றி ஆலோசனை செய்வதற்கு ஒரு கூட்டம் கூட்டப்பட்டு, ஆலோசிக்கப்பட்டு இறுதியாக நபி (ஸல்) அவர்கள் மக்காவைத் துறந்து மதீனா சென்ற ஹிஜ்ரத் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு கணிப்பது சிறந்தது என்ற அலி (ரழி) அவர்களின் ஆலோசனை எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது. அன்று முதல் அனைத்துலக முஸ்லிம்களும் அதே முறையைப் பின்பற்றி வருடத்தின் ஆரம்பத்தைக் கணிக்க ஹிஜ்ரத்தை அடிப்படையாகக் கொண்டதிலிருந்து ஆரம்பகால முஸ்லிம்களிடம் ஹிஜ்ரத் பெற்றிருந்த முக்கியத்துவத்தினை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

'ஹிஜ்ரத்' என்ற சொல்லுக்கு, 'ஒருவர் வாழ்ந்து வரும் நெருக்கடியான சூழ்நிலையை விட்டொதுங்கி, வாழ்வதற்கேற்ற நல்லதொரு இடத்தை தேர்ந்தெடுத்தல்' என்பது பொருளாகும். இஸ்லாமிய நெறிமுறைகளைப் பின்பற்றி வாழமுடியாத சந்தர்ப்பம் தோன்றும் போது அவ்விடத்தை விட்டு, அல்லாஹ்வின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதற்கான சூழ்நிலை உள்ள ஓரிடத்திற்கு இடம்பெயர்ந்து செல்ல வேண்டியது முஸ்லிம்களின் கடமையாகும். அநீதியும், அக்கிரமங்களும், பாவங்களும், பாரதூரமான குற்றங்களும், இறைநிராகரிப்பும் சூழ்ந்துள்ள ஒரு சூழ்நிலையில், இறைகட்டளைகளே செயல்பட முடியாத ஒரு சமுதாய அமைப்பில் ஒருவர் முஸ்லிமாக வாழ்வது சாத்தியமற்றது. ஒவ்வொரு முஸ்லிமும் இஸ்லாமிய அகீதாவை ஏற்று இஸ்லாம் கூறும் சட்ட திட்டங்களைப் பின்பற்றி வாழவேண்டும். அதற்காக அவர்கள் ஒவ்வொருவரும் தனது உடல், பொருள், உயிர் அனைத்தையும் அர்ப்பணிக்கவும் தயாராக வேண்டும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதே ஒரு முஸ்லிமின் இலட்சியமாகும். இவ்வுன்னதமான கருத்துக்களை ஹிஜ்ரத் எமக்கு உணர்த்தி நிற்கிறது.

**"எவர்கள் தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டனரோ அவர்களின் உயிரை மலக்குகள் கைப்பற்றும்போது (அவர்களை நோக்கி, 'மார்க்கக் கட்டளையை நிறைவேற்ற முடியாத நாட்டில்) 'நீங்கள் எவ்வாறிருந்தீர்கள்?' என்று கேட்கப்படும். அவர்கள், 'அந்தப் பூமியில் நாங்கள் பலவீனர்களாக இருந்தோம்' என்று பதில் கூறுவார்கள். (அதற்கு மலக்குகள்,) 'அல்லாஹ்வுடைய பூமி விசலாமானதல்லவா? நீங்கள் அதைவிட்டு வெளிப்பட்டிருக்க வேண்டாமா?' என்று கேட்பார்கள். இத்தகையோர் தங்குமிடம் நரகந்தான். அது செல்லுமிடங்களில் மிகக் கெட்டது." (அல்குர்ஆன் 4:9)**

மேற்குறிப்பிட்ட வசனத்திற்கு அல்லாமா இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் விளக்கம் தருகின்றபோது இவ்வாறு கூறுகிறார்கள்,

*''இந்த இறைவசனம் நிராகரிப்பவர்களின் மத்தியில் வாழும் முஸ்லிம்கள், தாங்கள் இன்னொரு இடத்திற்கு இடம்பெயர்ந்து செல்ல எல்லா வசதிகளும் இருந்தபோதும், அவ்வாறு செய்யாமலிருக்கும் அத்தனை முஸ்லிம்களையும் குறிக்கும். அதாவது, முஸ்லிம்கள் இஸ்லாத்தைச் செயற்படுத்த முடியாத நிலையிலும், அதனை அடுத்தவர்களிடம் பிரச்சாரம் செய்ய முடியாத இடத்திலும் இருப்பது எந்த நியாயத்தின் கீழும் வராது. இப்படிப்பட்ட முஸ்லிம்கள் தங்களுக்குத் தாங்களே தவறிழைத்துக் கொண்டவர்களாவார்கள். பொதுவாக மார்க்க அறிஞர்களின் கருத்துப்படி இவர்கள் சட்டத்திற்குப் புறம்பான ஒரு செயலையே செய்கின்றனர்."*

இவற்றிலிருந்து, முழுமையான இஸ்லாமிய சூழ்நிலை இருந்தால் மட்டுமே முஸ்லிம்கள் இறைவனுக்கு முற்றாக அடிபணிந்து நடக்கின்ற கடமையை நிறைவேற்ற முடியும் என்பது தெளிவாகிறது. இத்தகையதொரு சமுதாயச் சூழலிலேயே முஸ்லிம்களின் அடிப்படைக் கொள்கைகள் செயலுருப் பெறமுடியும். எனவே, இச்சூழலை உருவாக்கும் இஸ்லாமிய சமூக அமைப்பு இன்றியமையாத் தேவையாகும். இவ்வுண்மையையும் ஹிஜ்ரத் எமக்கு உணர்த்தி நிற்கிறது.

இதன் காரணமாகவே நபி (ஸல்) அவர்கள் தோழர்களுக்கு அடிப்படைப் பயிற்சியை வழங்கிய பின் அத்தகைய சூழல் கிடைப்பதற்கு மிகப் பொருத்தமான இடமான மதீனாவுக்கு செல்லத் தீர்மானித்தார்கள். இஸ்லாத்தை ஏற்ற முஸ்லிம்களில் ஹிஜ்ரத் மேற்கொள்வதற்கு தமது சக்திக்கு மேற்பட்ட தடைகள் எதுவுமில்லாத அனைவரையும் மதீனாவுக்கு உடனடியாக ஹிஜ்ரத் மேற்கொள்ளுமாறு கட்டளையிட்டார்கள். எனவே நபித்தோழர்களும் அல்லாஹ்வின் திருப்தியே தமது வாழ்வின் குறிக்கோள் எனும் உறுதியை உள்ளத்தில் இருத்தி தமது குடும்பம், உற்றார் உறவினர்கள், சுற்றத்தார், செல்வங்கள் அனைத்தையும் துச்சமென மதித்து பல தியாகங்களை மேற்கொண்டு மதீனா சென்றடைந்தார்கள். பின்னர் உரிய சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்களும் மதீனா வந்து சேர்ந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் மதீனா வந்து சேர்ந்ததும் மேற்கொண்ட முதலாவது நடவடிக்கை இஸ்லாமிய சமூக அமைப்புக்கான அத்திவாரங்களைப் பலப்படுத்தியமையேயாகும்.

நபி (ஸல்) அவர்கள் மதீனா சென்றதும் மேற்கொண்ட முதல் நடவடிக்கைகளில் ஒன்றாக மஸ்ஜிதுந் நபவியை நிர்மானித்தார்கள். இது சமூக அமைப்பின் தலைமைச் செயலகமாக தொழிற்படலாயிற்று. அத்துடன் முஹாஜிர்களையும் அன்சார்களையும் ஒருவருக்கொருவர் சகோதரர்களாக இணைத்து விட்டார்கள். வெறுங்கையுடன் ஹிஜ்ரத் மேற்கொண்டுவந்த முஹாஜிர்களுக்கு தமது உடமைகளில் பாதியை வழங்கி சகோதரர்களாக ஏற்றுக் கொண்டனர். அத்துடன் மதீனாவில் இருந்த ஏனைய கோத்திரங்களுடனும் நேச உடன்பாட்டை செய்து கொண்டார்கள். இவற்றின் மூலமாக:

1. ஒவ்வொரு முஸ்லிமும் தனக்கு அல்லாஹ்வுடன் உள்ள தொடர்பை பலப்படுத்தி அல்லாஹ்வுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு வாழும் வாய்ப்பு ஏற்பட வழியாயிற்று.

2. முஸ்லிம்கள் என்ற வகையில் மதீனாவில் வாழும் அனைவரும் தமக்கிடையே உள்ள சமய, சமூக, கல்வி, கலாச்சார, பொருளாதார உறவுகள் அனைத்தையும் இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் அமைத்துக் கொள்ளும் சூழல் உருவாகியது.

3. தம்மை அடுத்து வாழும் முஸ்லிம் அல்லாத மக்களுடன் இஸ்லாம் கூறும் அன்பு, நீதி, நேர்மை என்ற பண்புகளின் அடிப்படையில் நடந்து கொள்வதற்கான நிலை தோன்றியது.

இவ்வாறு இஸ்லாமிய இலட்சியத்துடன் வாழ்வதற்காக நபி (ஸல்) அவர்களும் நபித்தோழர்களும் மேற்கொண்ட இந்த மகத்தான நிகழ்ச்சியை நினைவுறுத்தும் ஹிஜ்ரியாண்டில் இஸ்லாமிய இலட்சியத்தைப் பேணி வாழும் ஓர் இஸ்லாமிய சமூக அமைப்பை உருவாக்கும் பணியில் ஈடுபட நாம் திடசங்கற்பம் பூணவேண்டும்.

இஸ்லாமிய சமூக அடிப்படைக்கு இன்றியமையாத் தேவையான சகோதரத்துவத்தை ஒவ்வொரு முஸ்லிமும் வளர்த்துக் கொள்ள வேண்டும். சில பிரச்சினைகளையும், கருத்து வேறுபாடுகளையும் பெரிதுபடுத்தி பிளவுபட்டுச் சென்று ஒருவரையொருவர் தூற்றுவதையும், தூஷிப்பதையும் உடன் நிறுத்தி முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்கள் என்ற உணர்வுடன் செயற்பட வேண்டும். இவைகள் ஹிஜ்ரத் வேண்டி நிற்கும் அம்சங்களாகும்.

ஹிஜ்ரி ஆண்டின் முதல் மாதமாகத் திகழும் முஹர்ரம் மாதத்தில்தான் மூஸா (அலை) அவர்களையும், அவர்களைச் சார்ந்தோரையும் பிர்அவ்னிடமிருந்து காப்பாற்றி பிர்அவ்னையும், அவனது கூட்டத்தினரையும் அல்லாஹ் நீரில் மூழ்கடித்தான். நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது யூதர்கள் ஆஷுரா தினத்தன்று நோன்பு நோற்பதைக் கண்டார்கள். அவர்களை நோக்கி, 'நீங்கள் நோன்பு நோற்கும் இந்நாளின் சிறப்பு என்ன?' என நபி (ஸல்) அவர்கள் வினவியபோது, 'இது புனிதமான நாள்; இன்றுதான் மூஸா (அலை) அவர்களை அவரது விரோதியான பிர்அவ்னிதும், அவனது கூட்டத்தாரிடமிருந்தும் காப்பாற்றி, அவனையும், அவனது கூட்டத்தாரையும் நீரில் மூழ்கடித்தான். அதற்கு நன்றி செலுத்தும் முகமாக நாங்கள் நோன்பு நோற்கிறோம்' என யூதர்கள் கூறினர். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''மூஸா (அலை) அவர்களின் இந்த விடயத்தில் உங்களைவிட நானே அதிகம் உரிமையும், கடமையுணர்வும், தகுதியுமுடையவன்'' எனக் கூறிவிட்டு தாமும் நோற்று, பிறரையும் நோன்பு நோற்கும்படி ஏவினார்கள்.''
(புகாரி, முஸ்லிம்)

இந்நிகழ்ச்சியின் மூலம் மூஸா (அலை) அவர்கள் அக்கிரமக்கார ஆட்சியாளரின் அடக்கு முறையினையும், அக்கிரமங்களையும் கண்டித்து சத்தியத்தை முன்வைத்த போது பெரும் படைபலமும், அதிகாரமும் கொண்ட பிர்அவ்ன், மேற்படி எதுவும் இல்லாத, அல்லாஹ்வின் மீது அசைக்க முடியாத நம்பிக்கையை மாத்திரம்

(45ம் பக்கம் பார்க்க)

# பயனுள்ளவற்றையே கேளுங்கள்

கலாநிதி யூசுப் அல்கர்ழாவி தமிழில் : அஷ்ஷெய்க் A. அப்துல் மலிக் நளீமி

ஒரு முப்தி அவசியம் கொண்டிருக்க வேண்டிய கடமைகள், ஒழுகி வரவேண்டிய பண்பாடுகள் இன்னவை என விளக்கப்படுத்தப்பட்டுள்ளது போன்று, (பத்வா) மார்க்கத் தீர்ப்பு கேட்டு வருவோரிடம் இருக்க வேண்டிய ஒழுக்கங்கள், கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் குறித்தும் அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும். மார்க்கத் தீர்ப்பு வழங்குவோர் எத்தகைய பண்புகளை, ஒழுங்குகளை கொண்டிருக்க வேண்டும் என்பது குறித்த கலாநிதி யூஸுப் அல்கர்ழாவி அவர்களது ஆக்கமொன்றினை 'அல்ஹஸனாத்' கடந்த மிலேனியம் இதழில் வெளியிட்டிருந்தது. இந்த இதழில் மார்க்கத் தீர்ப்பு கேட்போரின் ஒழுங்குகள் குறித்த ஆக்கம் பிரசுரமாகிறது.

பத்வா கேட்டு வருபவர் தனது வினாவை தெளிவான அமைப்பில் தயார் செய்வது முதற் கடமையாகும். எமது முன்னோர்களான 'ஸலபுஸ் ஸாலிஹீன்' களின் அறிவிப்பின்படி, '**தெளிவாக வினவுவது அறிவின் அரைவாசி ஆகும்**' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கருத்தை நடைமுறைப்படுத்தும் முகமாக பிரயோசனம் நிறைந்த விடயங்களில் வினாக்களைக் கேட்பது அவசியம். கேள்விகள்தாம் நடைமுறையில் சிக்கல்களை எதிர்கொள்ளும் பிரச்சினையாக அல்லது வேறு ஒன்றாக அமைய முடியும். அதன் மூலம் தான் பெறப்போகும் முடிவு அதனைத் தீர்வுக்குக் கொண்டுவர வேண்டும்.

எப்போதாவது நடைபெறவிருக்கும், தற்போது சாத்தியமற்ற, எடுகோள்களான, கற்பனையான வினாக்களைத் தொடுக்கக் கூடாது. இவை 'கேள்விக்குரிய' மஸாயில் களில் (அம்சங்களில்) இடம்பெறும் தவறுகளைச் சார்ந்ததாகும். இதனைத் தடுத்து வந்துள்ள ஹதீஸை இமாம் அபூதாவுத் (ரஹ்) அவர்கள் அறிவித்துள்ளார்கள். சில நபித்தோழர்கள் எவ்விதப் பயனுமற்ற கேள்விகளை நபி (ஸல்) அவர்களிடம் கேட்டிருக்கிறார்கள். நபிகளார் அவை தொடர்பாக கடுமையாகக் கோபமடைந்துள்ளார்கள். உதாரணமாக, அப்துல்லாஹ் பின் ஹுதைபா (ரழி) அவர்கள் ''எனது தந்தை யார்'' என்று வினவியதைக் குறிப்பிடலாம். இதுபோன்ற வினாக்களில் ஒருபோதும் எப்பிரயோசனமும் கிட்ட முடியாது. அவர் இப்போது யாருடைய மகன் என்று மக்கள் மத்தியில் அழைக்கப் படுகிறாரோ அவருக்கு மாற்றமான ஒருவர் தந்தையாக இருந்தால் தனது தாயை அவமானப்படுத்தியதைத் தவிர வேறு என்ன விளைவைத்தான் இந்த ஸஹாபி அடைந்து கொள்ளப் போகிறார்?

அல்லாஹ் தன்னுடன் மாத்திரம் வரையறுத்துக் கொண்ட 'முதஷாபிஹாத்' ஆன விடயங்களில் கேள்வி கேட்பதிலேயே ஒரு நபித்தோழர் மும்முரமாக இருந்தார். இவற்றுடன் மனித வாழ்வுக்குத் தேவையான நடைமுறைச் சட்டம் எதுவும் தொடர்புபடுவதுமில்லை. இவற்றிற்குப் பின்னால் செல்வது எப்பயனுமற்ற வெறும் குதர்க்கத்தையே கிளறிவிடும். இறுதியாக நேரம் வீணடிக்கப்படுதல், சிந்தனைகளைக் குழப்பி விடுதல், உள்ளங்களில் வீணான ஐயங்களை ஏற்படுத்தல் என்பனவே எஞ்சும். இந்த ஸஹாபியை உமர் (ரழி) அவர்கள் தண்டித்தார்கள்.

'**அல்லாஹுத் தஆலா அர்ஷில் அமர்ந்தான்**'

என்ற வசனத்தில் 'அமர்ந்தான்' என்பதன் கருத்து யாது? என்று இமாம் மாலிக் (ரஹ்) அவர்களிடம் ஒருவர் கேட்டு வந்தார். கோபமுற்ற இமாமவர்கள் கூறினார்கள்,

'**அமர்வு என்பது அனைவரும் அறிந்ததே; எவ்வாறு என்பது அறியப்படாத விடயம்; ஆனால் அதனை ஈமான் கொள்வது வாஜிபாகும்; அது பற்றி கேள்வி கேட்பது பித்அத் ஆகும்.**' என்று கூறினார்கள்.

சில அல்குர்ஆன் விரிவுரைகளில், சில முஸ்லிம்கள் நபிகளாரிடம் வினவிய விடயங்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. ''பிறையானது நூல் போன்று மெலிதாகத் தோன்றி முழுமதி நிலையை அடையும் வரை வளர்கிறது; பின்னர் பழைய வடிவைப் பெறுமளவு தேய்கிறது. இதற்கு என்ன நேர்ந்துவிட்டது?'' என நபிகளாரிடம் வினவினர். உடனே அல்லாஹ் பதிலை இறக்கி வைத்தான்.

''**உம்மிடம் பிறையைப் பற்றிக் கேட்கின்றனர். மனிதர்கள் தமது வாழ்க்கையில் நேரத்தையும், ஹஜ்ஜையும் தீர்மானிக்கவே அது உள்ளது என்று கூறுவீராக**'' (**ஸூரா அல்பகரா**)

அல்குர்ஆன், அவர்களது கேள்வியை கருத்திற் கொள்ளாது பிறை மூலம் மனித வாழ்க்கையில், மார்க்க விவகாரத்தில் விளையும் பயன்களைப் பற்றிப் பேசுகிறது. இந்த அளவுதான் அவ்வேளையில் அந்த ஸஹாபிகளால் விளங்கிக் கொள்ள முடியுமாக இருந்தது. இந்தளவு விடையும் அவர்களுக்கு மிகவும் பிரயோசனம் மிக்கதாகவே அமைந்தது.

அல்குர்ஆன் பதிவு செய்துள்ள ஏனைய கேள்விகளும் நடைமுறை சார்ந்ததாகவே காணப்பட்டன. அவை அவர்களின் வாழ்க்கையினது உள்ளடக்கத்தைத் தொடுவனவாக அமைந்தன. கற்பனைகள், எடுகோள்கள், போலிப் பிரமைகள் என்பனவாக அவை அமையவில்லை. இவற்றுக்குத் தூண்டுதல் வழங்கும் பொழுதுபோக்குகள், கேளிக்கைகள், பயனற்ற போதனைகள், வீண் பிடிவாதம், மற்றவர்களை மட்டந்தட்டும் ஆசை போன்ற அற்பக் காரணிகள் எதுவுமே கண்ணியமிக்க அந்த மக்களின் பாதையில் தாக்கம் செலுத்தவில்லை. மார்க்க, பண்பாட்டு விவகாரங்களில் இவற்றிற்கு எப்பெறுமதியும் கிடையாது என்பதை அவர்கள் நன்கு புரிந்து வைத்திருந்தனர். அவ்வாறு அல்குர்ஆன் நிலையாக வைத்துள்ள அவர்களின் கேள்விகளுள் சில:

"**அவர்கள் மது, சூது பற்றி உம்மிடம் வினவுகின்றனர்**" (**ஸூரா அல்பகரா**)

"**அவர்கள் அநாதைகள் தொடர்பாக உம்மிடம் வினவுகின்றனர்**" (**ஸூரா அல்பகரா**)

"**அவர்கள் எதனைச் செலவு செய்வது என உம்மிடம் வினவுகின்றனர்.**" (**ஸூரா அல்பகரா**)

"மாதவிடாய் தொடர்பாக உம்மிடம் அவர்கள் வினவுகின்றனர்"

(ஸூரா அல்பகரா)

"தங்களுக்கு ஆகுமாக்கப்பட்டவை பற்றி உம்மிடம் வினவுகின்றனர்"

(ஸூரா அல்பகரா)

முஸ்லிம்கள் தமது பொற்காலங்களின் போது தமது மார்க்கம், வாழ்க்கை, மறுமை ஆகியவற்றிற்கு ஈடேற்றத்தை வழங்கும் விடயங்களிலேயே எப்போதும் வினா எழுப்புவர்களாக இருந்தனர். எவராவது அதீத கற்பனையில் சிறகடிக்க ஆரம்பித்தால் அறிஞர்கள் அவர்களை யதார்த்தத்தை நோக்கி திருப்பிவிடுவர். இஸ்லாம் விரும்புகின்ற முஸ்லிம் முரண் இயல்புக்கு மாற்றமாக பெரும் பயன்களை அளிக்கும் நோக்குடனேயே செயற்படுவான். வீண் கேளிக்கைகளில் ஈடுபடமாட்டான். தன்னையும், தனது நேரத்தையும் பயனளிக்கும் பேச்சுக்கள், செயல்கள், சிந்தனைகள் ஆகியவற்றிலேயே ஈடுபடுத்திக் கொள்வான்.

ஆனால், முஸ்லிம்கள் நாகரிக, சிந்தனை ரீதியாக பின்னடைவைச் சந்தித்த வேளையில் அதிகம் அதிகம் வினவிய விவகாரங்கள் அனைத்துமே-அவை களின் மூலம் மார்க்கம் சீர்பெறவுமில்லை; உலகம் உயர்ச்சி பெறவுமில்லை; எந்த தனிநபரும் தூய்மை பெறவுமில்லை; எந்தவொரு குழுவும் எழுச்சியடையவுமில்லை. முஸ்லிம்களில் பொதுமக்களின் கவனம் முழுமையாக ஈர்க்கப்பட்ட கேள்விகள், சில்லறை விவகாரங்கள் ஏதுமே எமது ஸலபுஸ் ஸாலிஹீன்களான நல்லடியார்கள் ஒருவரின் உள்ளத்திலாவது தோன்றியிருக்குமோ தெரியாது.

மேற்குறிப்பிட்ட உயிரோட்டத்தை கொழுந்து விட்டெரியச் செய்வதிலும், இப்போக்கைப் பலப்படுத்துவதிலும் பிற்காலத்தில் தோன்றிய சுய ஆற்றலற்ற அறிஞர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். உள்ளங்களை தடுமாற வைத்தனர்; வெளிப் பகட்டுக்களால் அவர்கள் பூரணமாக உள்வாங்கப்பட்டார்கள்; பொதுமக்களையும் அவற்றில் மூழ்க வைத்தார்கள்.

வுழு, சுத்தம் ஆகியவற்றைக் கற்பிக்க மாத்திரம் பல பாடவேளைகளை அந்த அறிஞர்கள் எடுத்துக் கொண்டனர். ரமழான் போன்ற மாதத்தை முழுமையாக இதற்காக மாத்திரம் செலவழித்தனர். வீழ்ச்சிக் காலப் பகுதியைச் சேர்ந்த படிவுகளைப் போல் இன்னும் சிலர் எஞ்சியிருக்கிறார்கள். அவர்கள் தொடுக்கும் வினாக்களைப் பார்க்கும் போது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக உள்ளது. அவர்களது ஆக்கங்களில் திருத்தத்தை மேற்கொள்ளும்போது இனித் திருத்துவதற்கு ஒன்றும் இல்லை என்றளவுக்கு விவகாரங்களை வாசிக்கக் கூடியாகவிருந்தது. முன்னைய காலத்தில் கூறப்படும் ஒன்றை இவ்விடத்தில் கூறலாம்,

"சோதனைகளில் மிகத் தீங்கானது சிரிப்பை கிளறிவிடுபவையே"

குகைவாசிகளுடன் சென்ற நாயின் நிறம் என்ன? அது ஆணா, பெண்ணா? அவர்கள் எங்கே? எப்போது வாழ்ந்தார்கள்? இவை பற்றி அல்லாஹ் எதுவும் கூறியிருக்காதபோதும் இவை தொடர்பாக கேள்வி எழுப்புகிறார்கள்! இவற்றைத் தெரிவிப்பதில் பயன் ஏற்படுமாயின் நிச்சயம் அல்லாஹ் அவை பற்றிய விபரங்களைக் கூறியிருப்பான். அவர்கள் மூவரா? ஐவரா? எழுவரா? என வேதம் கொடுக்கப்பட்டவர்கள் சர்ச்சைப்பட்டுக் கொண்டதை அல்குர்ஆன் கூறுகின்றது. அத்துடன் ஒரு முடிவையும் தெரிவித்துள்ளது:

**"நபியே நீர் கூறுவீராக! அவர்களது தொகை பற்றி அல்லாஹ்வே நன்கு அறிவான். அவர்கள் பற்றிய அறிவும் சிலருக்கே உண்டு. இவ்விடயம் தொடர்பாக மேலெழுந்தவாரியாக அல்லாஹ் கூறியவற்றைக் கொண்டே வாதிப்பீராக. வேறு யாரிடமும் குகை வாசிகள் சம்பந்தமாக முடிவு கேட்டுச் செல்லாதிருப்பீராக."**

**(ஸூரதுல் கஹ்ப் :22)**

அல்லாஹ் அவர்களது எண்ணிக்கையை நன்கறிவான். ஆனால் மக்களுக்கு அதனைத் தெளிவாகக் கூறவில்லை. நபிகளாரையும் இது தொடர்பான தர்க்கத்தில் மூழ்க வேண்டாமெனத் தடுத்துள்ளான். இதன் மூலம் முஸ்லிம் சமூகம் இதுபோன்ற பயனற்ற விவகாரங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டாம் என அறிவுரை கூறியுள்ளான்.

இவ்வகையான கேள்விகளைக் கொண்டே அரட்டையடித்துக் கொண்டிருக்கும் சிலர் மறைவான விடயங்கள் சம்பந்தமாக கேள்வி எழுப்புகிறார்கள்.

"மனிதர்கள் கப்றில் என்ன மொழியில் பேசுவார்கள்? சுரியானியிலா? அரபியிலா? அல்லது வேறு ஒரு மொழியிலா?" என்றெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இமாம் ஆமிர் அஷ்ஷஃபி (ரஹ்) அவர்கள் கண்ணியமிக்க ஒரு பிக்ஹ் துறை அறிஞர். தாபிசுக்களைச் சேர்ந்தவர். இத்தகைய கேள்வி கேட்ட ஒருவருக்கு முகத்தில் அறைந்தாற்போல் பதில் கூறி விட்டார்.

'இப்லீஸுடைய மனைவி யார்? என ஒருவர் கேட்டார். 'நான் அந்த திருமண வைபவத்திற்குச் செல்லவில்லையே!" என இமாம் அஷ்ஷஃபி (ரஹ்) அவர்கள் கூறிவிட்டார்கள்.

சில மனிதர்களுடன் நானும் இதே போன்ற வழிமுறையிலேயே நடந்து கொள்ள வேண்டி ஏற்படுகிறது. நான் ஒருமுறை பள்ளிவாசலில் விரிவுரையை நிகழ்த்திக் கொண்டிருந்தேன். தன்னை ஓர் ஆலிம் என அறிமுகப்படுத்திக் கொண்ட ஒருவர்,

"ஷெய்க் அவர்களே! அல்லாஹ் குர்ஆனில் கூறியுள்ள எமது தலைவர் மூஸா (அலை) அவர்களின் சகோதரியின் பெயர் யாது?" என வினவினார். அதற்கு நான், 'உனக்கும் அப்பெண்ணுக்கும் என்ன சம்பந்தம்? அவரைத் திருமணம் பேசவா கேட்கிறீர்? மர்யம், ஸுலைஹா, மாரியா... என எதுவாகவும் இருக்கலாம். இதனால் உமக்கு என்ன பயன் கிடைக்கப் போகிறது? அப்பெண்ணின் பெயர் பற்றி அல்லாஹ் ஏதும் கூறவில்லை; நபிகளாரும் தெரியப்படுத்தவில்லை. எனவே எப்பயனுமற்ற, அல்லாஹ்வே விட்டுவிட்ட விடயத்தில் நாம் ஏன் எம்மைக் கஷ்டப்படுத்திக் கொள்ள வேண்டும்?" என்று கூறிவிட்டேன்.

சில தப்ஸீர் ஆசிரியர்களை அல்லாஹ் மன்னிக்க வேண்டும். தெளிவற்ற விடயங்களுடன் ஆரம்பிப்பார்கள். அவ்விடயங்களை இவைதான் எனக் குறிப்பிட்டு திரும்பத் திரும்பக் கூறுவார்கள். இவை தொடர்பாக எவ்வளவு கருத்து வேறுபாடு காணப்படினும். வந்த அறிவிப்புக்களையெல்லாம் தெரிவிப்பார்கள். அவை அனைத்துமே இஸ்ராயிலிய்யத்தான வையாக (பனூ இஸ்ரவேலர்களிடமிருந்து பெற்ற அறிவிப்புகள். அல்குர்ஆனும் சுன்னாவும் இவை பற்றிப் பேசாதவை.) இருப்பினும் சரியே! அவற்றை அறிந்து கொள்வதால் அல்லாஹ்வின் மார்க்கத்திலும், மனிதர்களின் உலக விவகாரங்களிலும் எவ்விதப் பயனும் கிடைக்கப் போவதில்லை.

# பிறமதத்தவர்களுடன் இஸ்லாத்தின் நீதமும் தயாளமும்

பதாவா முஆஸிரா

மூலம் : கலாநிதி யூஸுப் அல்கர்ழாவி தமிழில் : அஷ்ஷெய்க் A.A. கியாஸ் முஹம்மத் நளீமி

**கேள்வி :**

இஸ்லாம் உலகத்திலிருக்கும் மார்க்கங்களுள் ஒன்று. பொதுவாகவே எந்தவொரு மார்க்கத்தையும் பின்பற்றுகின்றவர்கள் அதனையிட்டு பெருமையடைவர். அதற்கு விசுவாசமாக நடந்து அதனை ஏற்றோருக்கு அன்புகாட்டி மறுத்தோரை நிராகரித்து விடுவர். தான் மாத்திரமே சத்தியத்திலிருப்பதாயும் ஏனையோர் அசத்தியத்தில் இருப்பதாயும் உறுதியாக நம்புவர். இதில் தீவிரமாகச் செல்லும் சில சமயவாதிகள் தமக்கு முரணான அனைவரையும் எதிர்க்கவும் அவர்களுக்கெதிராக வெறுப்பையும், காழ்ப்புணர்ச்சியையும் ஏற்படுத்திக் கொள்ளவும் முற்படுகின்றனர். சிலபோது இது இன்னும் தீவிரமடைந்து தமக்கு முரண்படுவோரின் உயிர் உடமைகளை சூறையாடுவதை குற்றமற்ற ஒன்றாகவும், இறைவனிடம் நெருக்கத்தைப் பெற்றுத்தரும் ஒன்றாகவும் நம்புகின்ற நிலையை அடைகின்றது.

சந்தேகமின்றி இந்நிலை முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதோரும் ஒரு நாட்டு மக்களாக வாழ்கின்ற வேளை பேராபத்தாக அமையும். இங்கு ஒற்றுமை குலைந்து, அணிகள் பிளவுபட்டு அனைவரும் தப்பெண்ணத்திலும் பயத்திலும் வாழும் நிலை தோன்றும். அந்நிய சக்திகள் இதனை இனங்கண்டு கொண்டாலோ நிலைமை இன்னும் மோசமாகும். அவர்கள் வேற்றுமை எனும் நெருப்பை இன்னும் ஊதி, அனைவரும் எரிந்து போவதில் இன்பமடைவர்.

எனவே இவ்விடயத்தை ஆய்ந்து முஸ்லிமல்லாதோருடன் குறிப்பாக அவர்கள் சிறுபான்மையாக இருக்கையில் இஸ்லாம் கொள்ளும் நிலைப்பாட்டை விளக்குமாறு தங்களிடம் வேண்டுகிறேன். இதனால் இஸ்லாம் தவறாக விளங்கப்படுவதும், அதனைச் சரியாக விளங்காத, செயற்படுத்தாத சிலரின் காரணமாக அது பாதிக்கப்படுவதும் தவிர்க்கப்படலாம்.

அல்லாஹ் உங்களுக்கு நல்லருள் பாலிப்பானாக.

**பதில்:**

இவ்விடயம் குறித்த உண்மைகள் அறிஞர்களால் தெளிவுபடுத்தப்பட வேண்டும். அதுகுறித்த சந்தேகங்கள் நீக்கப்பட வேண்டும். அப்போதுதான் இஸ்லாத்தில் இல்லாதவை அதில் சேர்க்கப்படுவதும் முஸ்லிம்களில் சிலர் சரி எனக் கருதி தவறுகளில் விழுந்து விடுவதும் தவிர்க்கப்படும்.

இது குறித்து ''முஸ்லிம் சமூகத்திலிருக்கும் முஸ்லிமல்லாதவாகள்'' எனும் நூலை நான் எழுதியிருக்கிறேன். இது பல பகுதிகளில் பிரசுரிக்கப்பட்ட பலதடவைகள் அச்சிடப்பட்ட பல மொழிகளில் பெயர்க்கப்பட்டுவிட்ட ஒரு நூலாகும்.

**கவனிக்கப்பட வேண்டியவை:**

தலைப்பை விளக்குவதற்கு முன்னர் கீழ்வரும் விடயங்கள் கவனிக்கப்பட வேண்டியவையாகும்.

**முதலாவது :** சில குறுகிய வட்டத்தையுடைய அல்லது ஒழுங்கான வளர்ப்பினைப் பெறாத முஸ்லிம்களின் செயற்பாடுகள் இஸ்லாத்தோடு இணைத்து நோக்கப்படக் கூடாது. இஸ்லாம் முஸ்லிம்களுக்கான ஆதாரமேயன்றி முஸ்லிம்கள் இஸ்லாத்துக்கான ஆதாரமன்று. 'அறிவிலியான நண்பனை விட புத்திக் கூர்மையுள்ள எதிரி சிறந்தவன்' எனக் கூறப்படுவது போல இஸ்லாமும் அதனை நேரடியாக எதிர்க்கின்ற அல்லது மறைமுகமாக சூழ்ச்சி செய்கின்றவர்களின் தீங்கை விட அதன் பெயர்தாங்கியவர்களின் நடவடிக்கைகளால் பெரும் சோதனைக்குள்ளாகியிருக்கிறது.

**இரண்டாவது :** தம்மோடு மார்க்கத்தில் முரண்படுவோருடன் தீவிரமாக நடந்து கொள்ளும் மடையர்கள், காரணமின்றி அவர்களோடு தகாத முறையில் நடந்து கொள்வோர் மற்றும் அவர்களின் உயிர் உடமைகளையும் சிலபோது ஹலாலாக்கிக் கொள்வோரைப் பொறுத்தவரை அவர்களின் தீங்கிலிருந்து முஸ்லிம்களும் கூட தப்பியதில்லை. சக முஸ்லிம்கள் விடயத்திலும் இவர்கள் தலையிட்டு அவர்களது ஈமானிலும் மார்க்கத்திலும் குறை கண்டு, காபிர் பட்டமும் சூட்டி விடுகின்றனர். அதனடியாக அவர்களின் உயிர் உடமைகளை ஹலாலாக்கிக் கொள்கின்றனர். வரலாற்றில் கவாரிஜ்களும், நவீன காலத்தில் அவர்களின் சாயலில் வந்தோரும் இந்நிலையில் இருக்கக் காண்கிறோம். இதற்கான மூலகாரணி தன்னை ஒரு மலக்காகவும் ஏனையோரை ஷைத்தானாகவும் காண்கின்ற மதிகெட்ட நிலையாகும். இந்த மதி மயக்கம் அழிவுக் காரணிகளில் ஒன்றாகும்.

**மூன்றாவது:** மதவாதிகள் சிலரிடம் நாம் காண்கின்ற தீவிரவாதத்திற்கான காரணம் பெரும்பாலும் மார்க்க ரீதியானதாக அன்றி சமூக, பொருளாதார, அரசியல் சார்ந்ததாகவே இருக்கின்றமை ஆழ்ந்து நோக்கின் புலப்படுகிறது. இதனால்தான் அவை எல்லாப் பிரதேசங்களிலுமன்றி சில பகுதிகளில் மாத்திரம் தோன்றுகின்றன. காரணம், இங்குள்ள சமூக நிலைகளும் அவற்றில் பாரம் பரியமாகவிருந்து வரும் சிக்கல்களுமே தீவிரவாதத்தை தோற்றுவித்து அதன் வளர்ச்சிக்கும் துணை செய்கின்றன. எனவே, இவற்றின் பின்னணியில் மார்க்கம் இருக்கின்றதெனக் குறை கூறுவது பெரும் அநியாயமாகும்.

**நான்காவது:** இன்று சில மதவாதிகளிடம் காணப்படும் தீவிரம் சிலபோது முஸ்லிமல்லாதோரின் தீவிரத்தின் பிரதிவிளைவாக இருக்கலாம். எனவே, தீவிரம் தொடர்பாக எப்போதும் பெரும்பான்மையை மட்டுமே குறைகாண்பது நீதமாகாது. சிறுபான்மையினரும் கூட அல்லது அவர்களில் சிலராவது அச்சத்தால் (அதற்கு அடிப்படை ஏதும் இல்லாவிட்டாலும்) அல்லது கோஷங்களால் அல்லது மிகைப்படுத்தல்களால் உந்தப்பட்ட பெரும்பான்மைக்கு எதிராக சூழ்ச்சிகளை ஒத்த செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர்.

இந்நிலையில் வதந்திகள் பரவி, சிறு விடயங்களும் பெரிதுபடுத்தப்பட்டு ஒரே நாட்டு மக்களிடையே நம்பிக்கை குறைந்து அவர்கள் பிரச்சினைகளை நேரடியாக எதிர்கொள்ள அல்லது அவற்றை வேரோடு களைந்து விடத் தயங்குகின்றனர்.

**முஸ்லிமல்லாதோர் குறித்து இஸ்லாம்:**

இஸ்லாம் அல்லாத பிற மதங்களைச் சார்வோர் இரு வகையாக அமைவர்.

1- சிலைவணங்கிகள் அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட மதங்களைச்

சார்ந்தவர்கள். இவர்களுக்கு உதாரணமாக சிலை வணங்கும் முஷ்ரிக்குகள், நெருப்பு வணங்கும் மஜூஸிகள், கிரகங்களை வணங்கும் சாபியீன்கள் என்போரைக் குறிப்பிடலாம்.

2. இறைமார்க்கங்களைச் சார்ந்தோர். இவர்களுக்கு அல்லாஹ் அருளிய மார்க்கமும், வேதமும் அடிப்படையாக இருக்கும் யூத கிறிஸ்தவர்களை அஹ்லுல் கிதாப் (வேதத்தையுடையவர்கள்) என அன்பாக அழைக்கின்றது.

இந்த இரண்டாவது பிரிவைச் சார்ந்த வேதத்தையுடைய மக்களுக்கு இஸ்லாம் பிரத்தியேகமான ஒரு போக்கைக் கையாள்கிறது. அவர்களது உணவை ஆகுமாக்கி திருமணத் தொடர்புகளை அங்கீகரித்துள்ளது.

**''வேதம் கொடுக்கப்பட்டோரின் உணவு உங்களுக்கும், உங்களது உணவு அவர்களுக்கும் ஆகுமானதே. அவ்வாறே விசுவாசிகளில் கற்புடைய பெண்களும், முன்னர் வேதம் அளிக்கப்பட்டோரில் கற்புடைய பெண்களும் ஆகுமானவர்கள்'' (அல்குர்ஆன் 5:5)**

மனிதர்களை பரஸ்பரம் இணைக்கும் இரு முக்கிய கருவிகளுள் திருமணமும் ஒன்றாகும். இதனை அல்குர்ஆன்,

**''அவன்தான் நீரிலிருந்து மனிதனைப் படைத்து அவனைச் சந்ததிகளும் திருமண பந்தங்களும் உடையவர்களாக்கினான்'' (அல்குர்ஆன்: 25:54)** என்று கூறுகிறது.

அவ்வாறே திருமணம் இஸ்லாத்தின் பார்வையில் குடும்ப வாழ்வின் மூலங்களான அன்பு, அருள், அமைதி என்பவற்றின் அடிப்படையாக அமைகிறது.

**''நீங்கள் அமைதியடையும் பொருட்டு உங்களிலிருந்தே உங்கள் மனைவியரைப் படைத்திருப்பது அத்தாட்சிகளில் நின்றுமுள்ளதாகும். அவனே உங்களுக்கிடையில் அன்பையும் அருளையும் ஏற்படுத்தினான்'' (அல்குர்ஆன் 30:21)**

ஒரு முஸ்லிம், வேதத்தையுடைய ஒரு பெண்ணை மணப்பதென்பது அவனது மாமா, குழந்தைகளின் பாட்டன் பாட்டி, அவர்களது மாமா, சாச்சி, அவர்களது புதல்வர்கள் எனப் பலரும் அஹ்லுல் கிதாபாக இருப்பர் என்பதாகும். எனவே அவர்களுக்கு இஸ்லாம் விதிக்கும் உறவினருக்கான உரிமைகள் கிடைக்கின்றன. மார்க்க ரீதியாக முரண்படும் ஒருவனோடு இஸ்லாமிய ஷரீஆவில் காணப்படுவதை விடப் பரந்த உச்ச அளவிலான தாராளத்தன்மை வேறு எங்கும் காணப்பட முடியாது.

முஸ்லிமல்லாதார் இஸ்லாமிய அரசோடும், சமூகத்தோடும் கொள்ளும் உறவின் அடியாக அவர்களை போராளிகள், சமாதான உடன்படிக்கை செய்தோர் என மற்றொரு வகையில் பிரித்து நோக்கலாம்.

இவர்களுள் போராளிகளைப் பொறுத்தவரை அவர்களுடனான உறவை வரையறுக்கின்ற சட்டங்களையும், போராட்ட சமயத்திலும் கூட அவர்களுடன் பேண வேண்டிய பண்பாடுகளையும் இஸ்லாம் சொல்லித் தருகின்றது. போராட்டத்தின்போது அத்துமீறல், ஏமாற்றுதல், சடலங்களைச் சீரழித்தல், மரங்களை வெட்டுதல், கட்டிடங்களைச் சேதப்படுத்தல், சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்களைக் கொலை செய்தல் என்பன தடுக்கப்பட்டுள்ளதோடு, போராட்டம் எம்மை எதிர்ப்பவர்களோடு மட்டுமே இடம்பெற வேண்டும் எனப் பல சட்டங்களை இஸ்லாமிய பிக்ஹின் ஜிஹாத் பகுதி விரிவாகப் பேசுகின்றது.

சமாதான உடன்படிக்கை செய்தவர்களோடு உடன்படிக்கைக்கு ஏற்ப நடக்க வேண்டும்; அவர்களுடனான உறவும் நீதமும் பேணப்பட வேண்டும்.

இதற்கு மாறாக இவ்விரு பிரிவினரையும் காபிர்கள் என்ற ஒரே பார்வையில் நோக்குவது தவறும், அறியாமையுமாகும். அல்குர்ஆன் இவ்விரு சாராரையும் தெளிவாகப் பிரித்துக் காட்டியுள்ளது. பின்வரும் இரு வசனங்களும் உறவுக்கான வரையறையைத் தருகின்றன.

**''மார்க்க விஷயத்தில் உங்களோடு போராடாத உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கு நீங்கள் நன்மை செய்வதையும், அவர்களுடன் நீதமாக நடந்து கொள்வதையும் அல்லாஹ் தடுக்கவில்லை. அவன் நீதமானவர்களை நேசிக்கிறான். மாறாக, மார்க்க விடயத்தில் உங்களோடு போரிட்டு இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றிய, வெளியேற்றுவதற்கு துணை செய்தவர்களோடு நேசம் பாராட்டுவதையே அல்லாஹ் தடுக்கிறான். இவ்விதம் அவர்களை நேசர்களாக்கிக் கொள்வோர் அநியாயக்காரர்களாவர்.'' (அல்குர்ஆன் 60:8,9)**

உடன்படிக்கை செய்து கொண்டவர்களும் இருவகைப்படுவர்:

அ) தற்காலிகமான உடன்பாடு: உடன்படிக்கைக் காலம் வரை அது பேணப்படும்

ஆ) நிரந்தர உடன்பாடு

இவர்களையே திம்மீக்கள் என அழைப்போம். திம்மீக்கள் என்பது பாதுகாப்புப் பெற்றவர்கள் என்ற கருத்தில் கையாளப்படுகிறது. அதாவது, அவர்களுக்கு அல்லாஹ்வினதும், ரஸூலினதும் முஸ்லிம்களினதும் பாதுகாப்பு உண்டு என்பதாகும். இஸ்லாமிய பிக்ஹில் இவர்கள் குறித்து ''எமக்குரிய உரிமைகளும், கடமைகளும் அவர்களுக்கும் உண்டு'' என விளக்கப்படும். அதாவது மார்க்க விவகாரங்கள் தவிர வுள்ளவற்றில் எமக்குரிய உரிமைகள், கடமைகள் மொத்தமாகவே அவர்களுக்கும் உண்டு என்பதாகும்.

திம்மீக்கள் முஸ்லிம் நாட்டின் பிரஜைகளாக இருக்கிறார்கள். 'திம்மீ' என்ற வார்த்தை இழிவை அல்லது குறைத்து மதிப்பிடுவதை காட்டாது. மாறாக அவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்குவது ஷரீஅத் ரீதியான கடமை என்பதையே காட்டுகிறது.

இந்தப் பிரயோகத்தை கிறிஸ்தவச் சகோதரர்கள் கஷ்டமெனக் கண்டால் அதனை மாற்றிக் கொள்ளலாம். காரணம், அல்லாஹ் ஓர் இபாதத்தாக இதனை ஆக்கவில்லை. இதைவிட முக்கியமான, அல்குர்ஆன் குறிப்பிட்ட ''ஜிஸ்யா'' எனும் வார்த்தையைக்கூட கிறிஸ்தவர்களின் 'பனூ தக்லப்' கோத்திரத்தாரின் வேண்டுகோளுக்கிணங்க உமர் (ரழி) அவர்கள் நீக்கினார்கள். அம்மக்கள் இப்பெயரை நீக்கிவிட்டு 'சதகா' என்ற பெயரில் அதன் அளவு இரட்டிப்பாயினும் சரியே அறவிடுமாறு வேண்டினர். இதற்கு உடன்பட்ட உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள்:

*''இம்மடையர்கள் பெயரை மட்டும் நீக்கி அதன் கருத்தை தொடர்ந்தும் ஏற்கிறார்கள்.''*

இந்தச் சம்பவம், நாம் எப்போதும் சொற்களில், பெயர்களில் கவனம் செலுத்தாது, அவை தங்கியிருக்கும் நோக்கங்களையும், பொருள்களையுமே கவனிக்க வேண்டுமெனும் யதார்த்தத்தைக் கற்றுத் தருகிறது. எனவேதான் எகிப்து போன்ற முஸ்லிம் நாடுகளில் முஸ்லிம்களோடு இரண்டறக் கலந்து வாழும் கிறிஸ்தவச் சகோதரர்கள் விடயத்திலும் அவர்கள் விரும்பாத 'ஜிஸ்யா' என்ற பிரயோகம் பயன்படுத்தப்படுவது கட்டாயமல்ல என நாம் கூறுகிறோம். அவர்கள் ஏதாவதொரு வகையில் வரியைச் செலுத்துவதோ அல்லது அதற்குப் பகரமாக நாட்டின் பாதுகாப்புக் கடமையில் பங்கேற்பதோ போதுமானதாகும்.

'பிக்ஹுஸ் ஸகாத்' எனும் எனது நூலில் திம்மீக்களாக வாழ்வோரின் பாதுகாப்பு குறித்து விளக்கியுள்ளேன். அவர்களின் உயிர், உடமைகள், மானம் மற்றும் வணக்கஸ்தலங்கள் உட்பட சகல பாதுகாப்பும் வழங்கப்படுவதோடு அவர்களது

(34ம் பக்கம் பார்க்க)

# உலக நோக்கில் இஸ்லாமிய இயக்கங்கள்

உரை :
மௌலானா காஸி ஹுஸைன் அஹ்மத்
(அமீர், பாகிஸ்தான் ஜமாஅதே இஸ்லாமி)
தமிழில் : இஸ்மத்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**பா**கிஸ்தானைப் பொறுத்தளவிலும் எமது பாதுகாப்பு அமெரிக்காவிடம் இருப்பதாக கருதினால், அமெரிக்காவின் ஏகாதிபத்தியத்தை அங்கீகரித்து அவர்க ளுடைய ஆலோசனையைப் பெறுவதிலே தான் எமது பாதுகாப்பு இருப்பதாகச் சிந் தித்தால், அதனைப் பெறுவதற்கான இலகு வான வழி அணுவாயுத நிகழ்ச்சித் திட்டத் தினையும், ஏவுகணை அபிவிருத்தித் திட் டத்தினையும் கைகழுவிவிட்டு உள்நாட்டு பாதுகாப்பை மாத்திரம் நிறைவு செய்வ தாக, இந்தியாவுக்கு சவாலாக அமைந்து விடாத இராணுவ விஸ்தரிப்புத் திட்டத்தை மேற்கொள்வதுமாகும். அத்தோடு பிராந் தியத்தில் இந்தியாவின் ஏகாதிபத்தியத்தை ஏற்று கஷ்மீர் சம்பந்தமாக இந்தியாவின தும், அமெரிக்காவினதும் தீர்வுத்திட்டத் தினை அங்கீகரிக்க வேண்டும். மேலும் நிரந்தரக் கட்டுப்பாட்டு எல்லை சம்பந்த மான யோசனைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் அமெரிக்காவின் நல்லபிப்பிராயத்தை எம்மாலும் சம்பாதித்துக் கொள்ளலாம்.

**பா**க்-இந்திய உறவில் ஏற்பட்ட விரிசல் தொடர்பாக இந்தியாவின் பக்கம் நின்று அதற்கு சார்பாக வாதிடுபவர்கள் எம்மில் இருக்கின்றனர். பாகிஸ்தானையும், முஸ்லிம் உம்மத்தையும்விட இந்தியா அவர்களுக்கு அன்புக்குரியதாக ஆகி விட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது. இந்தியா அவர்கள் நினைப்பது போன்று பலமானதொரு நாடுமல்ல. இன்று இந்திய உள்ளுக்குள் பலகூறுகளாக உடைந்து செல்வதை மறந்துவிட்டே இப்படி எண்ணு கிறார்கள். தற்போது அங்கு 17க்கும் மேற்பட்ட தனித்தனியாக பிரிந்து சென்ற கட்சிகள் இருக்கின்றன. ஒவ்வொரு கட்சி யும் தனித்தனியாக சுதந்திரமாக இயங்க அனுமதியைக் கேட்டுக் கொண்டிருக்கின் றன. ஆனால், பாகிஸ்தானைப் பொறுத்த ளவில் எவ்வளவு பலவீனமும், பிரச்சினை களும் இருந்த போதிலும் இந்தியாவை விட அரசியல் பொருளாதார, கலாசார ரீதியில் மேம்பட்டே காணப்படுகிறது.

**பா**கிஸ்தானின் பொருளாதார நிலை இந்தியாவை விட திருப்திகரமான நிலை யில் உள்ளது. 1988-1999 ஆம் ஆண்டு உலக அபிவிருத்தி அறிக்கை (World Development Report) யின் படி இந்தியா வின் ஆள்வீத வருமானம் 390 அமெரிக்க டொலர்களாக இருக்கையில் பாகிஸ்தானின் ஆள்வீத வருமானம் 490 அமெரிக்க டொலர் களாகும். வறுமை நிலையைப் பொறுத்தள விலும் இந்தியாவின் நிலை மிக மோசமா னதே. பாகிஸ்தானில் வறுமைக் கோட்டுக் குக் கீழ் 34% மக்கள் வாழ்கின்றபோது இந்தியாவில் 41% மானோர் வாழ்கின்றனர். பாகிஸ்தானில் 11.61% இனரே ஒரு நாளை க்கு ஒரு டொலர் வருமானத்தைப் பெறு கின்றனர். ஆனால் இந்தியாவின் சனத் தொகையில் 52.5% இனர் ஒரு டொலருக் கும் குறைவான நாளாந்த வருமானத்தைப் பெறுகின்றனர். பாகிஸ்தானில் 57% மானோர் இரண்டு டொலருக்கும் குறை வான வருமானத்தை நாளாந்தம் பெறுகின் றனர். இவர்களது தொகை இந்தியாவில் 88.8% மாக உயர்ந்து காணப்படுகிறது. இத்தகைய நிலையில் இந்தியா பாதுகாப் புக்காக பெருமளவு பணத்தை செலவிடுகி றது. இதன் விளைவு ரஷ்யா சந்தித்த மோசமான விளைவைப் போன்று ஆகிவிட லாம். தூரநோக்குள்ள அரசியல் சிந்தனை யாளர்களால் இதனைத் தெளிவாகக் கண்டு கொள்ள முடியும். நிலைமை இப்படி இந்தியாவில் மோசமாக இருக்க, இந்தியா வுக்காக வாதாடுகிறவர்கள், பாகிஸ்தான் முஸ்லிம் உலகுக்கு நல்லதொரு தலைமைத்துவத்தை வழங்குவதையும், முஸ்லிம் நாடுகளுக்கு மத்தியில் இருக் கின்ற வேற்றுமையை அகற்றி எதிர்காலத் தில் அவை ஐக்கியப்படுவதையும் விரும்புகி றார்கள் இல்லை என்றுதான் கருத முடிகி றது. மேலும் பாகிஸ்தான்- ஆப்கானிஸ் தான், மத்தியாசிய இஸ்லாமிய நாடுகள் என்பவற்றை கவனிக்கலாகாது; அப்பெரும் பிரதேசங்களை அமெரிக்காவின் தயவி லேயே விட்டுவிட வேண்டும்; அல்லது இந் தியாவின் கண்காணிப்பில் அமெரிக்காவின் ஆட்சி அங்கு நடக்கவேண்டும் என்று விரும்புகிறார்களா? என சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

**இ**ந்திய ஆதரவாளர்கள் சொல்வது போன்று நாங்கள் முஸ்லிம்கள் என்ற வகையில் பாகிஸ்தானுக்கோ, இஸ்லாமிய இயக்கத்திற்கோ அமெரிக்கர்களை திருப் திப்படுத்துகின்ற செயல்திட்டமொன்று இருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. நாம் இஸ்லாத்தை இறுதித் தூதாகவும், மனித சமூகத்தின் சுபீட்சத்துக்கு உத்தர வாதம் தருகின்றதாகவும் நம்பிக்கை கொண்டுள்ளோம். இஸ்லாமிய மார்க் கத்தை ஏற்றுக் கொள்வதினால் உண்மை யான சந்தோஷத்தைப் பெறமுடியும் என்றும் நம்பிக்கை கொண்டுள்ளோம். இந்தக் கருத்துக்களை செயல்ரூபமாக மக்களுக்கு காட்ட வேண்டியிருக்கிறது. இதற்கான அய்வு நிலையமாக பாகிஸ் தானை மாற்றியமைக்க வேண்டும். எனவே, பாகிஸ்தான் அரசியல், பொருளா தார, கலாசார ரீதியாக இந்தியாவிடமி ருந்தும், அமெரிக்காவிடமிருந்தும் சுதந்தி ரத்தைப் பெற்றுக் கொள்வதும் பொருளா தாரத்தில் தன்னிறைவையும், போதிய இராணுவ பலத்தையும் பெற்றுக் கொள்வது அவசியம்.

**இ**தற்கு மாற்றமாக இந்தியா கேட்பது போன்று கஷ்மீரை ஒப்படைத்துவிட்டு, போராடிக் கொண்டிருக்கும் முஜாஹிதீன் களை நிராதரவாக இடைநடுவில் விட்டு விடுவது என்று நாம் தீர்மானித்தால், நிச்சய மாக அதுதான் எமது வீழ்ச்சியினதும், அழிவினதும் ஆரம்பமாக இருக்கும். இந்தியா கேட்பது போன்று கஷ்மீரை அதனிடம் ஒப்படைத்தாலும் அது திருப்தி யடைந்து யுத்தத்தை நிறுத்திக் கொள்ள மாட்டாது. ஏனெனில், அதிகாரவெறி பிடித் தவன், தான் அடைந்த வெற்றியைக் கொண்டு திருப்தியடைவதில்லை. இவ் வெற்றியைத் தொடர்ந்து பாகிஸ்தானை யும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர முயற்சிக்கும். இப்போது இதனை எதிர் கொள்வதற்கான முயற்சிகள் விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியிலேயே செலவழிக் கப்படுகிறது. இதில் குறிப்பிடத்தக்க வளர்ச் சியையும் அது கண்டிருக்கிறது. இந்த முயற்சிகளின் பயனாக பாகிஸ்தான் இந்தி யாவுடன் சர்வதேச ரீதியில் போட்டியிடுவ தற்கு போதுமான பலத்தினைப் பெற்றிருக் கிறது. இந்நிலையில் இந்தியாவின் ஆதிக்கத்தைப் பாகிஸ்தான் ஏற்றுக் கொள்ளுமாயின் இவை அனைத்தும் அழிந்து போய்விடும்; இந்தியாவிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற எமது உணர்வும் அற்றுப் போய் விடும். எனவே பாகிஸ்தானும் பொருளா தார ரீதியில் கூட மோசமான நிலையை அடைந்து விடும்.

**சி**லர், இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரு கூட்டு ஒப்பந்தத்திற்கு வருவதை அமெ ரிக்கா விரும்புவதில்லை; எனவே இரண்டு நாடுகளும் ஒன்றிணைந்து அமெரிக்காவை அதற்கு இணங்க நிர்ப்பந்திக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். இவர்கள் நினைப் பது போன்று இது நடக்கக் கூடியதல்ல. ஏனெனில் இது சீனாவுக்கு எதிரான

அமெரிக்காவின் சுற்றிவளைப்புடன் சம்பந்தப்பட்ட விடயம். சீனாவை சுற்றி வளைப்பதற்கு அமெரிக்கா, இந்தியா, ரஷ்யா ஆகிய நாடுகள் கூட்டாகச் செய்தி ருக்கும் திட்டம் என்னவெனில், இந்நோக் கத்தை அடையத் தடையாக இருக்கும் பாகிஸ்தானின் அணுவாயுத உற்பத்தித் திட்டத்தை நீக்கிவிடுவதாகும். இப்படிச் செய்வதால் தென்பகுதியில் சீனா சுற்றி வளைக்கப்படலாம்; இதே திட்டத்தினை பயன்படுத்தி முஸ்லிம் உலகின் முடிவுக்கு அவர்களையே பயன்படுத்தலாம் என்பதே! ஆனால் இதற்குத் தடையாக இந்திய - பாகிஸ்தான் ஒப்பந்தம் அமையும். மேலும் பாகிஸ்தானை அடிமைப்படுத்தி இந்தி யாவை மினிவல்லரசாக்கும் அமெரிக்கா வின் ஆசையும் நிறைவேறாது. எனவே, அமெரிக்கா, இந்தியாவும் பாகிஸ்தானும் ஓர் ஒப்பந்தத்திற்கு வருவதை விரும்ப மாட்டாது என்பதே முற்றிலும் உண்மை. இந்தியாவின் அரசியல் வல்லுனர்கள் அமெரிக்காவின் ஆதிக்கம் இந்தியாவிலி ருந்து அகற்றப்பட வேண்டும்; சீனாவுட னும், பாகிஸ்தானுடனும் தனது உறவை மீண்டும் இந்தியா சரிசெய்து கொள்ள வேண்டும்; அதற்கு இருக்கும் ஒரே வழி கஷ்மீர் பற்றிய தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, கஷ்மீர் மக்களின் சுய நிர்ணய உரிமையை வழங்க வேண்டும். இவ்வாறு செய்தால் பிராந்தியத்தில் அமெரிக்கத் தலையீடு குறைந்துவிடும் என்று கூறுகிறார்கள்.

இவ்வாறான ஓர் உடன்படிக்கைக்கு வருவதனை இந்தியாவும் விரும்ப மாட் டாது. மத்தியாசிய முஸ்லிம் நாடுகள், ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், துருக்கி, பாகிஸ்தான் ஆகிய பெரும் பிரதேசம் ஒன்று ஒன்றிணைவதற்கு இது காரண மாக அமைந்து விடும். இவ்வாறு இந்நாடு கள் அரசியல், பொருளாதார ரீதியில் ஒன்றிணைந்து விட்டால் அது பெரும் சக்தியாக மாறிவிடும் என்ற அச்சம் இந்தியாவுக்கு இருக்கிறது. மேலும் இந்தியாவில் 150 மில்லியனுக்கும் அதிகமான முஸ்லிம்களது சனத்தொகை உள்ளது. சாதியின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் இந்திய சமூக அமைப்பில் ஆளும் வர்க்கமாகிய பிராமணர்கள், கார்த்திக்குகளோடு முஸ்லிம் சமூகத்தின் விகிதாசாரத்தை ஒப்புநோக்கி னால் முஸ்லிம்களது விகிதாசாரமே உயர் வாகக் காணப்படுகிறது. எனவே எதிர் காலத்தில் முஸ்லிம்கள் ஆட்சிக்கு வந்து விடுவார்களோ என்ற அச்சம் இந்த ஒப்பந் தத்தின் மூலம் அதிகரிக்கும். எனவே, இஸ்லாமிய அடிப்படைவாதம் பற்றிய அச்சம் மேற்குலக சக்திகளுக்கு இருப்ப தைப் போன்றே இந்தியாவுக்கும் உள்ளது. எனவே இவ்வாறான ஓர் ஒப்பந்தத்தை இந்தியா ஒருபோதும் விரும்ப மாட்டாது.

எம்மைப் பொறுத்த வரையில் அமெரிக் காவையோ, இந்தியாவையோ அலட்டிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. எமது குறுகிய ஆயுட்காத்திற்குள்ளேயே சக்திமிக்க வல்லரசுகள்கூட என்றும் நிலைத் திருப்பதில்லை என்பதை அறிந்து வைத்திருக் கிறோம். அதிகாரம் ஒருவரின் கையில் நீண்ட காலத்திற்கு இருப்பதில்லை. அது பலமுள்ள இடத்திலிருந்து பலவீனமான இடம் நோக்கி நகரக் கூடியது. உலகில் சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம் என்று வர்ணிக்கப்பட்ட பிரித்தானிய வல்லரசு இன்று ஐரோப்பாவின் சிறியதொரு பிரதேசமாக ஆகியிருக்கிறது. எவராலும் அசைக்க முடி யாத இரும்பு சாம்ராஜ்யம் என்று போற்றப் பட்ட ரஷ்யா துண்டு துண்டாக உடைந்து போனது. இதற்கு மாறாக பரஸ்பர வெறுப் புணர்வுடன் அரசியல் மோதல்களில் ஈடு பட்டு இரண்டாம் உலகமகா யுத்தத்தில் முழு உலகையும் ஈடுபடச் செய்த ஐரோப் பிய நாடுகள் இன்று 'ஐரோப்பிய ஒன்றியம்' என்ற சிலாகையின் கீழ் ஒன்று திரண்டிருப் பதையும் எம்மால் காணமுடிகிறது.

முழுப் பிரபஞ்சத்துக்குமுரிய கொள்கை யையும், வாழ்வுநெறியையும் கொண்டிருக் கும் இஸ்லாத்தின் தூதினால் தூண்டப் பட்டுள்ள இஸ்லாமிய இயக்கங்களின் வழி காட்டுதல் காரணமாக முஸ்லிம்களுக்கு மத்தியில் இன்றிருக்கும் வெறுப்புகள் நீங்கி பரஸ்பர உதவியும், ஒத்தாசையும் கொண்ட சமூகம் ஒன்று உருவாவது முடியாத ஒரு விடயமல்ல. தற்போது பெயரளவிலே இருக்கின்ற பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான், துருக்கி, மத்தியாசியாவின் ஆறு நாடுகள் என்பன அங்கம் வகிக்கும் OIC (Organization For Islamic Countries) இஸ்லாமிய நாடுகளுக்கான அமைப்பு எதிர்காலத்தில் ECO வைப் போன்ற அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு போன்றவற்றில் பரஸ்பரம் ஒத்துழைப்பை வழங்குகின்ற சக்திமிக்க ஓர் அமைப்பாக வளர்ச்சியடையலாம். இந்தியா, மேற்குலக ஏஜண்டுகள் முஸ்லிம்கள் இப்படி ஐக்கிய மாவது குதிரைக் கொம்பு என்று மக்களை சிந்திக்கச் செய்தாலும் அவையும்கூட உள்ளூர அச்சத்திலேதான் இருக்கின்றன. இஸ்லாமிய இயக்கங்கள் இதனைச் செய்து விடக் கூடாது என்பதிலும் முஸ்லிம் உலகம் அமெரிக்க, ஐரோப்பிய, இந்திய வல்லரசுகளுக்கு என்றும் அடிமையாகியே இருக்க வேண்டும் என்பதிலும் கண்ணும் கருத்துமாக இருக்கின்றன.

சிலர் காஷ்மீரில் இந்திய ஏகாதிபத்திய வாதிகளுடன் நடக்கின்ற போராட்டம் 'ஜிஹாத்' என்பதற்கான ஆதாரங்கள் போதாது என்று சொல்லி, அதுபற்றிய சந்தே கங்களை எழுப்புகின்றனர். இது பலவீன மும், கோழைத்தனமுமேயாகும். உண்மை யில கஷ்மீரில் இந்தியா தனது படை பலத்தைப் பிரயோகித்து அடிமைப்படுத்த முனைகிறது. இவ்வாறு பாதிக்கப்படும் முஸ்லிம்களுக்காகப் போராடுவது முஸ்லிம் சமூகத்துக்கு கடமை என்று அல்குர்ஆன் சொல்கிறது. இந்த அல்குர் ஆனின் கட்டளைக்கிணங்கவே ஜமாஅதே இஸ்லாமியும், இஸ்லாமிய இயக்கங்களும் இப்போராட்டத்தில் பங்குபற்றியுள்ளன. கஷ்மீரில் நடக்கும் இந்தப் போராட்டம் ஜிஹாதே என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. இதற்கு எந்த விதத்தில் உதவி செய்தாலும் அது ஜிஹாதாகவே கணிக்கப்படும். சிலர் பெறுமதியான இளைஞர்களது உயிர்கள் வெறும் இஸ்லாம் என்ற உணர்வினால் அநியாய மாக பலியாக்கப்படுகின்றன என்று நினைக் கலாம். அப்படி நினைப்பது தவறு. இது வெட்ட வெட்ட வளரும் பயிரைப் போன்றது. அல்லாஹ் ஜிஹாதை நபி (ஸல்) அவர்க ளுக்கு மி.:ராஜின்போது அப்படித்தான் காட்டிக் கொடுத்தான்.

சிலர், கஷ்மீரில் முஸ்லிம்கள் இந்தியா விடம் தோல்வியடைந்து கொண்டிருப்ப தாக எண்ணி, இந்தியாவின் தீர்வை ஏற்றுக் கொள்வதே சிறந்தது என்று அபிப்பிராயம் கொள்கின்றனர். இது உண்மையை விளங்கிக் கொள்ளாமல் பேசுகின்ற பேச் சாகும். யதார்த்தத்தில் கஷ்மீரில் இந்தியா வால் இன்னும் நீண்ட காலத்துக்கு தனது பிடியை வைத்திருக்க முடியாது என்பதை இன்றைய நிகழ்வுகளைக் கவனமாக நோக்குவோரால் தெரிந்து கொள்ள முடியும். கடந்த 10-12 வருடங்களாக நிகழ்ந்து கொண்டிருக்கும் இப்போராட்டத் தில் பாரிய இழப்புக்களை இந்தியா சந்தித் திருக்கிறது. இதன் பிறகும் இந்தியாவால் இத்தகைய இழப்புகளை எதிர்கொள்ள முடியாது. மேலும் எதிர்காலத்தில் முழு இஸ்லாமிய உலகமும். இப்போராட்டத்தில் உதவுமானால் இந்தியாவினால் கஷ்மீரில் கொஞ்சமும் தாக்குப் பிடிக்க முடியாத நிலை தோன்றும்.

முஸ்லிம் உலகிலுள்ள ஆட்சியாளர் கள் தங்கள் நாட்டு மக்களுக்கு இப்போராட் டத்தில் கலந்து கொள்ளும் சுதந்திரத்தை வழங்கி, பாகிஸ்தான் அரசாங்கம் பகிரங் கமாக தனது ஆதரவை வழங்கி, அமெ ரிக்காவின் நெருக்குதல்களையும் பொருட் படுத்தாது இதில் கலந்து கொள்ளும் தனது இராணுவத்தின் முன்னேற்றத்தைத் தடுக்காமல் இருக்குமாயின் வெகு சீக்கிரத்தில் முஜாஹிதீன்கள் வெற்றி பெறுவார்கள். அவ்வெற்றி வரலாறு கண்ட மகத்தான வெற்றியாக இருக்கும். இதனை விடுத்து, இந்தியாவுக்கு தலைசாய்த்து அவர்கள் தருகின்ற வெற்றியை ஏற்றுக் கொள்வோமாயின் சர்வாதிகாரம் இம்மண் ணிலிருந்து என்றுமே பிடுங்கி எறிய முடி யாதபடி வேரூன்றி விடும். ⇨ 49

இஸ்லாமிய வியாபார அமைப்புக்கள் -VI

# இஸ்லாமிய பொருளாதாரக் கோட்பாடு

இஸ்லாம் A/L

அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மத் நளீமி

## பகுதி - 1

இஸ்லாமிய பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படைகளை இருபகுதிகளாக வகுத்து நோக்கலாம். அவையாவன:

**1. மாறாத் தன்மை வாய்ந்த அடிப்படைகள்**
**2. மாறும் தன்மை பெற்ற அடிப்படைகள்**

**1. மாறாத் தன்மை வாய்ந்த (நிலையான) அடிப்படைகள்**

i அனைத்து செல்வங்களும் வளங்களும் அல்லாஹ்வுக்குரியதாகும். மனிதன் அவற்றில் அல்லாஹ்வின் பிரதிநிதியாவான்.

இது இஸ்லாமியப் பொருளாதார கோட்பாட்டில் மிக முக்கியமான ஒரு விதியாகும். இவ்விதிக்கு கீழ்வரும் அல்குர்ஆன் வசனங்கள் ஆதாரங்களாய் உள்ளன:

**"வானங்களிலும் பூமியிலும் உள்ளவைகள் அனைத்தும் அல்லாஹ்வுக்குரியவையே" (அல்நஜ்ம் : 31)**

**"அல்லாஹ் உங்களுக்குத் தந்துள்ள செல்வத்திலிருந்து நீங்கள் அவர்களுக்குக் கொடுங்கள்" (அல்நூர் :33)**

**"உங்களை எதற்குப் பிரதிநிதியாக்கினானோ அவற்றில் இருந்து செலவு செய்யுங்கள்" (அல்ஹதீத் : 7)**

ii சமூகத்தின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் பொறுப்பை ஏற்றல்

அதாவது சமூகத்திலுள்ள அனைத்துத் தனிமனிதர்களினதும் அடிப்படையான பொருளாதாரத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான உத்தரவாதம் அளிக்கப்படல் வேண்டும் என்பது இஸ்லாமிய பொருளாதாரக் கோட்பாட்டின் மற்றுமொரு விதியாகும். இதனையே,

**"அவர்களின் செல்வங்களில் குறிப்பிட்ட ஓர் உரிமை உண்டு, அது கேட்போருக்கும், கேட்காதோருக்கும் (உண்டு)" (அல்மஆரிஜ் : 24-25)** எனும் குர்ஆன் வசனம் கூறுகின்றது.

இதுபற்றி உமர் (ரழி) அவர்கள் கீழ்வருமாறு குறிப்பிட்டார்கள்:

**"வசதியற்றோரைப் பொறுப்பேற்பது என்பது கடமையாகும். அத்தகையோர் (ஆட்சியாளன் என்ற வகையில்) என்னிடம் வரட்டும்."**

iii சமூக நீதியைப் பேணுவதும், தனிமனிதர்களுக்கிடையிலான பொருளாதாரச் சமநிலையைப் பேணலும்.

இவ்விதி பற்றி அல்குர்ஆன் கீழ்வருமாறு கூறுகின்றது.

**"செல்வம் செல்வந்தர்களுக்கு மத்தியில் மாத்திரம் சுழன்று வரக்கூடாது" (அல்ஹஷ்ர்:7)**

**"ஸக்காத் செல்வந்தர்களிடமிருந்து பெறப்பட்டு அவர்களில் உள்ள ஏழைகளுக்கு வழங்கப்படல் வேண்டும்"** என்று நபி மொழி கூறுகின்றது.

iv தனியார் சொத்துரிமையை மதித்தல்

இவ்வடிப்படையை கீழ்வரும் சட்ட வசனங்கள் விளக்கி நிற்கின்றன.

**"ஆண்கள் சம்பாதித்தவை அவர்களுக்குரியதாகும். பெண்கள் தேடியவை அவர்களுக்குரியதாகும்." (அல் நிஸா : 32)**

**"திருடிய ஆணினதும் பெண்ணினதும் கைகளை வெட்டுங்கள்" (அல்மாயிதா:38)**

**"ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அடுத்த முஸ்லிமின் இரத்தம் (உயிர்) பொருள், மானம் ஆகியவை ஹராமானதாகும்" (நபி மொழி)**

**"தனது செல்வத்திற்காக (அதனைக் காக்கும் பாதையில்) கொலை செய்யப்பட்டவன் ஷஹீதானவனாவான்" (நபி மொழி)**

v பொருளாதாரச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டதாக அமைதல்

இவ்விதியின் அடிப்படையிலேயே இஸ்லாத்தில் பதுக்கல், வட்டி தொடர்பான பொருளாதார நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளன.

**"மனிதர்களின் பொருட்களை நியாயமற்ற முறையில் விழுங்காதீர்கள்" (அல்பகரா:188)**

**"அல்லாஹ் வியாபாரத்தை ஆகுமாக்கி வட்டியை விலக்கியுள்ளான்" (அல்பகரா:275)**

**"(முஸ்லிம்கள் மீது விலையேற்றத்தைக் கருத்திற் கொண்டு பொருட்களைப்) பதுக்குபவன் பாவியாவான்" (அல்ஹதீஸ்)**

இவை இவ்விதிக்கான சில ஆதாரங்களாகும்.

vi செலவினங்களை ஒழுங்குபடுத்தி வீண்விரயத்தையும், ஆடம்பரத்தையும் தடுத்தல்

இவ்வடிப்படைக்கு ஆதாரங்களாக கீழ்வரும் சட்ட வசனங்களை குறிப்பிடலாம்

**"நிச்சயமாக வீண்விரயம் செய்வோர் ஷைத்தான்களின் சகோதரர்களாவார்கள்" (அல்இஸ்ரா : 7)**

**"புத்தி குறைந்தவர்களாக இருந்தால் வாழ்க்கைக்கே ஆதாரமாக அல்லாஹ் அமைத்திருக்கும் உங்களிடமிருக்கும் (அவர்களின்) செல்வங்களை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம்" (அல்நிஸா: 5)**

இதுவரை நீங்கள் இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாட்டில் என்றும் நிலைத்திருக்கும் பிரதான விதிகளை விளங்கிக் கொண்டீர்கள். அடுத்து நீங்கள் அதன் மாறும் தன்மை பெற்ற பகுதியை தெரிந்து கொள்ள வேண்டும்.

**2. மாறும் தன்மை பெற்ற அடிப்படைகள்**

இவை நடைமுறையுடன் தொடர்பானவையாகும். அதாவது இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படைகளை நடைமுறைப்படுத்தும் போது, இஸ்லாமிய அறிஞர்கள் கைக் கொள்ளும் வழிமுறைகள், செயற்திட்டங்கள், தீர்வுகள் முதலியன இப்பகுதியில் அடங்கும்.

வட்டியாகக் கருதப்படும் செயற்பாடுகளை விலக்கல், வேதனத்திற்குரிய குறைந்தபட்ச அளவைத் தீர்மானித்தல், சமூக நீதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளல், பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் தலையீட் டைத் தீர்மானித்தல், தனியுடமை, பொதுவுடமை ஆகியவற்றிற் கான துறைகளை வரையறுத்தல், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தல் போன்ற (இஜ்திஹாத்) ஆய்வை வேண்டி நிற்கும் பகுதிகள் - நடைமுறை தொடர்பான அம்சங்கள் - மாறும் தன்மை கொண்டவையாகக் கருதப்படுகின்றன.

இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாட்டில் இவ்விரண்டாம் பகுதி ஆய்வுக்குரியது என்ற வகையில் கால சூழ்நிலைகளுக் கேற்பவும், அறிஞர்கள் மத்தியில் சட்டவசனங்களை விளக்குவதில் ஏற்படும் கருத்து வேறுபாடுகளுக்கேற்பவும் மாறுபடும். "**கால மாற்றத்திற்கேற்ப சட்டங்கள் மாறும்**" எனும் சட்டவிதி இம்மாறும் தன்மை பெற்ற இவ்வடிப்படை குறித்து நிற்கின்றது. எனவே மாறாத் தன்மை வாய்ந்த இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படைகளில் எத்தகைய கருத்து வேறுபாடும் கொள்ளலாகாது. அவை எல்லாக் காலங் களுக்கும், இடங்களுக்கும் பொருத்தமான விதத்திலேயே அமைக்கப்பட்டுள்ளன.

ஆயினும் மாறும் தன்மை பெற்ற விதிகளைப் பொறுத்த வரையில் அவை இஜ்திஹாதுக்குரியவையாகும். அவற்றில் கருத்து வேறுபாடு கொள்வது பிழையானதல்ல. இந்த வகையில் இஸ்லாமியப் பொருளாதார அமைப்பின் நடைமுறைகள் கால சூழ்நிலைகளைப் பொறுத்து வித்தியாசப்படலாம். உதாரணமாக, ஏககாலத்தில் ஸஊதி அரேபியாவுக்கு ஒரு பொருளாதார நடைமுறையும் திட்டமும் குவைத்திற்கு வேறுபட்ட ஒரு பொருளாதார செயல்திட்டமும் இருக்க முடியும்.

தொடர்ந்து, நாம் நோக்க இருப்பது இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாட்டின் சிறப்பியல்புகளையாகும்.

## பகுதி -2

## இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாட்டின் சிறப்பியல்புகள்

### 01. மாறும் தன்மையையும் மாறாத் தன்மையையும் ஏக காலத்தில் பெற்றிருத்தல்.

இதற்கு முன்னைய பகுதிகளில் நீங்கள் கண்டது போன்று, இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படைகளைப் பொறுத்தவரையில் அவை தெய்வீகமானவையாகும். அதன் நடைமுறை சார்ந்த துறையோ இஜ்திஹாத் - ஆய்வுக்குரிய தாகும். இந்த வகையில் இஸ்லாமியப் பொருளாதாரக் கொள்கை நிலையான ஒன்றாகவும், மாறும் - வளரும் ஒன்றாகவும் சமகாலத்தில் விளங்குகின்றது. அதாவது தெய்வீகமான பகுதி மாறாத்தன்மை பெற்றதாகவும் இருக்க ஆய்வுக்குரிய நடைமுறைப்பகுதி மாறும் தன்மையுடையதாய் விளங்கும்.

இச்சிறப்பம்சத்தின் காரணமாக, இஸ்லாமியப் பொருளாதாரக் கொள்கை எல்லாக் காலங்களுக்கும், எல்லா இடங்களுக்கும் பொருத்தமான ஒன்றாக இருக்கும்.

மேலும், அதன் செயல்திட்டங்கள் கால மாற்றத்திற்கேற்ப மாறக்கூடியதாகவும் இருக்கும். என்றும் எப்போதும் ஒரு குறிப்பிட்ட அமைப்பிலேயே இஸ்லாமியப் பொருளாதார அமைப்பின் நடைமுறைகள் இருக்கும் எனக் கூறுவதற்கில்லை.

### 02. தனிமனித நலனுக்கும் சமூக நலனுக்கும் இடையில் இணக்கங்காணல்

முதலாளித்துவம் போன்ற அமைப்புகள் தனிமனிதனை தமது இலக்காகக் கொண்டு அவனது நலனுக்கே முன்னுரிமை வழங்குகின்றன. சமூக நலனை விட தனிமனித நலனை முற்படுத்துகின்றன. இதனாலேயே அத்தகைய அமைப்புகள் தனிமனிதனுக்கு பொருளாதார நடவடிக்கைகளில் பூரண சுதந்திரத்தை வழங்குகின்றன. தனிமனித நலனை கவனத்திற் கொள்ளும் போது மறைமுகமாக சமூக நலனும் நிறைவேறும். ஏனெனில் சமூகம் என்பது தனிமனிதர்களைக் கொண்ட ஒரு கூட்டமன்றி வேறில்லை என்பது முதலாளித்துவவாதிகளின் வாதமாகும்.

முதலாளித்துவ அமைப்பினால் தனிமனித சுதந்திரம் கிட்டல், தனிமனித முயற்சிகளுக்கான உற்சாகமும், ஊக்கமும் கிடைத் தல் போன்ற சில அனுகூலங்கள் கிட்ட இடமிருப்பினும், பல பயங்கர பாதிப்புகளும் அதனால் ஏற்படுகின்றன. உற்பத்தியின் போது அடிப்படைத் தேவைகளைக் கருத்திற் கொள்ளாது, உச்ச இலாபத்தை மாத்திரம் கருத்திற் கொள்ளல்; வேலையில் லாத் திண்டாட்டம்; சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மாத்திரம் வளங்களையும், செல்வங்களையும் பெறும் நிலை உருவாதல்; பிழையான சொத்துப் பங்கீடும், வருமானப் பங்கீடும்; பாரிய பொருளாதார ஏற்றத் தாழ்வு; வர்க்கபேதம்; அதனால் தோன்றும் போராட்டங்கள் போன்றன முதலாளித்து வத்தின் பிரதிகூலங்களாகும்.

மறுபக்கத்தில் பொதுவுடமைப் பொருளாதார அமைப்பைப் பொறுத்த வரையில், அது சமூகத்தையும், சமூக நலனையும் இலக்காகக் கொள்கிறது. தனிமனித நலனை விட சமூக நலனே பிரதானமானது என்பது அதன் வாதமாகும். எனவே, அனைத்துப் பொருளாதார சடவடிக்கைகளிலும் அரசு தலையீடு இருத்தல் வேண்டும்; தனியார் சொத்துரிமை தடைசெய்யப்படல் வேண்டும் போன்ற வாதங்களை அது கொண்டுள்ளது. சமூக நலனைக் கவனிக்கும்போது தனிமனித நலன் தானாகவே பேணப்படும் என்பது பொதுவுடமைவாதிகளின் வாதமாகும்.

பொதுவுடமைக் கொள்கையில் பொதுத் தேவைகள் நிறை வேறுதல், வேலையில்லாப் பிரச்சினை தீர்தல், உற்பத்தி ஒழுங்குபடுத்தப்படல், பெரும்பாலானோரின் நலன் பேணப்படல் போன்ற பல சாதகங்கள் ஏற்பட இடமுண்டு. ஆயினும் தனிமனித ஊக்கம் குன்றல், அரசின் மறைமுகக் கட்டுப்பாடுகளுக்கு உட்படல், நிர்வாகக் கெடுபிடிகளுக்கு இலக்காகுதல், மனித வாழ்வின் அடிப்படையான தனிமனித சுதந்திரம் பாதிப்படைதல் போன்ற பாதகங்கள் பொதுவுடமைக் கொள்கையினால் ஏற்படுகின்றன. (32ம் பக்கம் பார்க்க)



# கண்ணீரும் புன்சிரிப்பும்

**மலையாள மூலம் : பிரபோதனம் ஜனவரி 24, 2000**
**தமிழில் : ஜெ. இஸ்ஹாக்**

மக்சூம் கோத்திரத்தைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் ஒருவரின் புதல்வியான உம்மு ஸலமா (ரழி), ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தைத் தழுவிய முதல் பத்துப் பேரில் ஒருவரான அப்துல்லாஹ் இப்னு அப்துல் அஸத் என்றழைக்கப்பட்ட அபூஸல்மாவைத் திருமணம் செய்திருந்தார். தியாகத்தின் தீச்சுவாலைகளில் நுழைந்து சென்ற அன்னார், இறுதியில் மு..மின்கள் அனைவரினதும் அன்னையர் என்ற பாக்கியம் பெற்ற, நபி (ஸல்) அவர்களின் இல்லத்தரசியாகும் பேற்றினை அடைந்தார்கள்.

மக்கா நகரில் ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அபூ ஸலமா - உம்மு ஸல்மா தம்பதிகளுக்கு குறைஷிகளால் இழைக்கப்பட்ட கொடுமைகள் கொஞ்சநஞ்சமல்ல. கொடுமைகள் தாங்க முடியாதளவு அதிகரித்த பொழுது, இருவரும் எதியோப்பியாவுக்கு நாடுதுறந்து சென்றனர். உமரும் ஹம்ஸாவும் (ரழியல்லாஹு அன்ஹும்) இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட உடனே முஸ்லிம்களுக்கு குறைஷிகளிடமிருந்து பாதுகாப்புக் கிடைத்துவிட்டது என்ற செய்தி எதியோப்பியாவில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு எட்டியது. இச்செய்தி உண்மையாயிருக்கும் என்று நம்பிய அவர்களில் பலர், மக்காவுக்குத் திரும்பி வந்தனர். அவர்களில் அபூஸல்மா தம்பதியினரும் அடங்கியிருந்தனர். ஆயினும் மக்காவை அடைந்த பின்னர், இன்னும் தங்களுக்குப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படவில்லை என்பதை அவர்கள் கண்டு கொண்டனர்.

அப்போது அவர்களை மதீனாவுக்கு செல்லுமாறு நபி (ஸல்) அவர்கள் பணித்தார்கள். தொடர்ந்து நடந்த நிகழ்வை உம்மு ஸல்மாவே விவரிக்கிறார்கள் :

''அபூஸலமா ஓர் ஒட்டகத்தைத் தயார் செய்தார். நான் மகன் ஸல்மாவை எனது மடியில் வைத்துக் கொண்டு ஒட்டகத்தில் ஏறி அமர்ந்தேன். ஒட்டகம் புறப்பட்டு மக்காவின் எல்லையை அடைந்தது. அப்போது எனது கோத்திரத்தைச் சேர்ந்த சிலர் எங்களைத் தடுத்தார்கள். எனது கணவரைப் பார்த்து அவர்கள் சொன்னார்கள் :

''நீ வேண்டுமானால் போகலாம்; ஆனால் உம்மு ஸல்மா போகக் கூடாது''. சொல்லியதுடன் நிற்காமல் என்னையும் எனது புதல்வனையும் பிடித்துக் கொண்டு மக்காவுக்குத் திரும்பிச் சென்றனர். எங்களைக் கண்ட எனது கணவரின் கோத்திரமான பனூ அப்துல் அஸதிகள் எங்களைத் தடுத்து, எனது மகனை என்னிடமிருந்து பறித்துக் கொண்டனர். எனது மகன் என்னைப் பார்த்து வீரிட்டு அழத் தொடங்கினான். என்னால் எதுவும் செய்ய முடியவில்லை; கண்ணீர் விடுவதைத் தவிர.

கணவனும் மகனும் என்னை விட்டுப் பிரிக்கப்பட்டவுடன் நான் மிகவும் சோர்ந்து போனேன். அன்று முதல் எல்லா நாட்களிலும் நான் காலை வேளையில் அந்த சம்பவம் நடந்த இடத்துக்கு வந்து அவர்கள் சென்ற திசையைப் பார்த்து கண்ணீர் வடித்த வண்ணம் இருப்பேன். அந்த இடத்தைக் கடந்து போகும் பயணிகளிடம் அபூ ஸல்மாவைப் பற்றி விசாரிப்பேன். ஏறக்குறைய ஒரு வருட காலம் இதுவே எனக்கு வழக்கமாயிற்று.

ஒருநாள், நான்படும் இந்த வேதனையைக் கண்டு சகிக்காத எனது சகோதரனின் புதல்வர்களில் ஒருவர், எனது கோத்திரத்தாரிடம் சென்று, ''நீங்கள் இவளை இவளின் கணவரிடம் விட்டுவிட்டால் என்ன'' என்று எனக்காகப் பரிந்து பேசினார்.

மக்சூம் கோத்திரத்தினரின் மனது இளகியது. அவர்கள் என்னை எனது கணவரிடம் செல்வதற்கு அனுமதி நல்கினர். ஆயினும் எனது அன்பு மகன் இல்லாமல் நான் எப்படிச் செல்வேன்? கண்ணீருடன் தொடர்ந்த எனது நிலை கண்டு பரிதாபமுற்ற சிலர் பனூ அப்துல் அஸத் கோத்திரத்தாரிடம் சென்று எனக்காகப் பரிந்து பேசினர். இறுதியில் அவர்கள் எனது மகனை என்னிடம் ஒப்படைத்தனர்.

இதன் பின்னர் நான் சிறிதும் மக்காவில் தாமதிக்கவில்லை. யாருடன் பயணமாவது என்று இப்பொழுது கவலைப்பட்டேன். யாரையும் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பதில் பலன் எதுவுமில்லை என்று உணர்ந்தேன். துணிந்த நான், மகனுடன் மட்டும் தன்னந்தனியாக மதீனா போவதற்குத் தீர்மானித்தேன். ஒட்டகத்தில் ஏறி மகனையும் மடியில் வைத்து மதீனா நோக்கி பயணத்தை ஆரம்பித்தேன். மக்காவிலிருந்து சிறிது தூரத்தில் இருக்கும் 'தன்ஈம்' என்ற இடத்தை அடைந்தேன். அங்கே உஸ்மான் இப்னு தல்ஹாவைச் சந்தித்தேன். அவர் அப்போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. அவர் என்னிடம் வினாத தொடுத்தார்.

'நீ எங்கே போகின்றாய்?'

'மதீனாவில் இருக்கும் எனது கணவரிடம்'

'துணைக்கு யாரும் இருக்கின்றனரா?'

'அல்லாஹ்வையும் இந்தப் பச்சிளம் பாலகனையும் தவிர வேறு யாரும் இல்லை'

'அல்லாஹ்வின் மீது ஆணையாக, உங்களை மதீனாவில் சேர்த்து விட்டே நான் திரும்பி வருவேன்'

உஸ்மான் என்னுடைய ஒட்டகத் தின் கடிவாளத்தைப் பிடித்த வண்ணம் முன்னால் நடந்து சென்றார். அவர் ஒரு நல்ல மனிதராக இருந்தார். பிரயாணம் முடியுமட்டும் அவர் என்னிடம் மிகவும் கண்ணியமான முறையிலேயே நடந்து கொண்டார். மதீனாவின் சமீபமாகவுள்ள 'குபா'வை நாங்கள் அடைந்த போது உஸ்மான் சொன்னார்.

''இதோ இந்தக் கிராமத்தில்தான் உனது கணவர் இருக்கிறார். உனது கணவரிடம் அமைதியாகப் போய்ச்சேர்''

இவ்வாறு கூறிவிட்டு உஸ்மான் மக்காவை நோக்கி திரும்பி நடந்தார். சிதறுண்டு பிரிந்திருந்த எனது குடும்பம் ஒன்று சேர்ந்த போது முழு மதீனாவுமே அதனால் மகிழ்ச்சியடைந்தது.

நிகழ்ச்சிகள் மிக வேகமாக நடந்து முடிந்தன. பத்ர் யுத்தம்! அபூஸல்மா அதில் தீரத்துடன் பங்கெடுத்தார். முஸ்லிம்கள் வெற்றிவாகை சூடினர். தொடர்ந்து உஹத் யுத்தகளம்! போர்க்களத்தில் அபூ ஸல்மா படுகாயமுற்றார். யுத்தம் முடிந்து திரும்பி வந்த பின்னர் அன்னார் படுக்கையில் வீழ்ந்தார்; காயத்துக்கு மருத்துவம் செய்யப்பட்டது. ஆயினும் சுகம் கிட்டவில்லை.



நபி (ஸல்) ஒருநாள் அபூஸல்மாவைப் பார்வையிட வந்தார்கள். சுகம் விசாரித்துவிட்டு வீட்டுக்கு வெளியே செல்வதற்கு முன்பு அபூஸல்மா இறுதி மூச்சை இழந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். நபி (ஸல்) அவர்கள் அபூஸல்மாவின் கண்களை இறுக்கி மூடிவிட்டு கைகளை உயர்த்திப் பிரார்த்தித்தார்கள்:

**“யா அல்லாஹ்! அபூஸல்மாவை மன்னிப்பாயாக அன்னாரின் மண்ணறையை விசாலமாக்கி வைப்பாயாக; அவரை சுவனபதியில் நுழைய வைப்பாயாக”**

உம்மு ஸல்மாவின் துக்கம் மதீனா முஸ்லிம்களின் துக்கமாக மாறியது. மதீனாவின் மணற்றரைகள் போலும் கண்ணீர் சிந்தின. சின்னஞ் சிறிய சில பிள்ளைகள் அல்லாத வேறு யாரும் அவர்களுக்கு உறவினர்கள் இருக்கவில்லை. அவர் அனுபவித்த கஷ்டங்களைக் கண்டு முஹாஜிர்களும் அன்சார்களும் ஒன்றுபோல துக்கித்தார்கள். அபூஸல்மாவுடைய துக்கத்தைக் குறிக்கும் இத்தாக் காலம் கழிந்த உடனேயே அபூபக்கர் (ரழி) அவர்கள் உம்மு ஸல்மா (ரழி) வை மணக்க முன்வந்தார்கள். ஆயினும் உம்மு ஸல்மா (ரழி) அதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. பின்னர் உமர் (ரழி) தமது விருப்பத்தை தெரிவித்த போதும் உம்மு ஸல்மா (ரழி) அதனையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

இறுதியில் நபி (ஸல்) தாமே உம்மு ஸல்மாவை மணப்பதற்கு முன் வந்தார்கள். உம்முஸல்மா அதனை ஏற்றுக் கொண்டார்கள். ஆயினும் நபியவர்களிடம் பின்வருமாறு கூறினார்கள்:

‘அல்லாஹ்வின் தூதரே! என்னிடம் மூன்று குறைபாடுகள் இருக்கின்றன. ஒன்று, நான் இயல்பிலேயே முன்கோபியாக இருக்கிறேன். இரண்டாவது, எனக்கு வயது அதிகமாகிவிட்டது. மூன்றாவது, எனக்குப் பிள்ளைகள் இருக்கின்றனர்''.

இதனைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள், ''உங்களது கோபத்தை அல்லாஹ் நீக்கி வைப்பானாக என்று பிரார்த்திக்கிறேன். நானும் வயதில் அதிகமானவனாக இருக்கிறேன். உங்களது பிள்ளைகளை நான் எனது பிள்ளைகளகக் கருதுவேன்.” என்று கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்களுக்கும் உம்மு ஸல்மாவுக்கும் திருமணம் நடந்தது. இதன் வாயிலாக உம்முஸல்மா (ரழி) அவர்கள் மு.்மின்கள் அனைவரினதும் அன்னையாகும் பாக்கியம் பெற்றவர்களாக மாறினார்கள். ■■

**“உங்களில் ஆண் பெண் (இருபாலாரிலும்) எவர்கள் நன்மை செய்த போதிலும் நிச்சயமாக நான் அதை வீணாக்கிவிட மாட்டேன். (ஏனென்றால்,) உங்களில் (ஆணாகவோ, பெண்ணாகவோ இருந்த போதிலும்) ஒருவர் மற்றொருவரில் உள்ளவர் தான்.” (அல்குர்ஆன் 3:195)**

சகோதரிகளே! எமது அன்றாட அலுவல்களையும், நடவடிக்கைகளையும் ஒவ்வொரு நாளும் ‘முஹாஸபா’ (மீள்பரிசீலனை) செய்து கொள்வது சிறந்தது. இங்கு சில குறிப்புகள் மீள்பரிசீலனைக்கு தரப்பட்டுள்ளன. அவற்றுள் சில அன்றாடம் செய்ய வேண்டியவை. இன்னும் சில அன்றாடம் என்றில்லா விட்டாலும் தொடர்ந்தேச்சையான வாழ்க்கை வட்டத்திற்குள் உள்ளவை. கொஞ்சம் மீள்பரிசீலனை செய்து பாருங்களேன்!

- எனது கணவனின் மகிழ்ச்சிக்காக என்னாலியன்ற அனைத்தையும் செய்கிறேன்.
- எனது குடும்பத்தினர் இஸ்லாமிய வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதற்கான ஒத்தாசைகளையும், வழிகாட்டுதலையும் வழங்குகிறேன்.
- நான் அல்குர்ஆனை ஓதுவதிலும், அல்ஹதீஸைப் படிப்பதிலும் பெருவிருப்புடையவளாக உள்ளேன்.
- நான் எனது பிள்ளைகளுக்கு இஸ்லாத்தைக் கற்பிக்கிறேன்.
- நான் எனது அழகை எனது கணவருக்காக பேணி வருகிறேன்.
- இஸ்லாம் பற்றிய எனது பிள்ளைகளின் சந்தேகங்கள் தீர நான் துணை நிற்கிறேன்.
- நான் தொடந்தும் கல்வியைப் பெற்றுக் கொள்கிறேன், அத்தோடு கற்றவற்றை செயற்படுத்தியும் வருகிறேன்.
- நான் எனது தொழுகையை உரிய நேரத்தில் நிறைவேற்றுகிறேன்.
- நான் எனது கணவனை விரும்புவதாக அவரிடம் கூறுகிறேன்.
- தேவைப்படும்போது எனது கணவனுக்கு உபதேசிப்பேன்.
- எனது கணவர் அவரின் இலட்சியங்களை அடைந்து கொள்வதற்காக அவரை உற்சாகப்படுத்துவதோடு ஒத்தாசைகளையும் வழங்குவேன்.
- எனது கணவரின் முயற்சிகளை நான் வரவேற்பதை அவருக்கு தெரியப்படுத்துவேன்.
- நான் எனது அழகை வெளிக்காட்ட மாட்டேன்.
- நான் சுன்னத்தான தொழுகைகளையும் நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டுவேன்.
- ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பேன், விட்டவைகளை பின்னர் நோற்றுக் கொள்வேன்.
- ரமழான் அல்லாத முஸ்தஹப்பான நோன்புகளையும் நோற்பேன்.
- மற்றவர்கள் ஆழ்ந்து உறங்கும் இரவு வேளைகளில் நான் எழுந்து தொழுவேன்.



# மு:மினான ஒரு மனைவியின் இலட்சணங்கள்

ஆங்கிலத்தில் :
உம்மு இத்ரீஸ் அப்துல்லாஹ்
தமிழில் : முபஷ்ஷிரா

**"மனிதர்களே நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து உற்பத்தி செய்தான். அதிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். பின்பு அவ்விருவரிலுமி திருந்தும் அநேக ஆண், பெண்களை பரவச்செய்தான். ஆகவே, அந்த அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து நடந்து கொள்ளுங்கள்" (ஸூரதுந் நிஸா :01)**

## 01. இறைவிசுவாசமுள்ள மனைவி:

அல்லாஹ் அல்குர்ஆனில் பல இடங்களில் விசுவாசிகளாக இருக்குமாறு அழைப்பு விடுக்கிறான். அத்துடன் நாம், அல்லாஹ் எங்களுக்கு சித்தப்படுத்தி வைத்துள்ளவற்றை சந்திப்போம் என்ற விடயத்தில் கவனம் செலுத்துவோமாயின் நாங்கள் வெற்றியாளர்கள் என்பதை உறுதிப்படுத்த முடியும். அவனது அருளினாலேயே இவ்வுலக வாழ்க்கையில் சந்தோஷத்திற்கான ஒரு வாய்ப்பை பெற்றிருக்கிறோம். அல்லாஹ் அளித்திருக்கும் எங்களது உயரிய இலக்கை கறைப்படுத்துகின்ற அம்சங்களை நாம் அடைந்து கொள்ள முடியாதவர்களாக ஆவோம். அல்லாஹ் கூறுகிறான்,

**"அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் யாதொரு விஷயத்தைப் பற்றிக் கட்டளையிட்ட பின்னர், அவ்விஷயத்தில் (வேறு) அபிப்பிராயம் கொள்வதற்கு விசுவாசியான எந்த ஆணுக்கும், பெண்ணுக்கும் உரிமையில்லை. அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவரேனும் மாறு செய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள்" (அல்அஹ்ஸாப் :36)**

மு:மினான மனைவிக்கு உதாரணங்கள்:

**"விசுவாசம் கொண்ட (பெண்களுக்கு) வர்களக்கு அல்லாஹ் உதாரணமாகக் கூறுகின்றான். (முதலாவது:) பிர்அவ்னுடைய மனைவி அவர், என் இறைவனே! உன்னிடத்தில் உள்ள சுவனபதியில் எனக்கு ஒரு வீட்டை அமைத்து, பிர்அவ்னை விட்டும், அவனுடைய செயல்களை விட்டும் என்னை இரட்சித்துக் கொள்வாயாக' என்று பிரார்த்தித்தார். (இரண்டாவது:) இம்ரானுடைய மகள்- மர்யம் அவர் தன்னுடைய கற்பைக் காத்துக் கொண்டார். ஆகவே, அவரில் நமது ரூஹை ஊதினோம். அவர் தன் இறைவனின் வசனங்களை உண்மையாக்கி வைத்த துடன் (இறைவனுக்கு) முற்றிலும் வழிப்பட்டவராகவும் இருந்தார்."**

**(அத்தஹ்ரீம் :11-12)**

உஹத் யுத்தத்தின்போது முஹம்மத் (ஸல்) அவர்களை கொலைசெய்யும் எண்ணத்துடன் பெரியதொரு தொகையினரான இணைவைப்போர் அவரை நெருங்கிக் கொண்டிருந்தனர். ரஸூல் (ஸல்) அவர்களைச் சூழ நின்று ஸஹாபிகள் தீரத்துடன் போராடிக் கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவர் அன்ஸாரிப் பெண்ணான நஸீபா உம்மு இமாரா (ரழி) அவர்களும் ஒருவர் ஆவார். போரில் காயப்பட்டவர்களுக்கு தண்ணீர் புகட்டும் வேலையை நிறுத்தி விட்டு ரஸூலுல்லாஹ்வைக் காத்து நின்று வாளெடுத்து சுழற்றியும், அம்பு தொடுத்தும் எதிரிகளுக்கெதிராக போராடத் தொடங்கினார். அவருடைய கணவரும், மகனும்கூட ரஸூலுல்லாஹ்வை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். நஸீபா (ரழி) அவர்களுக்கேற்பட்ட ஆழமான காயத்தினால் அவதியுற்றார்கள். ஒரு கட்டத்தில் அவர்கள் ரஸூல் (ஸல்) அவர்களிடத்தில், **"ரஸூலுல்லாஹ்வே! என்னையும் எனது குடும்பத்தினரையும் சுவனத்தில் உங்கள் அருகாமையிலிருப்பதற்கு பிரார்த்தியுங்கள்."** என வேண்டினார். ரஸூல் (ஸல்) அவர்கள், **"யா அல்லாஹ் அவர்களை சுவனத்தில் என்னோடு நெருக்கமானவர்களாக ஆக்கிவைப்பாயாக"** என்று பிரார்த்தித்தார்கள். இதனைக் கேட்டதும் அந்தப் பெண்மணி சொன்னார், **"இதற்குப் பிறகு இவ்வுலக வாழ்க்கையில் நல்லது, கெட்டது எது எனக்கு நேர்ந்த போதிலும் கவலைப்பட மாட்டேன்."** தொடர்ந்தும் ரஸூலுல்லாஹ்வைக் காக்கும் பணியில் ஈடுபட்டார். அவருடைய உடலில் 12 ஆழமான காயங்கள் ஏற்பட்டிருந்தன. ரஸூல் (ஸல்) அவர்கள் அவரைப் பற்றி இவ்வாறு கூறினார்கள், **'நான் எனது இடப்புறத்திலும் சரி, வலப்புறத்திலும் சரி அவர் என்னைப் பாதுகாத்துப் போராடுவதைத் தவிர வேறொன்றையும் காணவில்லை."**

நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதினுள் நுழைந்த போது இரு கயிறுகள் தொங்க விடப்பட்டிருப்பதைக் கண்டார்கள். **'எதற்காக இந்தக் கயிறுகள்'** என்று வினவினார்கள். **'ஸைனப் (ரழி) அவர்கள் இரவுநேரத் தொழுகையில் ஈடுபட்டு களைப்படைகையில் அவருக்கு ஒத்தாசையாக இருப்பதற்கு அவரே இதனைக் கட்டினார்.'** என ரஸூலுல்லாஹ்வுக்கு கூறப்பட்டது. உடனே ரஸூல் (ஸல்) அவர்கள், **'அதனை அகற்றுங்கள்; உங்களில் ஒருவர் உங்களுக்கு இலகுவாக இருக்கும் பட்சத்தில் தொழட்டும்; எப்போது நீங்கள் களைப்பை உணர்கிறீர்களோ அப்போது ஓய்வெடுக்கட்டும்"** என்று கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

ஆஇஷா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஒருமுறை ஆஇஷா (ரழி) அவர்களுக்கு நூறாயிரம் திர்ஹம்கள் கிடைத்தன. அத்தொகை கிடைத்தபோது அவர்கள் நோன்பு நோற்றிருந்தார்கள். கிடைத்த அவ்வளவு தொகையையும் ஏழைகளுக்கும் தேவையுடையோருக்கும் வழங்கி விட்டார்கள். அதில் ஒரு பகுதியையேனும் தனது வீட்டில் வைத்திருக்கவில்லை. சிறிது நேரத்தில் அவரது பணிப்பெண் அவரிடத்தில், **'நீங்கள் நோன்பு துறப்பதற்கு இறைச்சி வாங்குவதற்காக ஒரு திர்ஹமேனும் வைத்துக் கொண்டிருக்கலாமே?'** என வினவினார். அதற்கு அன்னை ஆஇஷா (ரழி) அவர்கள், **'எனக்கு ஞாபகமிருந்திருந்தால் அவ்வாறு செய்திருப்பேன்"** என்றார்கள்.

இங்கே நாம் பெண் சஹாபிகளது விசுவாசம் பற்றி விளக்கும் மிகச்சில உதாரணங்களையே குறிப்பிட்டோம்.

அன்பான சகோதரிகளே, நாங்கள் உண்மை விசுவாசிகளாக இல்லாத பட்சத்தில் நாம் எவ்வாறு எமது கணவன்மார்களிடத்தில் விசுவாசிகளாக நடந்து கொள்ள முடியும்? ஒரு பெண் தன்னிடம் இல்லாததை எவ்வாறு மற்றவருக்கு வழங்க முடியும்? மு:மினான பெண்கள் தங்களது கணவன்மாருக்கு வழங்க வேண்டிய உரிமைகளை தங்களால் முடியுமான சிரத்தை எடுத்து வழங்குவார்கள். ஏனெனில், அவர்கள் அதில் குறைவிடுவதன் விளைவுகளை அறிவார்கள். அவள் அல்லாஹ்வின் அன்புக்குரிய விசுவாசி; அவள் அல்லாஹ்வின் வெகுமதிகளைப் பெற்றுத் தரும் அமல்களான



தொழுகை, நோன்பு, தருமம் செய்தல், கணவனை திருப்திப் படுத்தல் போன்ற வற்றை நிறைவேற்ற எந்தக் கணத்திலும் தயாராக இருப்பாள். ஒரு பெண்ணினது ஈமானின் படித்தரம் இந்தளவு வந்து விட்டால் அவள் நஸீபா உம்மு இமாரா (ரழி) அவர்கள் சொன்னதைப் போன்று இவ்வாறு சொல்வாள், **"நான் எனக்கு இந்த உலகில் எது வந்தாலும் கவலைப்பட போவதில்லை."** அவள் தனது கணவனை மகிழ்வுறச் செய்வதில் எந்தத் தியாகத்தைச் செய்வதையும் கடினமாகக் கருதமாட்டாள்; அல்லாஹ்வின் திருப்தி மட்டுமே அவளுடைய ஒரே நோக்கமாக இருக்கும்.

## வெற்றிக்கான அடிப்படைகள்:

### அவள் ஓர் அறிவாளி

ஆஇஷா (ரழி) அர்கள் அறிவிக்கிறார்கள், ''ரஸூல் (ஸல்) அவர்களுடைய காலத்தில் ஏதாவது ஒரு வசனம் இறங்கப் பெற்றால் அதில் அடங்கியுள்ள தடுக்கப் பட்டது எது? தடுக்கப்படாதது எது? செய்யக் கூடியவை எவை? செய்யக் கூடாதன எவை? என்பவற்றை மனனமிட் டுக் கொள்வோம். சிலவேளை அவற்றின் அச்சொட்டான சொற்களை மனனமிடா விட்டாலும் கூட."

ஆஇஷா (ரழி) அவர்கள் அன்சாரிப் பெண்களை இந்த வார்த்தைகளைக் கொண்டு புகழ்வார்கள், **"அவர்களுடைய நாணம் அவர்கள் அவர்களுடைய தீனைப் படிப்பதை விட்டும் அவர்களைத் தடைசெய்திடவில்லை." (முஸ்லிம்)**

நபி (ஸல்) அவர்களது மறைவிற்குப் பின்னர் உம்மு ஜமன் (ரழி) அவர்கள் எப்போதும் கண்ணீரோடு காணப்பட்டார் கள். **'நீங்கள் ஏன் சதா அழுது கொண்டிருக்கிறீர்கள்'** என்று வினவப்பட்ட போது, **'அல்லாஹ்வின் தூதர் மரண மடைவார் என்பது எனக்கு நன்கு தெரியும். ஆனால், நான் இப்போது அழுவது வானத்திலிருந்து வஹி வருவது நின்று விட்டதே என்பதற்காகத்தான்'** என்றார்கள்.

அபூஸாத் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், 'சில பெண்கள் ரஸூல் (ஸல்) அவர்களிடத்தில் தங்களுக்குக் கற்றுத் தருவதற்காக ஒருநாளை ஒதுக்கித் தருமாறு வேண்டினார்கள். (ஏனெனில்) ஆண்களே அவரது அனைத்து நேரத்தையும் எடுத்துக் கொள்கிறார்கள். எனவே, ரஸூல் (ஸல்) அவர்கள் அவர்களுக்குக் கற்பிப்பதற்காக தனியாக ஒரு நாளை ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.' (புகாரி)

நாங்கள் எப்போதும் எமது இஸ்லாம் பற்றிய அறிவை விருத்தி செய்வதில் ஆர்வம் காட்ட வேண்டும். பாருங்கள்! ஸஹாபிப் பெண்மணிகள் அறிவை இன்னும் இன்னும் அதிகமாகப் பெற வேண்டும் என்பதில் எவ்வளவு ஆர்வமாக இருந்தார்கள் என்பதை! அவர்கள் அதனை அல்லாஹ்விடமிருந்து வந்த ஒரு பரிசாகப் போற்றிப் பாதுகாத்தார்கள். அவர்கள் கல்வியில் ஆர்வமுள்ளவர்களாக வும் மார்க்க அறிவைப் பெற்றுக் கொள் ளும் விடயத்தில் உணர்ச்சி மேலிட்டவர் களாகவும் இருந்தார்கள்.

இதன் விளைவாக அவர்கள் அல்லாஹ்வை அறிந்து கொண்டார்கள்; அவனது கட்டளைகளை தெரிந்து கொண் டார்கள்; அத்துடன் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கீழ்படிவதால் நன்மைகளே விளையும் என்பதையும், அவர்க ளுக்கு கீழ்ப்படியாது மறுப்பதால் அல்லது அதில் அதிருப்தி கொள்வதால் நிலையான துன்பமே தொடரும் என்பதையும் புரிந்து கொண்டார்கள். துரதிஷ்டவசமாக எங்களுடைய வாழ்க்கை வேறுவேறு கவலைகளினால் நிறைந்து விட்டிருக்கிறது. இதனால், இஸ்லாத்தைக் கற்றுக் கொள்வதற்கு நாங்கள் நேரம் எடுத்துக் கொள்ளவில்லை. அதன் விளைவாக எங்களது வாழ்வுக்குப் பின்னால் அல்லாஹ் எங்களுக்கு ஏற்படுத்தித் தரவுள்ள சூட்சுமத்தை கவனத்திற் கொள்ளத் தவறி விட்டோம். அல்லாஹ்வின் திருப்தியை நாடி கணவன்மாருக்கு நேர்மையாக வாழ்வதன் மூலம் அவர்கள் எங்களுக்கு வழங்கும் நன்மைகளை எண்ணிப் பார்ப்பதை விட்டுவிட்டு கணவன்- மனைவிக்கிடையிலுள்ள உரிமைகள் கடமைகள் என்பன பற்றி பேசிப்பேசி, இருக்கிறோம்.

### அவள் நேர்மையானவள்

**''வானங்களிலுள்ளவைகளையும், பூமியிலுள்ளவைகளையும் அவன் நன்கறிகிறான்; நீங்கள் மறைப்பதையும் நீங்கள் வெளியிடுவதையும் அவன் நன்கறிகிறான். (உங்கள்) உள்ளக் கிடைக்கைகளையும் அல்லாஹ் நன்கறிகிறான்" (அத்தகாபுன் :04)**

நாம் எமது வாழ்வை நேர்மையான தாக, உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாததாக, பொய்யான தகவல்களை வழங்காததாக, உண்மையை மறைக்காததாக ஆக்கிக் கொள்வது அவசியம். இந்தக் கெட்ட பண்புகள் தற்காலிகமாக சில பிரச்சினைகளைத் தவிர்ப்பதாக அமையும். ஆனால், காலப்போக்கில் உறவுகளுக்கிடையே பாரிய பாதிப்புக்களை இது ஏற்படுத்திவிடும்.

**"விசுவாசிகளே நீங்கள் அல்லாஹ் வுக்குப் பயந்து உண்மையைக் கூறுங்கள். அவன் உங்களுடைய காரியங்களை உங்களுக்கு சீர்படுத்தி வைத்து உங்களுடைய பாவங்களையும் மன்னிப்பான்." (அல்அஹ்ஸாப் 70-71)**

### அவள் பணிவுள்ளவள்

ரஸூல் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், **"தானம் செய்வது செல்வத்தைக் குறைத்து விடுவதில்லை; அல்லாஹ்வுக்காக பிழை பொறுப்பவனுக்கும், பணிவாக நடந்து கொள்பவனுக்கும் அல்லாஹ் அந்தஸ்த்தை உயர்த்துகிறான்." (முஸ்லிம்)**

பொதுவாக தன்னுடைய ஆற்றல்கள், திறமைகள் என்பவை குறித்து தமக்குத் தாமே பெருமை கொள்வது பொதுவான மனித இயல்பாகும். ஆனால் சில வேளைகளில் இவ்வுலக வாழ்வில், நாம் பெற்றிருப்பவை அனைத்தும் அல்லாஹ் அருளியவைகளே என்பதை மறந்து விடுகிறோம். நாங்கள் மக்களோடு பழகும்போது, பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும். எங்களுள் எவருமே பரிசுத்தவான்கள் அல்லர். அல்லாஹ்வுக்காக பணிவுடன் நடப்பவர்களுக்கு விஷேடமான அங்கீகாரத்தை அவன் வழங்குகிறான் என்பதை ஞாபகத்திலிருத்த வேண்டும். அத்தோடு அல்லாஹ்வின் திருப்தி மூலம் கிடைக்கும் வெகுமதியை விடச் சிறந்தது வேறெதுவும் இல்லை என்பதையும் மனதிற் கொள்ள வேண்டும்.

### அவள் நம்பிக்கைக்குரியவள்

இந்த வாழ்க்கை ஒரு சோதனைக் களம்; எமக்கு நல்லது என்று தோன்றும் பாதைகளுக்கும், உண்மையில் சரியான வழிக்கும் இடையில் தொடர்ந்தும் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. முஸ்லிம்களாகிய நாம் இப்போராட்டத்தில் சிலவேளைகளில் இறைவனின் வழிகாட்டு தலை கொஞ்சம் சிரமமானது என்பதால் அதனைப் புறக்கணித்து விடுகிறோம். நாம் நினைப்பது போன்று இறைவழி காட்டுதலை பின்பற்றுவது கஷ்டமல்ல; எனினும், அல்லாஹ் நம் செயல்களை அவதானித்துக் கொண்டிருக்கிறான் என்ற எண்ணம் எம்மில் காணப்படுவது அது சிரமமாக இருக்கக் காரணமாகும். இவ்வெண்ணம் இல்லாததால் முதல் முறை ஒரு பிழையைச் செய்கின்ற போது எம்மை



உறுத்தும் மனச்சாட்சி படிப்படையாகக் குறைந்து பாவத்தை செய்கின்றபோது இது பாவம் என்ற உணர்வையே கொன்று விடுகிறது இம்மோசமான நிலைமையில் இருந்து நாம் எம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். என்ற அல்குர்ஆனின் அழைப்பை பல்வேறு இடங்களில் காணுகின்றோம்.

இந்த உணர்வை பாதுகாத்து எமது ஈமானை பலப்படுத்த சரியான பாதைக்கு வருமாறும் அதனைப் புறக்கணிப்பதால் ஏற்படும் மோசமான விளைவைப் பற்றியும் பேசுகின்ற பல வசனங்களை அல்குர்ஆனில் காணமுடியும். அவனது அழைப்பை ஏற்று அவனது கட்டளையை அனுதினமும் பின்பற்றி இஸ்லாமிய அறிவையும் அவனின் தண்டனைக்குப் பயந்தன்றி பொருத்தத்தை பெறும் நோக்கோடு முயல்வோமாயின் ஈருலகிலும் ஈடேற்றம் பெறலாம். இந்த உணர்வுள்ள ஒரு பெண்ணே எப்போதும் நம்பிக்கைக்குரிவளாக இருப்பாள்.

## அவள் திருமண தகுதியுடையவள்

அல்லாஹ் எம்மைத் திருமணம் செய்து கொள்ளும்படி மிகவும் தூண்டுகிறான் எனவே, எமக்கு பொருத்தமாக அமையக் கூடிய ஒரு வாழ்க்கைத் துணையினை தெரிவு செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

துரதிஷ்டவசமாக எங்களில் பலர் தமது வாழ்க்கைத் துணையை தெரிவு செய்யும் போது செல்வம், குடும்ப அந்தஸ்த்து, கல்வித் தகைமைகள், அழகு என்பவற்றில் கவனம் செலுத்தி, மார்க்கப் பற்றினை மறந்து விடுவார்கள்.இதனால் திருமணம் முடித்த பின்பு அவர்களது ஈமானிய உணர்வு குன்றி அது அழிந்து விடுகிறது. எனவே, ஒரு ஆணை அளவிட மேற் கூறியவைகள் எல்லாம் அளவீடுகள் அல்ல. மாறாக அவன் தனது வாழ்க்கையில் அல்லாஹ்வுக்கு எவ்வளவு தூரம் பயந்து நடந்து கொள்கிறான் என்பதே சரியான அளவீடாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளும் உணர்வு ஒருவரிடம் இல்லையென்றிருந்தால் வேறு விடயங்களில் கவனம் செலுத்துவதில் எந்தவித அர்த்தமும் கிடையாது. இவ்வுணர்வு ஒருவரிடம் இருக்குமாயின் நிச்சயமாக அவன் தனது மனைவியுடன் அன்பாக நடந்து கொள்வான். தனது மனைவியின் உணர்வுகளை சரியாகப் புரிந்து கொண்டு இன்ப துன்பங்களிலும் பக்கபலமாக இருப்பான். இதே அளவீட்டையே ஒரு பெண்ணைத் தெரிவு செய்யும்போதும் கவனிக்க வேண்டும்.

## அவள் கீழ்ப்பணிவுடையவள்

அல்லாஹ் கணவனுக்குக் கட்டுப்படுமாறு மனைவியை ஏவுகிறான் என்பதை அடிக்கடி கேள்விப்படுகின்றோம். இதனைப் பலர் பிழையாக விளங்கி மனைவியை மிகக் கொடுமையாக நடத்துகின்றனர். தமது மனைவியின் உணர்வுகளுக்கு மதிப்பளிகாது அடிமை போன்று நடத்துகின்றனர். இஸ்லாம் குடும்ப வாழ்க்கை சம்பந்தமாக முன்வைக்கும் அழகிய தத்துவத்தை பலரால் விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது. பின்தங்கிய சமூகம், நவீன வாழ்வு முறைக்கு இது உடன்பாடானதாய் இல்லை என்று கருதுவதற்கும் இவர்களது இச்செயல் காரணமாக அமைகின்றது. உண்மை அப்படி அல்ல. இஸ்லாத்தின் இத்தத்துவம் சரியாகப் புரிந்து கொள்ளப்படும் போது நவீன வாழ்வு முறைக்கு அது மிகவும் ஏற்றது.

எனவே, மனைவிமார்கள் தமது கணவனுக்கு அடிபணியும் அதேவேளை அவர்கள் ஹராமான வழியின்பால் செல்லாமல் தடுக்கும் பொருட்டு தங்களால் முடியுமானதை பூரணமாக அவர்களது உணர்வுகளைப் புரிந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவற்றைக் கருத்திற் கொண்டு தனக்குப் பொருத்தமான ஒரு துணைவியை ஒருவன் தேர்ந்தெடுக்கின்ற போது தனது எதிர்பார்ப்புகளுக்கு மாற்றமான ஒரு துணைவி சிலவேளை கிடைத்து விடலாம். அவன் அல்லாஹ்வின் திருப்தி யுடனும ஈமானிய உணர்வுடனும் பொறுமையாக அதனை ஏற்றுக் கொள்வானாயின் அவனுக்கு அல்லாஹ் கூலிகொடுப்பான் என்பது மாத்திரமன்றி, எதிர்காலத்தில் அவனது மனைவியை அவன் விரும்பும் வகையில் மாற்றியமைத்தும் கொடுப்பான்.

(இன்ஷா அல்லாஹ் தொடரும்)

# பெண்கள் விளம்பரங்களில்

எகிப்திலுள்ள சமூக ஆய்வுகளுக்கான தேசிய நிலையத்தைச் சேர்ந்த பேராசிரியை கலாநிதி நஜ்வா பவால் விளம்பரச் சந்தைகள் தொடர்பாக நடாத்திய ஆய்வின் சுருக்கம் தெரிவிப்பதாவது:

‘‘90%மான விளம்பரங்கள் பெண்ணையே கருவியாகப் பயன்படுத்துகின்றன. தமது நுகர்வுப் பொருட்களுக்கு கிராக்கி ஏற்படுத்தவே இது மேற்கொள்ளப்படுகின்றது. பெண்ணுக்கும் இப்பொருட்களுக்கும் எவ்வித சம்பந்தமுமே இல்லை. இவ்விளம்பரங்களில் உபயோகிக்கப்படும் பெண்கள் பெரும்பாலும் 15-20 வயதிற்குட்பட்ட இளவயதினராகவே உள்ளனர்.’’

இதேபோன்ற ஓர் ஆய்வை அமெரிக்காவில் விளம்பரங்களுக்கு வழிகாட்டும் Communication Arts என்ற சஞ்சிகை நடாத்தியது.

‘‘மேக்கப் போன்ற வழிமுறைகளினூடாக பெண்ணின் முக அடையாளங்களை மாற்றும் பணியில் முகவர்கள் ஈடுபடுகிறார்கள். அப்போது அவளது உண்மையான வயதைவிட பெரியவளாகத் தோன்றுவாள் என்பதையும் அவை உறுதிப்படுத்துகின்றனவாம்.’’ என்ற தகவலை அது வெளியிட்டுள்ளது

Gray Advertising எனும் சர்வதேச விளம்பர முகவர் நிலையம் மேற்கொண்ட ஆய்வின்படி,

‘‘90% மான பெண்கள் தாங்கள் வாழும் யதார்த்தத்திற்கு முரணாக, மொடல் அழகியின் தோற்றத்தில் ஒரு பெண்ணைக் காண்பதை சிறப்பான ஒன்றாகக் கருதவில்லை. 80% மான பெண்கள் விளம்பரங்கள் உண்மையான நிலையை படம் பிடித்துக் காட்டுவதில்லை.’’ என கருத்து வெளியிட்டுள்ளனர்.

பிரித்தானியாவின் ASA (Advertising Standard Authority) என்ற அலுவலகம் இவ்வாறு கூறுகிறது: ‘‘நுகர்வோருடன் பாலியலைப் பயன்படுத்தி விளம்பரங்கள் பேச முற்படுவதை எதிர்த்து அதிகம் முறைப்பாடுகள் வந்துள்ளன. தற்போது அவை 33% மாக அவை அதிகரித்துள்ளன.

மத்திய கிழக்கில் ஒலி, ஒளிபரப்பப்படும் விளம்பரங்களில் 50% இற்கும் மேற்பட்டவை மேற்குநாடுகளிலேயே தயாரிக்கப்படுகின்றன. இதன் மூலம் முஸ்லிம் சமூகமும், வர்த்தகர்களும் எமது பாரம்பரியங்களுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் முரணாக ஒரே வேளையில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே, உள்நாட்டில் மட்டுமல்ல பிரதேசத்திலுள்ள அனைத்து விளம்பர முகவர்களும் விளம்பரங்களைத் தயாரிப்பதில் மேற்குலகை நம்பியிராது தாங்களே விளம்பரங்களைத் தயாரித்து எமது சமூக விழுமியங்களைக் காத்துக் கொள்ளும் வண்ணம் விளம்பரங்களைத் தயாரிக்க வேண்டும்’’ என குவைத்திலிருந்து வெளிவரும் ‘அல்அமல்’ அறபு சஞ்சிகை கருத்து வெளியிட்டுள்ளது. -பின்து அபீபக்ர்

## வின் நிழலிலே...

அல்லாஹ்வின் இல்லமே,
அஸ்ஸலாமு அலைக்கும்!
உன்னை பிரியும் வேளை
பிறந்து விட்டது.

என் உயிர்ப்பறவை
இனிப் பறக்கட்டும்
படைத்தவனை நாடி...

துன்பங்களை
நீக்கி வைக்கும் தூயவனே!
இதோ...
என் உடலின்
ஒவ்வொரு குருதித் துளியும்
உனக்காக குனிகிறது!

யா அல்லாஹ்! உன்
இல்லத்தைக் காண
ஓடோடி வந்தேன்...
தாகித்திருந்த என் இதயம்
விம்மித் தணிகிறது;
நீ எவ்வளவு கருணையாளன்!

உன்னை மட்டுமே
இதயத்தில் இருத்தி
இரு விழிகள் நீரோட...
உன் இல்லத்தை
என் பாதங்கள்
வலம் வருகின்றன!

லப்பைக்
அல்லாஹும்ம லப்பைக்!

யா ரஹ்மான்!
உணர்வுகள் தூய்மையின்
உச்சத்தை தொட்டு விட்டன!
உச்சரிக்க, வார்த்தைகள்
அச்சப்படுகின்றன!

க.ஃ.பாவின் மூலையில்
சிரித்துக் கொண்டிருக்கும்
அந்நதக் கறுப்புக் கல்லை
முத்தமிட,
என் இதழ்கள் [illegible]ம்
கடைசியில் என் [illegible]களே
அதிஷ்டம் பெ[illegible]
அல்ஹம்துலில்லாஹ்!

உன் மேலான சுவர்க்கத்தின்
மெல்லிய வாடையை
நுகரும் வாய்ப்பு... என்
நாசிகளுக்குக் கிடைக்குமா?

தூய்மையின் இல்லமே
சென்று வருகிறேன்
என் பாதங்கள்,
நகர மறுக்கின்றன
இன்னும் ஒரு முறை
க.ஃ.பாவை கண்டு வருகின்றேன்...

சிந்தும் கண்களுக்கு
அணை போடவா?
அழும் இதயத்துக்கு
ஆறுதல் சொல்லவா?
என்ன செய்வேன்?

ஓ... க.ஃ.பா!
இறைவனை மட்டுமே [illegible]க
என் இதயத்துக்கு
சொல்லிக் கொடு!

துன்ப அம்புகள்
உயிர் துளைக்கும் போதும்
துணிவாய் நிற்க
என் கால்களுக்கு
சொல்லிக் கொடு!

மன இச்சை கீதங்கள்
என் உணர்வின் வேர்களை
உசுப்பினாலும்;
அசையாமலிருக்க என்
காதுகளுக்கு கற்றுக்கொடு!

இறைவா,
என்னுயிர் உனக்கே அர்ப்பணம்!

களைத்துப்போன
பிரார்த்தனை [illegible]ளோடு உன்னை
காண வந்தேன்

இறைவா
என் ஆன்மா அழுகிறது!

ஸஃபா மர்வாவுக்கிடையில் ஓடியது
என் பாதங்கள் மட்டுமா;
பாலைவனத்தில்
அன்னை ஹாஜரா
அனுபவித்த சோகங்களும்தான்!

குழந்தை இஸ்மாயீல்
பாதம் பட்டு பீறிட்ட நீரூற்றே!
ஸம் ஸம்...
என் இதய தாகத்தை உன்னிடம்
இறக்கி வைக்கிறேன்!

க.ஃ.பாவே, கருணையின் இல்லமே!
உன் சுவர்களை...
என் உயிர்வேர்கள் தடவுகின்றன!

இன்ஷா அல்லாஹ்
மீண்டும் வருவேன்
உன் மண்ணில் உதடு பதிக்க...

இது என் இறைவனின் இல்லம்...
என்னைப் படைத்தவன் பூமி...
இன்ஷா அல்லாஹ்...
மீண்டும் வருவேன்.

சமீலா யூஸுப் அலி
மாவனல்லை.

## நிகழாத நினைவுகள்

துரோகம் நிறைந்த துப்பாக்கிகளுடன்
ஸ்னேகிக்க நினைக்கிறேன்.

பீதி உறைந்த உள்ளத்தையும்
களைப்படைந்த உணர்வுகளையும்
திடப்படுத்த நினைக்கிறேன்

கோழைத்தனத்தை தற்கொலை செய்து
தீயிலிட்டுப் பொசுக்க நினைக்கிறேன்.

எனக்குள் என்னதான் நேர்கிறது?

ஆன்மா வலிக்க உயிர் குடிக்கும்
அத்துரோகம் நிறைந்த
துப்பாக்கிகளுடன்
ஸ்னேகிக்க எப்படி முடியும்?

உள்ளத்துள் பீதி உறைந்த
காய்ந்து போன பின்பும்
உணர்வுகள் களைப்படைந்து
செத்துப் போன பின்பும்
திடப்படுத்த எப்படி முடியும்?

எனக்குள் என்னதான் நேர்கிறது?

துப்பாக்கி சுமக்கும் கரங்களின்
உள்ளங்களுள்
இரக்கம் சுரக்காத வரை
நிச்சயம் துப்பாக்கிகளுடன்
ஸ்நேகிக்க முடியாது

எமது கரங்களும்
துப்பாக்கி சுமக்காத வரை
கோழைத்தனத்தை கொலை செய்யவோ
காய்ந்து போன பீதியை
கழுவிச் சுத்தப்படுத்தவோ
செத்துப் போன உணர்வுகளை
உயிர்ப்பிக்கவோ முடியவே முடியாது!

காவத்தமுனை ஹாறூன் ஸஹ்வி

## புதையல்

தோண்டு, தோண்டு
உன் பாதங்களின் கீழே
பாதாளம் தெரியும்படி தோண்டு.

உனதும், உன் சமூகத்தினதும்
எத்தனையோ எச்சங்கள்
நீயறியாமல், நிலத்தின் கீழே

நாய் காலிலும் மிதிபடாமல்
பூனை வாயிலும் அகப்படாமல்
இன்னும்
எத்தனை நாளைக்கிந்த
உயிர்தப்புமவஸ்த்தை...?

மரக்கலத்தில்
வந்தவனல்ல நீ....
உன் பூர்வீகமும்
இதே பூமியென்று
புரியாதவர்களிடம் சொல்.

உன்னையென்ன
பூமணியையா
தோண்டச் சொன்னேன்...?
பூர்வீகத்தைப் புரியப்படுத்த
உன் பாதங்களின் கீழே
உன் பூமியிலேயே
தோண்டு, தோண்டு.

நாய் கடித்ததாய்ப் பூனை
எலியை எதிர்ப்பது
எப்படி நியாயம்...?!

நீயொன்றும்
குடிகெடுத்த குள்ளநரியல்ல;
சிலபோது,
சிங்கத்தையே எதிர்த்த
சிறு எலிதானென்ற
சேதி கூறு அவர்களிடம்

உன் பூர்வீகம் பற்றிய
எல்லாவற்றையுமே
ஒரு புதையலாய்த் தோண்டியெடு.

யுத்தங்கள் வந்து என்ன....
ரத்தங்கள் சிந்தியென்ன....
பெறுதற்கரிய புதையலைத்
தொலைத்து விடாதே நீ...!

மீண்டும் தோண்டவுன்னில்
வலுவிருக்குமோ, இல்லையோ
நிச்சயமாய்
நீயிருக்க மாட்டாய்.

மன்னார் எம். ஷிபான்

## கவிதை நெய்தல் - 02



'கவிதை நெய்தல்' பகுதிக்கு, தரப்படும் படம் பார்த்து தரமாக கவிதை எழுதுங்கள். இஸ்லாமிய வரம்பிறகுட்பட்டதாக சிறிதாகவும் நீ....ண்...டு விடாதவாறு மரபுவழி நின்றோ, புதிய வழியிலோ எழுதுங்கள்; தரமானவை 'இடம் வழங்கி' பிரசுரிக்கப்படும்.

## கவிதை நெய்தல் - 01
### முடிவுகள்

**முதலிடம் பெறும் கவிதை**

### எதிர்பார்ப்பு

அநியாய ஆட்சியின்
அகோரக் கரங்களினால்
கசிந்த கண்ணீரை
தண்ணீரோடு சங்கமமாக்கி
கரைசேரும் நாங்கள்
நியாயத்தின் இறையாட்சி
மண்ணிழலின் கீழ்
மண்ணை முத்தமிடும் வரை
மூச்சுவிடுவோமா - அல்லது
அகதிகளாய் அலைக்கழிவோமா?

அப்துல் கரீம்,
தெல்தோட்டை

**இடம் பிடித்த ஏனையவை**

### சீக்கிரம் வா

சீக்கிரம் வா
இந்தத்
தண்ணீர் தேசம் விட்டு
செல்லலாம் வா
செச்னியா செல்வோம் வா
எம் வீர முஜாஹிதுகளுடன்
வீரமரணத்தில் எமக்கும்
பங்கிருக்கட்டும்!

எப். எம். ரிஸ்கான், மதுரங்குளி

### ஏனிந்தத் துரிதம்

திரும்பிக் கூடப் பாராமல்
நீங்கள் எங்குதான் செல்வது?

மரண 'ஷெல்' உங்களை
விரட்டி வருகிறதா?
மரணத்திற்கான குறித்த
பரிமாணம் இருக்கிறதா?
பசிகொண்ட பிராணியாய் வந்து
உங்கள் வாழ்க்கை எனும்
சோற்றுப் பருக்கையை
ஒரேயடியில் விழுங்கி விடுமே!

ஓடுங்கள்!
இன்னும் வேகம் கூட்டுங்கள்
கூட வருபவர்க்கு கைகொடுங்கள்
தோள் பணியுங்கள்
வழியில் 'ஹஸனாத்' எனும்
நீர்நிலைகள் நிரம்பவே இருக்கும்
உங்கள் துருத்திகளை முடிந்தளவு
நிரப்பிக் கொண்டே விரையுங்கள்

அந்த ஒருநாள் வரும்
நீங்கள் என்ன செய்யக் கூடும்?
கைகொடுக்க முடியாது
தோள் பணிய இயலாது
மடியிலிட்ட தாய் கூட
வக்காலத்து வாங்கலாகாது
விரலிடைகள் கோர்த்து வந்த
நட்புக் கரங்களுக்கன்று உரமேது?

ஓடுங்கள்!
'ஹஸனாத்' நீர்நிலைகளில்
உங்கள் துருத்திகளை
வேகமாக நிரப்பிக் கொண்டே
அங்கு நரக நெருப்பு
கொழுந்து விட்டெரிகிறது.

ஷஹ்லான், பேராதனை வளாகம்

கவிதை நெய்தல் பகுதிக்கு அனுப்பப்படும் கவிதைகள் 12 வரிகளை விட அதிகமாக இருக்கக் கூடாது என வேண்டப்படுகிறது.



அல்ஹஸனாத் : 'ஆரோக்கிய சந்திப்பு'

# தாய்ப்பால் மகிமை

டாக்டர்
எம்.எல்.எம். றயீஸ் (M.B.B.S.)

குழந்தைக்கான பாலுணவு, ஒவ்வொரு குழந்தைக்கும் அவசியமான ஒரு அடிப்படை உணவாகும். இன்று சந்தைக்கு எத்தனையோ வகையான பாலுணவுகள் வந்து கொண்டிருக்கின்றன. எல்லா சுபர் மார்க்கட்டுகளும் பாலுணவுகளால் நிரம்பி வழிகின்றன. அவற்றின் விலைகளிலும் பெரும் வித்தியாசங்கள் இருக்கின்றன. இந்த நிலையில், தனது குழந்தைக்கு எந்தப் பாலுணவை தெரிவு செய்வது என்பது பெற்றோருக்கு ஒரு பிரச்சினையாக இருந்து வருகிறது. பல சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள் பிழையான பாலுணவைக் கொடுத்து வருவதை நாங்கள் அனுபவத்தில் காண்கிறோம். எனவே பாலுணுணவைப் பற்றி சில அடிப்படையான விடயங்களை அறிந்து கொள்வதன் மூலம் குழந்தைக்கு சிறந்த உணவை கொடுப்பது மட்டுமல்லாமல் அவசியமான செலவீனங்களிலிருந்து தமது பணத்தையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

பாலுணவைப் பொறுத்தவரை ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்குத்தான் அது மிக முக்கிய அடிப்படை உணவாக இருக்கிறது. ஒரு வயது முதல் ஒரு குழந்தைக்கு பெரியவர்கள் உட்கொள்கின்ற எல்லா உணவுகளையும் (உறைப்பைக் குறைத்து) கொடுக்க முடியும். எனவே அவர்கள் விடயத்தில் பாலுணவு ஓர் அடிப்படையான உணவு அல்ல. இந்த மாத ஆரோக்கிய சந்திப்பில் ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கான பாலுணவு பற்றி அறிந்து கொள்வோம். இன்ஷா அல்லாஹ் தொடர்ந்து வரும் இதழ்களில் முதிர்ந்த குழந்தைகளுக்கான உணவு பற்றி அறிந்து கொள்வோம்.

ஓர் உயிரினத்தின் வாழ்க்கைக்கு என்ன வெல்லாம் தேவையோ, அவை அனைத்தையும் அல்லாஹ் படைத்து பூமியில் வைத்திருக்கிறான். ஓர் உயிர் பிறப்பதற்கு முன்பே அந்த உயிரை வளர்த்து வாழவைக்க வேண்டிய உணவையும் அல்லாஹ் படைத்திருக்கிறான். அவனிடத்தில் 'ரிஸ்க்' இல்லாத எந்த உயிரும் பூமியில் இல்லை என்பது அல்லாஹ்வின் வேதவாக்கு.

இந்த வகையில் ஒரு குழந்தை கருத் தரித்தது முதல் அந்தக் குழந்தைக்கான 'ரிஸ்கை' அல்லாஹ் கொடுத்து வருகிறான். தாயின் வயிற்றில் சூல்வித்தகம் (placentar) மூலமாக தாயின் இரத்தத்தில் இருந்து குழந்தைக்கான 'ரிஸ்கை' பிரித்துக் கொடுக்கும் அல்லாஹ்வின் ஏற்பாடு மிகவும் அற்புதமானதும் அதிசயமானதுமான ஒரு பிரமாண்டமான ஏற்பாடாகும். அந்த சூல்வித்தகம் குழந்தைக்கு எது தேவையோ அதனை அற்புதமாய் பிரித்துக் கொடுகிக்கிறது. இவ்வாறு அந்தச் சிசு பிறக்கும் வரை அதற்கு அல்லாஹ் உணவளித்துக் கொண்டிருக்கிறான்.

இதற்கிடையில் குழந்தை பிறந்தவுடன் அதற்குத் தேவையான உணவை உற்பத்தி செய்வதற்காக அல்லாஹ் 10 மாதங்களாக தாயின் மார்பகங்களில் பல மாற்றங்களை செய்து குழந்தை பிறந்த கணத்திலேயே அந்தக் குழந்தைக்கான உணவு கிடைக்கச் செய்வதற்காக பிரவச வேளையிலேயே பல ஹோர்மோன் மாற்றங்களைச் செய்து உடனடி உணவாக (Instant Food) தாய்ப்பாலை சுரக்கச் செய்கின்றான்.

இந்தத் தாய்ப்பால் மற்றுமொரு அற்புதமான படைப்பு. அல்லாஹ் மனிதனுக்கு கொடுத்திருக்கும் அறிவைப் பயன்படுத்தி வைத்தியத் துறையிலே பல சாதனைகளை ஏற்படுத்தியிருப்பதைப் பார்க்கிறோம். மனிதனின் உடற்தொழிற்பாடுகளில் ஆயிரமாயிரம் அம்சங்கள் இன்னும் புரியாத புதிராக இருக்கும் அதேவேளை இயற்கையின் படைப்பை அலசி ஆராய்ந்த மனித அறிவு சில துறைகளில் முன்னேறியிருப்பது பாராட்டப்பட வேண்டிய அல்லாஹ்வின் ஏற்பாடு என்றே நாம் கருதுகின்றோம். இந்த வகையில் குழந்தைகளுக்குரிய பாலுணவும் இயற்கையினான தாய்ப்பாலில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் விளைவால் உருவாக்கப்பட்ட ஓர் உணவாகும். எல்லாப் புட்டிப் பாலுக்கும் அடிப்படை பசுப்பாலாகும். ஆனால், பசுப்பாலுக்கும் தாய்ப் பாலுக்குமிடையே பல வித்தியாசங்கள் இருக்கின்றன. பசுப்பாலை ஒரு குழந்தைக்கு நேரடியாகக் கொடுக்க முடியாது. ஏனென்றால் பசுப்பாலில் இருக்கின்ற பல 'அயன்கள்' குழந்தையின் சிறுநீரகத்தால் கட்டுப்படுத்த முடியாத அளவை விட மிக அதிகமாக இருக்கிறது. மேலும் குழந்தைக்கு அவசியமான பல அம்சங்கள் பசுப்பாலில் இல்லை.

இந்த நிலையில் தாய்ப்பாலில் இருக்கின்ற பதார்த்தங்களைப் போலவே பசுப்பாலையும் மாற்றுவதற்கான பல முயற்சிகள் பல தசாப்தங்களாக நடைபெற்று வருகின்றன. இருந்த போதிலும் கூட இன்னும் முற்றாக தாய்ப்பாலுக்கு சமனாக பசுப்பாலை மாற்றுவது முடியாத காரியமாக இருந்து வருகிறது. ஏனென்றால் தாய்ப்பாலில் இருக்கிற நோயெதிர்ப்பு சக்தி பசுப்பாலில் இல்லை. இதனால்தான் தாய்ப்பால் குடிக்காமல் புட்டிப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு அடிக்கடி வயிற்றோட்டம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. மேலும் தாய்ப்பால் ஒரு உடனடி உணவு (Instandt Food). ஆனால் புட்டிப்பாலை நாம் தயாரித்துத்தான் கொடுக்க வேண்டும். தாய்ப்பால் கொடுக்கும்போது குழந்தைக்கும் தாய்க்குமிடையில் ஏற்படும் பிணைப்பு (Bonding) குழந்தையின் வளர்ச்சிக்கு மிகமிக அவசியமான ஓர் அம்சம் என்பது இப்போது உணரப்பட்டு வருகிறது. இந்தப் பிணைப்பை புட்டிப்பாலில் நாம் ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

இப்படிப் பலநூறு அம்சங்கள் தாய்ப் பாலுடன் சேர்த்து குழந்தைக்குக் கிடைக்கின்றன. இவ்வளவு நன்மைகளையும் அடைந்து கொள்வதற்காக ஒவ்வொரு தாயும் குறைந்தது இரண்டு வருடங்களாவது குழந்தைக்குப் பாலூட்டுவது அவசியம். குழந்தையின் பூரண வளர்ச்சிக்கு இது அவசியமான அம்சம் மட்டுமல்லாமல் அது குழந்தையின் உரிமையும், தாயின் கடமையும் ஆகும் என்பதனை நாம் மறந்து விடலாகாது. அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகின்றான்:

**"....அவனுடைய தாய் துன்பத்தின் மேல் துன்பத்தை அனுபவித்து (கர்ப்பத்தில்) அவனைச் சுமந்தாள். (அவன் பிறந்த) பிறகும், இரண்டு வருடங்களுக்குப் பின்னரே அவனுக்குப் பால் மறக்கடித்தாள்..."**

**(ஸூரா லுக்மான் :14)**



எனவே, ஒவ்வொரு குழந்தையும் பிறந்து அரை மனித்தியாலங்களுக்குள், தாய் குழந்தைக்கான பாலூட்டலை ஆரம்பிக்க வேண்டும். இதற்கு தாய் மட்டுமன்றி உடனிருக்கும் அவளது குடும்பத்தவர்கள் அதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுக்க வேண்டும்.

முதல் மூன்று நாட்களுக்கு மார்பகங்கள் சுரக்கின்ற பால் வித்தியாசமானது ஒவ்வொரு நாளிலும் தாய்ப்பாலில் இருக்கின்ற பொருட்களில் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. ஒவ்வொரு நாளும் குழந்தை வளர்ந்து கொண்டு வருவதால் குழந்தையின் தேவையும் மாறுபட்டுக் கொண்டு வரும். அதற்கேற்றாற்போல் தாய்ப்பாலின் தன்மையும் மாறிக் கொண்டு வரும். இந்த அற்புதத்தை எந்தவொரு புட்டிப் பாலாலும் புகட்டிவிட முடியாது என்பது தெளிவான உண்மை.

முதல் மூன்று நாட்களிலும் சுரக்கின்ற பாலுக்கு 'கொலஸ்ரம்' (Collostrum) என்று பெயர். இது ஒவ்வொரு குழந்தைக்கும் அது தனது வாழ்க்கையை ஆரம்பிக்க மிகமிக அவசியமான ஓர் அடிப்படை உணவாகும். இதிலே சாதாரண தாய்ப் பாலை விட பல மடங்கு அதிகமான நோயெதிர்ப்பு சக்தியும் மற்றும் புரதங்களும் இருக்கின்றன. இந்த கொலஸ்ரம் என்ற தாய்ப்பால் குழந்தையை பலவகை நோய்களிலுமிருந்தும் பாதுகாக்கிறது. சில குடும்பங்களில் இதனைக் கொடுக்க வேண்டாம் என்று கூறுகின்ற மூட நம்பிக்கையுள்ள சில 'பெரியவர்கள்' இருக்கிறார்கள். இது ஒரு குழந்தைக்கு செய்யும் பெரும் குற்றம் என்றே நாங்கள் கருதுகிறோம். அதுமட்டுமன்றி அல்லாஹ் எந்தவொன்றையும் வீணுக்காகப் படைக்கவில்லை என்ற ஓர் அடிப்படையான அம்சத்தை நாங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். (இன்ஷா அல்லாஹ் தொடரும்)

## கத்னா செய்வதனால் HIV ல் இருந்து பாதுகாப்பு

பல்டிமோர் (Baltimore) நகரில் அமைந்துள்ள ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் அண்மையில் (பெப்ரவரி 01. 2000) Retrovirases and Opputunistic infections என்ற கருப்பொருளில் நடைபெற்ற 7வது மாநாட்டில் Dr. தோமஸ் குயின் என்பவர் ''கத்னா'' செய்த எந்த மனிதனிலும் HIV கிருமி தொற்றுவதில்லை என்ற தனது ஆய்வறிக்கையின் முடிவினை கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது, ''மனிதன் 'கத்னா' செய்வதனால் உடலுறவின் போது எயிட்ஸ் கிருமிகள் தொற்றாமல் இருக்கின்றன. ஆனால் இதன் இரகசியத்தை இன்னும் அறிய முடியாதுள்ளது."

மேற்படி டாக்டரின் தலைமையிலான ஆய்வுக்குழுவினர் உலகில் 23 மில்லியனுக்கும் அதிகளவிலான HIV இனால் பாதிக்கப்பட்டுள்ளவர்களைக் கொண்ட ஆபிரிக்க கண்ட நாடுகளில் உகண்டா நாட்டில் ரகாய் என்ற மாவட்டத்தில் மட்டும் சுமார் 15,000 மக்களை ஆராய்ச்சி செய்த பின்னரே இவ்வுண்மையை கண்டறிந்துள்ளனர்.

### இவ்வாய்வில் வெளிவந்த இன்னும் சில உண்மைகள் :

15-29 வயதை விடக் கூடிய வயதுடையவர்களுக்கு HIV ன் தாக்கம் இல்லை.

ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் HIV சிறிதளவேனும் குருதியில் காணப்படும். அது அவர்கள் உறவு கொண்ட போது மற்றவருக்கு தொற்றவில்லை.

இன்னும் கூடிய அளவில் HIV கொண்டவர்களினால் கூட எயிட்ஸ் தொற்று ஏற்படவில்லை (ஆண், பெண் வேறுபாடின்றி)

பொதுவான HIV தடுப்புக்காக கைக்கொள்ளப்பட்ட முறைகள்- அதாவது பாலுறவின்றி ஒதுங்கியிருத்தல், உறைகள் பாவனை முறைகள் போன்றன எவ்வித பலனுமளிக்கவில்லை.

மருந்து வகைகள் எயிட்ஸ் நோயாளியை சா நிலைக்கே தள்ளிவிடுகின்றன.

இந்நிலை செல்வந்த ஏழை நாடு என்ற வேறுபாடின்றி காணப்படுகிறது.

HIV ஐ முற்றாக (மருந்துகளால்) அழிக்க முடியாது; எனினும் Vaccine மருந்துகள் தற்காலிக உதவியாக அமையலாமே தவிர நோய் நிவாரணியல்ல.

## எதையும் தாங்கும் இதயம்

கர்பலா களத்திலே நிகழ்ந்த துக்ககரமான சம்பவங்கள் பல. அவற்றுள் ஒரு நிகழ்ச்சி கல் மனதினரையும் கரையச் செய்திடும் என்று கூறின் மிகையாகாது. இமாம் ஹுஸைன் (ரழி) அவர்கள் எதிரிகளுடன் போரிடுவதற்கு சிறிது நேரத்திற்கு முன்.... கூடாரத்திலே பிரசவ வேதனையில் இருந்த அவரது மனைவி அழகான ஓர் ஆண் குழந்தைக்கு தாயாரானார். குழந்தை இமாமவர்களிடம் கொடுக்கப்பட்டது. குழந்தையை வாரியணைத்து முத்தி முகர்ந்தவர்களாய் இமாமவர்கள் தமது மடியில் கிடத்தி 'அதான்' சொல்லி அந்தப் பச்சிளம் குழந்தையின் காதிலே ஊதிக் கொண்டிருந்தார்கள். எதிரிகளின் திசையில் இருந்து ஓர் அம்பு வந்தது... அது சரியாக அந்தக் குழந்தையின் குரல்வளையிலா தாக்க வேண்டும்! குழந்தை வீரிட்டு உயிர் துறந்தது. இரத்தம் இமாமவர்களின் திருமேனியெல்லாம் பட்டுத் தெறித்தது. இமாமவர்கள் நிலை குலையவில்லை. அந்தப் பாலகனை நோக்கி,

"என்னருமைக் குழந்தாய்! நீ ஸாலிஹ் நபியின் ஒட்டகத்தை விட இறைவனின் சந்நிதியில் எவ்வளவோ சிறப்பு பெற்றுவிட்டாய். ஏன் உனது பாட்டனார் முஹம்மத் (ஸல்) அவர்களும், நபி ஸாலிஹ் (அலை) அவர்களை விடச் சிறப்புப் பெற்றவர்கள் தானே!" என்றார்கள். அப்பால் வானத்தை நோக்கி, 'இறைவனே! நீ மட்டும் எங்களை வெறுத்தொதுக்கி விடாமல் இருந்தால் போதும். நீ நலவென்று கருதும் அனைத்தையும் செய்ய உனக்கு உரிமையுண்டு." என உளமுருகிப் பிராத்தித்தார்கள்.

(நூல் : இப்னு ஜரீர் அத்தபரி, தொகுப்பு : அஹமட் பஷீர்)

# சிறுவர் பூங்கா

## சத்தியம் vs அசத்தியம்

**அசத்தியம் :** நான் உன்னை விட உயர்ந்தவன்

**சத்தியம் :** நான் உன்னை விட முந்தியவன்

**அசத்தியம் :** நான் உன்னை விட பலமுள்ளவன்

**சத்தியம் :** நான் உன்னை விட நிலையானவன்

**அசத்தியம் :** என்னுடன் பலசாலிகளும் அத்துமீறி வருபவர்களும் இருக்கிறார்கள்.

**சத்தியம் :** "இவ்வாறே நாம் எல்லா கிராமங்களிலும் பெருமை பிடித்தவர்களையும் அட்டூழியம் செய்பவர்களையும் சதி செய்பவர்களாக ஆக்கிவிட்டோம். ஆனால் அவர்களது சதி முயற்சிகள் யாவும் அவர்களுக்கே. ஒருபோதும் அவர்கள் உணர மாட்டார்கள்".

**அசத்தியம் :** உன்னை இப்போதே என்னால் கொன்றுவிட முடியும்.

**சத்தியம் :** ஆனால் எனது பிள்ளைகள் வந்து உன்னைக் கொன்றுவிடுவார்கள்.

## முதலாவது....

- அல்லாஹ்வின் முதலாவது படைப்பு பேனா.
- பூமியில் முதலாவது உருவாக்கப்பட்ட மலை 'அபூகபீஸ்' என்ற மலையாகும்.
- பூமியின் முதலாவது இறையில்லம் க:பா.
- ஆதம் (அலை) அவர்களின் முதலாவது மகன் காபீல்.
- உலக மக்களுக்காக முதலாவது அனுப்பப்பட்ட நபி ஆதம் (அலை).
- முதலாவது எழுதக் கற்பிக்கப்பட்டவர் நபி இத்ரீஸ் (அலை).
- முதலில் கத்னா செய்யப்பட்டவர் நபி இப்றாஹீம் (அலை).
- முதலில் குர்ஆனை ஒன்று திரட்டி ஒழுங்குபடுத்துமாறு கூறியவர் அபூபக்ர் (ரழி).
- அல்குர்ஆனுக்கு 'முஸ்ஹப்' என்று பெயரிட்டவர் அபூபக்ர் (ரழி) அவர்களே!
- ரஸூல் (ஸல்) அவர்களுக்குப் பிறகு முதலில் அல்குர்ஆனை மனனமிட்ட ஸஹாபி அலி (ரழி).
- இஸ்லாத்தில் முதலில் அமீருல் மு:மினீன் என அழைக்கப்பட்ட கலீபா உமர் (ரழி) அவர்கள்.
- இஸ்லாமிய ஆட்சியமைப்பில் முதலில் பொலிஸ் முறையை அறிமுகப் படுத்தி, சம்பளமும் கொடுக்கப்பட்டது கலீபா உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்திலேயே.

அன்பின் தம்பி தங்கைகளே! அஸ்ஸலாமு அலைக்கும். இந்த இதழ் முதல் "அல்ஹஸனாத்" உங்களுக்கென சிறுவர் பகுதியை ஆரம்பித்து வைக்கிறது. உங்கள் அறிவுக்கு பயனாகவும், சுவையாகவும் போட்டி நிகழ்ச்சிகள் உட்பட பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக அல்ஹஸனாத் மாதம் தோறும் உங்களை வந்தடையும். இன்ஷா அல்லாஹ். வாசியுங்கள்! பயன் பெறுங்கள்! போட்டிகளில் கலந்து பெறுமதியான பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்!

## தங்க வார்த்தைகள் சில....

ஒழுக்கமில்லாதவனிடம் மனிதத் தன்மை இல்லை; அறிவில்லாதவனிடம் ஒழுக்கமில்லை; அறிவு அரசனைப் போன்றது. ஒழுக்கம் அமைச்சரைப் போன்றது. அமைச்சர் இல்லையேல் அரசன் பலவீனமடைந்து விடுகிறான். அரசனில்லையேல் அமைச்சரும் இல்லை.

ஒரு மு:மின் சினமூட்டப்பட்டாலும் அது அவனை சத்தியத்திலிருந்து வெளியே கொண்டு செல்லாது; அவன் திருப்தியடைந்தாலும் அந்தத் திருப்தி அச்த்தியத்திற்குள் அவனை நுழைத்து விடாது. அவனுக்கு ஏதாவது ஒன்று நிர்ணயிக்கப்பட்டு விட்டால் அதனை விட அதிகமாக எடுத்துக் கொள்ள மாட்டான்.

தீங்குகளின் உறைவிடம் ஆறு :

உலக ஆசை, தலைமைத்துவ ஆசை, புகழாசை, உணவுப் பிரியம், தூக்கத்தில் நாட்டம், ஓய்வில் விருப்பம்.

## தொட்டவன் தொடவில்லை

வானத்தை தொட்டவன்
வாளைத் தொட்டவன்
வான்மறை குர்ஆனை தொடவில்லை
இன்பத்தை தொட்டவன்
இன்னலை தொட்டவன்
இஸ்லாத்தை தொடவில்லை
அரசியலை தொட்டவன்
ஆடம்பரத்தை தொட்டவன்
அல்லாஹ்வின்
அருளை தொடவில்லை
தொழிலை தொட்டவன்
தொப்பியை தொட்டவன்
தொழுகையை தொடவில்லை
அவன் எதனைத்
தொட்டபோதும்
நபியின் நடத்தையை
தொடவில்லை

**எம்.ஆர்.எம்.ரிமாஸ் (ஆண்டு 9)**
**அஸாபீருல் இஸ்லாம்**
**உயன்வத்தை**

## தம்பி கேள்!

இஸ்லாத்தில் பிறந்த தம்பி
என்ன செய்கிறாய்?
இஸ்லாமிய நடைமுறையில்
நடந்து காட்டுவாய்
அதிகாலையிலே கண்விழிக்கப்
பழகிக் கொள்ளுவாய்
அதேவேளை எழுந்துன்னை
சுத்தப்படுவாய்
சுறுசுறுப்பாய் சுபஹ்
தொழுது கொள்ளுவாய்
சுன்னத்தான நடைமுறைகள்
பேணிக் கொள்ளுவாய்
தித்திப்பான திருக்குர்ஆன்
ஓதிக் கொள்ளுவாய்
தினந்தோறும் இந்நடைமுறைகள்
பேணிக்கொள்ளுவாய்

எச் எம் முஹம்மத் ஹனீபா
ஒட்டமாவடி 01

சிறுவர் பகுதியின் போட்டி நிகழ்ச்சிகள் அனைத்திலும் போட்டிக் கூப்பன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். போட்டிக் கூப்பன் இணைக்கப்படாத விடைகள் நிராகரிக்கப்படும்.

# சிறுவர் பூங்கா

அன்பின் தம்பி, தங்கைகளே! இதோ உங்கள் அறிவுக்கு விருந்து; அதிஷ்டத்திற்குப் பரிசு! ஆம்! குறுக்கெழுத்துப் போட்டியில் விடைகளை சரியாக நிரப்பி அனுப்பி முதல் பரிசு பெறும் உங்களுக்கு 'இஸ்லாமிக் ஓடியோ சேர்விஸ்' இனால் வழங்கப்படும் அழகிய கிறாஅத் பதிவுநாடா; ஏனைய அதிஷ்ட சாலிகளுக்கு அடுத்த மாத 'அல்ஹஸனாத்' இலவசம்!

## குறுக்கெழுத்துப் போட்டி- 01

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 ■ | 7 | 8 |
| 9 ■ | 10 | 11 ■ | 12 ■ | 13 ■ | 14 ■ | 15 ■ | 16 |
| 17 | 18 | 19 ■ | 20 | 21 | 22 | 23 ■ | 24 |
| 25 | 26 ■ | 27 | 28 ■ | 29 | 30 ■ | 31 ■ | 32 |
| 33 ■ | 34 ■ | 35 | 36 ■ | 37 ■ | 38 | 39 | 40 ■ |
| 41 | 42 | 43 | 44 ■ | 45 | 46 | 47 ■ | 48 |
| 49 | 50 ■ | 51 | 52 | 53 | 54 ■ | 55 ■ | 56 |
| 57 | 58 | 59 | 60 ■ | 61 | 62 ■ | 63 | 64 |

### மேலிருந்து கீழ்

2. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் செவிலித் தாய்.
8. அரபியில் 'மிப்தாஹ்' என அழைக்கப்படும்.
17. நீர்வாழ் உயிரினம். (தலைகீழ்) 21. நெருப்பினால் படைக்கப்பட்ட ஒரு படைப்பு.
27. உயிரைக் கைப்பற்றும் மலக்கு.
38. 'அருந்து' என்பதை இப்படியும் கூறலாம்.
41. அரபியில் 'வெற்றி' எனப் பொருள்படும் இந்தப் பெயரில் அல்குர்ஆனில் ஒரு ஸூரா உள்ளது. (தலைகீழ்)
45. பகலும் இதுவும் மாறிமாறி வரும்
48. முஹம்மத் (ஸல்) அவர்களின் முதலாவது மனைவி (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

1. இஸ்லாமியப் புதுவருடத்தின் முதல் மாதம்.
7. எல்லாச் செயல்களும் இதன்படிதான் நிகழும்.
17. காட்டில் வாழும் அழகிய மிருகம். (மாறி உள்ளது)
20. இஸ்லாத்தின் கடமைகளுள் ஒன்று.
38. பள்ளம் என்றும் சொல்லலாம்.
41. அரபியில் 'பூ' என்பதற்கான கருத்தைத் தருவது. (குழம்பியுள்ளது)
45. மழைக்கு முன் இதுவும் ஏற்படலாம்.
51. அரபியில் 'தலைவன்' எனும் பொருளில் வழங்கப்படுகிறது. (குழம்பியுள்ளது)
57. 'முஜாஹித்' கள் இதன்போது குதிரை வீரர்களாக இருப்பார்கள்.
63. உடல் உறுப்புகளில் ஒன்று. (மாறி வந்துள்ளது)

| | | |
|---|---|---|
| முழுப் பெயர் | : | ........................................ |
| ஆண்டு | : | ........................................ |
| பாடசாலை | : | ........................................ |
| வீட்டு முகவரி | : | ........................................ |

## இஸ்லாமிய பொருளாதாரக் கோட்பாடு (தொடர்)

இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாடு இவ்விரண்டு அமைப்புகளிலுமிருந்தும் வேறுபட்டுத் தனித்துவமாகத் திகழ்கின்றது. அது தனிமனித நலனுக்கும், சமூக நலனுக்கும் இடையில் இணக்கம் காணுகிறது. இஸ்லாத்தின் பார்வையில் இரண்டும் ஒன்றையொன்று பூர்த்தி செய்யும் விதத்தில் உள்ளன. இந்த வகையில் ஒன்றைப் பாதுகாப்பதிலேயே அடுத்ததன் நிலைப்பாடு தங்கியுள்ளது. எனவேதான் இஸ்லாம் இருதரப்பு நலன்களையும் ஏககாலத்தில் கவனத்திற் கொள்கிறது. அவற்றில் ஒன்றிற்காக மற்றையதைப் பலியிட அது விரும்பவில்லை. ஆயினும் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் (உ-ம்: யுத்தவேளை, பஞ்சகாலம், தொற்று நோய்கள் பரவியுள்ள சந்தர்ப்பங்கள்) இருதரப்பு நலன்களுக்கிடையில் இணக்கம் முடியாத வேளைகளில் பொதுநலன்களுக்காக தனிமனித நலன்களைக் கவனத்திற் கொள்ளவும் இஸ்லாம் தடைவிதிப்பதில்லை.

தனிமனித, சமூக நலன்கள் ஏககாலத்தில் பேணப்படல் வேண்டும் என்ற இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாட்டின் கருத்தை விளக்கும் சில சட்ட வசனங்களை கீழே நோக்குங்கள்.

**"நீங்கள் அநியாயம் இழைக்கவும் கூடாது; அநியாயம் இழைக்கப்படவும் கூடாது" (அல்பகரா: 273)**

**"ஆரம்பமாக தீங்கிழைக்கவும் கூடாது; அதற்குப் பதில் தீங்கு இழைக்கவும் கூடாது" (இப்னு மாஜா)**

இனி நடைமுறையில் இஸ்லாமியப் பொருளாதார அமைப்பில் எவ்வாறு தனிமனித சமூக நலன் பேணப்படுகின்றது என்பதனை சுருக்கமாக கீழே விளக்க முயற்சிப்போம்.

முதலாளித்துவ அமைப்பில் தனிமனித ஆதிக்கமே மிகைத்து நிற்கும். பொதுவுடமை அமைப்பிலோ அரசின் ஆதிக்கமே மேலோங்கி நிற்கும். ஆனால் இஸ்லாமிய பொருளாதார அமைப்பில் தனிமனித சுதந்திரமும், அரசின் தலையீடும் சமஅளவில் இருக்கும். ஒன்று மற்றையதைச் சார்ந்து பூர்த்தி செய்யும் விதத்தில் இருக்கும். இரண்டும் அடிப்படைகளாகவே கொள்ளப்படும். இரண்டில் ஒன்று அடிப்படையாகவும், மற்றையது விதிவிலக்காகவும் கொள்ளப்படுவதில்லை.

இஸ்லாம் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட தனிமனிதர்களுக்கு சுதந்திரம் வழங்கும்போது சில கட்டுப்பாடுகளையும் விதிக்கின்றது. உதாரணமாக போதை வஸ்த்துக்களை உற்பத்தி செய்தல், வட்டி அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடல், பதுக்கல், சொத்துக்களை செல்வத்தை உற்பத்தியில் ஈடுபடுத்தாது தேக்குதல், அல்லது அர்த்தமற்ற முறையிலோ பிறருக்குத் தீங்கேற்படுத்தும் விதத்திலோ பொருளைக் கையாள்தல், பொருட்களை நியாயமற்ற, மிதமிஞ்சிய விலையில் விற்றல் போன்றன விலக்கப்பட்டவையாகக் கொள்ளப்படுகின்றன.

நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளின் சீர்நிலையைக் கண்காணிக்க விஷேட ஒரு பிரிவை இயக்குவது இஸ்லாமிய அரசின் கடமைகளில் ஒன்றாகும். இக்கண்காணிப்புப் பிரிவை 'அல்ஹிஸ்பா' என இஸ்லாமிய வழக்கில் அழைப்பர்.

மேலும் இஸ்லாமியப் பொருளாதார அமைப்பில் தனியார் துறையினர் பர்ளு கிபாயா- என்ற வகையில் ரயில் பாதைகளை அமைத்தல்; கனரக உற்பத்திகளுக்கான தொழிற்சாலைகளை அமைத்தல் போன்ற துறைகளில் ஈடுபடாதபோது அல்லது இலாபமீட்டித் தராத யுத்த ஆயுதங்களை உற்பத்தி செய்தல், பாடசாலைகள், வைத்தியசாலைகள் அமைத்தல் போன்ற முயற்சிகளில் ஈடுபடத் தவறும் போது அத்தகைய பணிகளை மேற்கொள்வது இஸ்லாமிய அரசின் கட்டாயக் கடமையாக- 'பர்ளு ஐன்' ஆக மாறிவிடுகின்றது.

நாட்டுப் பிரஜைகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பை இஸ்லாம் ஏற்றுள்ளது என்ற வகையில் இவ்விடயத்தில் அரசு தலையீடு தவிர்க்க முடியாததாக இருக்கிறது. இந்த வகையிலேயே ஸகாத் நிறுவன அமைப்பை அறிமுகம் செய்துள்ளது. அது முழுமையாக அரசின் கையிலேயே இருக்கும்.

மேலும் சமூகத்தில் பொருளாதார சமநிலை, சொத்து, வருமான பங்கீட்டு நிதி, போன்றவற்றைப் பேணி, செல்வமானது ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் கைகளில் மாத்திரம் சுழன்றுவரும் நிலையத்தை தவிர்க்கவும் அரச தலையீடு அவசியமாகிறது. 'பனூ நளீர்' கோத்திரத்தினரிடமிருந்து கிடைத்த சுங்கவரியை அன்சாரிகளை விட்டுவிட்டு முஹாஜிரீன்களுக்கு மத்தியில் நபி (ஸல்) அவர்கள் பகிர்ந்தளித்தமை பொருளதார நிலையைப் பேண அரசு எடுக்கும் நடவடிக்கை தொடர்பானதாகும்.

இந்த அடிப்படையிலேயே சில சூழ்நிலைகளில் நபியவர்கள் விவசாய நிலங்களை குத்தகைக்கு, கூலிக்கு விடுவதையும் தடைசெய்திருந்தார்கள்.

சொத்துரிமை விடயத்தில் உற்பத்திக் காரணிகள் அடிப்படையில் தனியாருக்கு சொந்தமானவை என்பது முதலாளித்துவத்தின் கருத்தாகும். பொதுவுடமை அமைப்பில் உற்பத்திக் காரணிகள் அனைத்தும் அரசுக்கு சொந்தமானவை என்பதே அடிப்படை. இவ்விரு அமைப்புக்களிலும் குறித்த நிலைகளுக்கு மாற்றமாகச் சில துறைகள் அமைவது விதிவிலக்காக இருக்கும்.

ஆனால் இஸ்லாமிய அமைப்பில் தனியுடமை, பொதுவுடமை ஆகிய இரண்டு மிணைந்த ஒரு நிலையையே அவதானிக்கக் கூடியதாயுள்ளது. இரண்டும் அடிப்படைகளாகவே கொள்ளப்படுகின்றன. ஒன்றும் விதிவிலக்கானதல்ல. அவ்வாறே, இரண்டும் வரையறைகளுக்கு உட்பட்ட மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும்

தனியாருக்கு சொத்துக்களை வைத்திருக்கும் உரிமை இருப்பினும் அடிப்படையில் செல்வங்கள் அனைத்தும் அல்லாஹ் வுடையவை. மனிதர்கள் அவற்றில் அவனின் பிரதிநிதிகள் என்ற வகையில் இஸ்லாமிய வரையறைகளுக்கு ஏற்பவே அவற்றைக் கையாளவும், பயன்படுத்தவும் வேண்டும். இல்லாதபோது அரச தலையீடு அவசியப்படும்.

மேலும் சில சொத்துக்கள் கண்டிப்பாக அரசு கையில் இருக்கும். உதாரணமாக, 'வக்ப்' சொத்துக்கள், கனிப்பொருள் வளங்கள், கைப்பற்றப்பட்ட நிலப் பிரதேசங்கள் போன்றவை அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும்.

மேலும் செல்வப் பங்கீட்டில் முதலாளித்துவ அமைப்பானது தனியார் சொத்துரிமையை அடிப்படையாகக் கொள்ள, சமவுடமை அமைப்பு உழைப்பை அடிப்படையாகக் கொள்கிறது.

ஆனால் இஸ்லாமிய அமைப்பில் பங்கீட்டின் போது தேவையையே அடிப்படையாகக் கொள்ளப்படும். அதனையடுத்து உழைப்பும் தனியார் சொத்துரிமையும் கவனத்திற் கொள்ளப்படும்.

(இன்ஷா அல்லாஹ் தொடரும்)

# நான் எவ்வாறு முஸ்லிமானேன்?

**ஷரீபா கார்லோ, ஸ்பெயின் - தமிழில்: பஸால் முஹம்மத்**

நான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட கதை, ஒரு சூழ்ச்சியின் அடியாகத் தோன்றியதாகும். ஆம்! நான் சில சூழ்ச்சிகளைச் செய்தேன்; நான் அங்கம் வகித்த குழுவினரும் சூழ்ச்சிகளைச் செய்தனர்; அல்லாஹ்வும் சூழ்ச்சி செய்தான். அல்லாஹ்வே சூழ்ச்சி செய்வதில் வல்லமையானவன் என்பது இறுதியில் நிருபணமாயிற்று.

எனது டீன்ஏஜ் பருவத்தின் போது ஒரு தீய எண்ணத்துடன் அலைந்து கொண்டிருந்த ஒரு குழுவினர் என் கவனத்தை ஈர்த்தனர். அவர்கள் அமெரிக்க அரச உத்தியோகங்களில் வேலை பார்க்கின்ற தனிப்பட்டவர்களைக் கொண்ட ஓர் அமைப்பினர். ஆனால் அவர்களிடம் தமது வேலைகளுக்குப் புறம்பான ஒரு நிகழ்ச்சித் திட்டம் இருந்தது. அது இஸ்லாத்தை அழிக்கும் பணி! எனது கவனத்தை ஈர்த்த அமைப்பினர் உண்மையில் அமெரிக்க அரசினால் அதற்கென நியமிக்கப்பட்டவர்கள் அல்லர். ஆனால் தங்களது நோக்கத்தை விளம்பரப்படுத்துவதற்கு அவர்கள் தங்களது அமெரிக்க அரசாங்கத்திலுள்ள பதவிகளை தாராளமாக பயன்படுத்தினார்கள்.

அந்தக் குழுவின் அங்கத்தவர் ஒருவர் என்னை அணுகினார். அதற்குக் காரணம் அவர் என்னை பெண் உரிமைகளுக்காக குரலெழுப்புபவளாகவும் உத்வேகத்துடன் இயங்குபவளாகவும் கண்டார். அவர் என்னிடம், ''மத்திய கிழக்கு நாடுகள் நாடுகள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தி, சர்வ தேச உறவுகள் (International Relations) துறையில் கல்வி பயிலுங்கள்! அவ்வாறு செய்தால் எகிப்திலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் வேலை பெற்றுத் தருவது எனது பொறுப்பு” என்றார்.

எனக்கு அது ஒரு சிறந்த யோசனையாகத் தென்பட்டது. ஏனெனில், நான் முஸ்லிம் பெண்களின் வாழ்க்கையை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பார்த்திருக்கிறேன். அவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட அப்பாவிகளாக வாழ்கிறார்கள். அவர்ளை 20ம் நூற்றாண்டின் சுதந்திரமான வெளிச்சத்திற்கு கொண்டு வர வேண்டும் என நான் விரும்பினேன்.

இந்த திடசங்கற்பத்துடன் கல்லூரியில் சேர்ந்து எனது படிப்பை ஆரம்பித்தேன். அல்குர்ஆன், அல்ஹதீஸ், இஸ்லாமிய வரலாறு என்பவற்றைப் படிக்கலானேன். அத்துடன் சொற்களைச் சோடித்து நான் அவர்களுக்கு சொல்ல வருவதை விளக்கப்படுத்துவதற்கும் கற்றுக் கொண்டேன். அது ஒரு சிறந்த ஆயுதமாக எனக்கு உபயோகப்பட்டது.

எவ்வாறிருப்பினும் நான் இந்தச் சத்தியச் செய்தியினால் கவரப்பட்டுக் கொண்டிருந்தேன். இது ஒருவகையான உணர்வை என்னுள் ஏற்படுத்தலாயிற்று. ஒரு வித பய உணர்ச்சி உண்டாயிற்று. எனவே இந்த உணர்வுக்கு எதிராக அதிரடியான எதிர்த்தாக்குதல் நடாத்துவதே வழி என்று கண்டு, கிறிஸ்தவம் பற்றிய வகுப்புகளுக்குச் செல்லலானேன். அதிலும் ஹாவார்ட் பல்கலைக் கழகத்தில் இறையியல் துறையில் (Theology) கலாநிதிப்பட்டம் பெற்ற பேராசிரியர் ஒருவரின் வகுப்புகளுக்கே நான் சென்றேன். அதனால் நான் சிறந்த பாதுகாப்பான கைகளுக்குள் இருப்பதாக உணர்ந்தேன்.

ஆனால், நான் நினைத்தவாறு எதுவும் இருக்கவில்லை. அந்த பேராசிரியர் ஓர் ஏகத்துவ கிறிஸ்த்துவராயிருந்தார் (Unitarion Christian). அவர் இயேசுவின் இருமைத் தத்துவத்தையோ*, மும்மைத் தத்துவத்தையோ** விசுவாசம் கொள்பவரல்ல; உண்மையில் இயேசு ஓர் இறைத்தூதர் என்றே அவர் விசுவாசம் கொண்டிருந்தார். அவர் அதற்கான ஆதாரங்களை மூல மொழிகளிலான கிரேக்க ஹீப்ரு, அராமிய பைபிள்களிலிருந்து எடுத்துக் காட்டினர். அத்துடன் அவ்விடயங்கள் எவ்விடங்களில் மாற்றம் செய்யப்பட்டன என்பதையும், இந்த மாற்றங்களின் பின்னரும் அம்மாற்றங்கள் தெரியாத வண்ணம் அவற்றின் வடிவம் சீரமைக்கப்பட்டது என்பதையும் வரலாற்று ரீதியாக எடுத்துக் காட்டினார். அந்த வகுப்பு முடிந்த கணத்திலேயே எனது மார்க்கம் எனது நெஞ்சிலிருந்து சுக்குநூறாகி அழிந்து விட்டது. ஆனாலும் கூட அந்தக்கணம் வரைக்கும் நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கவில்லை.

காலம் கரையலானது. நான் எனக்காகவும் எனது எதிர்கால தேவைகள் கருதியும் எனது படிப்பைபைத் தொடரலானேன் இது மூன்று வருடங்களை எடுத்துக் கொண்டது. இந்த காலப் பகுதியில்

---

* இயேசு- தந்தையும் மகனுமான இருவர் என்ற கொள்கை

** இயேசு- பிதா, மகன், பரிசுத்த ஆவி என்ற மூவர் எனும் கொள்கை

முஸ்லிம்களிடம், அவர்களுடைய நம்பிக்கைகள் குறித்து வினாக்கள் தொடுத்து தெளிவைப் பெற்றுக் கொண்டேன். அவ்வாறு நான் வினாத் தொடுத்த சகோதரர்களுள் ஒருவர் இஸ்லாத்தின் மீதுள்ள எனது ஈடுபாட்டைக் கண்டு கொண்டார். அல்ஹம்துலில்லாஹ். அதுவே அவர் தனிப்பட்ட ரீதியில் எனக்கு இஸ்லாம் பற்றி போதிக்கும் ஒரு முயற்சியாக ஆகிவிட்டது. அவர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இஸ்லாமிய த∴வாவை விடுத்துக் கொண்டிருந்தார். அல்லாஹ் அவருக்கு நற்கூலியை அதிகமாக வழங்கட்டும்.

ஒருநாள் அந்த மனிதர் என்னை தொடர்பு கொண்டு ஒரு முஸ்லிம் குழுவினர் நகரத்திற்கு விஜயம் செய்துள்ளது பற்றிக் குறிப்பிட்டு நான் அவர்களை சந்திக்க வேண்டும் எனக் கேட்டு கொண்டார்; நானும் அதற்கு உடன் பட்டேன்; இஷா தொழுகையின் பின்னர் அவர்களைச் சந்திக்கச் சென்றேன். சுமார் 20 பேர் அமர்ந்திருந்த ஒரு அறையினுள் அழைத்துச் செல்லப்பட்டேன். நான் அவர்களுள் வயதில் மூத்தவரான பாகிஸ்தானிய சகோதரரின் முகம் நோக்கி இருக்கும் வண்ணம் அமர்வதற்கு இடஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த பாகிஸ்தானிய சகோதரர் கிறஸ்தவம் பற்றி நல்ல அறிவைக் கொண்டிருந்தார். அவரும் நானும் பஜ்ர் வரையிலும் பைபிள், குர்ஆன் ஆகியவற்றின் பல்வேறு அம்சங்கள் குறித்து உரையாடினோம்; விவாதித்தோம். அந்த சகோதரரின் அறிவார்ந்த விடயங்களைச் செவிமடுத்த அந்த சந்தர்ப்பத்தில் அவர் வேறு எவரும் செய்யத் துணியாத ஒன்றைச் செய்தார். ஆம்; அவர் என்னை முஸ்லிமாகி விடுமாறு அழைப்பு விடுத்தார்.

இந்த மூன்று வருட காலத்தில் நான் இஸ்லாம் பற்றித் தேடினேன் .. ஆராய்ந்தேன்.... ஆனால் யாரும் என்னை இஸ்லாத்தின்பால் அழைக்கவில்லை. நான் கற்றுத் தரப்பட்டிருக்கிறேன்; விவாதத்திற்குள்ளாக்கப்பட்டிருக்கிறேன்; கேலிக்குள்ளாக்கப்பட்டிருக்கிறேன். ஆனால் ஒருபோதும் இஸ்லாத்தின்பால் அழைக்கப்பட்டதில்லை. அல்லாஹ்தான் எங்கள் அனைவருக்கும் வழிகாட்ட வேண்டும்.

ஆகவே, அவர் என்னை அழைத்ததும் இதுதான் அந்தத் தருணம் என்பதை உணர்ந்தேன். இதுதான் சத்தியம் என்பதையும் உணர்ந்து கொண்டேன். இப்போது நான் ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டியிருந்தது. ''அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹ் எனது உள்ளத்தை திறந்துவிட்டான். ஆம்! நான் ஒரு முஸ்லிமாக வேண்டும்" என்றேன். உடனே அந்த சகோதரர் எனக்கு கலிமா ஷஹாதாவை அரபியிலும், ஆங்கிலத்திலும் சொல்லித் தந்தார்.

"அல்லாஹ்வின்மீது ஆணையிட்டுச் சொல்கிறேன், நான் ஷஹாதாவை மொழிந்த போது புதியதோர் உணர்வு என்னுள் தோன்றியது; என் நெஞ்சை அழுத்தியிருந்த மிகப்பெரும் சுமை ஒன்று அகன்று விட்டதாய்த் தோன்றியது. என் வாழ்வில் அப்போதுதான் முதன் முதலாக சுவாசிப்பதுபோல் உணர்ந்தேன்."

அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹ் எனக்கு புதியதொரு வாழ்க்கையைத் தந்திருக்கிறான்; சுவனத்திற்கான ஒரு வாய்ப்பைத் தந்திருக்கிறான். என்னுடைய மீதி நாட்களை முஸ்லிமாகவே கழித்துவிட வேண்டும் என்பதுதான் என் ஒரே பிரார்த்தனை. ஆமீன்!

---

### பதாவா முஆஸிரா (தொடர்ச்சி)

மத நம்பிக்கைகளும் வணக்க முறைகளும் மதிக்கப்பட வேண்டும். அவ்வாறே வெளியிலிருந்து வரும் சகல எதிர்ப்புகளிலிருந்தும் அவர்கள் காக்கப்படுவதோடு அவர்களுக்கு மற்றும் குடும்பம் சந்ததிகளும் எவ்வித மனக்கசப்புகளுக்கும் இடர்களுக்கும் உட்படாது கவனித்துக் கொள்ள வேண்டும். வேதக்காரர்களோடு உரையாடும் பண்பாட்டு விடயத்திலும் குர்ஆன் உயர் போதனை தருகின்றது.

**"இன்னும் நீங்கள் வேதக்காரர்களோடு அழகிய முறையிலன்றி தர்க்கிக்க வேண்டாம்." (29:46)**

பேச்சுவார்த்தைக்கு அல்லது உரையாடலுக்கு இருவழிகள் இருந்து, ஒன்று சிறந்ததாகவும் மற்றொன்று மிகச் சிறந்ததாகவும் காணப்படின், மிகச்சிறந்த வழிமுறையையே கையாள வேண்டும். முரண்பாடுகளைத் தவிர்த்து உடன்பாடான அம்சங்களையே கதைக்க வேண்டுமென அல்குர்ஆன் மேலும் வழிகாட்டுகிறது.

**"நீங்கள் சொல்லுங்கள், உங்களுக்கு இறக்கப்பட்டவற்றையும் எமக்கு இறங்கியவற்றையும் நாம் ஈமான் கொண்டோம். எங்களதும் உங்களதும் இரட்சகன் ஒருவனே."**

திம்மிகளுள் வேதக்காரர்களுக்கு ஒரு சிறப்பிடமும், அவர்களில் அரபிகளுக்கு அதையும் விடப் பிரத்தியேக அந்தஸ்தும் உண்டு. இதற்கு அவர்கள் அரபிகளாக இருந்து குர்ஆனிய மொழியை பேசுவது, இஸ்லாமிய அறிவியலைப் பெறுவது, அடுத்தவர்களை விடவும் இஸ்லாமிய நாகரிக அறிவியல் அம்சங்களை அடைவது முதலியன காரணமாகலாம். எனவே அவர்கள் நம்பிக்கையில் கிறிஸ்தவர்களாயினும் நாகரிக, அறிவியல் துறைகளில் முஸ்லிம்களே. இதைத்தான் நான் பல வருடங்களுக்கு முன்னர் Dr. லோஸ் இவல் இடம் கூறினேன். அது அவர் கட்டாருக்கு விஜயம் செய்து ஓர் அறிவியல் மாநாட்டில் பங்கேற்று அது குறித்து எனது கருத்தைக் கேட்ட வேளையாகும். இஸ்லாம் வகுத்தளிக்கும் இத்தகைய உரிமைகள் எழுத்து வடிவில் மாத்திரம் நின்று விடுவனவல்ல. ஷரீஅத் விதியாக்கும் இவ்வுரிமைகளை யாரும் பாழ்படுத்தி விட முடியாத அளவுக்கு அவற்றுக்குப் பல உத்தரவாதங்களும் உண்டு. முதலாவது ஒவ்வொரு முஸ்லிமும் இறைகட்டளைக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பது அகீதா சார்ந்த உத்தரவாதம். அடுத்து பொதுவாக முஸ்லிம் சமூகம் குறிப்பாக அதன் நீதி மற்றும் சட்டத்துறைக் காவலர்களும் வழங்கும் சமூக உத்தரவாதம். இவர்களுள் அநீதி இழைக்கப்பட்ட திம்மிகள்

(46ம் பக்கம் பார்க்க)

விஞ்ஞானம் :

# நட்சத்திரம் மறையும் இடம்

ஆகில் அஹ்மத், மருத்துவ விஞ்ஞானங்கள் பீடம், ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

"நட்சத்திரம் மறையும் இடங்களின் மீது சத்தியமாக! அறிவுடையோராக இருந்தால் இது ஒரு மகத்தான சத்தியம் என்பதனை அறிந்து கொள்வீர்கள். நிச்சயமாக இது கண்ணியம் மிக்க குர்ஆன் ஆகும்."
(ஸூரா அல்வாகிஆ : 75,76,77)

அல்குர்ஆனில் பல இடங்களில் அல்லாஹ் தனது ஆற்றல், வல்லமை என்பவற்றை வலியுறுத்திக் கூறுவதற்காக தனது அற்புதமான படைப்புக்களைச் சுட்டி சத்தியம் செய்கின்றான். படைப்புக்கள் மீது சத்தியம் செய்யும் அருகதை அவனுக்கு மட்டுமே உரியதாகும்.

இங்கு தனது 'கலாம்' இன் கண்ணியத்தை வலியுறுத்த விளைந்த அல்லாஹ், தனது அற்புதமான படைப்புக்களுள் ஒன்றான நட்சத்திரம்; அது மறையும் இடத்தின் மீது சத்தியம் செய்கின்றான். இதன் மூலம் அண்ட வெளியில் நடைபெறும் நட்சத்திரங்களின் அழிவுடன் தொடர்பான வான் பௌதீக நிகழ்வுகளின் பக்கம் எமது கவனத்தைத் திருப்பி அவனது வல்லமையை மனிதனுக்குப் புரியவைக்க நாடுகின்றான்.

நட்சத்திரங்கள் அழிகின்றனவா? ஆம், படைப்புக்கள் அத்தனைக்கும் அழிவு உண்டு. படைப்பாளன் அல்லாஹ் மட்டுமே நித்தியமானவன். நட்சத்திரங்கள் மட்டிட முடியா எண்ணிக்கையான அணுக்களால் ஆனவை. அணுக்களின் கருக்களைச் சூழ இலத்திரன்கள் சுற்றிக் கொண்டிருக்கின்றன. இதனால் நட்சத்திரங்கள் திட்டமான கனளவு உடையனவாக இருக்கின்றன. இக்கனளவை மாறாமல் பேணுவதற்கு அவற்றிற்கு குறித்தளவு சக்தி தேவைப்படுகிறது. இந்த சக்தி இழக்கப்படும்போது நட்சத்திரங்கள் இறந்து விடுகின்றன.

நட்சத்திரம் ஒன்று தனது ஆயுளைப் பூர்த்தி செய்த பின்னர் சக்தியை இழந்து மையக் கவர்ச்சி விசையின் காரணமாக தனது மையத்தை நோக்கி சுருங்குகிறது. இறக்கின்ற ஒரு நட்சத்திரம் தனது பருமனின் பல மில்லியன் பகுதியாக ஒடுங்கிச் சிறுக்கிறது. ஆனாலும் அதன் மொத்தத் திணிவில் மாற்றம் ஏற்படுவதில்லை. நட்சத்திரங்கள் அழியும் இத்தானங்கள் 'கருங்குழிகள்' (Black Holes) என அழைக்கப்படுகின்றன.

☯ இறக்கும் நட்சத்திரம் சிறிதாக - அதாவது எமது சூரியனை ஒத்த பருமன் உடையதாக இருக்கும்போது, அதில் காணப்படும் இலத்திரன் களது அல்லது நியூத்திரன்களது எதிர்விசையை மையக்கவர்ச்சி விசை (Gravitational Force) யினால் விஞ்சப்பட முடியாததனால் White Dwarf எனும் நியூத்திரன் செறிவான நிலையுடன் ஒடுக்கம் மட்டுப்படுத்தப்படுகிறது. இது 0.03 வினாடிக்கு ஒன்று எனும் அதிர்வில் X - கதிர் துடிப்புக்களைக் காலுகிறது. இறக்கும் நட்சத்திரம் தனது மைய அச்சில் மணிக்கு பலநூறு மில்லியன் கிலோ மீற்றர் வேகத்தில் சுழன்று கண்ணுக்குப் புலப்படாத அளவுக்குச் சிறுத்து விடுகின்றது. இதனால் நட்சத்திரம் இருந்த இடம் வெற்றிடமாகி இருளடைந்து விடுகின்றது.

☯ இறக்கும் நட்சத்திரம் பாரியதாக இருக்கும்போது இதன் மையக் கவர்ச்சி விசை மிகையானதால் White Dwarf நிலையையும் தாண்டி திணிவும், சக்தியும் அதன் மையப் புள்ளியில் குவிக்கப்பட்டு விடுகின்றது. இந்த நட்சத்திரம் இருந்த இடம் சூனியமாகி விடுகின்றது.

இவ்வாறு இறக்கின்ற நட்சத்திரங்கள் இருந்த இடங்கள் இரு காரணங்களால் புலப்படாது போகின்றன.

1. இவை எந்த சடப்பொருளும் இல்லாத கரிய வெற்றிடமாகி விடுகின்றன. எமது கண்ணுக்குப் புலப்பட வேண்டுமானால் ஒரு பொருளிலிருந்து ஒளி எமது கண்ணை அடைய வேண்டும். கருங்குழிகள் ஒளியைக் காலாதது மட்டுமன்றி தம்மிலிருந்து குறித்த புலத்திற்குள் செல்லும் ஒளிக்கதிர்கள், நட்சத்திரங்கள், விண்பொருட்கள் அனைத்தையும் உள்வாங்கி விடுகின்றன. இவற்றில் எதுவுமே மீண்டு வெளியே வரமுடியாது.

2. குறிப்பிடத்தக்க திணிவுள்ள பொருட்கள்கூட அண்ட வெளியுடன் ஒப்பிடும்போது மிகச் சிறியனவாகக் காணப்படுகின்றன. கருங்குழிகள் திட்டமான பருமனைக் கொண்டிருக்கின்றன. குறித்த நட்சத்திரம் ஒன்றின் திணிவு M ஆகவும் ஒளியின் வேகம் C ஆகவும் இருக்கும்போது கருங்குழியின் ஆரை (R) பின்வரும் சூத்திரத்தின் மூலம் கணிக்கப்படும்

$$R = 2MG/ C^2$$

இங்கு G என்பது மையக்கவர்ச்சி மாறிலியாகும். இதன்படி எமது சூரியனை ஒத்த ஒரு நட்சத்திரம் அழியும்போது 3Km மட்டுமே ஆரையுள்ள ஒரு கருங்குழி உருவாகும். சூரியனின் ஆரை 695,000 Km ஆகும்.

கண்ணுக்குப் புலப்படாத இக்கருங்குழிகளை எவ்வாறு அறிவது?

* இவற்றின் புற எல்லைக்குள் புகும் கதிர்ப்புகளும், கடந்து செல்ல முயலும் நட்சத்திரங்களும் வேகமாகப் பயணித்து கருங்குழியின் மையத்தில் மறைந்து போதல்.
* காமா கதிர்கள் (Gama Rays), X-கதிர்களின் வெளியேற்றம்.
* இவற்றின் அண்மித்ததாக 4ம் பரிமாணமான நேரம் சடுதியாக விரிவடைதல்.

போன்றவற்றின் மூலம் இவை அடையாளங் காணப்பட முடியும்.

ஒரு நட்சத்திரத் தொகுதியின் மையத்தில் ஒரு நட்சத்திரம் அழிந்து பாரிய கருங்குழி ஒன்று உருவாகுமிடத்து இதனால் ஏற்படுத்தப்படும் கவர்ச்சி விசையின் காரணமாக தொகுதியின் மையத்தில் காணப்படும் நட்சத்திரங்களின் அடர்த்தியிலும் வேகத்திலும் அவதானிக்கத்தக்க அதிகரிப்பு ஏற்படுகின்றது. இவ்வாறான அதிகரிப்பு M87 எனும் நடசத்திரத் தொகுதியில் அவதானிக்கப்பட்டுள்ளது. இங்கு ஏற்பட்டுள்ள கருங்குழியானது எமது சூரியனைப் போல் 5 பில்லியன் மடங்கு திணிவுடைய ஒரு நட்சத்திரத்தின் அழிவினால் ஏற்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

அல்லாஹ்வே மிக அறிந்தவன்

## ரப்பானிய துளிகள்

### ஈமான், எம் கண்முன்னே...!

ஒரு மனிதனுக்கு அல்லாஹ் பற்றிய எண்ணத்தை வழங்க ஒவ்வொரு கணமும் அவன் எழுத்துருவிலுள்ள அல்லாஹ்வின் அத்தாட்சியான அல்குர்ஆனுடன் அமர்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை. பிரபஞ்சத்தின் நாலா பக்கங்களிலும் அவன் பரப்பி வைத்திருக்கின்ற, எம் கண் முன் நிற்கும் மரங்கள், செடி, கொடி, நீர், நெருப்பு, சூரியன், சந்திரன் என்பன அத்தாட்சிகளாக அல்லாஹ்வை, நினைவை விட்டும் நீங்காமல் வைத்திருக்க சக்தி பெற்றவையே. ஆனால் நாங்கள் பார்த்துப் பார்த்து இசைவாக்கம் அடைந்து விட்டோம். "இனி புதிதாக அவற்றை ஈமானியக் கண்களூடாக பார்க்கப் பழகிக் கொள்ள வேண்டும். அப்போதே அல்லாஹ் பற்றிய உணர்வை உயிரோட்டமிக்கதாக அது வைத்திருக்கம்." என ஷஹீத் செய்யித் குதுப் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

இப்னு உமர் (ரழி) அவர்கள் ஒருமுறை குளிர்ந்த நீரை சற்றுப் பருகினார். "**மறுமையில் அவர்களுக்கும், அவர்களது மனதிற்குப் பிடித்தவைகளுக்கும் மத்தியில் தடை கொண்டு வரப்படும்**" என்ற அல்குர்ஆன் வாக்கியம் ஞாபகத்துக்கு வர அவரது இரு கண்களும் கண்ணீரை மல்கத் தொடங்கின.

இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் ஒரு கொல்லன் பட்டறையைக் கடந்து செல்கின்றார். பழுக்கக் காய்ச்சப்பட்ட ஒரு இரும்புத் துண்டைக் கண்டதும் அழ ஆரம்பித்து விட்டார்.

உஸ்மான் (ரழி) அவர்கள் கப்றுகளை அண்மித்துச் சென்றால் அவரது தாடி நனைகிற அளவுக்கு அழ ஆரம்பித்து விடுவார்கள்.

மறுமையின் வேதனை எப்படியிருக்குமோ என்ற அச்சமும், கவலையும் ஸஹாபிகளது ஈமானை உயிர்த்துடிப்புடன் வைத்திருந்ததை இச்சம்பவங்கள் எமக்கு உணர்த்துகின்றன.

நாமும் எமது அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளை மறுமையின் ஒவ்வொரு கட்டத்துடனும் இணைத்துப் பார்த்துக் கொள்ள முடியும். எங்களது ஒவ்வொரு அடியும் மஹ்ஷரை நோக்கிய, மீளப் பெற்றுக் கொள்ள முடியாத நடை என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

தஃவா களத்தில் நிற்கும் உள்ளங்களும் இது போன்ற நிகழ்வுகளைக் கொண்டு, ஆன்மாக்களுடன் உரையாடி வெற்றிபெறுவது முக்கியமானதாகும். பாவங்கள் எம்மைச் சுற்றி வளைத்திருக்கின்ற இக்காலப் பகுதியில் ஈமானுக்குப் பல சவால்கள் உளநோய்களாக வழிமறித்து நிற்கின்றபோது அவற்றுடன் முட்டி எமது ஆன்மாக்களை பலப்படுத்த ஸஹாபிகளது இதுபோன்ற முன்மாதிரிகளை உள்ளத்தில் பதித்துக் கொள்ளலாம்.

## துஆக்கள் மனனமிடுவோம்

**வீட்டிலிருந்து வெளிறேும்போது:**

بِسْمِ اللهِ تَوَكَّلْتُ عَلَى اللهِ

لَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللهِ

"அல்லாஹ்வின் திருப்பெயரால், அல்லாஹ்வின் மீதே பொறுப்புச் சாட்டினேன். சக்தியும், ஆற்றலும் அல்லாஹ்வுக்கன்றி (வேறு யாருக்கும்) இல்லை."

மிலேனியத்தின் மறுமுகம்: (சென்ற இதழ் தொடர்)

# மதத்தீவிரவாதமும், பைத்தியங்களும்!

தமிழில் : அஷ்ஷெய்க் ஏ. அப்துல் மலிக் நளீமி
நன்றி : அல்முஜ்தமஃ அறபு சஞ்சிகை

## கலக்கமுற்ற ஏனையோர்

கலக்கமுற்ற கிறிஸ்தவர்கள் என வாதிடுவதில் இவ்வியக்கம் மாத்திரம் ஈடுபடவில்லை. மாறாக அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் மேஸா நகரைத் தலைமையகமாகக் கொண்ட இன்னும் ஓர் அமைப்பும் உள்ளது. 1973ல் ஜேம் ரொபட்ஸன் என்பவரும் அவரது மனைவி ஜூடியும் சேர்ந்து இதனை ஸ்தாபித்தனர். ''கிறிஸ்தவர்களாலான ஒரு நலன்புரி அமைப்பாகிய நாங்கள் மோர்மோனி சமூகத்தினர். இறை உண்மையை அறிந்து கொள்ள வேண்டுமன்பதற்காக நேர்வழிகாட்டல், உதவிகள் என்பவற்றை வழங்க விரும்புகிறோம்'' என்ற வாதத்தை இவர்கள் கொண்டுள்ளனர்.

மோர்மோன்கள் ஜோஸப் ஸ்மித் என்பவரால் 1830ல் உருவாக்கப்பட்ட மதக் குழுவினர். பலதார மணத்தை சில காலம் அங்கீகரித்து பின்னர் தடைசெய்து விட்டனர். இதன் காரணமாக இவர்களும் ஏனைய கிறிஸ்தவர்கள் கொண்டுள்ள நம்பிக்கைக் கோட்பாடுகளே எமதும் என உறுதிப்படுத்துகிறார்கள். குறிப்பாக மற்றோரைப் போன்றே திரித்துவப் புதுமை, ஈஸா அல்லாஹ்வின் மகன் என்ற நவீனம் (அல்லாஹ் இதனை விட்டும் தூய்மையானவன்) என்பவற்றை நாங்களும் விசுவாசிக்கின்றோம் என்கின்றனர்.

## கிளை டேவிட் குழு

1942ல் பெக்டர் ஹாவ்டப் என்பவர் மூலம் 'சனிக்கிழமை திருச்சபை' யிலிருந்து பிரிந்த ஒரு குழுவே இவ்வியக்கம் ஆகும். பின்னர் டேவிட் கோர்ஷ் என்பவரது தலைமையில் ஒரு நாசகார கும்பலாக மாற்றம் பெற்றது. 1995ல் பிரபஞ்சம் அழிந்து விடும் என இவர்கள் நம்பிக்கையும் கொண்டிருந்தனர். டெக்ஸாஸ் மாநிலத்தின் வாசோ நகரிலுள்ள ஒரு கட்டிடத்தை இரண்டு மாதங்களாக அமெரிக்கப் பாதுகாப்புப் படையினர் முற்றுகையிட்டிருந் தனர். முற்றுகை முடிந்த போது இவ்வியக் கத் தலைவரும் 75 சீடர்களும் கொல்லப் பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டனர். 1993 ஏப்லில் இச்சம்பவம் இடம்பெற்றது. என்றாலும் இக்குழுவின் அடையாளங்கள் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

F.B.I. பாதுகாப்பு நிறுவனம் இக்கொலைகள் தொடர்பாக 1999ல் விசாரணைகளை முடுக்கிவிட்டது. கோர்ஷும் அவரது சகாக்களும் ஒதுங்கியிருந்த மறைவிடத்தில் கண்ணீர் புகைக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இவ்விசாரனைகள் தொடங்கியுள்ளன. இதுதவிர எந்த ஒரு மேலதிக தகவலும் FBI யின் கதவுப் படிகளைத் தாண்டி இன்னும் வெளிவரவில்லை.
டேவிட் கோர்ஷ் அணி பிளவுபட்ட தாய் அமைப்பான சனிக்கிழமை திருச்சபையே ஈஸா (அலை) அவர்கள் மிக அவசரமாக பூமிக்கு வருகிறார்கள் என ஆழமாக இக்குழு நம்பியிருப்பதும் பிரபல்யமானதே இதன் சீடர்கள் சைவ உணவையே உட்கொள்வர். அவ்வாறே யூதர்களைப் போன்று சனியை வார விடுதலையாகவும், பெருநாள் போன்றும் பின்பற்றி வருகின்றனர்.
டேவிட் குழுவின் ஆரம்ப ஸ்தாபகர் பெக்டர் ஹாவ்டப் என்பவர்தான். 1919ல் சனித் திருச்சபையுடன் இணைந்து கொண்டார். ஆனால் 1930 ல் 'மேய்ப்பாளனின் தடி' என்ற நூலை எழுதியபோது இவரது கொள்கைகள் திருச்சபைக்கு அப்பால் சென்றுவிட்டது. ஹாவ்டப் தனது புத்தகத்தில் சனித்திருச்சபையில் தான் கண்ட தவறுகளை சுட்டிக் காட்டியுள்ளார். இன்னும் பல சீடர்களும் திருச்சபையிலிருந்து வெளியேற இது காரணமாக அமைந்தது. கிறிஸ்தவர்களின் ஒரு சிறு தொகையினராவது தங்களை சுத்திகரிப்பு செய்து கொள்ளாதவரை ஈஸா (அலை) இறங்கி வரமாட்டார் எனவும் உறுதியாக நம்பிக்கை கொண்டுள்ளார். இத்தூய்மைப் படுத்தும் சுத்திகரிப்புப் பணிக்காக இறைவன் இவரைத் தூதராக அனுப்பியிருக்கிறான்; தாவுத் (அலை) அவர்களது சாம்ராஜ்யம் உருவாக்கப்பட்டு இப்பணி இடம்பெறும் போதே ஈஸா (அலை) பூமியை நோக்கி வருகை தருவார் எனவும் வாதம் புரிந்தார். 1935ல் தனது நூலின் தலைப்பாகிய 'மேய்ப்பாளனின் தடி' என்ற பெயரில் தனது முதலாவது இயக்கத்தை தோற்றுவித்தார் இவ்வமைப்பின் ஆரம்ப 11 உறுப்பினர்களும் சனித் திருச்சபையிலிருந்து வெளியேறியவர்களே. ஆயினும் சனித் திருச்சபையின் உள்ளீடாகவே தொடர்ந்தும் இவ்வமைப்பு இயங்கி வந்தது. அதிக அங்கத்தவர்களை கவர்ந்திழுப்பதில் குறிப்பிடத்தக்களவு வெற்றியை இவ்வியக்கம் கண்டு கொள்ளவில்லை. எனவே 1942ல் திருச்சபையை விட்டும் முழுமையாக வெளியேறி 'சனி டேவிட்வாதிகள்' என்ற தனது அமைப்பை ஆரம்பித்தார். 1955 ல் ஹாவ்டப் மரணிக்கவே புளோரன்ஸ் என்பவர் தலைமைப் பொறுப்பையேற்றார். 1959 ஏப்ரல் 22ல் தாவுத் (அலை) அவர்களது சாம்ராஜ்யம் நிறுவப்படும் என முன்னறிவித்தல் செய்தார். புளோரின்ஸ் புதிய ஏற்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள 1260 நாட்கள் என்பதன் கருத்து இதுதான் எனக் கொடுத்தது அவர் வழங்கிய விளக்கமேயாகும். அவ்வேளை ஆயிரக்கணக்கான சீடர்கள் தமது உடமைகளை விற்றுவிட்டனர். உலக அழிவு நாளை எதிர்பார்த்து வாசோ நகருக்கு அண்மையிலுள்ள

மோனட் கார்மெல் எனவழைக்கப்படும் தலைமையகத்துக்கு மாறிச் சென்றனர். ஏப்ரல் 23ம் திகதி வந்துவிட்டது. ஒரு சிலரைத் தவிர பெரும்பான்மையினர் தலைவியை கைவிட்டுச் சென்றனர். தொடர்ந்தும் விசுவாசப் பிரமாணத்தில் இருந்த சிலரைத் தவிர கோபமுற்று வெளியேறியோரே சனி டேவிட் அமைப்பை மீள் உருவாக்கம் செய்தனர். இன்றுவரை இது இயங்கிவருகிறது. 1962ல் புளோரின்ஸ் காலமாகி விட்டார் இயக்கம் தொடர்ந்தேர்ச்சியான தலைமைத்துவ போட்டியையும், பிளவுகளையும் கடந்துவர நேரிட்டது. ஆயினும் இயக்கத்தின் பெரும்பகுதி பெர்னோன் ஹோவல் என்பவரின் கீழ் ஸ்திரமாக காணப்பட்டது தாவூத் (அலை) அவர்களின் பெயரில் பரக்கத் (அருள்) இருக்கும்; தனது கொடியின் கீழ் அவரது சாம்ராஜ்யத்தைக் கட்டியெழுப்பலாம் எனவும் எதிர்பார்த்து தனது பெயரை டேவிட் கோர்ஷ் என பெர்னோன் மாற்றிக் கொண்டார். அமைப்பின் பெயரையும் கிளை டேவிட் குழு எனவும் திருத்தியமைத்தார் அதாவது அடிப்படை டேவிட் வாதிகளின் கிளை என்பதாகும்.

இறுதியாக தலைவராக இருந்த ஜோர்ஜ் ரோடன் என்பவர் 1989ல் தன்னுடன் ஒன்றாக ஒரே அறையில் வசித்து வந்த சகாவின் தலையை கோடரியால் பிளந்து படுகொலை செய்து விட்டார். இவ்வேளையை நன்கு பயன்படுத்திக் கொண்ட கோர்ஷ் தலைமைத்துவ அதிகாரத்தை தனதாக்கிக் கொண்டார். கொலைக் குற்றத்திற்குள்ளான ரோடன் பைத்தியகாரன் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. 1998 டிஸம்பரில் அவர் மாரடைப்பினால் மரணமாகும் வரை நீதிமன்ற உத்தரவின்படி மனநோயாளர் வைத்தியசாலையிலேயே ஆயுளைக் கழித்தார்.

கி.பி.32 இற்கு முன்னர் (ஜீஸஸ் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னரே- அல்லாஹ் அவரை தன்னளவில் உயர்த்திக் கொண்டான் என்பதே எமது நம்பிக்கை) மரணமடைந்த தலைவருக்கும் அந்நிகழ்வு ஒரு சுபீட்சம் என இக்குழு நம்பிக்கை கொண்டுள்ளது. ஆனால் கி.பி.32 இற்குப் பின் மரணமடைந்தவர்கள் இனிமேலும் மரணமடையப் போகின்றவர்கள் அனைவரது ஈடேற்றமும் டேவிட்சனின் நபியாகிய கோர்ஷ் மூலமே கிடைக்கப் பெறும். இவ்வாறே புதிய ஏற்பாட்டில் இடம்பெற்றள்ள "சுமை" என்ற வார்த்தை ஏனைய அனைத்து கிறிஸ்தவர்களும் விசுவாசிப்பது போன்று ஈஸா (அலை) அல்ல. மாறாக கோர்ஷைத்தான் குறிக்கிறது என நம்பிக்கை கொண்டுள்ளனர். ஈஸா (அலை) அவர்கள் பூமியை வந்தடைந்ததும் ஒரு பெரும் போராட்டம் நடைபெறும். அதில் கிளை டேவிட் குழு பெரும் பங்களிப்புச் செய்வார்கள். அவர்கள் மாத்திரமே சுவர்க்கம் நுழைவர் என உறுதி கொண்டுள்ளனர்.

கோர்ஷும் 75 சீடர்களும் (21 குழந்தைகள் உட்பட) டெக்ஸாசில் கொல்லப்பட்டமை இன்றும் மயக்கமான சம்பவமாகவே உள்ளது. ஏனெனில் 1993 இவர்கள் கொல்லப்பட்ட டெக்ஸாசில் உலக முடிவு ஆரம்பிக்காது. மாறாக, 'ஹரம்ஜதூன்' எனும் போராட்டத்தின் பின்னர் 1995ல் குத்ஸிலேதான் உலக அழிவு உண்டாகும் என விசுவாசித்து வந்தனர்.

அமெரிக்காவின் உத்தியோகபூர்வ அறிக்கையின்படி கத்திக் குத்துகள், துப்பாக்கி வேட்டுகள், புகை அல்லது நெருப்புச் சுவாலை என்பவற்றின் பாதிப்பே மரணத்திற்கான காரணங்களாகும். இவர்களது களஞ்சியத்திலிருந்து பீரங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் உட்பட 11 தொன்னையும் விட அதிகமான ஆயுதங்கள் மீட்கப்பட்டன. அவர்கள் ஒளிந்திருந்த வீட்டினுள் நுழைய முற்பட்டபோது இடம்பெற்ற உக்கிரமான சண்டையில் நான்கு பொலிசாரும் உயிரிழக்க வேண்டி ஏற்பட்டது. பொலிசார் உட்செல்ல எத்தனித்த வேளை பதிவு செய்யப்பட்ட வீடியோ நாடாக்களில், வீட்டினுள் பெரும் தீச்சுவாலைகள் கொழுந்து விட்டெரிவதை காணக் கூடியதாக இருந்தது. துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள், குண்டு வெடிப்பு ஓசைகளையும் செவிமடுக்க முடியுமாக இருந்தது. ஆனால், இப்பரிதாபகர நிகழ்வின் மூலகர்த்தா யார் என இன்னும் அடையாளம் தெரியவில்லை.

உயிரோடுள்ள கோர்ஷுடைய சீடர்களது யூகம் என்னவெனில் கோர்ஷும் அவரது சகாக்களும் பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டிருந்த வேளை அவர்கள் மூலமே கொல்லப்பட்டிருக்க வேண்டுமென எதிர்பார்த்திருந்தனர். அவர்களில் பெரும்பான்மையினர் தற்கொலையில் ஈடுபட தயாராயிருந்தனர். பொலிஸாரிடம் சரணடைவதைவிட தற்கொலையே மேல் என முடிவெடுத்துமிருந்தனர்.

1995 ஏப்ரல் 19ம் நாள் கோர்ஷுக்கும் அவனது சீடர்களுக்கும் இடம்பெற்ற அனர்த்தத்தின் 2வது ஞாபகார்த்த தினமாகும். அவ்வேளையிலேயே அமெரிக்காவின் ஒக்லோஹோமோ நகரில் உள்ள FBI பாதுகாப்பு நிறுவனக் கட்டிடம் குண்டு வெடிப்புக்குள்ளாகியது. தெய்மூசி மாகிபி என்பவர் இன்னுமொரு நபருடன் சேர்த்து குற்றம் சுமத்தப்பட்டார். 1993ல் இக்கட்டிடத்திலிருந்தே கோர்ஷையும் அவரது சீடர்களையும் டெக்சாஸில் சுற்றி வளைக்க படையினருக்கு கட்டளையிடப்பட்டது. அதற்குப் பழிவாங்கு முகமாகவே தாங்கள் இருவரும் இக்குண்டு வெடிப்பை மேற்கொள்ளத் தூண்டப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட இருவரும் கூறினர்.

1959ல் பிறந்த கோர்ஷோ புத்தி பேதலித்தவர் என FBI கூறுகிறது. இதை மறுக்கும் அவரது சீடர்கள், கன்னிப் பெண்கள் மூலமாக 25 குழந்தைகளை பெற வேண்டுமென்று அவர் திட்டமிட்டிருந்தார். அதற்காக சிறு பெண்பிள்ளைகளுடன் உடலுறவு வைத்துக் கொள்ள அவர்களது தந்தைமாரிடமிருந்து அனுமதியும் பெற்றிருந்தார் எனவும் வாதம் புரிகின்றனர். 1984ல் தனது சீடர்களுள் ஒருவரான ராஷெல் ஜோன்ஸ் என்பவரின் 14 வயது மகளை திருமணம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

1995ல் உலகம் அழியும் என்ற அவரது வாதம் பொய்யாகிவிட்டாலும் கூட அவரது சில சீடர்கள் அவரது விசுவாசக் கொள்கையை நம்பியே இருக்கின்றனர். இயக்கமும் இரண்டு குழுக்களாக பிரிந்து விட்டது. முதலாவது குழு, கோர்ஷுக்கு எதிரான அணியினர். கோர்ஷ் தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொள்ளும் முன்னர் காணப்பட்ட கிளை டேவிட் குழு தாங்களே என இவர்கள் வாதிடுகின்றனர். இயக்கக் கட்டிடத்தை தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து ஒரு நூதனசாலையை நடாத்தி வருகின்றனர்.

இவர்கள் கோர்ஷுக்கு எதிராக மட்டுமல்ல அமெரிக்க அரசுக்கு எதிராகவும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

இரண்டாவது குழு: இக்குழு கோர்ஷின் சொத்துக்களில் ஈடுபாடு கொண்டுள்ளது. இன்ஜீலின் முன்னறிவிப்புக்கு ஏற்பவே டெக்சாஸில் நடந்தவை உள்ளன என்று திரும்பவும் நினைவுக்கு கொண்டுவர தொடர்ந்து எத்தனித்து வருகிறது. 1996 டிஸம்பர் 13ல் கோர்ஷ் மீண்டும் உயிர்பெற்று எழுவார்; 1993ல் கொலைக்காளான தமது சகாக்களுடன் நாங்கள் இணைந்து கொள்வோம் எனவும் இவர்கள் வாதிட்டனர். ஆனால் அதுவும் பொய்யாகி விட்டது. 1999 ஆகஸ்ட் 6ல் உலகம் முடிவு பெற்றுவிடும் டேனியலுடைய இன்ஜீல் இதற்கான தீர்க்கமான காலப்பகுதியை முன்னறிவிப்புச் செய்துள்ளது. 2300 தினங்களைக் கொண்ட அக்காலப் பகுதியின் ஆரம்பம் 1993 ஏப்ரல் 19 லேயே உதயமாகி விட்டது. இந்நாளில்தான் டெக்ஸாஸ் அவலம் அரங்கேறியது. அவர்களது இக்கற்பனையும் கைகூடாமல் போய்விட்டது. 1999 ஆகஸ்ட் கடந்து சென்று விட்டது. வித்தியாசமாக ஏதும் நடக்கவில்லை. தங்களது நம்பிக்கை மூடத்தனமானது என எப்போதுதான் இவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்?

**"தங்களது அத்துமீறிய மூட சிந்தனையில் அலைந்து திரிய அவர்களை நாம் விட்டுவிடுவோம்."**

**(ஸூரா அல்அன்ஆம் :110)**

## ஷார்ல்ஸ் மன்ஸன் (குடும்பம்)

**1934**ல் பிறந்த ஷார்ல்ஸ் மன்ஸன் பிறரில் ஆதிக்கம் செலுத்துவதில் அபூர்வ ஆளுமை கொண்டவர். 1960 களில் தீனது குழுவை ஸ்தாபித்தார். குற்றச் செயல்களில் ஈடுபாடு கொண்டிருந்த கும்பல்களிலிருந்தே இவ்வியக்கம் தோற்றம் பெற்றது. இயக்க உறுப்பினர்களிடையே பரஸ்பரம் உறவுகளை வலுப்படுத்த குடும்ப ரீதியான நெருங்கிய தொடர்புகள் காணப்படுவதனால் 'குடும்பம்' என ஊடகங்களினால் இவர்கள் விளம்பரப்படுத்தப்பட்டனர். கலிபோர்னியாவில் லோஸ் ஏன்ஜல்ஸிற்கு அருகாமையில் உள்ள ஸ்பான்தாஷ் நகரை தலைமையகமாக் கொண்டு இவ்வமைப்பு செயற்பட்டு வருகிறது. மன்ஸனை அவரது சீடர்கள் ஒருவேளையில் கடவுளாகவும், இன்னுமொரு வேளையில் ஷைத்தானாகவும் கருதுகின்றனர். இவர்களுடைய நம்பிக்கைகளுள், ஈஸா (அலை) மன்ஸனின் உடல் அமைப்பிலேயே குடிகொண்டுள்ளார் என்பதும், புதிய ஏற்பாட்டில் வந்துள்ளவை மன்ஸன் தொடர்பானவை என்பதும், எதிர்வரும் காலத்தில் வெள்ளையர்களுக்கும், கறுப்பர்களுக்குமிடையில் பெரும் அழிவைக் கொண்டுவரும் போர் இடம்பெறும் என்பதும், வெள்ளையர்களை ஒழித்துக் கட்டிய பின்னர் மீதமுள்ள அமெரிக்கர்களான 'ஸனூஜ்'கள் மீது இவர் ஆதிக்கம் செலுத்துவார் என்ற முன்னறிவிப்பும், பெரும் அந்தஸ்த்திலுள்ளவர்கள் படுகொலைக்குள்ளாவதே அந்திம நாட்களின் ஆரம்பம் முதலிய கருத்துக்களும் பிரதானமானவை. மன்ஸன் நேரடியாக கொலைக் குற்றத்தில் ஈடுபடாவிட்டாலும் அமெரிக்காவில் பிரபலமிக்க படுகொலை சம்வங்களை நிகழ்த்த தனது உறுப்பினர்களுக்கு கட்டளையிட்டுள்ளதாக நம்பப்படுகிறது. அந்த வகையில் 1969 ஜுலை 31ல் கொல்லப்பட்ட இசையமைப்பாளரும் போதைவஸ்து வியாபாரியுமான ஜாரி ஹன்மோன் என்பவரது படுகொலை மன்ஸனின் செயற்பாடுகளில் ஒன்றே!

**'கு**டும்பம்' நடைமுறைப்படுத்திய முதலாவது கூட்டுக்கொலை 'தீத்' எனப்படுகிறது. 'தீத்' என புனைபெயர் கொண்ட ஷாரொன் வுலன்ஸ்கி என்பவரது வீட்டில் இது இடம்பெற்றது. இங்கு 1969 ஆகஸ்ட் 9ல் 5 பேர் கத்தியால் குத்தியும், தூக்கில் தொங்கியும், துப்பாக்கியால் சுட்டுக் கொண்டும் தம்மை மாய்த்துக் கொண்டனர். 2 நாட்களின் பின்னர் இன்னுமொரு தம்பதியினர் கத்தியால் குத்தி கொலைசெய்யப்பட்டனர்.

**1969** நவம்பரில் ஸ்வான்ஸன் அட்கென்ஸ் என்ற பெண் விபச்சாரக் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டபோது 'தீத்' கொலைக் களத்தில் தான் பங்குகொண்டதாக ஒப்புக் கொண்டாள். ஷார்ல்ஸ் மன்ஸனுக்கும், இன்னும் மூவருக்கும் கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அம்மூவரில் ஸ்வான் அட்கென்சும் அடங்குவாள். விசாரணையின்போது மன்ஸனும் அவரது சீடர்களும் நீதிபதிக்கு முதுகைக் காட்டிக் கொண்டு நின்றனர். தலையை மொட்டையடித்திருந்த இவர்கள், நெற்றியில் ஹிட்லரின் நாஸி இயக்கத்தின் சின்னமாகிய சிலுவை இலச்சினையை வரைந்திருந்தனர். இவர்களுக்கு மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. 1970 இல் கலிபோர்னியா மாநிலம் தூக்குத் தண்டனையை ரத்துச் செய்ததனால் இவர்களது தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. 1975ல் மன்ஸனின் ஆதரவாளரான லேன்ட் புரோம் என்ற பெண்மணி மீதும் கொலை முயற்சி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அதே ஆண்டு செப்டம்பரில் அமெரிக்க அதிபர் ஜெரோல்ட் போர்ட்டை இவர் தீர்த்துக்கட்ட எத்தனித்தார் என்ற வகையில் ஆயுட்கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. மன்ஸன் தன்னை மீள்விசாரணை செய்யுமாறு திரும்பத் திரும்ப விடுத்த கோரிக்கைகளை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வரவே இப்பெண் இம்முயற்சியில் ஈடுபட்டார் எனத் தெரிய வருகிறது. தன்னை விடுவிக்கக் கோரி பத்துக்கு மேற்பட்ட தடவைகள் முறையிடு செய்த மன்ஸன் (64 வயது) தற்போதும் சிறைவாசத்தை அனுபவித்து வருகிறார்.

(இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் நிறைவுறும்)

இம்மதத் தீவிரவாதிகளின் (தற்) கொலைப் பித்தலாட்டங்களுள் ஒன்று கடந்த மாதம் (மார்ச்) உகண்டாவில் அரங்கேறியுள்ளது. பல்வேறு சம்ப வங்களில் சுமார் 700 அப்பாவி கிறிஸ்தவர்கள் 'தற்கொலை' செய்து கொண்டுள்ளனர். எண்ணிக்கை இதைவிட அதிமாக இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இது வழமையான 'கூட்டுத் தற்கொலை' என கூறப்பட்டாலும், 2000 மாவது ஆண்டில் உலகம் அழியும் என்ற 'தீர்க்க தரிசனத்தை' நம்பி தமது சொத்துக்களை தேவாலயங்களுக்கு எழுதி வைத்துவிட்ட மக்கள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கக் கூடும் எனவஞ்சி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்பதையும் முழுமையாக மறுப்பதற்கில்லை எனவும் செய்திகள் கூறுகின்றன.

# ஜம்இய்யா

## செய்தித் திரட்டு

### மேற்குப்பிராந்தியச் செய்திகள்

***அங்கத்தவர் கூட்டம்***

இம்மாதம் 12ம் திகதி புதன்கிழமை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 5.00 மணிவரை சிலாபம்-புத்தளம் வீதியில் அமைந்துள்ள அல்மத்ரஸதுல் இஸ்லாமிய்யா பாலர் பாடசாலையில் மேற்படி நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

***பெருநாள் கலை நிகழ்ச்சி***

வழமை போல் இம்முறையும் புத்தளம் ஜம்இய்யாவினால் நடாத்தப்பட்ட மேற்படி நிகழ்ச்சியில் சுமார் 300 பேர் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் நாடகம், விவாதம், கவிதை, பாடல்கள் என்பன அரங்கேற்றப்பட்டன.

பேருவளை ஜம்இய்யா கிளையினால் 19.03.2000 அன்று சீனன்கோட்டையில் நடாத்தப்பட்ட பெருநாள் சந்திப்பில் சுமார் 100 பேர் கலந்து கொண்டனர்

***ஊழியர் பயிற்சி முகாம்***

கடந்த மார்ச் 24, 25ம் திகதிகளில் புத்தளம் ஜம்இய்யா தனது ஊழியர் களுக்காக இந்நிகழ்ச்சியை நடாத்தியது. சுமார் 65 ஊழியர்கள் கலந்துகொண் டதோடு ஜமாஅத் சகோதரர்களும் சமூகம் தந்திருந்தனர். ஆற்றங்கரையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் ஏற்பாடுகள் யாவும் சிறப்பாய் அமைந்திருந்தன.

***கனமூலை ஜம்இய்யா***

மேற்படி ஊரில் இயங்கிவரும் ஜம்இய்யா வின் செயற்பாடுகளை மீளாய்வு செய்து இடைக்கால நிர்வாகக்குழுவை தெரிவு செய்யுமுகமாக கடந்த மார்ச் 19ம் திகதி ஊழியர்களுக்கான இரவு விருந்துபசார நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் ஊழியர்கள் முழுமையாக பங்கு கொண்டதோடு மத்தியசபை, மேற்குப் பிராந்திய ஷூறா உறுப்பினர் களும் கலந்து சிறப்பித்தனர்.

**அக்கரைப்பற்று ஜம்இய்யா**

அக்கரைப்பற்று ஜம்இய்யாக் கிளை தனது ஊழியர்களுக்கும் ஏனைய மாணவர்களுக்குமான "Certificate Course in Islamic and Computer Studies" என்ற பயிற்சிநெறியொன்றினை இன்ஷா அல்லாஹ் வெகுவிரைவில் ஆரம்பிக் கவிருக்கிறது. அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## நாஸிமிடமிருந்து...

அல்லாஹுத் தஆலா மனிதனை இப்பூமியில் தனது கலீபாவாகப் படைத்துள்ளான். அதாவது அல்லாஹ்விற்கு அடுத்தபடியாக இப்பூமியின் மீது ஆற்றலும், அதிகாரமும் உடைய ஒருவன் இருக்க முடியுமாக இருந்தால் அது மனிதன்தான். இவ்வுலகத்தை எவ்வாறு வழிநடாத்த வேண்டும், அதிலுள்ள வளங்கள் எந்த முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என தீர்மானிப்பவனும், உகில் அமைதியையும் சமநிலையையும், பேணிக் காப்பவனும் அல்லாஹ்வுக்கு அடுத்தபடியாக மனிதன்தான். இதனை ஒரு ஆற்றலாக மட்டுமல்லாது கடமையாகவும் மனிதன்மீது சுமத்தியுள்ளான்.

இதனை நபி (ஸல்) அவர்கள் தமது வாழ்நாளில் செய்தும் காட்டிச் சென்றுள்ளார்கள். அன்னார் மூலம் அரேபிய தீபகற்பம் முழுவதும் மனிதர்களுக்கு நிம்மதியும், பாதுகாப்பும், சுகவாழ்வும் கிடைத்தது. சட்டமும் நீதியும் முஸ்லிம்களாயினும் சரி, காபிர்களாயினும் சரி அனைவருக்கும் சமமாக அனுபவிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. மனிதர்கள் மட்டுமல்ல விலங்குகளும், தாவரங்களும், அநியாயமாக அழிக்கப் படுவதிலிருந்தும் வீண்விரயம் செய்யப்படுவதிலிருந்தும் பாதுகாப்புப் பெற்றன. அதனால்தான் ஏனைய சாம்ராஜ்யங்கள் கூட முஸ்லிம்களிடம் தமது ஆட்சியை கொடுத்து கிலாபத்தின் கீழ் வாழ ஆசை கொண்டன. மருத்துவம், பொருளாதாரம், அரசியல் போன்ற அனைத்துத் துறைகளுக்கும் முன்னோடிகளாக முஸ்லிம்களே ஏனையவர்களை வழி நடாத்தும் ஸ்தானத்தில் இருந்தார்கள். இதுதான் மனிதன் இவ்வுலகின் "கலீபா" எனும் பதத்தின் பொருளாகும்.

ஆனால் இன்றைய முஸ்லிம்கள் நிலையை நாம் சற்று சிந்தனை செய்து பார்க்க வேண்டும். உலகம் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஏராளம், தீர்வுகளையும் விளக்கங்களையும் வேண்டி நிற்கும் துறைகள் ஏராளம். ஒருபுறம் மனிதர்களுக்கிடையிலான பிணக்குகள், சண்டை சச்சரவுகள், வறுமை, நோய், பொருளாதாரச் சிக்கல்கள் என மனிதனுடன் நேரடியாகத் தொடர்புடைய பிரச்சினைகளுக்கு உலகம் தீர்வுகளைத் தேடிக்கொண்டு நிற்கிறது. மறுபுறம் தண்ணீர்ப் பிரச்சினை, காடழிப்பு, விலங்குகள் அழிதல், மண்வளங் குன்றுதல் போன்ற இயற்கையுடன் தொடர்புடைய பிரச்சினைகளால் உலகம் தடுமாறிக் கொண்டும் நிற்கிறது. இவைகளிலிருந்து மனித சமுதாயத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு "கலீபாக்களாகிய" முஸ்லிம்களுக்கே உரியதாகும். அவற்றிற்கான தூண்டுதல்களையும் வழி காட்டல்களையும் அல்குர்ஆன், அல்ஹதீஸ் மூலம் நாம் பெற்றுள்ளோம். இவற்றை உணரத் தவறியதன் விளைவு முஸ்லிம்கள் எல்லாத் துறைகளிலும் பின்நின்று ஏனையோர் செய்யும் வேலைகளை கைகட்டிப் பார்த்துக் கொண்டு நிற்கின்றார்கள். சிலவேளை அல்லாஹுத் தஆலா விரும்பாத தீர்வுகள் முன்வைக்கப்படும் போது கூட இது முறையல்ல; இதுதான் சரி என ஒழுங்கான தீர்வை முன்வைக்கக் கூடிய நிலையில் முஸ்லிம்கள் இல்லை. அவர்களின் குரலுக்கு எவ்வித மதிப்பும் இல்லை.

எமது நாட்டில் இன்று கொழுந்துவிட்டு எரியும் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைப்பதில் அல்லது இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வருவதற்கான முயற்சியில் முஸ்லிம்களின் பங்களிப்பு என்ன? அதற்கு தகுதியான எத்தனை பேர் எம்மத்தியில் இருக்கிறார்கள்? நாட்டில் காணப்படுகின்ற சூழல் மற்றும் சமூக விவகாரங்களில் எமது பங்களிப்பு என்ன? இவ்வாறான கேள்விகளுக்கு விடைகாணும் முன் விடயங்களை ஆராய்வதென்பதும், தீர்வுகாணுவதென்பதும் சாதாரண விடயங்கள் அல்ல. அவற்றிற்கென தகுதியும், அறிவும் பெற்றவர்களாக நாம் மாறவேண்டும். நவீன விஞ்ஞான தொழில்நுட்பம் சகல துறைகளையும் சிறுசிறு கூறுகளாகப் பிரித்து ஒவ்வொரு கூறுகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. உதாரணமாக ஆடை உற்பத்தி நிறுவனமொன்றை எடுத்துக் கொண்டால் ஆடைத் தயாரிப்பவனும் விற்பனை செய்பவனுமே எமது கண்களில் படுவார்கள். ஆனால் அவர்களிருவ ருக்கும் இடையில் பல துறைசார் நிபுணர்களின் உதவியுடனேயே அவ்வாடை உற்பத்தி நிறுவனம் முன்னேற்றப் பாதையில் ஏனைய நிறுவனங்களுடன் போட்டிபோட முடிகிறது. இதுபோல கல்வி, மருத்துவம், சமூகவியல் போன்ற எல்லாத் துறைகளும் தனித்தனி சிறு கூறுகளாகப் பிரிக்கப்பட்டு வளர்ச்சியடைந்த நிலையில் உள்ளன. இத்துறைகளைக் கற்பதன் மூலம் எம்மால் அவற்றில் பங்களிப்புச் செலுத்த முடியும். ஒருவர் ஒருசில துறைகளில் ஈடுபடுவதனாலும் நாம் பெரிய மாற்றங்களை சாதித்துவிட முடியாது. பலர் பல துறைகளில் தேர்ச்சி பெறுவதன் மூலமே ஒரு சிலரேனும் நாட்டின் வளர்ச்சியிலும் சூழல், சமூகப் பாதுகாப்புப் போன்ற துறைகளிலும் முன்னோடிகளாக மாற முடியும். அப்போதுதான் அல்லாஹ் கூறுகின்ற கலீபாக்காளாக நாம் மாறலாம்.

இன்று முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் இருக்கின்ற பொறுப்பும் இதுவே. ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் முஸ்லிம் இளைஞர்களை இவ்வாறான வழிகாட்டுதலுடனேயே கொண்டு செல்ல முயற்சி செய்கிறது. அது தனது பயிற்சிநெறிகளில், ஏனைய நிகழ்ச்சிகள் மூலமாக இளைஞர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், சவால்களுக்கு முடியுமானளவு தீர்வினையும் வழிகாட்டல்களையும் வழங்க எப்போதும் முயற்சி செய்கிறது. பொருளாதார உதவியினை செய்ய முடியாவிட்டாலும் ஏனைய வழிகாட் டல்கள் மூலம் பல மாணவர்கள், இளைஞர்கள் பல்துறைகளிலும் வளர்ச்சியுற்ற நிலையில் இருக்கிறார்கள்.

எனவே, அதன் ஓர் அங்கமாகவே நாட்டில் காணப்படும் கல்விநெறிகள் சம்பந்தமாக எமது இளைஞர்கள் அறிவுறுத்தப்படல் வேண்டும் எனக்கருதி சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட வர்த்தமானிப் பத்திரிகையின் விபரத்தை முதன்முதலாக "ஜம்இய்யா" பக்கத்தில் பிரசுரிக்கிறோம். இனி வரக்கூடிய காலங்களில் பொருத்தமான கற்கைநெறிகள் சம்பந்தமான தகவல்களை பிரசுரிக்க எம்மாலான முயற்சிகளை செய்வோம், இன்ஷா அல்லாஹ். உங்களுக்கோ அல்லது உங்களது நண்பர்களுக்கோ கிடைக்கின்ற இதுபோன்ற பயிற்சிநெறிகள் விபரங்களை ஜம்இய்யாவிற்கு அனுப்பி வைப்பதன் மூலம் எமது பணிக்கு நீங்களும் துணை செய்யலாம்.

## நீங்கள் உயர்தரம் விஞ்ஞானம் படித்தவரா?

பல்கலைக்கழகம் தெரிவாகாமல் ஏதேனும் தொழில் செய்வதற்காக எதிர்பார்த்திருக்கிறீர்களா? அவ்வாறாயின் சுகாதார சேவைத் திணைக்கள பதவிகளுக்கான பயிற்சியாளர்களை ஆட்சேர்த்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சை பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

| | பயிற்சிநெறி | பயிற்சிக் காலம் | தகைமை |
|---|---|---|---|
| 01. | மருந்தாளர் (Pharmacist) | 2 வருடங்கள் | A/L இரசாயனவியல் திறமைச் சித்தியுடன் ஏனைய பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 02. | மருத்துவ பரிசோதனைக்கூட தொழில்நுட்பவியலாளர் (Medical LaboratoryTechnolgist - MLT) | 2 வருடங்கள் | ” |
| 03. | மெய்யியல் சிகிச்சையாளர் (Physiotherapist) | 2 வருடங்கள் | A/L பௌதீகவியல் திறமைச் சித்தியுடன் ஏனைய இரண்டு சத்திகள். |
| 04. | X கதிர் தொழில் நுட்பவியலாளர் (Radiographer) | 2 வருடங்கள் | ” |
| 05. | தொழில் நோய் சிகிச்சையாளர் (Occupational Therapist) | 2 வருடங்கள் | ” |
| 06. | கண் தொழில்நுட்பவியலாளர் (Opthalmic Technological Assistant) | 2 வருடங்கள் | A/L பரீட்சையில் ஏதேனும் 1 திறமைச் சித்தியுடன் இன்னும் 2 சித்திகள். |
| 07. | பூச்சியியல் உதவியலாளர் (Entomological Assistant) | 2 வருடங்கள் | ” |
| 08. | பல் தொழில்நுட்பவியலாளர் (Dental Technician) | 2 வருடங்கள் | ” |
| 09. | பொதுசன சுகதாரப் பரிசோதகர் (Public Health Inspector) | 1 1/2 வருடங்கள் | ” |
| 10. | நுண்ணோக்காடியாளர் (Microscopist) | 15 மாதங்கள் | ” |
| 11. | மின்சார இருதயத்துடிப்புப் பதிவாளர் (Cardiographer) | 12 மாதங்கள் | ” |
| 12. | மின்சார மூளை இயக்கப்பதிவாளர் (Electro Encephalogical Recordist) | 09 மாதங்கள் | ” |
| 13. | மருந்து கொடுப்பவர் (Dispensor) | 12 மாதங்கள் | A/L பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். |
| 14. | பொதுசன சுகாதார கள உதவி யாளர் (Public Health Field Asst.) | 12 மாதங்கள் | ” |

மேற்படி அனைத்து பயிற்சிநெறிகளுக்கும் O/L பரீட்சை இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு கணிதம், விஞ்ஞானம், தமிழ் உட்பட 4 பாடங்களில் திறமை சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மேலும் ஒரே தடவையில் ஆங்கிலம் உட்பட 5 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இப்பயிற்சிநெறி சம்பந்தமான மேலதிக விவரங்களை 2000.03.16 அன்று வெளியான அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பெற்றுக் கொள்ளலாம். **(முடிவுத் திகதி 2000.05.05)**

## இஸ்லாமிய அறிவும் அது வேண்டும் பண்புகளும் (தொடர்)

அறிவை விட்டு அகலாத மற்றுமொரு பண்பாடு உண்டு. அறிவு கொடுக்கப் பட்டவர்கள் பண்பாடுகளிலிருந்து எப்போது தூரமாகி விடுகின்றனரோ அல்லது அறிவை ஊட்டுகின்றவர்கள் அறிவோடு பண்பாட்டையும் ஊட்டாமல் எப்போது விலகி விடுகின்றனரோ அப்போது இந்த அறிவுப் பணி பயனற்றதாகப் போய்விடும். இதற்கு ஓர் அழகான கருத்தை ரஸுல் (ஸல்) அவர்களின் பொன்மொழியில் காணலாம். ரஸுல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்

**"தன் பக்கம் உண்மை இருந்தும் வீணான விவாதத்தில் ஈடுபடா மல் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒருவருக்கு சுவர்க்கத்தின் ஓர் எல்லைப் பகுதியிலே ஒரு வீட்டைப் பெற்றுத்தரும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன்." (அபூதாவுத்)**

தன்பக்கம் உண்மை இருக்கின்றது என்பதன் பொருள் தன் பக்கம் தெளிவு இருக்கிறது; விளக்கமிருக்கிறது; உண்மையைப் பற்றிய அறிவு இருக்கிறது என்பதாகும். இதுதான் சத்தியம், இதுதான் உண்மையானது என்ற அந்த விளக்கமும் தெளிவும் ஒரு மனிதனிடத்தில் இருக்கும் போது கூட அவன் வீணான ஒரு விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாது. அப்படியென்றால் ஒரு மனிதன் தன்னிடம் இருக்கின்ற அறிவை வைத்து இன்ன பண்பாட்டை மீறி நடக்கின்ற நிலைக்கு போகாமல் இருப்பதாக எனக்கு உத்தரவாதமளிப்பானானால் அவனுக்கு சுவர்க்கத்தில் ஒரு வீட்டைப் பெற்றுத் தரும் உத்தரவாதத்தை நான் அளிக்கிறேன் என ரஸுல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

உண்மையில் அறிவு பண்பாட்டோடு இணைந்ததாக இருக்க வேண்டும். இது இஸ்லாத்திலுள்ள சிறப்பம்சமாகும். இஸ்லாம் கூறும் அறிவு வெறும் அறிவல்ல. இன்று நாம் பார்க்கின்றோம்: என்னிடத்தில் அறிவிருக்கின்றதென்றால் அந்த அறிவின் மூலம் நான் என்ன செய்ய விரும்புகிறேன் தெரியுமா? அறிவில்லாத ஒரு மனிதனை எனக்கு முன்னால் தலைகுனிய வைக்கவே நான் விரும்புகிறேன். விவாதித்து அவனுடைய கருத்துக்களை பிழை என்றாக்கி அந்த மனிதன் எதனையும் பேச முடியாமல் வாயடைத்துப் போய் எனக்கு முன்னால் தலைகுனிகின்ற நிலையை ஏற்படுத்தத்தான் நான் எனது அறிவைப் பயன்படுத்துகிறேன். அந்த அறிவு ஒரு பண்பாட்டை உருவாக்கப் பயன்படவுமில்லை; அது இருக்கின்ற மனிதனிடத்திலே பண்பாட்டை வெளிக் கொணரவுமில்லை. அது இஸ்லாமிய பண்பாடல்ல. ஆனால் இன்று அறிவு அதற்காகத்தான் பயன்படுத்தப்படுகிறது. பண்பாட்டிலிருந்து வெகு தூரம் எங்களை அழைத்துச் செல்கின்ற ஒரு நிலையை இன்று அறிவால் மனிதர்கள் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். நான் பத்து குர்ஆன் வசனங்களைப் படித்திருக்கிறேன்; எனக்கு பத்து நபிமொழிகள் தெரியும் என்றால், நான் ஒரு மனிதரோடு விவாதிக்கத் தயாராகி விடுவேன். ஒருவரை சரிபார்க்கக் கற்றுக் கொள்வேன்; இன்னுமொருவரைப் பிழைகாண முயற்சிப்பேன். ஒரு மார்க்கத் தீர்ப்பை வழங்கும் துணிவு எனக்கு வந்துவிடும். இவைகளெல்லாம் பண்பாடுகளல்ல. இந்த நிலையில் ஒருவர் குர்ஆனையும், ஹதீஸையும்தான் பேசுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் முழுக்க முழுக்க தன்னுடைய கருத்தை நிறுவ குர்ஆனையும், ஹதீஸையும் சம்பந்தப்படுத்திக் கொள்கிறார் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் அவர் செய்கின்ற அந்தப் பணி இஸ்லாமியப் பணியல்ல; அவர் போதிக்கின்ற அந்த அறிவுப் பணி இஸ்லாமிய அறிவுப்பணியல்ல; ஏனென்றால் இஸ்லாம் பண்பாடுகளை வளர்ப்பதற்காக இந்த உலகத்திற்கு வந்த மார்க்கமாகும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

**"(இந்த உலகத்தில்) உன்னதமான பண்புகளை பூரணப்படுத்துவதற்காகவே நான் அனுப்பப்பட்டேன்."**

ஆனால் அல்குர்ஆன், அல்லாஹுத்தஆலா தன்னுடைய தூதரை சத்திய தீனையும், நேர்வழியையும் கொடுத்து அனுப்புகின்ற நோக்கம் இந்த உலகத்தில் அல்லாஹ்வுடைய தீனை மற்ற எல்லா தீனையும் மிஞ்சிய மார்க்கமாகவும், மற்ற எல்லா மார்க்கங்களையும் ஆட்சி செலுத்துகின்ற ஒரு மார்க்கமாகவும் மாற்ற வேண்டும். என்பதற்காகத்தான் தன்னுடைய தூதரை அனுப்பியதாக கூறுகிறது.

**"இணைவைத்து வணங்குவோர் வெறுத்த போதிலும் அனைத்து மார்க்கங்களையும் மிகைக்க வேண்டுமென்பதற்காக அவனே சத்திய மார்க்கத்தையும், நேர்வழியையும் கொண்டு அவனது தூதரை அனுப்பி வைத்தான்."**

உண்மையில் அல்லாஹ் சொல்வதற்கும், அல்லாஹ்வின் தூதர் சொல்வதற்கும் முரன்பாடுகள் இல்லை. அல்லாஹ் நோக்கத்தைச் சொல்லியிருக்கிறான்; அவனுடைய தூதர் அதற்கான வழிமுறையைச் சொல்லியிருக்கிறார். ஒரு பண்பாட்டுப் புரட்சியே இஸ்லாமியப் புரட்சி; ஆயுதத்தால் மேற்கொள்கின்ற புரட்சியல்ல இஸ்லாமியப் புரட்சி. ஆயுதத்தைச் சுமந்தவர்களிடமும் இஸ்லாம் பண்பாட்டை வளர்த்ததனால் தான் இஸ்லாம் வளர்ந்தது.

இன்று இஸ்லாமிய அறிவு பன்பாடுகளற்ற ஒரு வேகத்தை எடுத்திருப்பதன் காரணமாக அந்த அறிவு பயனற்று போயிருப்பதைக் காணுகிறோம். அல்லாஹ்வின் தூதரின் காலத்தில் பேசப்பட்ட மார்க்கத்தை விட இன்று அதிகமாக மார்க்கம் பேசப்படுகிறது; அவரது காலத்தில் ஓதப் பட்ட குர்ஆனை விட இன்று அதிகமாக குர்ஆன் ஓதப்படுகிறது; அன்று எழுதப் பட்ட மார்க்க விளக்கங்களைவிட இன்று அதிகமாக எழுதப்படுகிறது. அப்படி என்றால் எது குறைச்சல்? அந்த அறிவினூடாக சுமந்து வர வேண்டிய அந்தப் பண்பாடு மக்களுக்கு இன்று கிடைக்கவில்லை; அல்லது ஊட்டப்படவில்லை என்பதுதான் குறைச்சல். அல்லது அந்த விடயத்தில் கவனம் செலுத்தப்படுவது குறைவாக உள்ளது. இத்தகைய அறிவு அல்லாஹ்வின் திருமுகத்தை நாடுகின்ற அறிவாக இருக்கமாட்டாது. ரஸுல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்

**"அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காக பெறப்பட வேண்டிய அறிவை இந்த உலக நோக்கத்திற்காக யாராவது கற்றுக் கொண்டால் அவனுக்கு சுவனத்தின் வாசம் கிடைக்க மாட்டாது." (அபூதாவுத்)**

இந்த அறிவு எங்களுக்கு மத்தியில் மற்றுமொரு பண்பையும் ஏற்படுத்த வேண்டும். இந்த அறிவு பிறருக்கு வழி காட்ட வேண்டும். ரஸுல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்

**"எங்களிடமிருந்து ஓர் அறிவைக் கேட்டுப் பெற்றுக் கொண்டு, தான் பெற்றுக் கொண்டது போல் அதனை எத்திவைக்கும் மனிதனை அல்லாஹ் பிரகாசமாக்கி வைப்பானாக" (திர்மிதி)**

அதாவது தன்னுடைய விருப்பு வெறுப்புக்களையும் ஆசாபாசங்களையும் கலந்து அதனை மற்றவர்களுக்கு கொடுத்து விடாமல் எங்களிடமிருந்து கேட்டுப் பெற்றுக் கொண்டது போலவே மற்றவர்களுக்கு ஒப்படைப்பவரை அல்லாஹ் பிரகாசமாக்கி வைப்பானாக என்று ரஸுல் (ஸல்) அவர்கள் பிராத்தித்தார்கள்.

ஒரு அறிவைப் பெற்றுக் கொள்கின்ற மனிதன் மிகவும் தூய்மையாக மற்ற மனிதர்களுக்கு எத்திவைக்கின்ற பணியை செய்கின்ற மனிதனாக இருக்க வேண்டும். அந்த அறிவு தனக்குள் இருந்து முடங்கிப் போய் விடாமல் தூய்மையாக எங்களிடமிருந்து எப்படி பெற்றாரோ அது போலவே எத்திவைக்க வேண்டும். அந்த புனிதமான

(48ம் பக்கம் பார்க்க)

# க:பாவைக் கண்டு பரவசமடைந்தார்

K.J. மஸ்தான் அலி பாகவி, உமரி நன்றி : சமரசம்

ரஷ்யாவின் கம்யூனிஸவாதிகளின் சர்வாதிகார ஆட்சி சுமார் 75 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வருகிறது. தங்களது நாத்திகச் சித்தாந்தத்தை நிலைநாட்டுவதற்காக அவர்கள் செய்த கொடுமைகள் அடக்குமுறைகள்தான் எத்தனை! எத்தனை!! ஆனால், அத்தனை அக்கிரமங்களும் வெளியுலகிற்குத் தெரியாதவாறு இரும்புத்திரை போட்டு மறைத்துக் கொண்டிருந்தனர். ஆப்கானில் சோவியத் ரஷ்யா சந்தித்த மிகக் கேவலமான தோல்விக்குப் பிறகு அந்நாடு சிதறுண்டு போனது. அதன் இடிபாடுகளுக்கு மத்தியில் பல நாடுகள் சுதந்திரம் பெற்றன. அவற்றுள் பல இஸ்லாமியக் குடியரசாக மலர்ந்தன. கொடுமைகள் பற்றிய செய்திகள் பரவலாக உலக மக்களுக்குத் தெரியவந்து கொண்டிருக்கின்றன. சோவியத் யூனியனுடன் இணைந்திருந்த காலம் வரையில் அங்கு வாழ்ந்த முஸ்லிம்களுக்குச் சுதந்திரமாக ஹஜ் கடமையை நிறைவேற்ற அனுமதி அளிக்கப்படவில்லை. இப்பொழுது ரஷியாவை விட்டும் தனியாகப் பிரிந்த அந்த நாடுகளில் இருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக ஹஜ்ஜுக்காக வருகிறார்கள்! புனித கஅபா ஆலயத்தைப் பார்த்து பரவசம் அடைகிறார்கள்.

இதோ உஸ்பெகிஸ்தானில் இருந்து ஹஜ்ஜுக்கு வந்த ஒரு முஸ்லிம் சகோதரர் கம்யூனிஸ சர்வாதிகாரிகளின் கொடுமை பற்றி எடுத்துரைக்கிறார்.

உஸ்பெக் மொழி அறிந்த ஒரு கல்வியாளர் உஸ்பெகிஸ்தானைச் சேர்ந்த அந்த சகோதரரை கஅபா ஆலயத்தில் சந்தித்து உரையாடிய நிகழ்ச்சியை இவ்வாறு விவரிக்கிறார்:

''நான், புனிதமிகு ஹரம் பள்ளிவாசலின் முன் வராந்தாவில் நடந்து சென்று கொண்டிருந்தேன். கஅபாவை தவாப் -வலம்- வர வேண்டும் என்பது எனது நோக்கம். அப்போது பின்னாலிருந்து ஒருவர் 'ஓ ஹாஜியே' என்று அழைப்பதைக் கேட்டேன்.

> **கஅபாவைப் பார்த்தவுடன் அவருடைய கண்களில் இருந்து கண்ணீர் அருவியாய்க் கொட்டியது. ''யா! அல்லாஹ்! இதுதான் உனது ஆலயமா?'' என்று சொல்லிக் கொண்டு பக்திப்பரவசமானார்.**

திரும்பிப் பார்த்தேன். என்னைப் போல் இஹ்ராம் உடை தரித்திருந்த ஹாஜி ஒருவர் மிகவும் களைப்புடன் காணப்பட்டார். அவருடைய தோற்றமும் முக அறிகுறிகளும் அவர் ரஷியக் குடியரசு நாடுகளைச் சேர்ந்தவர் என்பதை உணர்த்தின!

அவர் உஸ்பெக் மொழியில் இரண்டு கைகளையும் அசைத்தவாறு சைக்கினை செய்து கொண்டு கேட்டார். ''எத்தனை தடவை இவ்வாறு தவாப் செய்வது என்மீது கடமை?''

''ஏழு தடவை'' உஸ்பெக் மொழியிலேயே அவருக்கு நான் பதில் சொன்னேன். நான் அவரது மொழி பேசியதைக் கண்டதும் அவருக்கு அளவிலா ஆனந்தம்! தாமதிக்காமல் ஆச்சரியம் மேலிடக் கேட்டார். ''என்ன? ஏழு தடவையா? இவ்வாறு ஏழு தடவைகள் தவாப் செய்ய உங்களால் இயலுமா? -ஹரம் பள்ளிவாசலின் வெளிப்பகுதி சுற்றுக் கட்டிடத்தைச் சுட்டிக் காட்டியவாறு- இந்த ஆலயத்தை இவ்வாறு ஒரே தடவை சுற்றி வருவதற்குள் நான் அதிகமாகக் களைத்துப் போய் விட்டேனே!'' என்று ஆதங்கப்பட்டார்! அவரது ஆச்சரியத்துக்குரிய காரணத்தையும் ஏன் இப்படிக் களைத்துப் போனார் என்பதையும் நான் புரிந்து கொண்டேன்.

பாவம்! அந்த ஹாஜி! ஹரம் பள்ளிவாசலின் வெளிப்பகுதி கட்டிடம் முழுவதும் சேர்ந்து தான் கஅபா ஆலயம் என்று தவறாகப் புரிந்து கொண்டு மிகப்பெரிய சுற்றளவில் தவாப் செய்திருக்கிறார். இப்பொழுது தான் முதல் தடவையாக கஅபாவுக்கு அவர் வந்திருக்கிறார் போலும்! தொடர்ந்து நான் சொல்வதைக் கேட்காமல் தவாபின் மீதிச் சுற்றுகளை நிறைவேற்றுவதற்காக விரைந்தார். இவ்வாறு கூறிக்கொண்டு: ''சரி! அல்லாஹ்வைக் கொண்டு நான் உதவி தேடுகிறேன். தவாபை முழுமைப்படுத்துவதற்கு அவன் தான் உதவி செய்ய வேண்டும்.''

''நில்லுங்கள்! என்னால் முடிந்த உதவியை நான் உங்களுக்குச் செய்கிறேன்.'' என்று நான் சொன்னவுடன் நின்றார்.

முஸ்லிம்கள் வாழும் பிற நாடுகளில் என்ன நடைபெறுகிறது என்பதை அறிந்து கொள்வதற்கான நல்ல வாய்ப்பாக அவரது சந்திப்பைக் கருதினேன். அவரும் என்னுடன் வர புனித ஹரம் பள்ளிவாசலின் உள் இருவரும் சென்றோம்!

உள்ளே சென்று கஅபா ஆலயத்தை சுட்டிக்காட்டி ''இதுதான் இறையில்லம்! இங்குதான் தவாப் செய்ய வேண்டும்'' என்று சொன்னேன்.

கஅபாவைப் பார்த்தவுடன் அவருடைய கண்களில் இருந்து கண்ணீர் அருவியாய்க் கொட்டியது. ''யா! அல்லாஹ்! இதுதான் உனது ஆலயமா?'' என்று சொல்லிக் கொண்டு பக்திப்பரவசமானார். ''கஅபாவின் மகத்துவம் பற்றி எவ்வளவோ கேள்விப் பட்டிருக்கிறேன். அதை நேரில் காணும் பாக்கியம் இப்பொழுதுதான் கிடைத்துள்ளது.'' இவ்வாறு சொல்லிய வண்ணம் கஅபாவை நோக்கி விரைவாக நடந்தார். நானும் அவருடன் விரைந்தேன். நான் சொன்னேன்: ''உங்களுக்கு இறைவன் புரிந்த பெரும் அருட்பாக்கியமாகும் இது. அவனுக்கு நன்றி செலுத்துங்கள். அவன்தான் இந்த ஆலயத்துக்கு வரும் பாக்கியத்தை உங்களுக்கு இலகுவாக்கிக் கொடுத்தான்! உலகில் எத்தனையோ மக்களுக்கு அந்தப் பாக்கியம் கொடுத்து வைக்கப்படவில்லையே!''

அவர் சொன்னார்: ''கஅபாவைக் காணும் பாக்கியம் கிடைக்க வேண்டும் என எத்தனையோ தடவை எனது தந்தை பிரார்த்தனை செய்ததை நான் கேட்டிருக்கிறேன். இங்கு வரவேண்டும் என எவ்வளவோ ஆவல் கொண்டிருந்தார் அவர்! ஆனால் கம்யூனிஸ ஆட்சியாளர்கள் ஹஜ் செய்ய அவரை அனுமதிக்கவில்லை. என் தந்தை இறந்து விட்டார். துயரமும் கவலையும் நிறைந்த கனத்த இதயத்துடன்! கம்யூனிஸ ஆட்சியாளர்களிடமிருந்து பல கொடுமைகளை -அநீதிகளை- நாங்கள் சந்தித்துள்ளோம். உலகில் எந்த மக்களுக்கும் இத்தகைய கொடுமைகள் நேர்ந்திருக்காது! வாருங்கள்! முதலில் தவாப் செய்வோம். பிறகு எங்கள் 'கதையை' விவரமாகக் கூறுகிறேன்.

**த**வாப் செய்து முடிந்ததும் அல்லாஹ்வின் ஆலயத்தின் முன்னால் அந்த ரஷிய முஸ்லிம் பணிவடக்கத்துடன் நின்று பிரார்த்தனை செய்த ஆச்சரியமான காட்சியைக் கண்டேன். அவருக்காக என் மனம் இளகியது. கண்கள் கண்ணீர் வடித்தன. பிறகு நாங்கள் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து கொண்டோம். அப்பொழுது உஸ்பெகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த அந்த முஸ்லிம் சகோதரர் சொன்னார்: ''எங்கள் வாழ்க்கையில் இஸ்லாத்துடன் தொடர்புடையதாக உள்ள எந்த ஒன்றையும் கம்யூனிஸ ஆட்சியாளர்கள் எங்களுக்கு விட்டு வைக்கவில்லை. இஸ்லாத்தின் அடையாளமாக உள்ள அனைத்தையும் அழித்து விடவே முயற்சி செய்தனர்!

**எ**ங்கள் பெற்றோர்கள் எங்களுக்கு அழகிய பெயர்களை சூட்டினார்கள். ஆனால் அந்தக் கொடுமைக்கார ஆட்சியாளர்கள் எங்கள் பெயர்களையும் உருமாற்றி விட்டார்கள்!
இதோ! பாருங்கள்! எனது பெயர் அப்துல் ஹகீம். என் தாய் தந்தையர் சூட்டிய அழகிய பெயர் இது! ஆனால் கம்யூனிஸ அரசாங்கம் எனது பெயரை 'ஹகீமோஹ்' என மாற்றியது! பள்ளிக் கூடத்திலும் இதர அரச அலுவலகங்களிலும் எனது பெயரை இப்படித்தான் பதிவு செய்துள்ளனர். வீட்டில் மட்டும்தான் அப்துல் ஹகீம் என அழைக்க அனுமதி! வெறும் பெயர்கள்தாம்; இவற்றில் என்ன ஆபத்தைக் கண்டார்களோ தெரியவில்லை!

**எ**ங்கள் ஆசிரியர்களை என்ன என்ன செய்தார்கள் தெரியுமா? வேத வசனங்களையும் நபிமொழிகளையும் எங்களுக்குக் கற்றுத் தந்ததற்காக எங்கள் குருமார்களை அந்த ஆட்சியாளர்கள் கொடுமைப்படுத்தினார்கள்.

**சி**ல விவரங்களைச் சொல்கிறேன் கேளுங்கள்! கம்யூனிஸ ஆட்சியாளர்கள் எங்கள் ஆலிம்களைக் கண்காணிப்பார்கள்: அவர்களைப் பின்தொடர்ந்து செல்வார்கள். குர்ஆன், ஹதீஸ் போதனை நடைபெறாமல் தடை செய்வதே அவர்களின் நோக்கம்! ஆனால் எங்கள் ஆசிரியர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா?
வீட்டின் உட்புறத்தில் ஏணி வைத்து மாடிக்கு ஏறிச் செல்வார்கள். மாணவர்களும் அவ்வாறு ஏறிச் செல்வார்கள். பிறகு மேல்புறமாக ஏணியை மேலே இழுத்து ஒளித்து வைத்து விடுவார்கள். பிறகு மாணவர்களுக்கு சன்னமான குரலில் பாடம் நடத்துவார்கள்; வெளியில் யாருக்கும் தெரிந்து விடக் கூடாதே என்று!

**தொ**ழிற்சாலைகளில் பணியாற்றும் இளைஞர்கள் இறைமார்க்கத்தின் வழிகாட்டல் குறித்து விவாதிக்க வேண்டுமானால் அறிவு ஞானத்தை வளர்த்துக் கொள்ள வேண்டுமானால்- உணவு இடைவேளையில் நால்வர் ஐவராகக் குழுமி உட்கார்ந்து கொள்வார்கள். ஒவ்வொருவராக முறை வைத்து தனது கருத்தை எடுத்து வைப்பார். ஏதோ தேவையில்லாமல் பேசுவது போன்று காட்டிக் கொள்வார்கள்! மற்றவர்கள் அதைக் கண்டுகொள்ளாது போன்று இருப்பார்கள். ஆனால் கவனமாகக் கேட்பார்கள்! இவ்வாறு கம்யூனிஸ ஆட்சியாளர்களுக்குத தெரியாமல் இஸ்லாமியக் கருத்துக்களை அந்த இளைஞர்கள் பரிமாறிக் கொள்வார்கள்!

**இ**ஸ்லாத்தின் அடிப்படைக் கடமையாகிய தொழுகையை நிறைவேற்றுவதும் அவ்வாறுதான்! உணவு இடைவேளையில் ஒவ்வொருவராகத் தனியே தூரமாகச் சென்று அவசர அவசரமாகத் தொழுது முடிப்பார். அவர் திரும்பி வந்ததும் மற்றொருவர் அவ்வாறு சென்று தொழுகையை நிறைவேற்றுவார்! ஜமாஅத் - கூட்டுத் தொழுகை என்றால் என்ன என்றே பெரும்பாலும் எங்களுக்குத் தெரியாது!

**எ**ங்கள் வழிகாட்டிகள் - ஆலிம்களுக்கு நேர்ந்த கொடுமை என்னவெனில் ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுக்கு செலுத்த வேண்டிய முக்கியமான கடமையை எங்கள் ஆலிம்களுக்கு செலுத்த விடாமல் நாங்கள் தடுக்கப்பட்டோம். ஆம்! எங்கள் குருமார்களாகிய ஆலிம்கள் இறந்து விட்டால் அவர்களின் உடலை முறையாகக் குளிப்பாட்டவோ கபன் - துணி பொதிந்து பிரேதத் தொழுகை நடத்தி அடக்கம் செய்யவோ அந்தக் கொடுமைக்கார ஆட்சியாளர்கள் எங்களை அனுமதிக்கவில்லை. எங்கள் ஆலிம்களின் ஜனாஸா அடக்க நிகழ்ச்சியில் நாங்கள் கலந்து கொள்வதில்லை! கம்யூனிஸ ஆட்சியாளர்கள் வந்து - அவர்களின் விருப்பப்படி அந்த ஜனாஸாவை அடக்கம் செய்வார்கள்!'' இவ்வாறு அந்த உஸ்பெகிஸ்தான் முஸ்லிம் கூறினார்!

**உ**லகில் வேறொரு மதம் இத்தகைய கட்டாயத்திற்கும் நெருக்கடிக்கும் உள்ளாகியிருந்தால் எப்போதோ அடிச்சுவடு இன்றி அழிந்து போயிருக்கும்! ஆனால் இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் கம்யூனிஸ ஆட்சியாளர்களின் அத்தனை கொடுமைகளுக்குப் பிறகும் அந்த மக்களின் உள்ளங்களை விட்டும் அது மறைந்திடவில்லை! ஏனெனில் இஸ்லாமிய சன்மார்க்கம் இறைவன் அருளிய மார்க்கம்! அதை எந்தக் கொம்பனாலும் அழித்திட முடியாது!

*“இவர்கள் அல்லாஹ்வின் ஒளியைத் தம் வாய்களால் ஊதி அணைத்திடப் பார்க்கிறார்கள். ஆனால் அல்லாஹ்வின் முடிவு என்னவெனில் தனது ஒளியை முழுமையாகப் பரப்பியே தீருவது என்பதாகும். இறை நிராகரிப்பாளர்களுக்கு அது எவ்வளவு வெறுப்பாக இருந்தாலும் சரியே!”*
(அல்குர்ஆன் 61:8)

கொண்டிருந்த மூஸா (அலை) அவர்களை அழித்துவிட முயன்றபோது அல்லாஹ் அவர்களைப் பாதுகாத்து உதவியுடன் வீறாப்பும், இறுமாப்பும் கொண்ட அசத்தியத்திற்கு துணை நின்ற பிர்அவ்னையும் அவனது கூட்டத்தினரையும் இம்மாதத்திலேதான் அழித்தான் என்பதும், சத்தியத்திற்குத் துணைநிற்பவர்களுக்கு அல்லாஹ்வின் உதவி உண்டு என்பதும் தெளிவாகின்றது.

இம்முஹர்ரம் மாதத்திலேதான் படைப்பலமோ, அதிகாரமோ, பொருட்பலமோ இன்றி கொடுங்கோலாட்சிக்கு எதிராக கொதித்தெழுந்து பெரும்படைக்கெதிராக போராடிய இமாம் ஹுஸைன் (ரழி) அவர்கள் உயிர் நீத்தார்கள். இதுவும், ஒரு முஸ்லிம் ஒருபோதும் அசத்தியத்திற்கும், அநீதிக்கும் துணைபோகக் கூடாது என்பதை நிலைப்படுத்தி நிற்கின்றது. மௌலானா முஹம்மதலி ஜவ்ஹர் (ரஹ்) அவர்கள் குறிப்பிடும்போது, *'ஹுஸைனின் படுகொலை உண்மையில் யஸீதின் மரணமேயாகும்; ஒவ்வொரு கர்பலாவுக்கும் பின்னர் இஸ்லாம் புத்துயிர் பெற்று எழுகிறது'* எனக் கூறுகிறார்.

எனவே அசத்தியத்தை எதிர்த்து துணிகரமாகப் போராடிய பல நிகழ்வுகளை இஸ்லாமியப் புத்தாண்டு எமக்கு உணர்த்துகின்றது. இஸ்லாம் கூறும் நற்காரியங்களைச் செய்வதும், அது தடைசெய்யும் காரியங்களிலிருந்து ஒதுங்கிவிடுவதும் சத்தியத்தை நிலைநிறுத்தி அசத்தியத்தை அழித்துவிடுவதற்கு அயராது பாடுபடுவதும் ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும். சத்தியத்திற்கும் அசத்தியத்திற்குமிடையியலான போராட்டத்தில் ஒரு முஸ்லிம் எப்போதும் சத்தியத்தையே ஆதரிக்க வேண்டும்; உண்மை, நீதி, நேர்மை என்பவற்றைப் பாதுகாக்க வேண்டும்; அதற்காக தன்னாலான அனைத்து முயற்சியிலும் ஈடுபட வேண்டும்; அவற்றை மேற்கொள்வது சிரமமான காரியமாக, தனக்கு நஷ்டத்தை உண்டு பண்ணும் காரியமாக இருப்பினும் சத்தியத்தை வாழவைக்க அவன் முயற்சி செய்ய வேண்டும் என்பதும் இப்புத்தாண்டு எமக்கு உணர்த்தி நிற்கும் பாடங்களாகும். மௌலானா ஜவ்ஹர் (ரஹ்) அவர்கள் இமாம் ஹுஸைன் (ரழி) அவர்களின் தியாக நிகழ்ச்சியைக் குறிப்பிடும்போது, *''இமாம் ஹுஸைன் (ரழி) அவர்களின் ஷஹாதத் நிகழ்ச்சியாகிறது பின்வரும் சுதந்திர வாழ்வின் கொள்கையை பிரகடனஞ் செய்து கொண்டேயிருக்கும்: 'உனது சிரசு துண்டிக்கப்பட்டு ஈட்டி முனையில் ஏறிடினும் நீ துன்மார்க்கத்திற்கு ஒருக்காலும் தாழ்பணியாதே''*

எனவே ஒவ்வொரு புத்தாண்டு பிறக்கும்போதும் மேற்குறிப்பிடப்பட்ட படிப்பினைகளை எம் வாழ்வில் செயற்படுத்த முயல வேண்டும்; அதுவே சீரிய வழியாக அமையும்.

## குர்ஆன் மத்ரஸாப் பாடத்திட்டம் தொடர்பான ஆய்வு முயற்சி

ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனம் (IRD) இலங்கையில் குர்ஆன் மத்ரஸா பாடத்திட்டத்தை புனரமைப்பது தொடர்பான ஒரு ஆய்வினை மேற்கொள்ள வுள்ளது. நாட்டில் சுமார் நூறு வருடங்களுக்கு மேலாக ''த.'.லீமுல் குர்ஆன்'' எனும் அல்குர்ஆனை ஓதுவதற்கான வழிகாட்டி நூல் பிரபல்யமாக உள்ளதோடு, பல பிரதேசங்களில் ஒரு சில சங்கங்களும், தனிமனிதர்களும் அல்குர்ஆன் ஓதுவதற்கான செயற்திட்டங்களை வகுத்து அமுல்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. எனினும், கல்வி, கல்வி உளவியல், குழந்தை உளவியல் ஆகிய துறைகளில் துரித அபிவிருத் திகள் ஏற்பட்டு கற்பித்தல் முறைகளில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்து வரும் இக்கால கட்டத்தில் குர்ஆன் மத்ரஸா பாடத்திட்டத்தில் பல மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. இத்துறையில் ஏற்கனவே சில நிறுவனங்கள் கவனஞ் செலுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. என்றாலும் குர்ஆன் ஓதக்கற்கும் துறையானது குறிப்பிடத்தக்க அளவு நவீன மாற்றங்களைக் காணவில்லை எனலாம்.

குர்ஆன் மத்ரஸாக்களின் பாடத்திட்டம் நவீன உளவியல் ரீதியான கற்கை முறைகளை அடிப்படையாகக் கொண்டு அமையாததால் ஒரு குறுகிய காலத்தில் இலகுவாகக் கற்க முடியுமான அல்குர்ஆனை, கற்பதற்கு நீண்ட காலம் எடுக்கிறது. அவ்வாறே, பொதுக் கல்வியில் அதிக அழுத்தம் கொடுக்கப்படுவதாலும், அதில் சிறந்த கற்பித்தல் முறைகள் கையாளப்படுவதாலும் மாணவர் மத்தியிலும் பெற்றோரி டமும் இவற்றில் ஆர்வம் அதிகரித்தும், அல்குர்ஆன் ஓதுவதற்காக மத்ரஸாவுக்குச் செல்வதில் ஆர்வம் குறைந்தும் வருகிறது. அத்தோடு, கற்பித்தல் நுணுக்கங்கள், குழந்தை உளவியல் ஆகிய துறைகளில் அநேகமான அல்குர்ஆன் மத்ரஸா முஅல்லிம் களுக்கு போதிய பயிற்சிகள் இல்லாததன் காரணமாக அவர்களது கற்பித்தல் முறையானது மாணவர்களிடம் போதியளவு தாக்கத்தினை ஏற்படுத்துவதில்லை என்பதும் கண்டறிந்த உண்மை. மேற்படி நிலைமையைக் கருத்திற் கொண்டு எமது நிறுவனம் இம்முயற்சியை மேற்கொள்ளவுள்ளது.

இதன் முன்னோடி ஆலோசனைக் கூட்டம் இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் 6ம் திகதி ஏப்ரல் மாதம் மாலை 5.00 மணிக்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தலைமையகத்தில் நடைபெறவுள்ளது. இவ்வாலோசனைக் கூட்டத்தில் ஷரீஆத் துறை உலமாக்கள், அறிஞர்கள், உளவியல் துறை மற்றும் கல்வித்துறை நிபுணர்கள் அத்தோடு அல்குர்ஆன் கற்பித்தல் துறையில் ஈடுபாடும் அனுபவமுமுள்ள அறிஞர்கள் பங்குபற்றவுள்ளனர். இச்சந்திப்பில், நாட்டில் ஏற்கனவே நடைமுறையிலுள்ள குர்ஆன் மத்ரஸாப் பாடத்திட்டங்கள் அலசி ஆராயப்படவுள்ளன. இதற்காக இத்துறையில் ஈடுபாடு உள்ளோரது ஒத்துழைப்பு வேண்டப்படுகிறது.

ஆகையால் ஏற்கனவே தாமாகவே பாடத்திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தும் முஅல்லிம்களும், சங்கங்களும், நிறுவனங்களும் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு அவர்களது பாடத்திட்டத்தின் பிரதியொன்றை எமக்கு அனுப்பிவைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம். இவ்விதம் ஆர்வமுள்ளவர்களுக்கான ஒரு மாநாடு மிகவிரைவில் நடத்தப்படும் இன்ஷா அல்லாஹ்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**
**பணிப்பாளர்**
**ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனம்**
**த.பெ.இல : 760**
**கொழும்பு**
**தொ.பேசி : 01 675534**

## பெருகிவரும் பாலியல் வன்முறைகள் (தொடர்ச்சி)

- ⌘ மஸ்ஜிதுகள் மற்றும் மதஸ்தாபனங்களின் துணையுடன் கிராம, நகர மட்டங்களில் குற்றச் செயல்கள் புரிவோரை தனிமைப்படுத்தி, அவர்களுடனான அனைத்துத் தொடர்புகளையும் துண்டித்து அவர்களைப் பகிஷ்கரிக்க வேண்டும்.
- ⌘ மதஸ்தாபனங்கள், நலன புரி இயக்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், மற்றும் சமூக முக்கியஸ்தர்கள் ஒன்றிணைந்து குற்றச் செயல்களுக்கு எதிராக போர்க்கொடி தூக்க வேண்டும்.
- ⌘ குற்றவாளிகள் எத்தரத்தை உடையவர்களாக இருந்தாலும் அவர்களை சட்டத்துக்கு முன் கொண்டு வந்து தண்டனை பெற்றுக் கொடுத்து ஏனையவர்களுக்கு அதனை ஒரு பாடமாகப் புகட்டுவதற்கான அனைத்துப் போராட்டங்களிலும் மனித உரிமை அமைப்புக்கள், அரச சட்டத்துறை நிறுவனங்கள், கிராம மட்டத்திலான சங்கங்கள், தனிமனிதர்கள், மத ஸ்தாபனங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து போராட வேண்டும்.

ஆனால், இவையனைத்தையும் விட மிக அழகான ஒரு வழியை இஸ்லாம் போதிக்கிறது. அவ்வழியைக் கடைப்பிடிப்பதனூடாக மக்கள் தமது கைகளினாலேயே குற்றத்தின் வாயில்களை அடைத்துக் கொள்ளும் உன்னதமான சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும். இவ்வித வாழ்வினூடாக சாந்தியையும், நிம்மதியையும் அனுபவிக்க முடியும். இவ்விதம் வாழ்வதினூடாக சாந்தியையும், அமைதியையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் பல தனிமனிதர்களும் குடும்பங்களும் இலங்கையில் இருக்கத்தான் செய்கின்றன.

இஸ்லாம் கூறும் வழிமுறை இருதரப்பு அணுகுமுறையைக் கொண்டது. ஆண்கள் திருந்துவது போன்று பெண்களும் கட்டுக்கடங்க வேண்டும். அவ்வாறே, இஸ்லாம் மனிதனது உள்ளத்திலேயே முதன்முதலில் புரட்சியையும் மாற்றத்தையும் ஏற்படுத்த விளைகிறது. அதிகாரத்தையும் சட்டத்தையம் இரண்டாவது வழிமுறையாகவே அது பயன்படுத்தும். அல்லாஹுத் தஆலா குர்ஆனில் கூறுவதை அவதானியுங்கள்:

**"... (நபியே!) விசுவாசிகளான ஆண்களுக்கு நீர் கூறும்: அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ்நோக்கியே வைக்கவும். தங்கள் கற்பையும் இரட்சித்துக் கொள்ளவும். இது அவர்களைப் பரிசுத்தமாக்கி வைக்கும். நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவைகளை நன்கறிந்து கொள்கிறான்." (ஸூரதுந் நூர்: 30)**

## முத்தகீன்கள் யார்?

(தொடர்ச்சி)

'இகாமுஸ் ஸலாத்'- தொழுகையை நிலைநிறுத்துதல் என்பது விரிந்த பொருளைக் கொண்டது என்பதையும் இங்கு கவனிக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனியாக ஒழுங்காகத் தொழுது விட்டால் போதும் என்பது இங்கு கருத்தல்ல. மாறாக, கூட்டாக (ஜமாஅத்) தொழுகைக்கு முறையாக ஏற்பாடு செய்வதையே 'இகாமுஸ் ஸலாத்' எனும் சொற்றொடர் குறிக்கின்றது.

ஓர் ஊரில் ஒவ்வொரு மனிதனும் தனித்தனியே தொழுகையை நிறைவேற்றுகின்றார். ஆனால் அங்கு ஜமாஅத்தாக இக்கடமையை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு இல்லையென்றால் அங்கு, 'இகாமுஸ் ஸலாத்'- தொழுகையை நிலைநிறுத்தல் எனும் இறைகட்டளை நிறைவேற்றப்படவில்லை என்றுதான் அர்த்தம்.

மனிதன் தனது வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் 'தீன்' எனும் இறைநெறியை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகவே அல்குர்ஆனிலும் அல்ஹதீஸிலும் தொழுகையை நிலைநாட்டுவது தொடர்பாக கட்டளைகள் இடப்பட்டுள்ளன.

மி∴ராஜின்போது அல்லாஹ் நபி (ஸல்) அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கிய தொழுகைக்கு ஏனைய வணக்க வழிபாடுகளுக்கு இல்லாத முக்கியத்துவத்தைக் கொடுத்துள்ளான். அதனை நேரம் வரையறுத்த ஒரு கடமையாகவும் அமைத்துள்ளான்.

**"நிச்சயமாகத் தொழுகை மு∴மின்கள் மீது நேரம் வரையறை செய்யப்பட்ட ஒரு கடமையாக இருக்கிறது."**

**(அந்நிஸா :103)**

என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

தொழுகையை விடுவது ஷிர்க்காகும் என்றும் அல்லாஹ் கூறுகின்றான்:

**"தொழுகையை நிலைநாட்டுங்கள்; அதனை விட்ட முஷ்ரிக்குகளாக ஆகிவிடாதீர்கள்." (ஸூரதுர் ரூம் :31)**

எனவேதான், நபி (ஸல்) அவர்கள் குப்ருக்கும் ஈமானுக்குமிடையிலான பிரிகோடாக தொழுகையைக் குறிப்பிட்டுக் காட்டினார்கள்.

**"ஈமானுக்கும் குப்ருக்குமிடையிலான திரை தொழுகையாகும்" (முஸ்லிம்)**

'இகாமுஸ் ஸலாத்'- தொழுகையை நிலைநாட்டுதல் என்ற இந்த சொற்றொடர் அல்குர்ஆனில் மட்டும் சுமார் முப்பதுக்கும் அதிகமான இடங்களில் வந்துள்ளதும் இங்கு கவனிக்கத்தக்கது.

**"எவன் வேண்டுமென்று தொழுகையை விட்டுவிட்டானோ அவன் சந்தேகமின்றி அல்லாஹ்வை நிராகரித்து விட்டான்." (அஹ்மத்)**

என மற்றொரு ஹதீஸ் தொழுகையை விடுவதை எச்சரிக்கின்றது.

**"மறுமைநாளில் ஓர் அடியான் முதலில் தொழுகை பற்றியே வினவப்படுவான்."**

**(அத்தபறானி)**

நாம் நிறைவேற்றுகின்ற தொழுகைகள் மூலம் எதிர்பார்க்கின்ற பயன்களை அடைய வேண்டுமாயின் அவை ஹுஷு∴ எனும் உள்ளச்சம் அமைந்தவையாகவும், விடாமல் தொடர்ந்து நிறைவேற்றப்படுபவையாகவும் அமைய வேண்டியது அவசியமாகும். இத்தகைய அம்சங்களைப் பேணி நிறைவேற்றப்படும் தொழுகைகளே அல்லாஹ்வினால் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளப்படும். மாற்றமாக அமைகின்ற தொழுகைகள் நன்மைக்குப் பதிலாக கேட்டையும், இறை அதிருப்தியையுமே ஏற்படுத்தும்.

(மீதி இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்)

## பதாவா முஆஸிரா (தொடர்ச்சி)

சார்பாக கலீபாக்களுக்கும் கவர்னர்களுக்கும் எதிராக கூட தீர்ப்பளித்தவர்களையும் நாம் காண்கிறோம்.

இமாம் அல் அவ்ஸாயி (ரஹ்) அவர்கள், கலீபாவுக்கு மிக நெருங்கிய கவர்னருக்கு எதிராகவும், திம்மிக்கள் குழுவுக்கு சார்பாகவும் தீர்ப்பளித்துள்ளார். இமாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்களும் கைதிகளுள் முஸ்லிம்கள் மட்டும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற தைமூலன்கின் கருத்தை எதிர்த்து திம்மிக்களும் விடுதலை செய்யப்பட வேண்டும் எனக் கோரி நின்றார்கள்.

# வாசகர் முறையீடு

அல்ஹஸனாத் மார்ச் 2000 இதழை வாசித்தேன். ஒரு விஞ்ஞான மாணவன் என்பதனால் 'மானுடத் தோற்றம் பற்றிய ஆரம்பக் கருத்து' எனும் விஞ்ஞானக் கட்டுரையைக் கூர்ந்து வாசித்தேன். பலமான வாதப் பிரதிவாதங்களுக்குள்ளான சுவாரஷ்யமான விடயதானம் தொடர்பாக இக்கட்டுரை வரையப்பட்டிருக்கிறது. இதில் எனது புலனுக்குட்பட்ட சில விடயங்களைச் சுட்டிக்காட்ட விளைகிறேன்.

1) கட்டுரையின் ஆரம்பப் பந்தியில் நுண்ணிய பொருளிலிருந்து பேரண்டம் வரை, ஒரு 'செல்' லிருந்து சிக்கலான அமைப்புக் கொண்ட உயிரினங்கள் வரை எவ்வாறு உருவாகின என மனிதன் கண்டுபிடித்திருப்பதாக எழுதப்பட்டுள்ளது. ஆனால் இவை யாவும் நிறுவப்பட்டவையாக இல்லை. அனைத்தும் அனுமானங்களாகவே உள்ளன என்பதே உண்மை.

2) ''மனிதன் பரிணாமத்தின் வாயிலாக குரங்கிலிருந்து தோன்றியவனே என்றும் கூறுகிறார் டார்வின்'' என கட்டுரையாசிரியர் கூறிவிட்டு மற்றுமொரு இடத்தில், ''மனிதனும் (பரிணாமம் மூலம்) இவ்வாறு தோன்றிய ஒரு உயிரனமாகவே இருக்கலாமேயன்றி; அவன் மட்டும் எவ்வாறு விதி விலக்காகத் தோன்ற முடியும்? என்பதே டார்வினுடைய கோட்பாட்டின்...'' என எழுதுகின்றார். இது முன்னுக்குப் பின் முரணாக எழுதப்பட்டுள்ளது. டார்வின் எந்தச் சந்தர்ப்பத்திலும் மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவன் என வாதிடவில்லை என்பதே உண்மை.

3) டார்வினோ, அக்கோட்பாட்டைத் தழுவியவர்களோ வெறுமனே கண்ணை மூடிக்கொண்டு பரிணாமவாதம் பேசவில்லை. டார்வின் தனது உலக வலத்தின்போது தான் அவதானித்த இயற்கைத் தோற்றங்களையும், கண்டு பிடித்த சுவடுகளையும் வைத்தே இக்கோட்பாடு வரையப்பட்டுள்ளது. டார்வினியக் கோட்பாடு தவறு என வாதிடும் கட்டுரை ஆசிரியர் எதிர்த் தரப்பினரின் வெளிப்படையான சான்றுகளுக்கு மாற்று விளக்கங்கள் எதனையும் முன்வைக்கவில்லை. வெறுமனே சில அல்குர்ஆன் வசனங்களை மட்டும் மேற்கோள் காட்டுகிறார். அல்குர்ஆனை தெய்வீக நூலாக ஏற்றுக் கொண்ட முஸ்லிம்களுக்கு வேண்டுமானால் இது சரியாக இருக்கலாம். ஆனால், காரண காரியம், சடத்துவம், நிறுவல்களின் அடிப்படையில் விரிந்து செல்லும் விஞ்ஞானத்திற்கு என்ன பதில் சொல்வது?

இறுதியாக, ஓர் இலட்சிய சஞ்சிகையாக வெளிவரும் அல்ஹஸனாத் ஆதாரபூர்வமான கட்டுரைகளையே தாங்கி வரவேண்டும். குறிப்பாக விஞ்ஞானக் கட்டுரைகள் தெளிவானவையாக, வெளிப்படையானவையாக அமைய வேண்டும். ஏனெனில் நாம் விஞ்ஞானத்தின் யுகத்தில் இப்போதுதான் கண் விழித்திருக்கிறோம். ஆனால் விஞ்ஞானம் பிரபஞ்சத்தின் எல்லைகளைத் தேடிக் கொண்டிருக்கிறது. அல்குர்ஆன் அடிப்படை விஞ்ஞான உண்மைகளை பொதிந்து வைத்துள்ளது என்பதை அனைவரும் அறிவர். ஆனால் அது எதனைப் பொதிந்து வைத்திருக்கிறது என்பது பெரும்பாலான விஞ்ஞானத் துறை சார்ந்தவர்களுக்கே தெரியாது. எனவே, அல்ஹஸனாத்தின் 'விஞ்ஞானம்' எனும் மகுடத்தின் கீழ்வரும் கட்டுரைகள் அல்குர்ஆன் எதைச் சொல்கிறது, விஞ்ஞானம் எவ்வாறு உடன்படுகிறது என்ற உண்மைகளை வெளிக் கொணரும் வகையில் உடன்பாடான இடத்தில் விவரணம் தந்து முரண்பாடான வற்றை நியாயம் கண்டு அல்லது ஆதாரபூர்வமாக மறுதலித்து பொருட் செறிவாக எழுதப்பட வேண்டும். இல்லாவிட்டால் அல்குர்ஆன்- விஞ்ஞானம் எனும் இரு எல்லைகளுக்கிடையில் அறியாமைச் சுவர்களில் முட்டிக் கொண்டு எமது மார்க்கத்தைப் பற்றி பெருமிதம் கொள்ளும் மாயையிலேயே தொடர்ந்தும் எமது சமூகம் சஞ்சாரிக்க நேரிடும். இது புதிய நூற்றாண்டின் கடிவாளத்தைக் கைப்பற்றப் போகும் ஒரு சமூகத்துக்கு எவ்வகையிலும் பொருத்தமற்றதே.

**A.A. ஷிபுத்தீன், அக்கரைப்பற்று 2.**

அன்புடையீர்,

அஸ்ஸலாமு அலைக்கும்.

**அல்ஹஸனாத் மலர் 26 இதழ் 2 பெப்ரவரி 2000**

மேற்படி இதழில் வெளியாகியிருந்த சில விடயங்களில் எனக்கு ஏற்பட்ட ஐயப்பாட்டையும், தெளிவற்ற தன்மையையும் குறிப்பிட விளைகிறேன்.

1. பக்கம் 15 கலம் 3ல் ஹஜ் அனுபவமும் வழிகாட்டலும் என்ற தலைப்பில் இஹ்ராம் அணிதல் முதல் தல்பியா முழங்குதல் வரைதான் ஹஜ் கிரியைகள் என்றால் அரபாவில் தரிப்பது தவிர்க்கப்பட்டுள்ளதா? தடை செய்யப்பட்டுள்ளதா?

2. பக்கம் 6லும் 46லும் கலம் 3ல் மக்கா சென்றால் மனிதனாக மாறலாம் என்பது சரியாயின் ஹஜ் செய்வதனால் மனிதப் புனிதனாக முடியாதா? மக்கா செல்வதனால் தான் அது சாத்தியமானால் இன்று சம்பளத்திற்காக வேலை செய்யச் சென்றிருப்போரும் அப்படித்தானா? இது ஒரு பாட்டில் வரும் அடியை ஒட்டி இருப்பதைத் தவிர சரியான கருத்தைத் தருவதாய் இல்லை.

3. பக்கம் 45 கலம் 1ல் சில வழிமுறைகள் என்ற பகுதியின் கீழ் விளக்கம் 1 முதல் 5 முடிய உள்ள பகுதியின் கீழே இதுவல்லாத ........... என்ற பதத்தில் இருந்து ............ இம்மியளவும் சந்தேகம் இல்லை. என்ற பகுதியின் அர்த்தத்தைப் பலமுறை படித்தும் விளங்க முடியவில்லை. தெளிவும் இல்லை.

**M.S.M. சுபைர்**
**கல்எலிய**

(கட்டுரையாளரின் விளக்கம் அடுத்த பக்கத்தில் (48) பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.)

**மலர் :26, இதழ் :02 பெப்ரவரி இல் வெளியான ஹஜ் கட்டுரை தொடர்பான ஐயங்களுக்கான தெளிவு**

அல்ஹஸனாத்தில் 5ம் பக்கத்தில் ஹஜ் அனுபவமும், வழிகாட்டலும் என்ற பிரதான தலைப்பில் முதலாவதாக, ஹஜ்ஜின் நோக்கம் என்ற உபதலைப்பு இடம்பெறுகிறது. இதில் ஹஜ்ஜின் நோக்கத்தைத் தெளிவு படுத்துவதற்காக ஹஜ்ஜின் கிரியைகள் சில எடுத்துக் காட்டப்பட்டன. மாறாக, இத்தலைப்பின் கீழ் ஹஜ்ஜின் ஒவ்வொரு கிரியையும் ஆய்வு செய்வதோ, அது குறித்த சட்டங்களை விரிவாக விளக்குவதோ எமது நோக்கமாக அமைந்திருக்கவில்லை. அவ்வாறு ஆய்வதானது தலைப்புக்கு அப்பாற்பட்ட விடயமாக அமைந்து விடும். அரபாவில் தரித்தல் ஹஜ்ஜின் முக்கிய கிரியை என்பதை நாம் ஏலவே நபிமொழி மூலம் அறிந்து வைத்துள்ளோம். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

''ஹஜ் என்பது அரபாவாகும்.''

தலைப்பில் அரபாவில் தரித்தல் குறிப்பிடப்படாதது அது ஹஜ்ஜின்போது தடுக்கப்பட்டுள்ளது அல்லது தவிர்க்கப்பட வேண்டும் என்ற கருத்தைத் தொனிக்காது. அமானிதத்தையும், பத்திரிகா தர்மத்தையும் தொடர்ந்து பேணி வரும் அல்ஹஸனாத்தில் ஹஜ்ஜின் முக்கிய கிரியை ஒன்று இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்று எழுதுவது விசனிக்கத்தக்கது. ஆக்கியோனின் பலவீனத்தால் ஏற்பட்ட சிறு தவறாக இருக்கலாம் என்று நல்லெண்ணம் கொள்வதானது வரவேற்கத்தக்கது.

2. பக்கம் 6 இலும், 46 இலும் ஹஜ் பற்றிய ஆக்கத்தின் கீழ் மக்கா நகர் சென்று வந்தால் மனிதனாக மாறாலாம் என்று குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து உள்ளங்கை நெல்லிக்கனி போல மிகவும் தெளிவாக தெரியவரும் உண்மை என்னவென்றால் அது ஹஜ்ஜுப் பயணத்தையே குறிக்கிறது என்பதாகும். சம்பாத்தியத்திற்காக மேற்கொள்ளப்படும் பயணத்தை அல்ல. அவ்வாசகத்தை சிறு பிள்ளை கூட விளங்கிக் கொள்ளும். சிலவேளை மேலெழுந்த வாரியான வாசிப்பும், பந்திகள், வாக்கியங்கள், வசனங்கள் போன்றவை குறித்த தலைப்புடன் தொடர்புபடுத்தி நோக்கப்படாமையும் மிகவும் தெளிவான விடயங்களைக் கூட எமக்கு மறைத்து விடுகின்றன. 'மக்கா நகர் சென்று வந்தால் மனிதனாக மாறலாம்' என்பது பாடல் வரியாக இருந்தாலும் அதில் சத்தியம் இழையோடியுள்ளது. கருத்து ரீதியான பிழைகள் அதில் இருப்பதாக தெரியவில்லை.

3. ''இதுவல்லாத'' என்று ஆரம்பிக்கின்ற பந்திக்கு முன் ஐந்து வழிகாட்டல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதனோடு தொடர்புடுத்தி ஒருமுறை வாசித்தால் தெளிவு பிறந்து விடும். அதாவது மேலே கூறிய ஐந்து வழிகாட்டல்கள் அல்லாத வேறு வழிமுறைகள் மூலமாகவும் பணத்தைப் பெற்று ஹஜ்ஜை நிறைவேற்ற முயற்சிக்கின்ற போது அல்லாஹ்வின் பேருதவி நிச்சயம் கிடைக்கும் என்பதில் இம்மியளவும் சந்தேகமில்லை.

'அபூசுஜாஅ', கட்டுரையாளர்


அன்பார்ந்த வாசகர்களே!

அல்ஹஸனாத் சஞ்சிகைக்கு நாடளாவிய ரீதியில் விற்பனை முகவர்கள் தேவைப்படுகிறார்கள். உங்கள் இஸ்லாமிய குடும்ப சஞ்சிகை அல்ஹஸனாத் நாடெங்கிலுமுள்ள அனைத்து வீடுகளுக்கும் செல்ல வேண்டும் என்ற எமது இலட்சியத்துக்கு எம்மோடு ஒத்துழையுங்கள். ஒரு பிரதிக்கு ரூபா 3.00 கழிவு வழங்கப்படும். விபரங்களுக்கு விற்பனை முகாமையாளரைத் தொடர்பு கொள்ளுங்கள்.


**அறிவும் அது வேண்டும்.... (தொடர்)**

பணியைச் செய்தவராக ஒரு அறிவைப் பெற்ற மனிதர் இருந்தார் அவரை பிரகாசமாக்கி வைப்பானாக என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பிரார்த்தித்தார்கள். இதுவும் அந்த அறிவுப் பணியுடன் சார்ந்த அம்சமாகும்.

அதுபோல இந்த அறிவைப் பெற்றவர்களை மறுமையில் அல்லாஹ் ஒரு மனிதன் நினைத்துப் பார்க்க முடியாத அளவு அந்தஸ்தில் உயர்த்தி விடுகிறான். இந்த உலகத்தில் அறிவைப் பெற்ற மனிதனின் நிலை பற்றி ஓர் ரிவாயத் பின்வருமாறு கூறுகிறது,

**''ஆபிதுக்கும், ஓர் ஆலிமுக்கும் வித்தியாசம் சந்திரனுக்கும் ஏனைய நட்சத்திரங்களுக்கும் இடையிலான வித்தியாசமாகும்.''**

வேறொரு ரிவாயத்தில்,

**''எனக்கும் உங்களுக்கும் இடையிலான வித்தியாசத்தைப் போன்றதாகும்''** என்றார்கள் நபியவர்கள்.

அந்தளவிற்கு முக்கியமான அம்சம் தான் இஸ்லாத்தைப் பொறுத்தளவில் அந்த அறிவுப் பணி எத்தகைய தன்மைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை நாங்கள் மேலே பார்த்த அல்குர்ஆன் வசனங்களிலும், ரஸூல் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களிலும் சுருக்கமாகவும் மேலோட்டமாகவும் காணுகிறோம். இது இன்னும் ஆழமாக விளங்கிக் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். இன்னும் இந்த அறிவோடு சார்ந்து வெளிப்பட வேண்டிய எத்தனையோ பண்புகள் இருக்கின்றன. ஆனால் இங்கு குறிப்பிடப்பட்டவைகள் பிரதானமானவையாகும். இந்தப் பண்புகளை எங்களுடைய அறிவோடு சேர்த்து நாங்கள் அறிவுப்பணி செய்கின்ற போது (அதாவது அறிவைக் கேட்கின்ற போதும் சரி அறிவைக் கொடுக்கின்ற போதும் சரி) மட்டுமே அது பயனுள்ள அறிவாக மாறும்; அது இம்மை மறுமை வாழ்க்கைக்கும் பயனளிக்கும்.

அல்லாஹுத் தஆலா நாம் பெற்ற அறிவை பயனுள்ளதாக ஆக்கி வைப்பானாக.

## அறிவை மறைக்கலாமா? (தொடர்)

தரவித்தியாசம் அன்று உள்ளதுபோல் இன்றும் அவ்வாறே உள்ளது. மனித உணர்விலும், உணர்ச்சியிலும், மனோ இச்சையிலும் எத்தகைய மாறுதலையும் நாம் காணமுடியாதுள்ளது. அன்று நடந்த பாவங்கள் இன்றும் நடக்கின்றன. அதற்கான தூண்டற்சக்திகள் அன்றுள்ளது போல் இன்றும் உள்ளன. ஆனால் பாவங்கள் செய்வதற்கான வழிமுறைகளும் ஊடகங்களும் மாறி இருக்கின்றன. இக்காலத்தில் ஒரு நாட்டில் அல்லது ஒரு நகரத்தில் இந்நிலைமைகளை நாம் பரீட்சித்துப் பார்க்கலாம்.

எனவே மனிதர்கள் இலகுவில் கிரகிக்க கூடிய விடயங்களை தெளிவாகக் கூறுவதும் ஸுன்னா; இலகுவாக உள்வாங்கிக் கொள்ள முடியாத விடயங்களை மனித நலன் கருதி சொல்லாமல் தவிர்த்துக் கொண்டு பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் தெளிவாகச் சொல்வதும் ஸுன்னா. இது மறுமையில் கடுமையான தண்டனையைப் பெற்றுத் தருகின்ற 'அறிவை மறைத்தல்' என்ற குற்றத்திற்குட்பட்ட அம்சமல்ல.

அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

**"நான் ரஸூல் (ஸல்) அவர்களிடமிருந்து இரண்டு வகையான ஹதீஸ்களை மனனம் செய்தேன். அதில் முதலாம்வகை ஹதீஸ்களை பரவலாகத் தெரிவித்து விட்டேன். அடுத்த வகை ஹதீஸ்களைப் பொறுத்தவரையில் அதனை நான் பரவலாகக் கூறினால் எனது குரல்வளை துண்டிக்கப்பட்டு விடும்." (புகாரி)**

இமாம் இப்னுல் முனீர் (ரஹ்) பின்வருமாறு இதற்கு விளக்கமளிக்கிறார்கள்.

''அநியாயக்கார ஆட்சியாளர்களது நடவடிக்கைகளில் உள்ள குறைபாடுகள் பற்றிய விடயங்கள், அவர்களது செயற்பாடுகள் நெறிதவறியவை பற்றிய விடயங்கள் முதலானவற்றை அவர் கூறியிருந்தால் அவரை அவ்வாட்சியாளர்கள் கொலை செய்திருப்பார்கள். ஷரீஅத் சட்டதிட்டங்களோடு தொடர்புடைய ஹதீஸ்களை அவர்களால் மறைக்க முடியாது. ஏனென்றால் ஒருமுறை அபூஹுரைரா (ரழி) அவர்கள் கூறினார்கள்:

**"அபூஹுரைரா அதிகமாக ஹதீஸ்களை அறிவிக்கிறார் என்று மனிதர்கள் கூறுகின்றனர். அல்லாஹ்வின் வேதமாகிய அல்குர்ஆனில் இவ்விரண்டு வசனங்களும் இடம்பெறவில்லையென்றால் ஒரு ஹதீஸைக் கூட நான் அறிவித்திருக்கமாட்டேன். என்று கூறிவிட்டு (அறிவை மறைத்தலோடு தொடர்புடைய) ஸூரதுல் பகராவின் 159, 160ம் வசனங்களை ஓதினார்கள்." (புகாரி)**

மறுமைநாளின் அடையாளங்கள், இறுதிக் காலத்தில் ஏற்படவிருக்கின்ற பித்னாக்கள், உலக மாற்றங்கள், யுத்தங்கள் போன்றவற்றுடன் தொடர்பான சில ஹதீஸ்களை அவர் மறைத்திருக்க முடியும் என்றும், அவற்றைத் தெரியப்படுத்தினால், அதுபற்றிய அறிவும் பரிச்சயமும், உணர்வும் இல்லாதவர்கள் நிராகரித்து ஆட்சேபிக்க முடியும் என்ற வகையில் அபூஹுரைரா (ரழி) அவர்கள் அவ்வாறு நடந்திருக்கக் கூடும் என்று கருத்துத் தெரிவிப்போரும் உள்ளனர்.

எனவே சத்திய மார்க்கத்தை மறைக்காமல் தெளிவாக எடுத்துரைப்பது எந்தளவு கடமையாக இருக்கிறதோ, அவ்வாறே மக்களின் தரம் அறிந்து அவர்கள் வாழும் கால சூழல் அறிந்து சில சத்தியக் கருத்துக்களை சொல்லாமல் தற்காலிகமாக மறைப்பதும் கூட கடமையாக அமைந்து விடுகிறது. இதனை காய்தல் உவத்தலின்றி ஏற்றுக் கொள்ள வேண்டியது - த.ஃவாக் களத்தோடு தொடர்புடைய- சகலமானவர்களுக்கும் கடமையாகும்.

நாம் விளக்கத்திற்கு எடுத்துக் கொண்ட ஹதீஸ், பொதுநலன் கருதி அறிவை மறைப்பதற்கான அனுமதியைத் தருகின்றபோது இந்த யதார்த்தமான உண்மையை, உண்மையான யதார்த்தத்தை மறுப்பதானது அல்லது விமர்சிப்பதானது ஸுன்னாவை விமர்சிப்பதற்கு நிகர்த்ததாகும். அவ்வாறே ஸஹாபிகளின் கூற்றுக்களும், செயற்பாடுகளும் ஓர் அழைப்பாளன் ஒரு கட்டத்தில் சத்தியத்தை மறைப்பதற்கான அனுமதியைத் தருகின்றன. ஸுன்னாவுடன் காலத்தாலும், மொழியாலும் மிகவும் நெருங்கிய மனிதர்களின் விளக்கங்கள் வளமானவை; ஆரோக்கியமானவை. ''இஸ்லாம் அறிவை மறைப்பதை அடிப்படை நோக்காகக் கொண்டுள்ளது" என்ற நோக்கில் ஸஹாபிகள் இக்கருத்துகளைத் தெரிவிக்கவில்லை. மாறாக, பிரச்சாரப் பாதையில் சிலபோது ஏற்படுகின்ற குறுக்கீடுகளைத் தாண்டிச் செல்வதற்கான ஓர் இலகுவழி என்ற வகையிலேயே இக்கருத்துகளை அவர்கள் கூறினர். இவர்களது கருத்துக்களும் கூட காலத்தால பிந்தியவர்களால், மொழியால் தூரமானவர்களால் விமர்சிக்கப்படுமென்றால் ஸஹாபிகளையும் அறிவை மறைத்த குற்றச்சாட்டின் பேரில் கூண்டில் நிறுத்த வேண்டி வருமல்லாவா? முஆத் (ரழி) அவர்களையும்கூட மரணத் தறுவாய்க்கு சற்று முன்புவரை அவர் குற்றவாளியாகவே இருந்தார் என்று கூற வேண்டி வருமல்லவா? (நஊது பில்லாஹி மின்ஹா). வல்ல அல்லாஹ் இஸ்லாத்தின்பால் எமது உள்ளங்களைத் திருப்பிவிடுவானாக.

## உலக நோக்கில் இஸ்லாமிய இயக்கங்கள் (தொடர்)

உலக நடப்பைக் கருத்திற் கொண்டு இஸ்லாமிய இயக்கமொன்றின் கொள்கையையும், செயல்திட்டத்தையும் வகுக்கின்றபோது, இவ்வாறான பயனற்ற வாதப் பிரதிவாதங்களை ஓரங்கட்டிவிட வேண்டும். இன்று முஸ்லிம்களிடம் மனித சமூகம் வேண்டி நிற்பது இவ்வாறான வாதப் பிரதிவாதங்களை அல்ல; முழுப் பிரபஞ்சத்தையும் தழுவிய இஸ்லாத்தின் தூதை மனித சமுதாயத்தின் சீர்திருத்தத்திற்கு ஏற்ற வகையில் நடைமுறை வாழ்க்கைக்கு தகுந்தவாறு முன்வைப்பதனையாகும். இஸ்லாத்தின் எதிரிகள், இஸ்லாம் என்பது காலம் கடந்துவிட்ட மார்க்கம்; அது பயங்கரவாதத்தின் மறுபெயர் போன்ற பொய்ப் பிரச்சாரங்களில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் கருத்து வேறுபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதல்ல முஸ்லிம்களது பணி. மாறாக, இதனை மறுத்து இஸ்லாத்தை அதன் அசல் உருவத்தில் இன்றைய தேவையை உணர்த்தி அதற்கேற்ற விதத்தில் முன்வைப்பதே முக்கியமானதாகும். அதன்மூலம் வளர்ந்து வரும் இளம் சமூகத்தினர் இந்த உலகின் எதிர்காலம் அமெரிக்காவிடம் அல்ல; சர்வாதிகாரம் கொண்ட அல்லாஹ்விடமே உள்ளது என்பதைப் புரிந்து கொள்வர்.

நாம் அல்லாஹ்வின் மீது தவக்குல் வைத்தவர்களாக, அறிவுத் தீட்சண்யத்துடனும், தூரநோக்குடனும் எமது பாதையில் முன்னேறிச் செல்வோமாயின் முஸ்லிம் உலகமே எல்லா வகையிலும் சக்திமிக்கதாக மாறும். இதற்கான சாத்தியப்பாடுகள் தாராளமாக இருக்கின்றன. ஆகக் கூடுதலான மனித வளம், எல்லா வகையான கனியவளங்கள் என்பன முஸ்லிம்களிடம்தான் இருக்கிறது; உலகின் நடுமையத்தில் ஒரு பரந்த நிலப்பரப்பு முஸ்லிம் உலகில்தான் இருக்கிறது. இவை அனைத்துக்கும் மேலாக இனம், மொழி, நிறம் போன்ற வேறுபாடுகளையெல்லாம் குழிதோண்டிப் புதைத்தது மக்களையெல்லாம் ஓர் அணியில் சேர்த்துவிடும் ஓரிறைக் கொள்கை, தீன் முஸ்லிம்களிடம்தான் இருக்கிறது.

எனவே, முழு நம்பிக்கையோடு அச்சமின்றி எமது செயல்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்ல முடியும். இந்தியாவினது ஐரோப்பாவினது அல்லது அமெரிக்காவினது திருப்தியை அடிப்படையாகக் கொண்டு எமது செயல்பாடுகளை அமைத்துக் கொள்வோமெனில் அதன் விளைவாக அல்லாஹ்வின் அதிருப்தியையும் கோபத்தினையும் பெற்றுக் கொள்ளும் அதே வேளை இஸ்லாத்திற்கு எதிரான சக்திகளின் ஆதிக்கமே என்றும் நிலைத்திருக்கும்.

# உலகச் செய்திகள்

## பலஸ்தீன்

**"யூதர்களை பணயம் வைத்து முஸ்லிம் கைதிகளை விடுதலை செய்ய முயற்சியுங்கள்"-**

*கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி*



இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கெதிராகவும், தமது நாட்டினைப் பாதுகாப்பதற்காகவும், போராடி இஸ்ரேலிய சிறைகளில் அவஸ்த்தைப்படும் பலஸ்தீனர்களை விடுதலை செய்வதற்கு யஹூதிகளை கட்டாயப்படுத்தும் வகையில் அவர்களை கடத்திச் சென்று பணயம் வைப்பது இஸ்லாமிய சட்ட வரம்புகளுக்குட்பட்டதென மாபெரும் இஸ்லாமிய அறிஞரும் சட்டவல்லுனருமான கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

பலஸ்தீனர்களின் விடுதலைக்காக யூதர்களை பணயமாக பிடித்து பேரம்பேசுவது பற்றிய இஸ்லாமிய கருத்து தொடர்பாக வினவப்பட்டபோதே அவர் இதனை தெரிவித்தார். "அனைத்து இஸ்ரவேலர்களும் யுத்தத்தில் ஈடுபட்டிருப்பவர்கள்; மேலும் யுத்தம் நடக்கும் வேளைகளில் ஆக்கிரமிப்பாளர்களின் இராணுவத்தில் இணைந்து கொள்வார்கள். எனவே எந்நேரமும் யுத்தத்துடன் பிணைக்கப்பட்டவர்களாகவே அவர்கள் இருக்கிறார்கள்" எனக் குறிப்பிட்ட அவர், "ரமழான் மாதத்தில் மஸ்ஜித் இப்றாஹிமில் தொழுது கொண்டிருந்த முஸ்லிம்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து படுகொலை செய்தவன் (Faruokh Golddshtan ) ஒரு இஸ்ரேலிய சாதாரண குடிமகன்" என்பதை சுட்டிக் காட்டிய அவர், இதுபோன்ற பல நிகழ்வுகளுக்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன." எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, அறிவியல் ஆய்வுகள் பணிக்கான சுல்தான் அல்உவைஸ் விருது அன்மையில் கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்களுக்கு வழங்கப்பட்டது. தனக்கு கிடைத்த 100,000 டாலர் பெருமதியுள்ள இப்பரிசினை பல்வேறு அறிவியல் துறைகளில் ஈடுபடும் மாணவர்களின் நலன்களுக்காக கொடுத்துதவ இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அகண்ட யூத நாட்டை உருவாக்கும் நோக்கில் செயல்படும் இஸ்ரேலிய அரசாங்கம் உலகின் பல நாடுகளிலிருந்தும் யூதர்களை இஸ்ரேலில் வந்து குடியேறுமாறு வலியுறுத்தி வருகின்றனர். இவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளும் அரசாங்கத்தினா லேயே செய்து கொடுக்கப்படுகின்றன; மட்டுமன்றி அவர்களை குடியமர்த்துவதற்காக பலஸ்தீனர்களின் நிலங்களே பலவந்தமாக சுவீகரிக்கப்படுகின்றன. அண்மையில் அமெரிக்காவிலிருந்து வந்து சேர்ந்த யூதர்களுக்காக 300 ஆடம்பர அடுக்கு வீடுகள், விசாலமான ஹோட்டல், மற்றும் உல்லாச விடுதிகளை அமைக்கும் பணியினை இஸ்ரேலிய அரசாங்கம் அனுமதித்துள்ளது. இதற்கென மேற்குக் ஜெருஸலத்தில் [illegible] சில்வடா என்ற சனத்தொகை குறைந்த அரேபிய கிராமம் முழுவதுமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள மக்களை பலவந்தமாக வெளியேற்றும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளார்கள்.

## ஜோர்தான்

**ஜோர்தானில் இஸ்லாமிய ஷரீஆவை நடைமுறைப்படுத்துவதற்கு மக்கள் ஆதரவு**

அண்மையில் ஜோர்தானில் எடுக்கப்பட்ட வாக்கெடுப்பொன்றில் அந்நாட்டில் இஸ்லாமிய ஷரீஆவினை கொண்டு வருவதற்கு ஆதரவாக 87% மக்கள் வாக்களித்துள்ளனர். ஜோர்தானின் முன்னனிப் பத்திரிகைகளில் ஒன்றான அல்ஸபீல் எடுத்த கணிப்பீட்டிலேயே இத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது ஜோர்தானில் அதிகரித்து வரும் குற்றச் செயல்கள் மற்றும் ஊழல்களை தடுக்க வேண்டுமானால் ஷரீஅத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலமே முடியும் என அந்நாட்டு மக்களில் பெரும்பாலானோர் கருதுகின்றமையையே இக்கணிப்பீடு எடுத்துக் காட்டுகிறது என பத்திரிகைகள் குறிப்பிடுகின்றன. 87% மானோர் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் ஷரீஅத் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளனர். 18% மானோர் தண்டனை முறைகளில் ஷரீஅத் அமுல்படுத்தப்பட வேண்டுமென விரும்புகின்றனர். ஆக 2% மானோர் மாத்திரமே இதனை எதிர்க்கின்றனர். மேலும் 2% மானோர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை சுமார் 4.8 மில்லியன் ஜோர்தானியர்களில் 95% மானோர் முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ருமேனியா

**முஸ்லிம்கள்மீது புதிய நெருக்குதல்கள்**

ருமேனியாவில் உள்ள முஸ்லிம் சமூகத்தவர்மீது அதிகரித்து வரும் நெருக்குதல்கள் அங்குள்ள முஸ்லிம்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளன. அண்மைக் காலமாக குறிப்பிடத்தக்க முன்னனி இஸ்லாமிய அறிஞர்களை நாட்டை விட்டு துரத்தும் முயற்சியில் ருமேனிய அரசாங்கம் இறங்கியிருப்பதாக குத்ஸ் பிரஸ் தெரிவித்துள்ளது. அந்நாட்டின் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் டாக்டர் உமர் அப்துல் அஸிஸ் அப்துல் வஹ்ஹாப் அவர்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு பணித்துள்ளது. இது சம்பந்தமாக எவ்வித முன்னறிவித்தலோ, காரணங்களோ வெளியிடப்பட வில்லை. டாக்டர் உமர் அப்துல் அஸிஸ் அப்துல் வஹ்ஹாப் அவர்கள் யெமனைச் சேர்ந்தவர். 1994ல் ருமேனிய பல்கலைக்கழகமொன்றில் உடற்கூறியல் துறையில் டாக்டர் பட்டம் பெற்ற இவர் ருமேனியாவின் பல்கலைக்கழகத்தில் தனது சிறப்பு பட்டத்தை பெறுவதற்கு ஒரு வருடம் பாக்கியிருக்கின்ற நிலையில் நாட்டை விட்டுச் செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளார்.

டாக்டர் உமர் அப்துல் அஸிஸ் ருமேனியாவின் இரண்டாவது பெரிய தலைநகரான யாஷின் நகரில் உள்ள இஸ்லாமிய நிலையமொன்றுக்கு தலைமை தாங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## ஈரான்

### கத்தாமியின் ஆட்சியில் சுன்னி முஸ்லிம்களின் எதிர்காலம்


முஹம்மத் கத்தாமி

கத்தாமி தலைமையிலான சீர்திருத்தவாதிகளின் கையில் ஈரான் மீண்டும் ஒப்படைக்கப் பட்டுள்ளது. கடந்த மாதம் நடைபெற்ற தேர்தலில் கத்தாமி அவர்களின் கட்சியினர் ஆட்சியை இறுக்கிப் பிடித்திருப்பது, அங்குள்ள கடும்போக்கு ஷீஆக்களின் பிடி தளர்ந்திருப்பதை காட்டுவதோடு, அங்கு வாழும் சுன்னி முஸ்லிம்களின் எதிர்காலம் பிரகாசமானதாக அமையும் என அரசியல் அவதானிகள் குறிப்பிடுகிறார்கள். 1997ல் வெற்றியீட்டியதைவிட மிகப்பெரும்பான்மை பலத்துடன் சீர்திருத்தவாதிகளின் கட்சி இம்முறை வெற்றி பெற்றிருக்கிறது. கடும்போக்கு ஷிஆக்களின் கைகளோங்கியிருந்த மேல்சபை அங்கத்துவம்கூட கணிசமாக நடந்த தேர்தலில் கத்தாமி அவர்களின் கட்சிக்கு சென்றுள்ளது. 62 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட ஈரானில் 15-20 மில்லியன் பேர் சுன்னி முஸ்லிம்கள். கத்தாமி அவர்களின் வருகைக்கு முன்னர் உள்ள காலப்பகுதி அங்குள்ள சுன்னி முஸ்லிம்களைப் பொருத்தமட்டில் கசப்பான அனுபவங்களை சுமந்த இருண்ட காலப் பகுதியாகும். சுன்னி முஸ்லிம்கள் மீதிருந்த தீராத சந்தேகம், நம்பிக்கையீனம் காரணமாக ஓரக்கண் கொண்டே ஷீஆக்கள் பார்த்தனர். குர்மனின்ஷாஹ், பூஷஹர், பன்தர், அப்பாஸ், பலுசிஸ்தான், கிழக்கு குராஸான், ஜிலுஸ்தான், போன்ற ஈரானின் எல்லைப்புற பிரதேசங்களில் இவர்கள் வாழ்ந்து வருவதால், எதிரிகளின் ஊடுருவல்கள், சுன்னி முஸ்லிம்களின் ஆதரவுடனேயே நடைபெறுவதாக சந்தேகித்தனர். இதன் காரணமாக ஈரானில் இமாம் கொமெய்னி ஈரானிய புரட்சியின் பின் ஷீஆ - சுன்னி உறவுகளைப் பேணுமாறு விடுக்கப்பட்ட அழைப்புகூட நடைமுறை சாத்தியமாகத் தோன்ற வில்லை. தனது எதிரிகளாகக் கருதும் சுன்னிக்களோடு உறவுகளை வளர்ப்பது எப்படி போனாலும் அவர்கள் ஈரானில் தலைதூக்குவதைக் கூட ஷீஆக்கள் விரும்ப வில்லை. பல குற்றச்சாட்டுகளின் பேரில் சுன்னி அறிஞர்கள் சிறைபிடிக்கப்பட்டனர். சிறையிலடைக்கப்பட்ட பின்னர், சித்திரவதை காரணமாக உயிரிழக்க நேரிட்ட சம்பவங்கள் அதிகம்.

ஈரானின் அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற தொழிற்சாலைகள் போன்றவற்றின் தலைமைப் பொறுப்புகள் ஷீஆக்களுக்கே கொடுக்கப்பட்டன. சுன்னிகள் செறிந்து வாழக்கூடிய இடங்களில் உள்ள அவர்களின் பாடசாலைகள் மத்ரஸாக்கள். மஜ்லிஸுகளில்கூட தலைமைப் பொறுப்புகளை ஷீஆக்களே வகித்தனர். ஈரானின் தலைநகரான தெஹ்ரானில் சுமார் 1 மில்லியன் சுன்னி முஸ்லிம்கள் வாழ்கின்றனர், ஆனால் அவர்களுக்கு ஒரு மஸ்ஜிதை கட்டுவதற்குக்கூட அனுமதி அளிக்கப்பட வில்லை. இந்நிலையில் முஹம்மத் கத்தாமி அவர்களின் அரசியல் பிரவேசம் தமது பிரதிநிதித்துவத்துக்கான சிறந்த வாய்ப்பாக சுன்னிக்கள் கருதுகிறார்கள். 1997ம் ஆண்டு தேர்தலில் கட்டாமி முதன்முதலாக வெற்றிபெற்ற போது சுன்னிக்கள் செறிந்து வாழக்கூடிய குர்மசனின்ஷஹ், பூஷஹர், பன்தர், அப்பாஸ், பலுசிஸ்தான், செய்சிஸ்தான் கிழக்கு குராஸான் போன்ற பிரதேசங்களுக்கு விஜயம் செய்து அவர்களின் பிரச்சினைகள் குறித்து பேச்சு வார்த்தை நடத்தியதுடன், அதற்கென மூன்று பேரைக் கொண்ட குழுவொன்றை நியமித்தார். இவர்களில் இருவர் சுன்னிக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது தஹ்தானில் மஸ்ஜித் கட்டுவதற்கு இவ்வளவு காலம் இருந்த தடை நீக்கப்பட்டுள்ளது. சுன்னிகளை கைது செய்து தடுத்துவைப்பது, அவர்கள் மீது அராஜகம் செய்வது முற்றுமுழுதாக தடைசெய்யப்பட்டுள்ளது.

ஈரானில் சுன்னி முஸ்லிம்களின் அரசியல் பிரவேசம் மிகப் பழமையானது. இமாம் கொமெய்னியின் ஈரானிய மக்கள் புரட்சியின் பின்னர் நடைபெற்ற முதலாவது பாராளுமன்ற தேர்தல்களில் (மஜ்லிஸுஷ் ஷூரா) 18 அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர், பின்னர் அங்கு தேர்தல் பிரதேச எல்லைகள் மீள்வரைவு செய்யப்பட்டதன் காரணமாக இத்தொகை 13ஆக குறைந்தது. ஆனால் கடும்போக்கு ஷீஆக்களின் கெடுபிடிகள் காரணமாக மாற்றுப் பெயர்களிலேயே பிரதிநிதித்துவம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 1997ல் சீர்திருத்தவாதிகளின் வருகையுடன் சுன்னிக்கள் நேரடியாக தேர்தலில் போட்டியிட்டனர் கடந்த மாதம் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட 30 பேரில் 15 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இம்முறை முதன்முதலாக அல்இக்வான் அல்முஸ்லிமுன் இயக்கம் பகிரங்கமாக தேர்தலில் இறங்கியிருப்பது அந்நாட்டில் சுன்னிக்களின் எதிர்காலம் மேலும் சிறந்ததாக அமைவதற்கான சிறந்த சகுனமாகும்.

## ஐக்கிய அரபு இராச்சியம்

### F 16 ரக யுத்த விமானங்கள் கொள்வனவு

DESERT EAGLE என்று அழைக்கப்படுகின்ற F 16 ரக யுத்த விமானங்கள் எட்டை அமெரிக்காவிடமிருந்து எமிரேட்ஸ் கொள்வனவு செய்துள்ளது. இதன் பெறுமதி ஆறரை பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். 2004ம் வருட ஆரம்பத்தில் இவை யாவும் கிடைத்துவிடும். எமிரேட்ஸுக்கு விமானங்களை வழங்குவதற்கு அமெரிக்க செனட் அனுமதியளித்ததையிட்டு ஜனாதிபதி பில் கிளின்டன் நன்றி தெரிவித்துள்ளார். இதன் மூலம் அமெரிக்க - எமிரேட்ஸ் உறவுகள் மேலும் பலமடையும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# வாசகர் கருத்துக்களம்

வாசகர் கருத்துக்களம்

**காலமெல்லாம் வந்தால்....**

அல்ஹஸனாத்தே நீ சுமந்து வரும்
செய்திகளை அறிவதற்கு
ஒரு மாதமாக எதிர்பார்த்து
கண்கள் களைக்கும் நேரம் வந்தாய்.
உன்னைக் கண்டதும் கண்கள்
விழித்துக் கொண்டன.
நீ சுமந்து வந்துள்ள செய்தி என்ன?
விழிதீட்டிப் பார்த்தேன்
உலக வலம் கண்டேன்
ஸஹாபாக்கள் வரலாற்றில் கண்ணீர்
சிந்தினேன்.
மகளிர் பக்கத்தில் எம்
பெண்கள் பற்றி சிந்தித்தேன்
சின்னக் கதைகள் மகிழ்வித்தன.
ரமழானின் ரம்யமான விளக்கங்கள்
உள்ளக் கதவுகளை
உயிர் பெறச் செய்தன
மாதமொரு முறை வரும் மலரே!
காலமெல்லாம் கைதவழ்ந்தால்
களிப்புறுவேன் நான்
காலமெலாம் வளமுடன்
ஒளிவீசி வலம்வர
வாழ்த்துகிறேன்.

**ஓட்டமாவடி ஸபீர்**

**எனது பார்வையில்...**

அல்ஹஸனாத்தில் 'உலகச் செய்தி கள்' தருகின்ற விடயங்களை வாசிக்கின்ற போது மனம் புதிய உலகில் நுழைவது போலுள்ளது. 'இஸ்லாத்திற்காக களம் அமைத்த இமாம்களின் வரலாறு', பலஸ்தீன், செச்னியா மற்றும் நாடுகளில் உள்ள முஸ்லிம்களது அவலநிலை, இன்னும் அல்ஹஸனாத் சுமந்து வந்த அனைத்து அம்சங்களையும் வாசிக்க வாசிக்க எமது மார்க்கத்தின் மீது கூடுதலான ஈடுபாடும், பற்றுதலும் பிறக்கிறது.

இன்னும், மனதில் உதித்த சந்தேகங் களை அல்ஹஸனாத் மூலம் நிவர்த்தி செய்து கொள்ள முடிகிறது. மொத்தத்தில் எமது அறிவுக்கு அருவிருந்தாகவும், மனி தர்களிடையே ஏற்படும் கருத்து வேறு பாடுகளை தீர்த்து வைப்தாகவும் எமக்கு அல்ஹஸனாத் பெரும்பயன் தருகிறது.

இலங்கை ஜமாஅதே இஸ்லாமியினால் வெளியிடப்படும் இஸ்லாமிய மாத இதழ், அல்லாஹ்வின் ரஹ்மத் பெற்று இன்னும் வளர்ச்சியடையப் பிரார்த்திக்கிறேன்.

**செல்வி பாத்திமா ஹிப்ரா மூஸின்**
**பேருவளை.**

அல்ஹஸனாத் சஞ்சிகையை நான் தொடர்ந்து வாசித்து வருகிறேன். இச்சஞ்சிகை சுமந்து வரும் அனைத்து ஆக்கங்களும் எமக்கு சுவையானதாகவும், பயனுள்ளதாகவும் அமைகின்றன.

அவ்வகையில் கடந்த மார்ச் மாத இதழ் சுமந்து வந்த அனைத்து அம்சங்களும் மிகச்சிறப்பாக அமைந்திருந்தன. 'யார் மீது பழிசொல்ல?' என்ற சிறுகதை, தீனுல் இஸ்லாத்தை பரப்புவதிலேயே, அதன் வெற்றியை அடைவதிலே தன் வாழ்நாளை செலவழிக்கும் உள்ளங்கள் வாழுந்து கொண்டிருந்தாலும், முஸ்லிம் என்ற பெயரை மட்டும் தன்னோடு பதித்துக் கொண்டு வீண் பகட்டுக்காகவும், புகழுக்காகவும் வாழ்ந்து கொண்டிருக்கும் உள்ளங்கள் இருக்கும் வரை போற்றப்படும் பிரச்சாரம் ஒருபுறம் வாழ்ந்தாலும் மறுபுறம் சமூகம் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்த்துகின்றது.

மேலும் எம்மீது கடமையாக்கப்பட்ட தொழுகையை பொடுபோக்காக விட்டு விடுவதைக் காண்கிறோம். அத்தகையவர்களுக்கு 'ஒரு முஸ்லிமின் வாழ்வில் தொழுகை ஏற்படுத்தும் மாற்றம்" என்ற அல்குர்ஆன் விளக்கம் பயனுள்ளதாகவும், மனமாற்றத்தை ஏற்படுத்துவதாகவும் அமைந்தது.

இந்த தீனைப் பரப்பும் கேடயங்களுள் ஒன்றான அல்ஹஸனாத் மென்மேலும் தனது பணியை சிறப்பாகச் செய்திட, சிறந்த ஆக்கங்களுடன் வெளிவர அல்லாஹ் என்றும் துணை நிற்க வேண்டும்.

**செல்வி ஜெனிய்யா அப்துல் ஒப்பார்**
**புத்தளம்**

அல்ஹஸனாத் சென்ற ரமழான் இதழின் பின்னால் தனிச்சிறப்பு பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது. அதன் வசன நடை, ஆக்கங்கள், என்பன பிரமாதம்! சஞ்சிகையில் இடம்பெறும் புகைப்படங்கள் கூட ஒரு வரையறையைக் கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் ஹஜ் சிறப்பிதழ் அவ்வளவு சோபிக்க வில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அட்டைப் படத்தை இதனைவிட அழகாக வடிவமைத்திருக்கலாம்; ஹஜ்ஜைப் பற்றிய இன்னும் தரமான கட்டுரைகளை பிரசுரித்திருக்கலாம். மேலும் அஷ்ஷெய்க் சல்மான் பாரிஸ் எழுதி வரும் இஸ்லாமிய உம்மத்தின் வீழ்ச்சியும் காரணிகளும் என்ற தொடரை வாசிக்கும் பலருக்கு உலகில் நிலவும் இன்றைய கருத்துக் குழப்பத்திற்கு ஒரு தெளிவைக் கொடுக்கும் என நினைக்கிறேன். அத்துடன் சர்வதேச முஸ்லிம் செய்திகளில் இன்று பரவலாகப் பேசப்பட்டு வரும் ஈரான் தேர்தல் முடிவுகள், நைஜீரிய ஷரீஅத் சட்டம் போன்றற விடயங்களை அந்தந்த நேரங்களில் அல்ஹஸனாத் பிரசுரிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

**A.M. ஜாஸில்**
**மடவளை**

அன்பார்ந்த வாசகர்களே! இச்சஞ்சிகையில் இடம்பெறும் ஆக்கங்கள் பற்றி உங்களது சுதந்திர மான கருத்துக்களை உடனுக்குடன் எழுத்தில் தெரிவியுங்கள்; அவை உங்கள் அல்ஹஸனாத்தின் வளர்ச் சிக்கு துணையாய் அமையும். இன்ஷா அல்லாஹ்.

# தஃவதுல் குர்ஆன் வஸ்ஸுன்னா
## போட்டிப் பரீட்சை முடிவுகள் ஹி - 1420

மத்ரஸா மற்றும் சிரேஷ்ட பிரிவுகளில் சித்தியடைந்தோரின் பெயர் விபரங்கள் இங்கு இடம்பெறுகின்றன. இவர்களுக்கு எமது பாராட்டுகள். இவர்களுக்கான சான்றிதழ்கள் மிக விரைவில் அனுப்பி வைக்கப்படும், இன்ஷா அல்லாஹ். -பணிப்பாளர்-

### சிரேஷ்ட பிரிவில் சித்தியடைந்தோர்

| | |
|---|---|
| M.Y.Rifka | Zahira Muslim Vidyalaya, Trincomalee. |
| A.S. Nusra Banu | Zahira Muslim Vidyalaya, Trincomalee. |
| M.H. Thameena | Fathima Muslim Ladies College, Puttalam. |
| M.L.F. Thasnee | Fathima Muslim Ladies College, Puttalam. |
| M.N.F. Rifka | 26, Diggala Road, Henamulla, Panadura. |
| A.O. Sithi Aseema | Fathima Muslim Ladies College, Puttalam. |
| M.M.F. Rukshana | 64, Masjid Road, Gonakana, Moratuwa. |
| M.N.F. Fahima | 53/1, Razik Marikkar Mawatta, Beruwala. |
| M.T.F. Riyasa | 15/2, Galle Road, Henamulla, Panadura. |
| M.T.F. Rizana | 84/1, Old Road, Beruwala. |
| M.I.Fathima Inasa | 198, Old Road, Beruwala. |
| M.L. Rizwana | Fisharies Cooparation Road, Firdous Town, New Kattankudi 03. |
| M.I. Fahrunnisa | 49, B.N.M. Zain Mawata, Beruwala. |
| M.M.F Rizviya | 29, Samad Mawtta, Beruwala. |
| R. Rahmathulla | Zahira Muslim Vidyalaya, Trincomalee. |

### மதரஸா பிரிவில் சித்தியடைந்தோர்

| | |
|---|---|
| M.J.F. Himaya | 303, Munahena Road, Maggona, Beruwala. |
| M.A. Fatheenas | Kalpitiya Road, Kandakkuliya, Puttalam. |
| M.T.F. Farzana | 68, Elkaduwa Road, Ukuwela. |
| A.R. Rashana | 214, Main Street, Puttalam. |
| A.M. Thasbeeha | 16, 2nd Cross Street, Puttalam. |
| A.S.S. Faseeha | Poolachchenai,Nurachcholai, Puttalam. |
| A.L. Rameela | 112/8, Jempatha Street, Colombo 13.. |
| A.H. Imthiyas | Cassimiya Arabic College, Mannar Road, Puttalam. |
| H.M. Nihal | Cassimiya Arabic College, Mannar Road, Puttalam. |
| S.S.M. Usman | Cassimiya Arabic College, Mannar Road, Puttalam. |
| M.A. Sarahudeen | Cassimiya Arabic College, Mannar Road, Puttalam. |
| A.B.M. Fowzer | Cassimiya Arabic College, Mannar Road, Puttalam. |
| A.G. Mufliha | 7/4, Bawa Haji Lane, Kattankudi 05. |
| M.M. Ramlath | Abdul Kareem Hajiyar Lane, Kangeyanodai 13, Arayambathi |
| A.M. Fasmiya | 187, Ampara Road, Sammanthurai. |
| A. Rabiyathul Basariya | 170, St. Thomas Road, Bandarawela. |

Registered as a Newspaper at the GPO Sri Lanka Under No. QD/03/News/93

Rico Enterprise

Importers, Wholesalers & Distributors of Fancy Goods, Kitchenware etc.

RICO ENTERPRISE

89 1/1, Bankshal Street, Colombo -11

TP : 327057, 449655 Fax : 332226

Type Setting & Layouting by Alumni Association of Islahiyyah Arabic College. (TP:687091) Printed at AJ Prints, Dehiwala